வெளியீடு 28-1-2000 Issued 28-1-2000

404
2000.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மே 4, 1999 - தொகுதி 78 - எண் 1**

**Tuesday, 4th May, 1999—Volume 78 - No. 1**

*ச . மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**ive Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

D
V2l1,31'N99
N99.78.1
221808

404/2000

4–05–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **வினாக்கள்-விடைகள்––** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-39 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு––** | |
| கோவை வழக்கறிஞர் அசோகன் குடியிருந்த வீட்டைக் காலி செய்ததற்காக வழக்கறிஞர்கள் நடத்திய ஊர்வலம் மற்றும் நீதிமன்றப் புறக்கணிப்பு | 40-46 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 40, 45, 46 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 41-45 |
| *3.* **கவன ஈர்ப்பு––** | |
| (அ) விருதுநகர் மாவட்ட அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பழுதடைந்துள்ளது | 46-48 |
| (ஆ) நன்னிலம் தொகுதி முடிகொண்டான் ஆற்றிலுள்ள நன்னிலம் பாலமும், திருமருகல் பாலமும் உடைந்துள்ளதால் போக்குவரத்துப் பாதிப்பு | 48-53 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-- | 53-55 |
| (அ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 | 53-54 |
| (ஆ) தமிழ்நாடு (நிதிநிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 | 54-55 |
| 5. தகவல் கோரல்-- | |
| (அ) திருத்துறைப்பூண்டியிலே மருத்துவர் படுகொலை | 55 |
| (ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத் துறை ஊழியர்களைப் பிடித்து வைத்துள்ளது | 56 |
| (இ) உண்ணாவிரதம் மேற்கொண்ட வேலையில்லாப் பட்டதாரிகள் கைது | 56, 57 |
| (ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 57, 58 |
| 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள் - அச்சுத் துறை | 58-61 |
| (ஆ) கோரிக்கை எண் 46 - செய்தி திரைப் படத் தொழில் நுட்பவியல் | 61-67 |
| (இ) கோரிக்கை எண் 50 - சுற்றுலா | 67-71 |
| *மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் | 73, 77, 83, 121, 142-157 |


221808




| | பக்கங்கள் |
|---|---|
| 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| *மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் | 67, 80, 105, 128-142 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 72-77 |
| *திரு. வீ. தமிழ்மணி | 78-81 |
| *திரு. நா. பெரியசாமி | 81-86 |
| திரு. கோ. சண்முகம் | 87-89 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 90-94 |
| *திரு. இ. புகழேந்தி | 95-99 |
| திரு. ஜி.கே. மணி | 100-102 |
| திரு. என்.ஆர். அழகராஜா | 103-109 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 109-117 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 41-45, 114-115 |
| *திரு. கோ. மோகனதாசன் | 118-120 |
| திரு. சி. ஞானசேகரன் | 120-128 |
| 7. அறிவிப்பு-- | |
| உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு | 86 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 164 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. **முதலமைச்சர்** | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்திர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.* |
| 2. **கல்வி அமைச்சர்** | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.* |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.* |
| 4. **வருவாய்த் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** *வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.* |
| 5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.* |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற்திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் : தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு : உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் : பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி : கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் : பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி : வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடை பராமரிப்பு

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக்



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education**.. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | .. | **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Highways** | .. | **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. | **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | .. | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | .. | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control. |
| 18. **Minister for Housing** | .. | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*
திரு. சி.டி. தண்டபாணி
டாக்டர் காஞ்சனா கமலநாதன்
திரு. பெ. ஆசையன்
டாக்டர் ஆ. ஞானசேகரன்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

18. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
19. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
30. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
31. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
32. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
33. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
35. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்
36. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
37. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
38. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்
39. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

| | | |
|---|---|---|
| 66. கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 67. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 68. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 69. சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 70. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 71. சந்தானம், திரு. லா. | .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 73. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 75. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 76. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 78. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளக்கோவில் |
| 79. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 80. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 81. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 82. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |
| 84. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 86. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |



| | | |
|---|---|---|
| 88. சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 89. சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 90. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 91. சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 92. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 93. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 94. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 95. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. | திருவள்ளூர் |
| 97. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |
| 98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. | திருநெல்வேலி |
| 99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. | மொடக்குறிச்சி |
| 100. சுரேஷ் ராசன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. | மருங்காபுரி |
| 102. செங்கை சிவம், திரு. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 103. செல்லக்குமார், டாக்டர் அ. | .. | தியாகராய நகர் |
| 104. செல்வம், திரு. ரெ. | .. | குளித்தலை |
| 105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. | கொளத்தூர் (செ.வ.) |
| 106. செல்வராஜ், திரு. து. | .. | உடுமலைப்பேட்டை |
| 107. சேகரன், திரு. ஆர்.ஆர். | .. | ஓமலூர் |
| 108. சேதுநாதன், திரு. ரா. | .. | திண்டிவனம் |
| 109. சைதை கா. கிட்டு, திரு. | .. | சைதாப்பேட்டை |

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்றாம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞ

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 21, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 மே 4, செவ்வாய்க்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது."*

*சினத்தைத் தூண்டாமல் மகிழத்தக்க அளவுக்குச் செய்திகளைத் தொகுத்தும், தேவையற்ற செய்திகளை ஒதுக்கியும், நல்ல பயனளிக்கும் விதமாகச் சொல்லுவதே சிறந்த தூதருக்கு அழகாகும்.*

### 1. வினாக்கள் - விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 601, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**601—**

**பாடநூல்கள் அச்சிடுதல்**

***20744—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாடு Matriculation பள்ளிகளுக்கான பாடநூல்கள் எங்கு அச்சிடப்படுகின்றன?

*(ஆ)* அச்சிடும் இடத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்கள் தனியார் பதிப்பகத்தார் மூலம் அச்சிடப்படுகின்றன. 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள் மட்டும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் அச்சிடப்படுகின்றன.

(ஆ) தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடம் உள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அச்சக நிறுவனத்திலே அச்சடிக்கப்படுவதை மாற்றி அரசு நிறுவனத்திலேயே அச்சடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விடை விரிவாக முதல் பதிலில் தெரிவிக்கப்படவில்லை. அதன்காரணமாக இந்தக் கேள்வி எழுந்தது. Matriculation பள்ளிகளில் பாடத் திட்டத்தைத் தீர்மானிப்பது Matriculation Board அந்த அமைப்புதான் பாடத் திட்டங்களை —syllabus-ஐத் தீர்மானிக்கிறது. அதன்படி 1 முதல் 9 வகுப்புகளுக்கான புத்தகங்களை அவர்கள் தனியார் Publications-லேயிருந்துதான் வாங்கிக் கொடுக்கிறார்கள். அச்சடிக்கிற பொறுப்புக்கூட அவர்களுக்குக் கிடையாது. நேரடியாகப் புத்தகங்களைக் குறிப்பிடுகிறார்கள். அந்தப் புத்தகங்கள் Matriculation பள்ளிகளில் வாங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்புக்கும் அப்படி வாங்கப்பட்டு வந்தது. அது விலை அதிகமாக இருக்கிறது, 10 ஆம் வகுப்பு மாணவர்கள் கட்டாயம் வாங்க வேண்டியிருக்கிறது என்று அரசுக்குத் தெரிந்த காரணத்தால், அவர்கள் அதைக் கேட்டுக்கொண்ட காரணத்தால், 10 ஆம் வகுப்புப் பாடநூல்கள் மட்டும் அரசாங்கத்தால், பாடநூல் கழகத்தின்மூலமாக அச்சிடப்பட்டு குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. மற்றொன்று, அரசாங்க பாடநூல் கழகத்தின் சார்பாக அச்சிடப்படுகிற ஏறத்தாழ 4 கோடி புத்தகங்களை ஏறத்தாழ 1 கோடி மாணவர்களுக்கு, பல்வேறு அச்சகங்கள் மூலமாக, குறித்த காலத்திலே அச்சிட்டுக் கொடுக்க முடியும் என்ற அடிப்படையில், விதிமுறைகளின்படி பல்வேறு அச்சகங்களில் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.





**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Matriculation பள்ளிகளுக்கு தனியார் மூலமாக பாடப் புத்தகங்கள் வழங்குவதாக கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் வழங்குகின்ற பாடப்புத்தகங்களின் விலை மிக அதிகமாக இருப்பதால் அந்த நூல்களுக்கான விலை உச்ச வரம்பை - விற்பனை விலையை நம்முடைய பொது நூலகத் துறையிலே இத்தனை ஃபாரத்திற்கு இவ்வளவு, 16 ஃபாரங்களுக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து இருக்கிறார்களே அந்த மாதிரி ஒரு விலை நிர்ணயம் செய்து விலை உச்ச வரம்பை—நிர்ணயிக்குமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Matriculation Board ஒரு சுயேட்சையான அமைப்பு. ஓரளவுக்குச் சொல்லப்போனால் Autonomous அமைப்பு. அந்த அமைப்பு சில பாடங்களை, பாடப் புத்தகங்களைத் தீர்மானிக்கிறது. அந்தப் பாடப் புத்தகங்கள்கூட சில குறிப்பிட்ட syllabus-படி, பாடத்திட்டத்தின்படி வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதியதாக இருக்கக்கூடும். வேதியியல் போன்ற பாடங்கள் அல்லது கணக்கு இவையெல்லாம் வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதிய பாடப் புத்தகங்கள்; இவற்றைத் தனியார் அச்சிட்டு இருப்பார்கள். அந்த அந்த பள்ளிக்கூடத்தினுடைய தலைமை ஆசிரியர்கள், அவர்கள் விரும்புகிற ஆசிரியர் எழுதிய பாடப்புத்தகங்களை வாங்கச் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதிலே மலிவான புத்தகங்களை அவர்களே தேர்ந்தெடுக்கலாம். அதற்குமேல் இதிலே போய் அரசு தலையிட வேண்டிய அவசியம் இல்லை. ஒருவேளை அச்சடிக்க அந்த Board அரசைக் கேட்டுக்கொள்ளுமானால் பாடநூல் கழகத்தினுடைய பணிச்சுமை இடம் தருமானால் அரசு அதை ஏற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 602, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**602—**

**ஒன்றியங்களில் கிராமங்களை இணைத்தல்**

***10066—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 4

(அ) தாம்பரம் தொகுதி, தாமஸ்மலை ஒன்றியத்திலுள்ள வெங்கம்பாக்கம் கிராமத்தை காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தோடும் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திலுள்ள மப்பேடு கிராமத்தை தாமஸ்மலை ஒன்றியத்தோடும் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

முற்பகல் 9-35

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்த மப்பேடு கிராமம், தாமஸ்மலை ஒன்றியம், அகரம் தென் ஊராட்சியிலிருந்து ½ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. வெங்கம்பாக்கம் கிராமம் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால், வெங்கம்பாக்கம் கிராமம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்திலிருந்து 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மப்பேடு தாண்டி 4 கிலோ மீட்டர் தூரம் போய், வெங்கம்பாக்கதோடு அந்த ஊராட்சி இணைய வேண்டிய பிரச்சினை இருக்கிற காரணத்தினால், அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இதை காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தோடு இணைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பக்கத்தில் திருவஞ்சேரி கிராம புல எண் 24 உள்ள நிலத்தில் 1944 ஆம் ஆண்டுக்கு முன்பு மப்பேடு கிராமமும் ஆதிதிராவிடர் குடியிருப்பும் இருந்தன. 1944 ஆம் ஆண்டுக்குப் பின்பு மேற்படி கிராமத்தில் புல எண் 1-ல் 139.52.5 எக்டேர் நிலமும் மற்றும் புல எண். 24-ல் 110.64.0 எக்டேர் நிலமும் இந்திய விமானப்படைத் தளத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டது. அக்கிராமத்தில் குடியிருந்த மக்கள் செங்கல்பட்டு வட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், புத்தூர் கிராமத்தில் புல எண். 16, 17, 18, 19-ல் குடியமர்த்தப்பட்டனர். அந்தப் பகுதி மப்பேடு என அழைக்கப்படுகின்றது. மப்பேடு கிராமத்தில் எஞ்சியுள்ள நிலங்கள் திருவஞ்சேரி கிராமத்தில் சேர்க்கப்பட்டுவிட்டன.



1999 மே 4]

மப்பேடு மற்றும் வெங்கம்பாக்கம் கிராமங்களின் இன்றைய நிலை பின்வருமாறு:

வருவாய்க் கிராமம் மப்பேடு என்பது பழைய மப்பேடு. தற்போது புத்தூர் கிராமம் மதுரா மப்பேடாக உள்ளது.

வெங்கம்பாக்கம் வருவாய்க் கிராமம், வட்டம் செங்கல்பட்டு-தாம்பரம், ஒன்றியம் காட்டாங்குளத்தூர்-தாமஸ்மலை பஞ்சாயத்து, நெடுங்குன்றம், ஊராட்சி, திருவஞ்சேரி ஊராட்சி.

சட்டமன்றத் தொகுதிகள் திருப்போரூர், தாம்பரம், பாராளுமன்றத் தொகுதி—தென் சென்னை.

உறுப்பினரின் கோரிக்கையை இப்போதுள்ள சூழ்நிலையில் ஏற்பது என்றால், சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிப் பிரச்சினைகள் வரும். எனவே, சட்டமன்ற எல்லையை மாற்றி அமைக்கும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 603, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**603.—**

**பேருந்து நிலைய விரிவாக்கம்**

***8724—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, அம்பத்தூர் (ஓ.டி) பேருந்து நிலையத்திற்கு அருகில், தனியார் செய்துள்ள நில ஆக்கிரமிப்புகளை அகற்றி, பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் பழைய பேருந்து நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டன. பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர், தொழில் துறையில் ஒரு முன்னேற்றமடைந்த நகராட்சி. ஆகவே, அம்பத்தூரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவது மிகவும் அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த வினாவை எழுப்பி இருக்கின்றார். ஆகவே, அமைச்சர் அவர்கள் வெகுவிரைவில் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு ஒரு பெரிய பேருந்து நிலையத்தை உருவாக்க முயற்சி எடுப்பார்களா? எவ்வளவு காலத்திற்குள் அந்தப் பேருந்து நிலையம் உருவாகும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத்திலிருந்து அதற்கான கருத்துரு வராத நிலையில், தேதியை நிர்ணயித்து நான் சொல்வது என்பது, என்னால் இயலாத காரியம். ஆனால், அதற்கு இருந்த இடர்பாடுகளில் ஒன்று ஆக்கிரமிப்புகள். நானே 2 நாட்கள் சென்று, நேரில் இருந்து அந்த ஆக்கிரமிப்புகளைக் காலி செய்துவிட்டேன். அந்த ஆக்கிரமிப்புகளைக் காலி செய்ததற்குப் பிறகு, நகராட்சி மன்றத்திடம் இப்படிப்பட்ட ஒரு பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்து இருக்கிறேன். சமீபத்தில்கூட அதற்கான ஒரு கூட்டம் நடைபெற்றபோது, அதிலும் நான் தெரிவித்தேன். நகராட்சி மன்றத்தின்மூலம் நடவடிக்கை எடுங்கள் என்று நானே நேரில் தெரிவித்து இருக்கிறேன். D.M.A. அவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். உரிய நடவடிக்கையை நகராட்சி மன்றம் மேற்கொள்ளுமானால்—அதிலே நிலம் முக்கியம் நிதி முக்கியம். அதனுடைய சொந்த நிதியை நிச்சயமாக முழுமையாகச் செலவழிக்க முடியாது; கடன் பெற வேண்டும். இவற்றிற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டால்—விரைவாக எவ்வளவு காலத்திலே அது முடிக்கப்படுமோ, அவ்வளவு விரைந்து செயல்படுத்த அரசு தயாராக இருக்கிறது. நகராட்சி மன்றம் அதற்கான நிதிக்கும் இட வசதிக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வி கேட்டுவிட்டு காலதாமதமாக வருவது அல்லது வராமல் இருப்பது முறையல்ல. முதல் நாளே நிகழ்ச்சி நிரலை உங்களுக்கு அனுப்புகிறோம். உங்கள் கேள்வி அதில் இருந்தால், நீங்கள் காலாகாலத்தில் வந்துசேர வேண்டும் (குறுக்கீடு) சரி கேள்வி கேளுங்கள்.



1999 மே 4]

*முற்பகல் 9-40*

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் ஒன்றியம் தொழிற்சாலைகள் நிறைந்த நகரம், அங்கு நிறைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தப் பேருந்து நிலையத்தை காலை 7½ மணியிலிருந்து 10 மணி வரை பார்த்தீர்கள் என்றால், ஒரு மார்க்கெட்டிலே எவ்வளவு மக்கள் இருப்பார்களோ அதைவிட அதிகமான மக்கள் இருப்பார்கள். சுற்றிலும் நிறைய கடைகள் இருப்பதால் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த அம்பத்தூர் (ஓ.டி) பழையநகர் பேருந்து நிலையத்தை ஒழுங்காகக் கட்டினால்தான் நல்ல முறையில் செயல்படுத்த முடியும். அப்படியில்லையென்றால் வேறு ஒரு மாற்றிடம் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரிடம்கூட நாங்கள் சொன்னோம். 7 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்குள்ள ஆக்கிரமிப்பாளர்கள் அதை ஆக்கிரமித்து விடுவார்கள். அந்த இடத்திற்காவது இந்த Major Bus Stand-ஐ நாம் எடுத்து போகலாம். அதே மாதிரி Industrial Estate-ல் இரண்டு Bus Stand-கள் இருக்கின்றன. அதையொட்டி நிறைய நிலம் இருக்கிறது. காலியிடம் அங்கே இருக்கிறது. நிறைய ஆக்கிரமிப்பாளர்கள் அப்போதைக்கப்போது ஆக்கிரமித்துவிடுகிறார்கள், கொட்டகை போடுகிறார்கள், கடை வைக்கிறார்கள், எடுக்கிறார்கள், இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. அதேபோல, Industrial Bus Stand-லும் அந்த அளவிற்குக் கூட்டம் இருக்கிறது. இந்த இடத்தில்தான் traffic Jam ஆகிவிடுகிறது. M.T.H. Road-ல், இந்த முனையிலிருந்து அந்த முனைக்கு வர வேண்டுமென்றால் குறைந்தபட்சம் ½ மணி நேரம் ஆகும். நெரிசல் நேரத்தில் சில நேரங்களில் 1 மணி நேரம், 2 மணி நேரம் ஆகும். இதனால் குழந்தைகள், வாகன ஓட்டிகள், பள்ளிக்கு வருகிறவர்கள், பாதசாரிகளினுடைய நிலைமை பாதிக்கப்படுகிறது. உடனடியாக இந்த Bus Stand-களை, அங்கிருக்கின்ற 3 Bus Stand-களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அங்கே நிரந்தரக் கட்டடங்கள் கட்டி, அங்கே Bus Shelters ஒழுங்காக அமைக்கப்பட வேண்டும். வெட்டவெளியில் மக்கள் நிற்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்கதாகும். குழந்தைகள் மிக அதிகமாக இருக்கிற இடம். ஆகவே, அங்கே Bus Shelters போட்டு, ஒழுங்காக Bus Stand அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 மே 4

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பேரூராட்சி, நகராட்சிகளில் பேருந்து நிலையங்கள் அமைப்பதில் நிதி எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதோ, அதேபோல இடம் தேர்வு செய்வதும் சற்று சிரமமாக இருக்கிறது. அதிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தைத் தனித்தனியாக மனதில் வைத்துக்கொண்டு கேட்கின்ற நேரத்தில் சில சங்கடங்கள் வந்து, காலதாமதம் ஆகின்றது. அதுபோல ஐந்தாறு பேருந்து நிலையங்கள் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியிலே அக்கறை செலுத்தி, நகராட்சி மன்றத்தைக் கலந்து, ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்னால், மூன்று பேருந்து நிலையங்களையும் தனித்தனியாக அபிவிருத்தி செய்வதா? அல்லது மூன்றையும் விட்டு விட்டு தனியாக ஓர் இடத்தில் பொதுவான வாய்ப்பு வசதிகளுடன் செய்வதா என்பதை முடிவெடுத்து தீர்மானம் போட்டு அனுப்புவார்களேயானால் அனைத்து அரசு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும், நீங்கள் எந்தக் காலத்திற்குள் எதிர்பார்க்கிறீர்களோ, அதற்குள்ளாகவே நான் செய்துகொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், நீங்கள் முதல் பதிலைச் சரியாகக் கேட்காத காரணத்தினால்தான், இரண்டாவது கேள்வி கேட்டீர்கள். அமைச்சரே நேரடியாகப் போய் ஆக்கிரமிப்புகளையெல்லாம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்றார். அதனால் நீங்கள் இனிமேல் நகர மன்றத்தின் மூலமாகத்தான் அமைச்சரிடம் வர வேண்டும். (குறுக்கீடு) என்ன இன்னொரு கேள்வி?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கும்போது confuse பண்ணிவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: நான் confuse பண்ணவில்லை. நீங்கள் அமைச்சரின் பதிலைக் கேட்கவில்லை. அதைக் கேட்காமல் நீங்கள் பேசிக் கொண்டேயிருக்கிறீர்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** காங்கிரஸ்காரர் என்றாலே பேசத் தெரியாதவர் என்று அர்த்தம். நான் பேசும்போது, கேள்வி கேட்கிறீர்கள், அதனால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அமைச்சர் பதில் சொல்லும்போது நீங்கள் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தால் பிரச்சினை இல்லை. ரங்கநாதன் உங்களை, இப்போது, தேவையில்லாமல் திசை திருப்பிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.



1999 மே 4]

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது காங்கிரஸ்காரர்கள் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்பேட்டை. அந்தப் பேருந்து நிலையத்தில் உண்மையிலேயே—basic amenities—எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. இப்போது இருக்கிற Bus Stand-ல்கூட எந்தவிதமான வசதியும் இல்லை. அங்கே தொழிற்சாலைகள் நிறைய இருக்கிற காரணத்தால் (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர்கூட அங்கே ஒரு முறை வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சர் பதிலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் என்ன சொன்னாலும் அமைச்சர் செய்வதற்குத் தயாராக இருக்கிறார். நீங்கள் நகர மன்றம் மூலமாக வாருங்கள் என்று சொல்கிறார்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** தீர்மானம் நகர மன்றத்தில் போட்டிருக்கிறோம் ஐயா. தீர்மானத்தைப் போட்டு, அந்த இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அமைச்சருக்கு பரிந்துரை பண்ணியிருக்கிறோம். அதை உடனடியாகச் செய்ய வேண்டும். அதேபோன்று இந்த 3 துணை பஸ் நிலையங்கள், அதாவது அம்பத்தூர் எஸ்டேட்டையொட்டி, இரண்டு பக்கங்களிலும் எஸ்டேட்டுகள் இருக்கின்றன. நடுவிலே பேருந்து செல்லக்கூடிய நெடுஞ்சாலை இருக்கிறது. அங்கே 7 மணி முதல் 10 மணி வரை எத்தனை வாகனங்கள் செல்லுகின்றன என்று கணக்கெடுத்தால், எத்தனை வாகனங்கள் அங்கே செல்கின்றன என்பது தெரியும். இதைச் செய்து கொடுத்தால், என்னுடைய தொகுதி மக்கள் சுலபமாகச் சென்று வருவதற்கு உதவியாக இருக்கும். அப்படியில்லையென்றால், ஒரகடத்திலிருந்து, Ambattur O.T.-யிலிருந்து railway track-ஐ ஒட்டி ஒரு புறவழிச் சாலை அமைத்து அது 100 அடி ரோட்டை touch பண்ணினால், அந்த நெரிசல் குறையும். இந்த Traffic hazard இருக்காது. ஆகவே அதற்கு அரசு வழி செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டாவது துணைக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். எந்த இடத்தில் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தினால், மக்களுக்கு வசதியாகவும், போக்குவரத்திற்கு இயல்பாகவும் இருக்குமென்று நீங்களும், நகராட்சி மன்றமும் முடிவு செய்து, போக்குவரத்துத் துறை அதை அனுமதிக்குமானால், நிச்சயமாக அரசு அதைக் கேட்டு நடவடிக்கை எடுத்து முடிக்கும் என்பதை இறுதியாகக் கூறுகிறேன்.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 604, திரு கோ. நயினா முகமது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**604—**

**மனைப்பிரிவு அங்கீகாரம்**

***15485—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் கடந்த 15 ஆண்டுகளாக இக்பால் நகர், ரஹ்மானியாபுரம், மதினா நகர் போன்ற பகுதிகளில் லே-அவுட் அங்கீகாரம் பெறாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்பால் நகரிலும், ரஹ்மானியா நகரிலும் கட்டட விதிகளுக்குப் புறம்பாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதாலும், மதினா நகர் முழுமைத் திட்டத்தில் விவசாயப் பகுதியாக ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அப்பகுதிகளிலுள்ள அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளை முறைப்படுத்த இயலாது.

முற்பகல் 9-45

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநலலூர் நகராட்சிப் பகுதியில், இக்பால் நகர், ரஹ்மானியாபுரம் மற்றும் மதினா நகர் போன்ற பகுதிகளில் ஏழை எளியவர்கள் வீட்டுமனைகளை வாங்கி பல்லாயிரக்கணக்கான வீடுகளைக் கட்டிவிட்டார்கள். கட்டப்பட்ட வீடுகளுக்கு நகராட்சியில் Plan-க்கு அங்கீகாரம் வழங்குவதில்லை. அதில் அரசு ஊழியர்களும் வீடு கட்டியுள்ளார்கள். நகராட்சி Plan-ஐ அங்கீகாரம் செய்யாத காரணத்தால், வீடு கட்டத் தேவையான கடன்களை வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு முடியவில்லை. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, வாய்க்கால் வசதி போன்றவை மக்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் உள்ள இக்பால் நகர், ரஹ்மானியாபுரம் மற்றும் மதினா நகர் போன்ற பகுதிகளுக்கு Lay Out-க்கு அங்கீகாரம் வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1999 மே 4]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்பால் நகருக்காக மட்டும் நான் கொள்கையை மாற்றி, திருத்தி அமைக்க முடியாது. பொதுவாக, தமிழ்நாட்டில் இன்றைக்கு இருக்கிற நடைமுறைகளுக்கு முழுமையும் விரோதமாக அது அமைந்து இருக்கிறது. அவர் கேட்டிருக்கிற இந்தத் துணைக்கேள்விக்கு நான் அனைத்தையும் சொல்ல வேண்டுமானால் அதிலே மற்ற மற்ற நகரங்களில் உள்ளவற்றிற்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சற்று இடையூறு வரும். ஆக நான் திரும்பச் சொல்லிக்கொள்ள விரும்புவது, விதிமுறைகளுக்கு மாறுபாடு இல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்கான நடவடிக்கையை ஒத்துக்கொள்வாரேயானால், அரசும் அதிலே கவனம் செலுத்தி, முடிந்த வரை உதவி அளித்து, விதி விலக்குக் கொடுக்கக்கூடியதற்குக் கொடுத்து, கொடுக்க முடியாததற்குத் தடுத்து, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும். ஆனால் கொடுத்துவிட்டோம், எடுத்துக்கொண்டோம் என்று நகராட்சி மன்றமோ, அல்லது பேரூராட்சியோ, அங்கிருக்கிற தனிப்பட்ட நபர் தொழிலுக்கு உதவியாக செய்ததை நிச்சயமாக இந்த அரசு அங்கீகரிக்காது என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்ற அவசியத்தை இந்த அரசு உணர்கிறது. ஆனால், சட்டவிரோதமாக, தொழில் முறையில், தொழில் வளரவேண்டுமென்று, குறிப்பிட்ட யாரோ கையூட்டுப் பெற்றுக்கொண்டு, யாருக்காகவோ, யாரோ செய்து கொண்ட ஒப்பந்தத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது நியதியல்ல. நான் பரிசீலனை செய்வதற்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் அதைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைக்கு உதவி அளிப்பாரானால் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 605, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**605—**

**குளிர்சாதனக் கிடங்கு கட்டுதல்**

***15884—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் குளிர்சாதனக் கிடங்கு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரிலே குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லையென்றாலும், எங்கள் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரத்திலே குளிர்சாதனக் கிடங்கு கட்டுவதாக நீங்கள் பதில் அளித்திருக்கிறீர்கள், மானியக் கோரிக்கையிலும் சொல்லியிருக்கிறீர்கள். அதை விரைவாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கிராமப்புறங்களிலிருந்து வரக்கூடிய விவசாயிகள், நகரத்தை நோக்கி வருகின்றபோது, இணைப்புச் சாலைக்கு வருகின்ற நேரங்களில் இடையிலே சிறு சிறு ஆறுகள், ஓடைகள் இருக்கின்ற காரணத்தால், வண்டிகளில் பழங்களை ஏற்றி வருகின்றபோது, அது மண்ணில் புதைந்து வெளியே வர முடியாத நிலை இருக்கிறது. எனவே, விவசாயத் துறை மூலமாக எப்படி நீங்கள் களம் கட்டித் தருகிறீர்களோ, எப்படி சிறு சிறு ஏரிகளில் தூர் வாரித் தருகிறீர்களோ, அதைப்போல தரைப் பாலம் ஒன்றை ஏற்படுத்தித் தருவீர்களானால், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பழங்களுக்குப் பாதுகாப்பாக வண்டிகளில் ஏற்றிச்செல்ல வசதியாக இருக்கும். அதை அரசு மேற்கொள்ள முடியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 மே 4]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் குளிர்சாதனக் கிடங்கு அமைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு வினா எழுப்பியதைப்போல, ஒட்டன்சத்திரத்தில் 6.16 எக்டேர் நிலம் இப்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்காகக் கையகப்படுத்தப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் குளிர்சாதனக் கிடங்கு ஒன்று அமைக்க 3 கோடி ரூபாய் நடப்பு நிதியாண்டில் வழிவகை செய்யப்பட்டு, இந்த நிதியாண்டில் அந்தக் கிடங்கு ஒட்டன்சத்திரத்திலே கட்டப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருளை மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகிற வழிகளில் திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் ஓடை, சில வாய்க்கால்கள் இருப்பதனால் வண்டிகளில் பாரத்தை ஏற்றிக் கொண்டு அவற்றைக் கடந்து வர முடியவில்லை, எனவே தரைப் பாலம் அமைத்துக் கொடுக்க முடியுமா என்ற கேள்வியை இங்கு எழுப்பியிருக்கிறார்கள். ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின் நிதிநிலையைப் பார்த்து நடப்பு ஆண்டில், நான் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி, வேளாண்மை மானியக் கோரிக்கையிலே விவசாயிகளுக்கு பல அறிவிப்புகளைச் செய்திருந்தாலும் வரும் நிதியாண்டிலே அதற்கான சாத்தியக் கூறு இருக்குமா என்று ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 606, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**606—**

**விதை பண்படுத்தும் நிலையம்**

***23002—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், அத்தியந்தல் கிராமத்திலுள்ள வேளாண்மை விதைப் பண்ணையில் விதைப் பண்படுத்தும் நிலையத்தைத் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வட்டத்தில் இருக்கின்ற அத்தியந்தல் கிராமத்தில் ஒரு பெரிய விதைப் பண்ணை இருக்கிறது. அதில் அரசுத் தரப்பிலே விதைகளை உற்பத்தி செய்கின்றார்கள்; விவசாயிகளிடத்திலும் விதைகளைக் கொள்முதல் செய்கின்றார்கள். போதுமான அளவுக்கு விவசாயிகள் மற்றும் பல்வேறு நிலைகளிலே உற்பத்தி செய்யப்படுகின்ற நெல் விதைகள் தரத்திற்கு ஏற்றாற்போல் இல்லாததால் அதைப் பண்படுத்தி சரியான முறையிலே கொடுத்தால் விவசாயிகள் சிறப்பு அடைய முடியும். வாங்கிச் செல்லுகின்ற விதைகள் முழுவதும் முளைப்பதில்லை. பாதி நெல் விதைகள் கெட்டுவிடுகின்ற காரணத்தால் விவசாயிகள் ஏக நஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல் விதைகளைப் பண்படுத்த, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு பெரிய நெல் விதைப் பண்ணை இருப்பதால் விதைகளைப் பண்படுத்தி விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், அத்தியந்தல் அரசு விதைப் பண்ணையில் ஆண்டுக்கு 1,000 மெட்ரிக் டன் விதைகளைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட விதை சுத்திகரிப்பு நிலையம் இப்போதே அங்கே இருக்கிறது. அதுமட்டுமல்ல, அத்தியந்தல், வாசூர், வந்தவாசி மற்றும் செய்யாறு ஆகிய 4 இடங்களில் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அந்த மாவட்டத்திலே இருக்கின்றன. அப்படிச் சுத்திகரிக்கப்பட்ட விதைகள்தான் நம்முடைய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு மூலதனமாக 3 இலட்ச ரூபாயும், தொடர்ச் செலவினமாக 1 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாயும் தேவைப்படுகிறது. ஆகவே அவர் எழுப்பிய வினாவின் அடிப்படை திருவண்ணாமலை மாவட்டம், அத்தியந்தல் கிராமத்தில் இருக்கின்ற வேளாண்மை விதைப் பண்ணையில் விதை பண்படுத்தும் நிலையத்தைத் தொடங்கும் திட்டம் உள்ளதா என்பதுதான்.. அங்கே அந்தச் சுத்திகரிப்பு நிலையம் இருக்கிறது என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 607, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**607—**

### நீர் இழப்பைச் சரி செய்தல்

***9649—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம், கெடையாஞ்சி கிராமத்திற்கருகில் பாலாற்றில் செக்டேம் அமைத்து பெருநகரங்களுக்கு நீர் எடுத்துச் செல்வதால் ஏற்படும் நீர் இழப்பைச் சரி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி அருகில் இருக்கின்ற பாலாற்றிலிருந்து, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை Railway Station போன்ற பகுதிகளுக்கு குடிநீர் எடுத்துக்கொண்டு போகின்ற காரணத்தால் நிலத்தடி நீர் அந்த இடத்தில் முழுமையாக உறிஞ்சப்பட்டு அந்தப் பகுதியிலே நீர் வளம் மிகவும் குன்றிவிடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும்கூட புல்லூர் அணையை அந்த இடத்திலே கட்டினால் ஓரளவுக்கு நீராதாரம் அந்த இடத்திலே முழுமையாகக் கிடைக்கும். அப்படிக் கிடைக்கின்ற காலத்தில் இதுபோன்று குடிநீர் எடுக்கப்பட்டாலும்கூட நீர் உறிஞ்சப்படுகின்ற தன்மையிலிருந்து அந்த நிலப்பகுதி மீட்கப்பட்டு போதிய அளவுக்கு நீர் ஆதாரத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த புல்லூர் அணையைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா எனறு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் புல்லூர் அணையை மையமாக வைத்து இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்று கருதுகின்றேன். காரணம் கெடையாஞ்சியிலே Check-dam எதுவும் கட்டப்படவில்லை. குடிநீர் வடிகால் வாரியத்தின்

[1999 மே 4

சார்பில் Infiltration Galary அதாவது சுரங்க நீர் ஊடுதல் நிலவறை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எவ்வளவு தண்ணீர் எடுக்கின்றார்கள் என்று கேட்டால், ஒரு நாளைக்கு 9.70 மில்லியன் லிட்டர் தண்ணீரும், இரண்டு கிணறுகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் 1.20 மில்லியன் லிட்டர் தண்ணீரும் தான் எடுக்கப்படுகிறது. அது அவ்வளவு பெரிய அளவு தண்ணீர் என்று சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட புல்லூர் அணையின் நிலைமை என்னவென்றால், பாலாறு தமிழ்நாட்டின் எல்லைக்குள் நுழைகின்ற அந்த முகத்துவாரத்திலேயே அணை கட்ட வேண்டும் என்பது. அப்படியானால் 80 ஆயிரம் ஏக்கர், கிட்டத்தட்ட 400 ஏக்கர் ஏரிகளுக்கு பாசனத்தைக் கொடுக்கின்ற பாலாற்றுத் திட்டம் அங்கேயே முடங்கிப் போய்விடும். இது வாணியம்பாடி, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை ஆகிய இடங்களுக்கு மட்டுமல்ல, அவரும், நானும் குடிக்கின்ற நீரே பாலாற்று நீர்தான். எங்களுக்கும் அங்கிருந்துதான் தண்ணீர் வரவேண்டும். அங்கிருப்பவர்களுக்கு மட்டுமல்ல; சென்னை நகரத்திற்கே பாலாற்றுத் தண்ணீர்தான். காரணம், பாலாற்றிலே வருகின்ற தண்ணீர்தான் மகேந்திரவாடி சேனல், காவேரிப்பாக்கம் சேனல் வழியாக காவேரிப்பாக்கம் பெரிய ஏரிக்கு வந்து அதிலே நிரம்பி வழிவதுதான் கொசஸ்த்தலை ஆறு. அந்த கொசஸ்த்தலை ஆற்றிலே கட்டப்பட்டிருப்பதுதான் பூண்டி அணை. ஆகவே, பூண்டி அணையிலிருந்துதான் தண்ணீர் சென்னைக்கு வருகிறது. ஆகையினாலே, ஞானசேகரனும் நானும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்; சென்னை மாநகரத்துக் குடிநீருக்கே நீர் வழங்குகிற பூமி, நம்முடைய வடஆற்காடு-வேலூர் மாவட்டம் என்பதிலே பெருமைப்பட்டு, அவர்களுக்கு நீர் வழங்குவதற்கு நாம் உதவுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கே நீர் ஆதாரம் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பாலாற்றினுடைய பெருமையைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனாலும்கூட, கோடை காலங்களிலே, இப்பொழுதெல்லாம் மிகவும் வறண்டு போயிருக்கிற காரணத்தால், மழைக்காலங்களிலே வரக்கூடிய நீரை அங்கே ஓரளவிற்குத் தேக்கிவைத்தால்தான் நீர் ஆதாரம் கிடைக்கும். ஒருவேளை அந்த இடத்தில் இல்லாவிட்டாலும் கூட, வேலூர் பக்கத்திலேயாவது, சம்பங்கிநல்லூர் அல்லது பிரம்மபுரம் போன்ற பகுதிகளிலேயாவது check-dams நீங்கள் அமைக்கலாம். முழுமையாகக்கூட நீங்கள் தண்ணீரை



1999 மே 4]

நிறுத்த வேண்டாம், check-tank-களைக் கட்டினாலும்கூட நீராதாரம் பெருகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிருஷ்ணாபுரம் ஏரியாவிலேயாவது அல்லது பிரம்மபுரம் பகுதியிலேயாவது அல்லது மேல்விஷாரம் பகுதியிலேயாவது check-dam கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். காரணம், பாலாற்றிலே அணை கட்டுகிற அளவிற்கு அங்கே Technical Feasibility கிடைக்கவில்லை. எனவே, ஆங்காங்கே சிறுசிறு Check-dam கட்டுவதன் மூலம், தண்ணீரை ஒரு அடி, இரண்டு அடி நிரப்பினால் அந்த ground water கிடைக்கும் என்ற காரணத்திற்காக இப்போது ஓர் ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறோம். 10 இடங்களிலாவது அப்படிக் கட்டலாமா என கீழே வாலாஜாபாத் வரை அதைச் செய்வதற்கு வேண்டிய ஓர் ஆய்வு நடத்தும்படி பொதுப்பணித் துறையின் ஆய்வுத் துறையிடம் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். விரைவில் அந்த அறிக்கை கிடைத்த பிறகு அடுத்து, இந்த அரசு அதுகுறித்து பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 608, திரு. மா. இராமச்சந்திரன், பொதுப்பணித் துறை அமைச்சர்.

**608—**

**ஏரிகளைச் செப்பனிடுதல்**

***22297—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், பின்னையூர் ஊராட்சியிலுள்ள சேம்பன் ஏரி மற்றும் பின்னேரியைத் தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பின்னையூர் ஊராட்சியில் உள்ள சேம்பன் ஏரி மற்றும் பின்னேரி ஆகியவை வரும் நிதியாண்டில் இயந்திரம் மூலம் தூர் வாரிச் செப்பனிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1999 மே 4

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே ஓடுகின்ற கொக்கு வாய்க்கால் தூர் வாரப்பட்டு, மிகச் சிறப்பாக தஞ்சை மாவட்டத்திலே பொதுப்பணித் துறை செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இப்போது பாராட்டக்கூடிய ஒரு இலாக்காவாக, தஞ்சை மாவட்டத்திலே செயல்படுகிறது பொதுப்பணித் துறை. அந்த வகையிலே அதற்கு அருகில் இருப்பதுதான் பின்னேரியும், சேம்பன் ஏரியும். ஆகவே, இந்த ஏரிகளையும் தூர் வாரிக் கொடுத்தால், முழுமையாக அந்தப் பகுதியில் தூர் வாரப்பட்ட நிலை உருவாகும் என்பதனால்தான் இந்தக் கேள்வியே கேட்டிருந்தேன். அடுத்த ஆண்டு செய்து கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உறுதி அளித்ததன் காரணமாக அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 609, திரு. கு. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**609—**

**பாண்டிச்சேரிக்கு தருமபுரியிலிருந்து பேருந்து**

***15845—திரு. கு. மனோகரன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி நகரிலிருந்து பாண்டிச்சேரிக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிடையே மறு ஒப்பந்தம் ஏற்படும்போது, தேவைப்படின், இவ்வழித்தடத்தை இயக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் பரப்பளவில் ஒரு பெரிய மாவட்டம். மக்கள் தொகையிலும் அதிகமான மக்கள் தொகை உள்ள மாவட்டம். தருமபுரியிலேயிருந்து தினசரி பாண்டிச்சேரிக்குச் செல்லும் பல்வேறு பயணிகளும், அதேநேரத்தில் ஜிப்மெர் மருத்துவமனைக்குச் செல்லும்



1999 மே 4]

நோயாளிகளும் நேரடிப் பஸ் போக்குவரத்து, தருமபுரியிலேயிருந்து பாண்டிச்சேரிக்கு இல்லாமல் மிகுந்த சிரமப்படும் நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுகொண்டு உடனடியாக பேருந்து விடுவதற்கு, பாண்டிச்சேரியுடன் தொடர்பு கொண்டு ஒரு நிலையை ஏற்படுத்தி, தருமபுரிக்கும் பாண்டிச்சேரிக்கும் நேரடிப் பஸ் போக்குவரத்தைத் தொடங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட பிறகுதான் இந்த Single Point Tax என்று சொல்லப்படுகின்ற ஒருமுனை வரியிலே பேருந்துகளை இயக்க முடியும். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கேரள மாநிலத்தோடும், கர்நாடக மாநிலத்தோடும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டு, இதுபோன்ற பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பாண்டிச்சேரி மாநிலத்தோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே இருக்கிற பெரிய சிக்கல் என்னவென்று சொன்னால், கேரளா, கர்நாடக மாநிலங்களோடு ஒப்பந்தம் செய்கின்றபோது, அவர்களுக்கு அரசுப் போக்குவரத்துத் துறை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பேருந்துகளை இங்கே இயக்கலாம்: நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்களை அங்கே இயக்கலாம்; ஆனால், பாண்டிச்சேரியைப் பொறுத்தவரை; அங்கே அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் கிடையாது. ஆகவே, அவர்கள் நம்மிடம் கேட்கிறபோது தனியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை உங்கள் பகுதியிலே விடுவதற்கு எங்களுக்கு அனுமதி கொடுத்தால், உங்கள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை எங்கள் பகுதியிலே விடுவதற்கு அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது கொள்கை அளவில் எடுக்கப்பட வேண்டிய முடிவு. எனவே முதலமைச்சருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு விரைவில் முடிவெடுக்கப்பட்ட பின்னர் புதுவை மாநிலத்தோடு ஒப்பந்தம் ஏற்படுமாயின் தருமபுரியிலிருந்து பாண்டிச்சேரிக்குப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 610, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

[1999 மே 4

610—

### கூடுதல் பேருந்து இயக்குதல்

***22513—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், தென்காசியிலிருந்து மேலப்பாவூருக்கு பாவூர் சத்திரம் வழியாகக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட வழித்தடத்தில் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதிகள் இருப்பதால் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மேலப்பாவூர் கிராமத்திற்கு தடம் எண் 1-ஏ பேருந்து, காலை, மாலை இருவேளைகள் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன. 5 தடவை இயக்கப்பட்டு வந்த தடம் எண் 22 பேருந்துகூட தற்போது இரண்டு தடவைகள்தான் இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியிலே கூடுதலாகப் பேருந்து வசதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று பொதுமக்கள் நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள். ஆகவே கூடுதலாகப் பேருந்து வசதி செய்ய அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளிலேயிருந்தும் கூடுதல் பேருந்துகள் விட வேண்டும், விடவேண்டும் என்று எல்லா உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். கூடுதலாக இன்னும் 17,000 பேருந்துகள் விட்டால்கூட இவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கமுடியுமா என்பது சந்தேகம்தான். ஆகவே போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமைக்கேற்பதான் இதுபற்றி முடிவு எடுக்க முடியும். தற்போதுள்ள சூழ்நிலையில் கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு வாய்ப்புகள் குறைவு.



1999 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 611, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

611—

### துறைமுகங்களை மேம்படுத்துதல்

***25893—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர், குளச்சல் துறைமுகங்களை B.O.O.T. (கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, ஒப்படைக்கும்) திட்டத்தின்கீழ் மேம்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், கடலூர் மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில் தனியார் பங்கேற்பின்மூலம் B.O.O.T. (கட்டுதல், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்) அடிப்படையில் பெரிய அளவிலான துறைமுகங்களை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசால் கடந்த 1996ஆம் ஆண்டிலேயே தீர்மானிக்கப்பட்டு இச்செயற்குறிப்புகளின் மீதான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்கள் அனைத்தையுமே செம்மைப்படுத்த வேண்டியது அரசினுடைய கடமை. பல்வேறு செலவினங்கள் அரசுக்கு அதிலே மிச்சமாகும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக கடலூர், குளச்சல் போன்ற துறைமுகங்களைத் தனியார்வசம் ஒப்படைத்து மேம்படுத்தினால் பல நன்மைகள் வந்து சேரும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களில் பங்கேற்க எந்தெந்த நிறுவனங்கள் முன்வந்திருக்கின்றன. அந்த நிறுவனங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் நிலை என்ன? அவற்றிலே அரசினுடைய முடிவு என்னவாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தமிழ்நாட்டிற்கு ஒரு

பெரிய வரப்பிரசாதமாக நீண்ட கடற்கரை இருக்கிறது. ஏராளமான துறைமுகங்கள் அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எல்லாத் துறைமுகங்களையும் மேம்படுத்த வேண்டுமென்ற ஆர்வமும், ஆசையும் அரசுக்கு இருந்தாலும்கூட, அதற்குரிய நிதி ஆதாரங்கள் அரசுக்குத் தற்போதில்லை. எனவேதான் குறிப்பிட்ட சில துறைமுகங்களை மேம்படுத்துவதற்கு அரசு முன்வந்திருக்கிறது. அதிலே குளச்சல் துறைமுகமும் கடலூர் துறைமுகமும் முன்னுரிமை பெற்றிருக்கின்றன. இதுகுறித்து ஆய்வுகள் நடத்துவதற்காக டெண்டர் கோரப்பட்டு டெல்லியைச் சேர்ந்த Consulting Engineering Service என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, அந்நிறுவனம் இந்த ஆய்விலே ஈடுபட்டது. ஆய்வு அறிக்கை அரசுக்குத் தந்திருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் கடலூர் துறைமுகத்தைத் தனியார் மூலமாக மேம்படுத்துவதற்கு—RFQ—Request for Qualification என்பதற்காக ஒரு டெண்டர் கோரப்பட்டது. 5 நிறுவனங்கள் டெண்டர் போட்டார்கள். அதில் இரண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்று Reliance Industries Limited. மற்றொன்று International Seafats India Limited. இந்த இரண்டு நிறுவனங்களும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து இந்த இரண்டு நிறுவனங்களும் தங்களுடைய Request for Proposals-ஐ தங்களுடைய கருத்துரு விழைவினை அரசுக்கு அளிக்க வேண்டும். அதற்கு 31.5.1999 கடைசி நாள் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே அந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் இந்த Request for Proposals கேட்கப்பட்டிருக்கிறது. குளச்சல் துறைமுகத்தைப் பொறுத்த அளவிற்கு உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் சிங்கப்பூர், மலேசியா சென்றிருந்தபோது மலேசியா அரசாங்கத்தோடு அதனுடைய பிரதமரோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து மலேசியா அரசு குழு (Team) மாண்புமிகு அமைச்சர் திரு. டத்தோ சாமுவேல் அவர்களுடைய தலைமையிலே வந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அவர்கள் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு ஆர்வம் காட்டுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தை 23-4-1999 அன்று சென்னை கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, Malaysian High Commissioner என்னை 28-4-1999 அன்று வந்து சந்தித்தார். எனவே, மலேசியா அரசாங்கம், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதால், தொடர்ந்து அரசு இதுகுறித்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 612, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**612—**

**பரங்கிப்பேட்டை துறைமுகத்தை மேம்படுத்துதல்**

***26502—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டையில் இருக்கும் துறைமுகத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரங்கிப்பேட்டையில் இருக்கும் துறைமுகத்தை மேம்படுத்துவது சம்பந்தமான செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்துகிற இந்த நேரத்திலே, பரங்கிப்பேட்டை துறைமுகம் என்பது, ஆங்கிலேயர் காலத்திலேயும், அதற்குப் பிறகு இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்ற பிறகும், மிகச் சிறப்பாக இயங்கிவந்த ஒரு துறைமுகம். ஆனால், தற்சமயம் அங்கே துறைமுகம் இல்லை. இருந்தாலும், கடலூரிலே இவ்வளவு பெரிய துறைமுகத்தைத் விரிவுப்படுத்துகிறபோது, அங்கே வெள்ளாற்று முகத்துவாரத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று நீண்டகாலமாக அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் வலியுறுத்தி வருகிறார்கள். ஆங்கிலேயர் காலத்திலே, அங்கே பயணிகள் போக்குவரத்து, ஏற்றுமதி, இறக்குமதி இவையெல்லாம் நடைபெற்ற மிகப் பெரிய துறைமுகமாக இருந்தது. அந்த இடத்திலிருந்த மிகப் பெரிய இரும்புத் தொழிற்சாலையிலிருந்து இரும்பு ஏற்றுமதி எல்லாம் செய்யப்பட்டன. அந்தத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய தூண்கள்

எல்லாம், போர்ட்டினோவாவில் தயாரிக்கப்பட்டவை என்ற பெயரோடு, இப்போது சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷனிலும், எக்மோர் இரயில்வே ஸ்டேஷனிலும் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அந்த இடத்தில் மீண்டும் துறைமுகத்தை ஏற்படுத்தி, பயணிகள் போக்குவரத்திற்கு வழிவகுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், மீன் பிடித் துறைமுகமாவது அங்கே அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரங்கிப்பேட்டை துறைமுகம் பெயர் வாய்ந்த துறைமுகம் என்பது வரலாற்று உண்மை. அது பிற்காலத்தில் பயன்படாத காரணத்தினால் 12-9-1972 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி 1-10-1972 முதல் அந்தத் துறைமுகம் மூடப்பட்டுவிட்டது. இது தவிர பரங்கிப்பேட்டையிலிருந்து சற்று வடக்கிலே உள்ள கடலூர் துறைமுகத்தை இப்போது இருப்பதைவிட மிகப் பெரிய துறைமுகமாக ஆக்குவதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைச் சற்று முன்தான் நான் தெரிவித்தேன். அந்தப் பணி மிக விரைவாக நடைபெறுகிறபோது, பரங்கிப்பேட்டை துறைமுகம் தேவையிலலாமல் ஆகும் என்று நான் கருதுகிறேன். இருப்பினும், அரசினுடைய, நிதியாதாரத்தைப் பொறுத்து, எதிர்காலத்தில் தேவைப்படுமானால், இதைப் பரிசீலிக்கலாம். முதலில், கடலூர் துறைமுகத்திற்கு அரசு முன்னுரிமை வழங்கி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 613, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**613—**

### மண்ணெண்ணெய் விநியோகம்

*** 25715—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் குறைபாடுகள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்கீழ், குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு, மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தனியார் சிறு வணிகர்கள் செயல்பாடு குறித்து பொதுப்படையாக புகார் ஏதும் பெறப்படவில்லை. குறிப்பிட்ட வணிகர் எவரேனும் முறையாகச் செயல்படவில்லை என்றோ, முறைகேடு செய்கின்றனர் என்றோ புகார் பெறப்படின், தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தக ஒழுங்குமுறை) ஆணை எண் 1973-ன் படி அவர்களின்மீது உரிய நடவடிக்கை தொடரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிற நேரத்தில், அவர்கள் நியாயமான முறையிலே பொதுமக்களுக்கு உரிய மண்ணெண்ணெய் வழங்குவதில்லை. பெரும்பாலான இடங்களில் அவர்கள் வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு மண்ணெண்ணெய்யை விற்பனை செய்துவிடுகிறார்கள். குடும்ப அட்டையைப் பொதுமக்கள் கொண்டுபோய் அவர்களிடம் மண்ணெண்ணெய் கேட்டால், இந்த மாதம் தீர்ந்துவிட்டது; அடுத்த மாதம் வாருங்கள் என்று சொல்லி, திருப்பி அனுப்பி விடுகிறார்கள். இப்படிப் பல பகுதிகளிலே, குறிப்பாக, என்னுடைய தொகுதியில், காங்கேயம் வட்டம், உத்தமபாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியிலே, பொன்னுசாமி என்பவர்க்குக் கூட உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் முறையாக, மாதா மாதம் அதை வழங்காத காரணத்தினால், அங்கே பெரிய பிரச்சினை எழுந்து, வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவர் வரை சென்று, அதற்குப் பிறகு, குறிப்பிட்ட காலம் வரை அவர் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருந்தார். மீண்டும் அவருக்கு அந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற முறைகேடுகள் அடிக்கடி வருவதால், அதை ஒழுங்குபடுத்தவோ அல்லது தனியார் உரிமத்தை இரத்து செய்யவோ, அல்லது தொடக்க கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவோ அல்லது அரசு மூலமாகவோ அந்த மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டில் மண்ணெண்ணெய் விநியோகத்தினை

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரசு முறைப்படுத்தியபோது, ஏற்கெனவே, தனியார் உரிமம் பெற்று இருந்தவர்களை விட முடியாமல், அவர்கள் நீதிமன்றம் சென்று நீதிமன்றத்திலே எங்களுடைய பழைய உரிமையைத் தர வேண்டுமென்று கேட்ட காரணத்தினால், நீதிமன்ற ஆணையின்படி தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1,810 பேருக்கு அந்த விநியோக உரிமம் தரப்பட்டு இருக்கிறது. அவர்கள் முறைகேடாக நடப்பார்களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் நீதிமன்றம் சென்று தடையாணையை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள். தொடர்ந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சமீபத்திலேகூட, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 13 தனியார் மண்ணெண்ணெய் விநியோகம் செய்பவர்களுக்கு உரிமத்தை இரத்து செய்து இருக்கிறோம். அதிலே மூன்று பேருக்கு நிரந்தரமாக, அந்த உரிமத்தை இரத்து செய்திருக்கிறோம். ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று தடையாணையைப் பெறுகின்ற காரணத்தினால், அதுகுறித்து தொடர்ந்து அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்யப்படுகிறது. சில இடங்களிலே எந்தத் தேதியில் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று தெரிவித்து, அப்படி அவர்கள் தரவில்லையென்று சட்டமன்ற உறுப்பினர்கள் எழுத்துபூர்வமாக எழுதித் தருவார்களேயானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுமுறை நாட்கள் போக, மற்ற நாட்களிலே அத்தியாவசியப் பொருட்கள் சீமை எண்ணெய் உட்பட கொடுக்க வேண்டும் என்று அரசினுடைய விதி இருந்தும்கூட, கிராமப் பகுதியிலே முழுமையாக அது கொடுக்கப்படுவதில்லை. அதேபோல தனியார் மூலமாக கொடுக்கப்படக்கூடிய சீமை எண்ணெயும் மாதத்திலே ஒரு நாள் கொடுத்துவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்கள் கூறியபடி, மற்ற நாட்களிலே சென்று, ஏழையெளியவர்கள் கேட்கின்றபோது, சீமை எண்ணெய் தீர்ந்துவிட்டது. அடுத்த மாதம் வாருங்கள் என்று சொல்கின்ற நிலைதான் தொடர்ந்து இருக்கிறது. எனவே, இந்த நிலையை மாற்றி, ஏழையெளியவர்களுக்கு விடுமுறை நாட்கள் போக மற்ற நாட்களிலே அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் கிடைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு மானிய விலையிலே 76,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் பொது விநியோகத் திட்டத்திலே வழங்குவதற்காக நமக்கு வழங்குகிறார்கள். கைவண்டி வணிகர்கள் தமிழ்நாடு முழுவதும் 2,972 பேர் இருக்கிறார்கள். அதிலே, 1,810 பேருக்கு 500 அட்டைகளுக்கு இந்த மாதிரி கடைகள் மூலமாக வழங்கக்கூடிய உரிமம் தரப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே தவறு நடக்கின்ற காரணத்தினால்தான் இந்த கைவண்டி வியாபாரிகளுக்கு தினமும் 100 லிட்டர் என்பதை 50 லிட்டராகக் குறைத்து அதனை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்குவதற்கு இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 50 லிட்டர் என்று ஆக்கியிருக்கிறோம். இந்தத் தனியார் வணிகர்களை முறைப்படுத்துவதற்காக தொடர்ந்து அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அப்படி நடவடிக்கை எடுக்கின்றபோது ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று, ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தடையாணையைப் பெற்றுவிடுகின்ற காரணத்தினால்தான் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை. இருந்தாலும் அவர்களுடைய வருவாய் குறையாத வகையிலேதான் அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறதே தவிர, தொடர்ந்து அவர்கள் முறைகேடுகள் செய்வார்களேயானால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்போது அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டிருக்கின்றது. இந்த மாதம் கூட 100 இடங்களிலே ஆய்வு நடத்தி தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அத்தகைய இடங்களில் நடவடிக்கை தொடருவதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்லறை விற்பனையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய ஆதரவற்ற பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு உரிமம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டைகள் வந்ததற்கு பின்னாலே மண்ணெண்ணெய் தேவையும் அதிகமாக இருக்கின்றது. குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தில் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மூலமாக மண்ணெண்ணெய் வழங்குவதில் அவர்களுக்கான ஒதுக்கீடு ஒரு மாதத்திற்கு 240 கிலோ லிட்டர். ஆனால், அவர்கள் குறைத்து வழங்கப்படுவதாகத் தகவல் அறியப்படுகிறது. அதிலும் குறிப்பாக என்னுடைய மன்னார்குடிக்கு தேவை 2,85,000 லிட்டர். ஆனால் அவர்கள் குறைத்து வழங்குவதாலே அங்கே மண்ணெண்ணெய் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. இதை சரிசெய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொது விநியோகத் திட்டத்திற்கு முழுமையாக 100 சதவிகித மண்ணெண்ணெய் வழங்குவதற்கு நமக்குத் தேவையான அளவு 81,000 கிலோ லிட்டர். ஆனால் மத்திய அரசு ஒதுக்கீடு செய்வது 76,000 கிலோ லிட்டர். இதற்கிடையிலே முன்னாள் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் அங்கே பெட்ரோலியத் துறையிலே இருந்தபோது, கொஞ்சம் அதிகமாக மண்ணெண்ணெய் ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி அப்படி ஒதுக்கித் தந்து 100 சதவிகித மண்ணெண்ணெய் வழங்கிக் கொண்டு வந்தோம். இப்போது அரிசிக்குப் பதிலாக மண்ணெண்ணெய் கூடுதலாகத் தரவேண்டுமென்று கேட்கின்ற காரணத்தினாலே, கூடுதலாக 5,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. அப்படித் தேவைப்படுகின்ற காரணத்தினால்தான் தனியார் மூலம் விநியோகிக்கப்படும் 100 லிட்டர் என்பதை 50 லிட்டராகக் குறைத்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. அத்தனை மாவட்டங்களிலும் 100 சதவிகித மண்ணெண்ணெய் வழங்கிக்கொண்டு வருகிறோம். இடையிலே எங்கேயாவது ஒரு சிறு தவறு இருக்குமானால், அதைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அதைத் திருத்திக்கொள்ள இயலும். ஏனென்றால், ஒவ்வொரு மாதமும் அங்கிருக்கின்ற மாவட்ட வழங்கல் அலுவலர் எங்களுக்குத் தேவையான அளவு இவ்வளவு என்று அவர்கள் குறித்துத் தருகின்ற அளவிற்கு ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்றோம்.. அதிலே கொஞ்சமும் குறைபாடு



1999 மே 4]

இல்லாமல் அதை நிவர்த்தி செய்து முழுமையாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விற்பனை உரிமம் பெற்ற பல பேர் இறந்து விட்டார்கள். அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அதைத் தர இயலவில்லை என்று கூறி இறந்துவிட்ட நபர்கள் பெயரிலேயும் மற்றும் இருக்கின்ற பினாமி பெயர்களிலேயும் அந்த வியாபாரத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதை அரசு அறியுமா, அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 5,000-த்திற்கு மேற்பட்ட கைவண்டி வணிகர்களுக்கு ஏற்கெனவே உரிமம் வழங்கப்பட்டிருந்தது. இப்படிப் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக 2,972 பேர்தான் இப்போது இந்த வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து முழுமையாக அவர்களுக்குத் தரக்கூடிய இடை நிகழ்வுப் பணம் முழுவதையும் அரசாங்கமே தந்து, அந்த மண்ணெண்ணெயை எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டபோது, அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நாங்கள் மண்ணெண்ணெய்தான் வாங்கி வியாபாரம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு இடத்திலே தினமும் 50 லிட்டர் கொண்டுபோய் பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்றால் அவர்கள் வழங்குவது இல்லை. தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இறந்தவர்களுடைய உரிமத்தைப் புதுப்பிப்பது இல்லை. அதை முறையாக அரசுதான் எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்டு எந்தப் பகுதி என்று சொன்னால், அதை அரசே எடுத்து அந்த மண்ணெண்ணெயை மக்களுக்கு வழங்குவதற்குரிய முயற்சியை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 614, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

[1999 மே 4

**614—**

**குடிசைமாற்று வாரியத்தின் மூலம் இலவச வீடுகள்**

***18873—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி நகரில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் இலவச வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி, பேராவூரணி நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சொந்த வீடுகள் இல்லாத ஏழை எளிய மக்கள் வசித்து வருகின்றார்கள். சென்னை போன்ற நகரங்களிலே ஏழை எளிய மக்களுக்கு அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல, தமிழகத்தின் பிற பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல எனது தொகுதியிலும் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி ஊராட்சி, குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் ஒப்படைத்தால், நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலித்து, வீடு கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 615, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**615—**

**விசைத்தறித் தொழிலை பாதுகாத்தல்**

***20842—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்து வரும் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க மாவட்ட அளவிலான தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினை



1999 மே 4]

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க மாவட்ட அளவிலான தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இலட்சக்கணக்கான விசைத் தறிகள் உள்ளன. கடந்த 3 ஆண்டு காலமாக அந்தத் தொழில் மிகவும் நலிவடைந்துள்ளது. நான் அந்தத் தொழிலினுடைய நிலைமைகளை எல்லாம் இந்த அவையிலே பலமுறை எடுத்துரைத்திருக்கின்றேன். இன்னும் அந்தத் தொழில் செய்யக்கூடிய விசைத்தறி உரிமையாளர்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மிகவும் வறுமை கோட்டிற்குக் கீழே சென்றிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள், தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் இடத்திற்கு மாற்றிக் காட்டிய வல்லமை மிக்கவர். இருப்பினும் விசைத்தறித் தொழில் செய்யக்கூடிய அந்தத் தொழிலாளர்களும், அந்த உரிமையாளர்களும் மிகவும் நலிந்திருப்பதன் காரணமாக அந்தத் தொழிலை மேம்படுத்த, குறைந்த கட்டணத்தில் மின்சாரமும், நலிவடைந்த நெசவுத் தொழிலில் ஈடுபடக்கூடிய அவர்களுக்கு குறைந்த வட்டியிலே கடன் உதவியும் அளிக்க அரசு சிபாரிசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற விசைத்தறிகள் முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு, முறையாக அமைக்கப்படவில்லை. காரணம் இதில் உரிமையாளர் என்ற பெயரிலே விசைத்தறி வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய நன்மையைக் கருதி அவர்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் Collateral Security என்ற ஆதாரத்தைக் கொடுத்து, அதன்மூலம் கடன் பெற்ற நெசவாளிகளும் இருக்கிறார்கள். அதுபோக, தொழிலியல் கூட்டுறவு

விசைத்தறியாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்புகளில், அவை தொழிற்சாலைகள் என்ற அடிப்படையிலே அவற்றினுடைய அன்றாட நடைமுறைச் செலவினங்களே அதிகமான காரணத்தால் பெரும் நட்டம் ஏற்பட்ட சங்கங்களும் இருக்கின்றன. இவற்றையெல்லாம் முறைப்படுத்துகிற ஒரு வாய்ப்பு இப்போதுதான் கிடைத்திருக்கிறது. குஜராத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்திலேதான் விசைத்தறிகள் அதிகம் இருக்கின்றன. 2,75,000 விசைத்தறிகள் இருக்கின்றன என்ற கணக்கு தமிழகத்திலே இருந்தாலும், நிச்சயம் அதைவிடக் கூடத்தான் இருக்கும். எந்தவிதமான அனுமதியும் பெறாமல் இருப்பதற்குக்கூட நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போதுதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையோடு, அவர்கள் அரசை நம்பி அரசிடம் வந்து தங்களுடைய பிரச்சினைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி பல அணுகுமுறைகள் இப்போது நடைபெற்று வருவதையொட்டி அரசு அதைக் கவனித்து ஒரு நல்ல முடிவு எடுக்கும் என்ற அடிப்படையிலே இப்பொழுது செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அடுத்து, மத்திய அரசினுடைய Technology Upgradation Fund என்பதிலேயிருந்து எந்த அளவிற்கு இந்த விசைத்தறிக்கு உதவ முடியும் என்பதையும் இப்பொழுது நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலும் எந்த அளவிற்கு இந்த விசைத்தறிக்குச் செய்ய இயலுமோ அதையும் செய்ய வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். அதுபோக, கைத்தறியைப் பொறுத்தவரையில், இலவச வேட்டி சேலை, uniform போன்றவை எல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்கு முற்றிலும் ஒதுக்கப்பட்டு, அதுபோக மீதியிருக்கின்ற உற்பத்தியை விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தற்போது ஒதுக்கியிருக்கிறோம். இதுகுறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட லுங்கி ரகத்தை, விசைத்தறியில் தயாரிக்க அரசு தடையாணை இருந்தும் தொடர்ந்து விசைத்தறியில் லுங்கி ரகத்தைத் தயார் செய்வதைத் தடை செய்யக் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலேயே தமிழகத்திலேதான் இந்த reservation என்ற அடிப்படையிலே பல வழக்குகள் இப்போது விசைத் தறியாளர்கள்மீது போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த 2 மாத காலத்திலே அதை மிகத் தீவிரமாக நாம் நடைமுறையிலே கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், விசைத்தறியாளர்களையே சந்தித்து சட்டத்தை மட்டும் கணக்கிலே கொள்ளாமல், ஒரு ஒத்துழைப்போடு இந்தப் பணியை, இந்த ஒதுக்கீட்டைச் சிறப்பாக அவர்கள் தங்களுடைய உற்பத்தியிலே தவிர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் கைத்தறியாக இருந்தாலும் சரி, விசைத்தறியாக இருந்தாலும் சரி, இரண்டு தொழில்களும் மிகவும் நலிவுற்ற நிலையில்தான் இருக்கின்றன. இந்தக் கைத்தறியைப் பொறுத்தவரையில் அதை ஊக்கப்படுத்தி விசைத்தறிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக அந்தக் கைத்தறியிலே கிட்டத்தட்ட 22 ரகங்களை ஒதுக்கீடு செய்து கொடுத்தது அரசு. அதைப்போல இந்த விசைத்தறிகளைப் பொறுத்தவரையில் விசைத்தறித் தொழிலை ஊக்கப்படுத்த, நலிவடைந்து கிடக்கின்ற விசைத் தறிகள் வளர்ச்சி அடையும் விதத்தில் விசைத்தறிகளுக்குத் தனியாக ரகம் ஒதுக்கீடு செய்வதற்கு, சில ஜவுளிகளை மில்லிலிருந்து பிரித்து விசைத்தறிக்குத் தனியாக ஒதுக்கீடு செய்வதற்கு அரசு ஆலோசனை செய்யுமா? உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியிலும் துணி நெய்யலாம். அதேபோல Weaving என்ற அடிப்படையிலே new technology—யிலேயும் புது அணுகுமுறையிலேயும் துணி நெய்யக்கூடிய வாய்ப்பு உண்டு. Raw material என்று செல்லப்படுகிற வெறும் grey காடா செய்வதற்காகத்தான், தமிழகத்திலே இருக்கின்ற விசைத்தறிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அது பம்பாய்க்குச் சென்றோ அல்லது வேறு இடங்களுக்குச் சென்றோ அதற்குப் பின்புதான் value addition என்ற பெயரிலே garment ஆக மற்ற அணுகுமுறையிலே அது வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டது. இந்தச் சந்தையிலே நமக்கு ஏற்பட்ட பிரச்சினை, மொழியிலே ஏற்பட்ட கோளாறு, அவையெல்லாம்தான் காரணம். இதை ஏதோ பம்பாயிலே இருப்பவர்களை நம்பிச் செய்யக்கூடிய தொழிலாகச் செய்த காரணத்தினால்தான் இவ்வளவு சிரமத்திற்கு அவர்கள்

[1999 மே 4

ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவேதான் ஏற்றுமதியிலும் இதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து மத்திய அரசினுடைய Technology Upgradation Fund - ஒரு தொகையை இதற்காக வாங்கிக்கொடுத்து அவர்களுடைய சிரமத்தைக் குறைத்து நிச்சயம் ஒரு நல்ல வழிமுறையைக் காண வேண்டுமென்ற அடிப்படையில்தான் தற்போது அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 616, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

முறபகல் 10-25

**616—**

**பூநாரை இல்லத்தில் குடிநீர் வசதி**

***14747—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை, கோடியங்காடு பகுதியில் உள்ள சுற்றுலாப் பயணிகள் தங்கும் பூநாரை இல்லத்தில் குடிதண்ணீர் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை, கோடியங்காடு பகுதியில் உள்ள சுற்றுலா பயணிகள் தங்கும் பூநாரை இல்லத்தில் குடிநீர் வசதி சரியில்லை. எனவே, இங்கு தங்கும் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப குடிநீர், வண்டியில் கொண்டு வந்து அதற்கான தொட்டியில் நிரப்பப்படுகிறது.

(ஆ) இக்கட்டடம் பழுதுபார்க்கக்கூடிய நிலையில் இல்லையாதலால் இதற்குக் குடிநீர் வசதி செய்யும் உத்தேசம் இல்லை. இதனை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.



1999 மே 4]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சரணாலயங்கள் எத்தனை? அவைகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதா? குறிப்பாக, சென்னை அருகே உள்ள வேடந்தாங்கலில் உள்ள சுற்றுலாப் பயணி விடுதி மிகவும் பழுதடைந்து இருக்கிறது. அதை சமீபத்திலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். அதன்மீது அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயங்கள் 12-ம், வன விலங்குச் சரணாலயங்கள் 6-ம், தேசியப் பூங்கா 5-ம் ஆக 23 சரணாலயங்கள் உள்ளன. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திலுள்ள ஓய்வு விடுதி 1967 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த ஓய்வு விடுதியில் நான்கு அறைகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் தங்கும் விதத்தில் மேற்சொன்ன ஓய்வு விடுதியை ரூபாய் 2 இலட்சம் செலவில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு வாரங்களில் புதுப்பிக்கும் பணி முடிவடைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 617, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**617—**

**சத்துணவு மையம் தொடங்குதல்**

***14628—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கோம்பைக்காட்டில் சத்துணவு மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 618, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**618—**

**கால்நடை மருத்துவமனை**

**•15633—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சிக்குக் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்து செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருக்கல்வாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கால்நடை மருத்துவமனைக்குப் போதுமான இடம் இல்லாமையால் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டு வருகிறது. கால்நடைகள் வந்து மருத்துவம் செய்துகொள்ளும் அளவிற்கு ஒரு புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருக்கல்வாடி என்ற ஊரில் 23-1-1998 அன்றைய தேதியில்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய பரிந்துரைப்படி பார்வைக் கிளை நிலையம் செயல்படத் தொடங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதி வளர்ச்சி நிதியாக 50 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதிலே கட்டடத்திற்கான நிதியை ஒதுக்கிக் கட்டடம் கட்ட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 619, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1999 மே 4]

**619—**

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்**

**•20022—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி வட்டம், ராதாநரசிம்மபுரத்தில் கால்நடை மருத்துவமனை கட்ட கிராம மக்களின் சார்பில் இடம் வழங்கப்பட்டும், மருத்துவமனை தொடங்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், ராதாநரசிம்மபுரத்தில் கால்நடை மருத்துவமனை கட்ட கிராம மக்களின் சார்பில் இடம் எதுவும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு இதுவரை வழங்கப்படவில்லை. ராதாநரசிம்மபுரத்தில் கால்நடைக் கிளை நிலையமோ, பார்வைக் கிளை நிலையமோ இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை அமைப்பதற்காக மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டத்திலே, ராதாநரசிம்மபுரம் கிராமத்திலே இடம் ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வதுபோல் அந்தத் துறையின் மூலமாக முறைப்படியாக அனுப்பப்படவில்லையா என்பது பற்றி எனக்கு சரியான தகவல் இல்லை. இருந்தாலும், அந்தக் கிராமத்தின் சார்பிலே சொல்லப்படுகிறது, பல ஆண்டுகளாக அந்த இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று. ஆகவே, அது முறைப்படியாக அனுப்பிவைக்கப்பட்டால் பரிசீலித்து அங்கே மருத்துவமனை தொடங்குவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மூலம் விசாரிக்கப்பட்டு தந்த விளக்கக் குறிப்பில் கோட்டூர் ஒன்றியம், ராதாநரசிம்மபுரம் ஊராட்சியில் கால்நடை

[1999 மே 4

மருத்துவ நிலையம் ஆரம்பிக்க, அவ்வூராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவலர் 30-12-1998 தேதியிட்ட கடிதத்தில் ஒரு ஏக்கருக்கு நிலம் வாடகை இல்லாக கட்டடம் கேட்டு ராதாநரசிம்மபுரம் ஊராட்சிக்கு எழுதியுள்ளார். ராதாநரசிம்மபுரம் ஊராட்சியில் அவ்வூராட்சிக்குச் சொந்தமான, சர்வே எண் 373/4பி, 373-ன்கீழ் 4-சி-ல் மொத்தம் 50 சென்ட் நிலம் வழங்குவதற்கு தீர்மானம் ஒன்றை பிப்ரவரி 1999-ல் நிறைவேற்றி உள்ளார்கள். ஆனால் அத்தீர்மானம் கோட்டூர் ஒன்றியத்திற்கு இதுவரை அனுப்பப்படவில்லை. கால்நடை பராமரிப்புத் துறைக்கு அத்தீர்மானம் குறித்துத் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அந்தப் பகுதி கால்நடைகளினுடைய எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும் மற்றும் எதிர்காலத்தின் நிதிநிலைமையைக் கருத்திற்கொண்டும் எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 620, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**620—**

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

***19116—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், பாலமலையில் மலைவாழ் மக்களுக்காக தற்போதுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தைச் சார்ந்த கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே பாலமலை என்ற ஒரு பெரிய மலைப் பகுதி இருக்கிறது. அந்த மலைப் பகுதியிலே 33 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வாழக்கூடியவர்கள் எல்லோரும் மலைவாழ் பழங்குடியினர் என்ற Scheduled Tribes மக்கள் முழுவதுமாக வாழ்ந்து வருகிறார்கள். அங்கே போக்குவரத்துக்குக் கூட பாதை வசதி கிடையாது. யாராவது மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் அல்லது யாருக்காவது பிரசவ வேதனை என்று சொன்னாலும்கூட, அங்கே தொட்டில் கட்டி எடுத்து வரக்கூடிய அவலநிலை இருந்துகொண்டிருக்கிறது. அங்கே பள்ளிக் குழந்தைகளெல்லாம்கூட படிப்பதற்கு 6, 7 கிலோமீட்டர் மலையிலே நடந்து வர வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்த Scheduled Tribes மக்களுக்காக அங்கேயிருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற, ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மே 4]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக இந்தத் துறையின் சார்பாக 236 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 201 பள்ளிகள் தொடக்கப் பள்ளிகளாகவும், 20 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 8 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் விளங்கி வருகின்றன. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பழங்குடி மக்களுக்காக 45 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் கொளத்தூர்-சேலம் மாவட்டத்தில் 2 உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கொளத்தூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய ஒன்றியமாக இருக்கிறது; பழங்குடி மக்கள் நிறைந்து வாழ்கின்றார்கள் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பாக பழங்குடி மக்களுக்கு அத்துணை அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துக் கொண்டு வருகின்றோம். இந்த கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு இதுநாள் வரையிலும் முன்மொழிவு வரவில்லை. இருப்பினும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரின் மூலமாக முன்மொழிவு வரப் பெற்றபின் எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1999 மே 4

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

**கோவை வழக்கறிஞர் அசோகன் குடியிருந்த விட்டைக் காலி செய்ததற்காக வழக்கறிஞர்கள் நடத்திய ஊர்வலம் மற்றும் நீதிமன்றப் புறக்கணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். நான் வேறு ஒன்றைப் படித்த பிறகு நீங்கள் எழுந்து நிற்கக் கூடாது.*

*28-4-1999 அன்று கோவையில் அசோகன் என்ற வக்கீலை அவர் வீட்டை விட்டுப் போலீசார் சட்ட விரோதமாக அப்புறப்படுத்தியதால் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர் வி.கே.லட்சுமணன் அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது பற்றிச் சுருக்கமாகப் பேசுமாறு அழைக்கிறேன்.*

**திரு. வி.கே. லட்சுமணன்:** *தலைவரவர்களே, கோவையில் ராஜ வீதியில் 229-ஆம் நம்பர் வீட்டில் 25 ஆண்டுகளாக அசோகன் என்ற ஒரு வழக்கறிஞர் குடியிருந்து வருகிறார். அவர் அந்த வீட்டில் தொலைபேசி வைத்திருக்கிறார்; வாடகைப் பணத்தை முறையாகச் செலுத்தி வருகிறார். இருந்தாலும்கூட இந்த மாதம் 23-ஆம் தேதி அன்று அந்த வீட்டினுடைய சொந்தக்காரர்—அவர் ஒரு ஓய்வு பெற்ற அரசு அதிகாரி, ஒரு பெண்மணி—அவர் காவல்துறைக்குத் தகவல் கொடுத்து காவல்துறையினருடைய பாதுகாப்போடு சில அடியாட்கள் என்றுதான் சொல்ல வேண்டும், அவர்கள் வந்து அசோகன் இல்லாத சமயத்திலே அவர் வீட்டிலே இருக்கிற சாமான்களையெல்லாம் அப்புறப்படுத்தி, அவரையும், அவரைப்போலக் குடியிருந்த இன்னும் சிலபேரையும் அந்த வீட்டைவிட்டுக் காலி செய்திருக்கிறார்கள். நான் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதற்குக் காரணம், ஏதோ வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்தார்கள் என்பதற்காக மட்டுமல்ல, எப்படி நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் சுமூகமான உறவு இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அதேபோல காவல்துறைக்கும் வழக்கறிஞர்களுக்கும் சுமூகமான உறவு இருக்க வேண்டுமென்று விரும்புவதோடு காவல் துறை இந்த வழக்கறிஞர் மீது போட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெற்று ஒரு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை இந்த நிகழ்ச்சியின்பால் ஈர்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.*



1999 மே 4]

*முற்பகல் 10-35*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இந்த விஷயம் குறித்துப் பேசிவிட்டு இறுதியாகச் சொன்ன அந்த வேண்டுகோள், இந்த வழக்கைத் திரும்பப் பெற்று, சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நடைபெற்ற சம்பவம்-அவர் ஊரிலேயிருந்தும்கூட—அவருக்குத் திரித்துக் கூறப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இதுபோன்ற சம்பவங்கள், சிறிய சிறிய விஷயங்களுக்காக உருவாவது நல்லது அல்ல என்பதை நாம் அனைவரும் உணர்ந்தாக வேண்டும். மற்றவர்களுக்கும் உணர்த்தியாகவேண்டும்.*

*கோவையிலே உள்ள காவல் ஆணையரைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நன்கு அறிவார்கள். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டே சொல்கிறார்கள் அவர் நல்ல ஆள் என்று. அதனாலே Record பண்ணுகிறோம் அவ்வளவுதான். (சிரிப்பு) திருச்சியிலே இருந்த அவரை அழைத்து கோவைக்குச் சென்று பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டபோது அவர் எனக்குச் சொல்லியனுப்பியதே, யாரும், அங்குள்ள கட்சிக்காரர்களோ அல்லது அமைச்சர்களோ தலையிடாவண்ணம் என்னைச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நிச்சயமாக இந்த அரசு குறுக்கிடும் முறையை என்றைக்கும் கடைபிடித்தது இல்லை, அதிலும் குறிப்பாக, கோவையைப் பொறுத்தவரையில் உங்கள் விருப்பம்போல், சட்டப்படி, நியாயப்படி நடந்துகொள்ளலாம், யாரும் குறுக்கிடமாட்டோம், அப்படிக் குறுக்கிடுகின்ற பழக்கமும் இந்த அரசுக்கு இல்லை என்று, அவரை அழைத்து நான் சொல்லியனுப்பினேன். இதுவரையிலும் அத்தகைய ஒரு நல்ல பெயரை அவர் அங்கே எடுத்து வருகின்றார் என்பதையும் கோவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதைப்பற்றி எனக்குத் தரப்பட்டுள்ள விவரத்தை உங்கள் முன்வைக்க விரும்புகின்றேன்.*

*டெல்லியில் நிதித் துறையிலே கூடுதல் அரசுச் செயலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. உன்னி நாயர் என்பவருடைய மனைவி திருமதி ஜெயலட்சுமிக்கு, கோவை மாநகர ராஜ வீதியில் 229 ஆம் எண்ணில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள மிகப் பெரிய வீடு ஒன்று உள்ளது. இந்த வீட்டை 1973 ஆம் ஆண்டு திரு. கோவிந்தாச்சாரி*

என்பவருக்கு, வாடகைக்காக திருமதி ஜெயலட்சுமி விட்டிருந்தார்கள். அதற்கான ஆவணங்கள் உள்ளன. திரு. கோவிந்தாச்சாரி 1980 ஆம் ஆண்டு இறந்தவுடன், அவரது மகன் சேஷகிரி, தனது தந்தை கோவிந்தாச்சாரி இருந்த அறைகளில் வசித்து வந்துள்ளார். வீட்டின் மீதமுள்ள அனைத்து அறைகளும் வீட்டு உரிமையாளரிடமே இருந்திருக்கின்றன.

இந்நிலையில், உன்னி நாயருடைய மனைவி ஜெயலட்சுமி - வயது அவருக்கு 75 - அவர்கள், தனது வீட்டைப் பார்க்கவந்தபோது, சேஷகிரி தவிர வேறு ஆறு குடும்பத்தினர் வீட்டினுள்ளே குடியிருந்து வருவதை அறிந்து அதுபற்றி விசாரித்திருக்கிறார். திரு. சேஷகிரியின் உடந்தையுடன், ஆறு குடும்பத்தினர் அந்த வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து குடியிருப்பதை முழுமையாக அறிந்தவுடன், 23-4-1999 அன்று பி-1 கடைவீதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகார் 23/99, நாள் 23-4-1999 என்ற எண்ணாகப் பதிவு செய்யப்பட்டு, பூர்வாங்க விசாரணைக்குப்பின், அரசு சட்ட வல்லுநரிடம் கருத்துக் கேட்கப்பட்டபோது, 'சம்பந்தப்பட்ட வீட்டை ஆக்கிரமிப்புச் செய்து இருப்பவர்களும், சேஷகிரியும், சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டுள்ளார்கள், கிரிமினல் அத்துமீறலுக்கான குற்றத்திற்கு உள்ளானவர்கள்; ஆகவே, வழக்குப் பதிவு செய்து கிரிமினல் நடவடிக்கைகள் 'மேற்கொள்ளலாம்' என்று சட்டக்கருத்து தெரிவித்ததன்பேரில், 24-4-1999 அன்று சேஷகிரியை மீண்டும் ஆய்வாளர் திரு. செல்வராஜ் விசாரணை செய்துள்ளார். அப்போது, தான் பணத்திற்கு ஆசைப்பட்டு வீட்டினுள் ஆறு பேர்களையும் தவறாகக் குடியிருக்க அனுமதித்துவிட்டதாகவும், அவர்களை உடனடியாகக் காலி செய்து விடுகிறேன் என்றும், கிரிமினல் வழக்குத் தேவையில்லை என்றும் கேட்டுக்கொண்டதன் பேரில், ஆய்வாளர், கிரிமினல் வழக்குப் பதிவு செய்யவில்லை.

25-4-1999 அன்று திருமதி ஜெயலட்சுமி, காவல் நிலையத்திற்கு வந்து, அவர்களுக்குள்ளேயே பிரச்சினையைப் பேசிமுடித்துக் கொண்டு விட்டதாகவும், திரு. சேஷகிரி அந்த வீட்டில் குடியிருந்த ஆறு குடும்பங்களையும் காலி செய்துவிட்டு, கட்டடத்தைத் தன்னிடம் கொடுத்து விட்டதாகவும் தெரிவித்ததன்பேரில், ஆய்வாளர் மறு விசாரணையை முடித்துக்கொண்டு கிரிமினல் வழக்குத் தொடராமலேயே விட்டுவிட்டார். சேஷகிரியினால், சட்டத்திற்குப் புறம்பாக, மேலே கண்ட வீட்டில் அத்துமீறி குடியிருக்க வைக்கப்பட்டவர்களுள் ஒருவர் திரு. அசோகன் என்ற வழக்குரைஞர். அவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச்



சார்ந்தவர். த.மா.கா. வைச் சேர்ந்தவரும் அல்ல, தி.மு.க. வைச் சேர்ந்தவரும் அல்ல, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர். அவர், தான் ஊரிலே இல்லாத நாளில், காவல்துறையினரின் தலையீட்டின்பேரில், தனது வீடு காலி செய்யப்பட்டது என்று சுமார் 50 வழக்குரைஞர்களோடு 28-4-1999 அன்று மாலை 3.15 மணியளவில் (15.15) கோவை நீதிமன்ற வளாகத்திலிருந்து, சட்டத்திற்குப் புறம்பாக, ஊர்வல ஒழுங்குமுறைச் சட்டம் அமலில் இருந்துகொண்டிருக்கும்போதே, எந்த அனுமதியும் பெறாமல், ஊர்வலமாக ராஜவீதியில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட வீட்டிற்குக் கோஷங்கள் எழுப்பி, வழக்குரைஞர் சங்கத் துணைத் தலைவர் செந்தில்வேல், செயலாளர் ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர் ஜெயந்தி ஆகியோர் தலைமையில் நடந்து சென்றார்கள். வீட்டிற்குச் சென்றவுடன், வீட்டின் முகப்பிலிருந்த காவலாளி ஜீவராஜ் என்பவரை அடித்துத் துரத்தித் தள்ளியுள்ளார்கள். கதவை உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்தார்கள்.

அப்போது, சம்பவத்தைக் கேட்டு, சம்பவ இடத்திற்குச் சென்ற உதவி ஆய்வாளர் திரு. பாலமுருகன், அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றபோது, அவர் வழக்குரைஞர்களால் பிடித்துத் தள்ளப்பட்டிருக்கிறார். சுமார் ஒரு மணி நேரம் வீட்டிற்குள் 75 வயதான திருமதி ஜெயலட்சுமியையும் அவரது மகள் திருமதி இந்திராவையும் வெளியில் வரச்சொல்லி, அச்சுறுத்தி, வெளியே வரவில்லை என்றால் வீட்டிற்குத் தீ வைத்துவிடுவோம் என்று சத்தமிட்டுள்ளார்கள். மிரட்டலுக்குப் பயந்து ஜெயலட்சுமியும். இந்திராவும் வெளியிலே வந்த பின்பு, உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவோம், உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவோம், நிம்மதியாக வீட்டில் குடியிருக்க முடியாது, டெல்லிக்குச் செல்ல முடியாது என்று அச்சுறுத்தி, திரு. அசோகனுக்காகவும் அவரது சகோதரர் திரு. ராஜேந்திரனுக்காகவும் இரண்டு குடியிருப்புகளுக்கான சாவிகளைக் கட்டாயப்படுத்திப் பெற்றுக்கொண்டு கலைந்து சென்று விட்டார்கள்.

முற்பகல் 10-40

வழக்குரைஞர்களின் சட்டத்திற்குப் புறம்பான செயல்கள், காவல் துறையினரால் முழுவதும் வீடியோ படமாகவும், புகைப் படமாகவும் எடுக்கப்பட்டிருக்கிறது.

உதவி ஆய்வாளர் பாலமுருகன் கொடுத்த புகாரின் பேரில், சட்டத்திற்குப் புறம்பாக ஊர்வலம் வந்ததற்காகவும், உதவி ஆய்வாளரைப்

பணி செய்யவிடாமல் தடுத்து அச்சுறுத்தியதற்காகவும், பி-1 கடைவீதி காவல் நிலையக் குற்ற எண் 983/99, சட்டப் பிரிவுகள் 147, 188, 353 மற்றும் 508(1) இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஜெயலட்சுமியையும் அவரது மகளையும் அச்சுறுத்தி வீட்டை முற்றுகையிட்டு, கட்டாயத்தின் பேரில் சாவியை வாங்கி, மீண்டும் திரு. அசோகனும் அவரது சகோதரர் ராஜேந்திரனும் இரண்டு குடியிருப்புகளைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டதற்காக பி-1 கடைவீதி காவல் நிலையக் குற்ற எண் 984/99, 341, 147, 448, 427, 506(2), 323, 386, இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் மற்றும் தமிழ்நாடு சொத்து (சேதப்படுத்துதல் மற்றும் அழித்தல்) தடுப்புச் சட்டம், 1992-ன் பிரிவு 3-ன்கீழும் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையிலே உள்ளது.

வழக்குரைஞர் திரு. அசோகனும் அவரது கட்சியைச் சேர்ந்த சில வழக்குரைஞர்களும், சிவில் வழக்கில் காவல் துறையினர் அத்துமீறித் தலையிட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டியுள்ளார்கள். அக்குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. முதல் சம்பவத்தில், எந்தவிதமான சிவில் சம்பந்தப்பட்ட வழக்கும் இல்லை. திரு. அசோகனும் அவரது சகோதரனும் இன்னும் நால்வரும் திருமதி ஜெயலட்சுமி வீட்டினுள் குடியிருந்தது சட்டத்திற்குப் புறம்பானது. வீட்டின் உரிமையாளர் அவர்களை அனுமதிக்கவில்லை. வீட்டின் ஒரு பகுதியிலே வாடகைதாரரான சேஷகிரி என்பவர் அசோகனையும் பிறரையும் சட்டத்திற்குப் புறம்பாக, பணம் வாங்கிக்கொண்டு வீட்டில் குடியமர்த்தியிருக்கிறார்.

இச்செயல், சட்டத்தை மீறிய கிரிமினல் அத்துமீறல் குற்றமாகும். திரு. அசோகனும், திரு. சேஷகிரியும் இந்தக் கட்டடத்தை முழுமையாக அபகரித்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

தான் இல்லாத நேரத்தில் தன் வீட்டுப் பொருள்களை எல்லாம் வெளியே தூக்கி எறிந்து விட்டதாக வழக்குரைஞர் அசோகன் கூறுவது தவறாகும். அந்த வீடு அசோகன் வீட்டிலே இல்லாத நேரத்தில் அவருடைய இல்லத்திலே இருந்தவர்கள் வீட்டைக் காலி செய்ய அவர்களே ஒப்புக்கொண்டு, காலி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

முதல் விசாரணையிலே, காவல் துறையினர் எந்த இடத்திலும் அசோகனை நேரிடையாகச் சந்திக்கவில்லை. அசோகனையும் பிறரையும்



சட்டத்திற்குப் புறம்பாக குடியமர்த்திய சேஷகிரி அவர்களே, வழக்கு வேண்டாம் என்று திருமதி ஜெயலட்சுமியிடம் சொல்லி, சட்டத்திற்குப் புறம்பாகக் குடியிருப்பவர்களைக் காலி செய்து வீட்டை உரிமையாளர்களிடத்தில் ஒப்படைத்ததின் பேரில் கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை.

வீட்டு உரிமையாளரின் எந்தவிதமான எழுத்து மூலமான அல்லது வாய்மொழி மூலமான உத்திரவின்றி வீட்டை ஆக்கிரமித்து குடியிருந்தது வழக்குரைஞர் அசோகன் செய்த முதல் கிரிமினல் குற்றமாகும். மீண்டும் 28 ஆம் தேதி சட்டத்திற்குப் புறம்பாக பிற வழக்குரைஞர்களோடு, அவர்கள் துணையோடு சென்று மீண்டும் சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு வீட்டை ஆக்கிரமித்தது இரண்டாவது குற்றமாகும்.

சக வழக்குரைஞர் ஒருவரின் உதவிக்காக மற்ற வழக்குரைஞர்களும் இணைந்து நீதிமன்றத்தை சில நாட்கள் புறக்கணித்த போதிலும் நேற்றையதினம் கிரிமினல் வழக்குரைஞர்கள் அனைவரும் நீதிமன்றங்களுக்கு வருகை தந்துள்ளார்கள். சிவில் நீதிமன்றங்கள் தற்போது விடுமுறையிலே உள்ளன. மேலும் வழக்குரைஞர்கள் 8 ஆம் தேதிக்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இதுபற்றிய செய்தியை கோவையிலே உள்ள பத்திரிகையிலேகூட "வாடகை வீட்டுப் பிரச்சினை - ஊர்வலமாகச் சென்று வீட்டின் கதவை உடைத்த வழக்குரைஞர்கள் - எஸ்.ஐ. மீது தாக்குதல்" என்றும், ஆங்கில ஏட்டில் ``Kovai lawyers take law into their own hands, assault S.I." என்றும் தலைப்பிட்டு செய்திகளை வெளியிட்டுள்ளன என்பதையும் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கோரியதற்கிணங்க இந்த வழக்கை இதற்கு மேல் தொடராமல் நிறுத்தி வைப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு அறிவுறுத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இனிமேலாவது இதுபோன்ற செயல்களில் வழக்குரைஞர்கள் உண்மை நிலையை அறியாமல் இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவது சமுதாயத்திற்கு நல்லதல்ல என்பதை இந்த அவையின் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** வழக்கை வாபஸ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் கேள்வி எல்லாம் கிடையாது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றியை நீங்கள் நேரடியாகச் சொல்லிக்கொள்ளுங்கள், மைக்கிலே சொல்ல வேண்டாம்.

முற்பகல் 10-45

**திரு. வி.கே. லட்சுமணன்:** அவையில் பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன். என்னுடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழக்குரைஞர்கள்மீது தொடரப்பட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெற உத்தரவிட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) விருதுநகர் மாவட்ட அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பழுதடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ்... (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, உட்காருங்கள். நான் நிகழ்ச்சி நிரலில் உள்ளனவற்றை முடித்த பிறகுதான் நீங்கள் பேச வேண்டும்.

பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி. இராசன், திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், திரு. தங்கம் தென்னரசு, திரு. கே.எம். விஜயகுமார் ஆகியோர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்களை அந்தக் கவன ஈர்ப்பைப் படிக்குமாறு கூறி அழைக்கின்றேன்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் [illegible] உள்ளது.



## விவர அறிக்கை

விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக 179 நகரப் பேருந்துகளும், 167 புறநகர் பேருந்துகளும், 35 மாற்றுப் பேருந்துகளும் ஆக 381 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 109 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. மேலும் 33 பழைய பேருந்துகளின் கூண்டுகள் அகற்றப்பட்டு புதிதாக மாற்றம் செய்து தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள 6 வயதிற்கு மேலான 99 பேருந்துகளையும் மாற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள வழித்தடங்களிலுள்ள பேருந்துகளை உரிய நிலையில் பயணத் தடையின்றி சீராக இயக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். விருதுநகரை தலைமையிடமாகக் கொண்டு வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் சுமார் 381 பேருந்துகளைக் கொண்டு 1997-ல் தொடங்கப்பட்டது. அது தொடங்கப்பட்டவுடனேயே விருதுநகர் மாவட்டத்தில் சாதிக் கலவரம் ஏற்பட்டு, ஏறக்குறைய 2 மாதங்கள் எந்தவொரு போக்குவரத்துமே இயங்க முடியாத சூழ்நிலை இருந்து அந்த போக்குவரத்துக் கழகத்திற்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரலாறு எல்லாம் சொல்ல வேண்டாம், பேருந்து வேண்டும் என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** தற்போது விருதுநகர் மாவட்டத்திலே இயங்கி வருகின்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்த நிலையிலே அடிக்கடி அது செல்லும் பாதையிலேயே நிறுத்தப்பட்டு விடுகின்றன. இதனால் பயணிகள் மிகுந்த அவதிக்கு உள்ளாகிறார்கள். தற்போது கிடைத்த தகவலின்படி ஏறக்குறைய 45 பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் கிடைக்காத, வாங்குவதற்குகூட அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே நிதி வசதி இல்லாத காரணத்தினால் அவை இயக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றன. அந்த 15 பேருந்துகள் இயங்காததால் பயணிகள் அதில் பயணிக்க தடை ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல் போக்குவரத்துக் கழகத்திற்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே தற்போது இருக்கின்ற இந்த அவல நிலையைப் போக்குவதற்கு கருணை உள்ளம் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

[திரு. கே.எம். விஜயகுமார்] [1999 மே 4

விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு சிறப்பு நிதியாக சுமார் 2 கோடி ரூபாய் வரை கொடுத்தால் அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இயங்குகின்ற அனைத்துப் பேருந்துகளுக்கும் உதிரி பாகங்களை வாங்கி, அதை சிறந்த முறையிலே இயக்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால் இதில் தனிக் கவனம் செலுத்தி கூடுதல் நிதி ஆதாரங்களை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கி நல்ல முறையிலே, சிறந்த முறையிலே அதை இயக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய போக்குவரத்துக் கழகத்திலே 381 பேருந்துகள் இயங்கினாலும் அதிலே 109 புதிய பேருந்துகள் இந்த 2 ஆண்டுகளிலே மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, 6 வயதிற்கு அதிகப்பட்ட 99 பேருந்துகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மாற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது. பெரும்பாலும் புறநகர்ப் பேருந்துகள், நகரப் பேருந்துகள் எல்லாம் 6 ஆண்டுகளுக்கு மேற்பட்டால் அவற்றைப் புதிய பேருந்துகளாக மாற்றுவது என்பது விதிமுறையிலே உள்ளது. அதற்கேற்பதான் மாற்றிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் நிதிநிலை இப்போது சற்று கடினமாக இருக்கிற காரணத்தால் அதை மாற்ற முடியாத ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே அந்த 99 பேருந்துகளையும் மாற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. நிதிநிலை ஆதாரத்திற்கேற்ப அவற்றை விரைவிலே மாற்றி அங்கே தொடர்ந்து நல்ல முறையிலே போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது.

**(ஆ) நன்னிலம் தொகுதி முடிகொண்டான் ஆற்றிலுள்ள நன்னிலம் பாலமும், திருமருகல் பாலமும் உடைந்துள்ளதால் போக்குவரத்து பாதிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் பத்மா, திரு. குத்தாலம் பி. கல்யாணம் ஆகியோர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்பு



1999 மே 4] [பேரவைத் தலைவர்]

கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் பத்மா அவர்களை அந்த அறிவிப்பைப் படிக்குமாறு கூறி அழைக்கிறேன்.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, " நன்னிலம் தொகுதியில் முடிகொண்டான் ஆற்றில் உள்ள நன்னிலம் பாலமும், திருமருகல் பாலமும் உடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இரு பாலங்களும் முடிகொண்டான் ஆற்றிலேயே அமைந்துள்ளன. இப்பாலங்கள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

**(1) நன்னிலம் பாலம்:**

இப்பாலம், திருவாரூர் மாவட்டத்தில் ஆண்டிப்பந்தல்-நன்னிலம் சாலை (அரசு பெரிய மாவட்டச் சாலை) கி.மீ. 44/2- ல் நன்னிலம் நகருக்குள் அமைந்துள்ளது. இப்பாலம் ஒவ்வொன்றும் 9.00 மீட்டர் அகலமுடைய இரண்டு கண்கள் கொண்ட செங்கல் வளைவுப் பாலமாகும். இவற்றில் ஒரு கண்ணின் உச்சியில் செங்கல் சேதமுற்று 1.20 மீ x 3.00 மீ. அளவுக்கு அமுங்கியுள்ளது. இதனால் சுமை உந்துகள் மற்றும் பேருந்துகள் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, சீருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மட்டுமே சென்றுவர அனுமதிக்கப்படுகிறது.

இப்பாலத்தில் பழுது நீக்கும் பணி மும்மரமாக நடைபெற்று வருகிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள் பழுது பார்க்கும் பணி முடிவடைந்து போக்குவரத்து அனுமதிக்கப்படும்.

**(2) திருமருகல் பாலம்:**

இப்பாலம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகூர் நன்னிலம்-நாச்சியார்கோவில் சாலை (அரசு பெரிய மாவட்டச் சாலை) கி.மீ. 12/10- ல் திருமருகலில் அமைந்துள்ளது. இப்பாலம் ஒவ்வொன்றும் 8.00 மீட்டர் அகலமுடைய மூன்று கண்கள் கொண்ட செங்கல் வளைவுப் பாலமாகும். இதில் முதல் கண்ணில் 1.20 மீட்டர் அளவிற்கு பழுது ஏற்பட்டுள்ளது. எனவே தற்பொழுது தற்காலிகமாக

ஆண்டிப்பந்தல்- திருமருகல் சாலை வழியாக மாற்று வழியில் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இப்பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்குத் தோராயமாக ரூ. 74.00 இலட்சம் தேவைப்படும். இப்பாலம் திரும்பக் கட்டும் பணி ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயலாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*முற்பகல் 10-50*

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். எனது நன்னிலம் தொகுதி நன்னிலம் ஒன்றியத்தில் 5 பாலங்கள் உள்ளன. இவை அனைத்துமே ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டப்பட்டவை. இதில் தற்போது நன்னிலம் பாலம் மற்றும் திருமருகல் பாலம் ஆகிய இரண்டு பாலங்களும் ஒரே சமயத்திலே பழுதடைந்துள்ளன. மீதமுள்ள மூன்று பாலங்களும் இன்றோ நாளையோ பழுதடையக்கூடிய நிலையில் இருக்கின்றன. இதன் நிலைகுறித்து 6 மாதத்திற்கு முன்பே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களது கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளேன். இந்தப் பாலங்கள் அனைத்தும் பழையக் கட்டட அமைப்பில் கட்டப்பட்டுள்ளதாலும், இதன் பளு தாங்கும் அளவு- (Capacity) 10-லிருந்து 12 டன் எடை தாங்கும் அளவில் உள்ளதாலும், தற்போது மிகமிக கனரக வாகனங்கள், 'O.N.G.C. மற்றும் M.R.L.' நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் செல்வதாலும், திருவாரூர், நாகை, கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய நான்கு பெருநகரங்களிலிருந்து வரும் பேருந்துகள், கனரக வாகனங்கள், சிருந்துகள் அனைத்தும் செல்ல வேண்டியிருப்பதாலும் மீண்டும் எந்த நேரத்திலும், பாலம் பழுதடையும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாலும், நன்னிலம் முடிகொண்டான் ஆற்றில் பழுதடைந்துள்ள பாலத்தை புதியதாக அருகிலேயே கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது பாலத்தைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திருமருகல் பாலம் முழுவதும் பழுதடைந்து உள்ளது திருமருகல் பாலத்தை புதியதாகக் கட்டுவதற்காக ரூபாய் 74 இலட்சம் தேவைப்படும் என்றும் இப்பாலம் திரும்பக் கட்டும் பணி ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பாலப் நாகூர், நன்னிலம், நாச்சியார்கோயில் சாலை, அரசு பெரிய மாவட்டச் சாலை என்று குறிப்பிட்டுள்ளதால் இதன் அவசியம்....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும், எழுதிவைத்துப் படிக்கக் கூடாது.

**டாக்டர் பத்மா:** இது ரொம்ப முக்கியமான பிரச்சினை சார். காரணம் 5 பாலங்கள் ஒரே நேரத்தில் உடைகிற நிலையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதை சரியாகக் கேட்டுக்கொண்டு பேச வேண்டும். நீங்கள் எழுதிவைத்துப் படிக்கக் கூடாது. துணை வினா கேட்பதற்குத்தான் அனுமதி. நீங்கள் எழுதி வைத்ததைப் பூராவும் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை நான் அனுமதிக்க முடியாது. சீக்கிரம் சுருக்கமாக, துணை வினாவாகக் கேளுங்கள். நீங்கள் பார்லிமெண்டில் வேறு இருந்துதிருக்கிறீர்கள்.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது விட்டுப்போய்விடும் என்ற காரணத்தால்தான் எழுதி வைத்துப் படிக்கிறேன். எனவே, உடனடியாக இந்த இரு பாலங்களையும் இந்த ஆண்டே புதியதாகக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்கு அறிவார்கள். எனவே, என்னுடைய நன்னிலம் தொகுதியில் இரண்டு பக்கமும், ஒருபுறம் வளப்பாறும், மறுபுறம் முடிகொண்டான் ஆறும் உள்ளன. 6 மாதத்திற்கு முன்பு வளப்பாற்றில் உள்ள பாலம் பழுதடைந்தது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. கல்யாணம் தொகுதியில் உள்ள பாலம் பழுதடைந்த காரணத்தால், அவருடைய தொகுதியில் உள்ள மக்கள் அனைவரும் எனது தொகுதியில் உள்ள பாலத்தின் வழியாகச் சென்று வருகிறார்கள். இப்போது அந்தப் பாலமும் பழுதடைந்துள்ளதால், ஏறத்தாழ 15 லிருந்து 20 கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு வருகிற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் இந்த வேண்டுகோளை வைக்கிறேன். புதியதாக மிக விரைவில் ஒரு பாலம் திருமருகலில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய இரண்டு பாலங்களில் நன்னிலம் பாலம் 9 மீட்டர் அகலத்தில் 2 கண்களை உடைய பாலம். அது உடனடியாக இப்போது சரி செய்யப்பட்டு வருகிறது. விரைவில் அந்தப் பணி முடிகின்ற தருவாயில் இருக்கிறது. திருமருகல் பாலத்தைப் புதிதாகத் திரும்பக் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டார்கள் 74 இலட்ச ரூபாய் இதற்குத் தேவைப்படுகிறது. என்று ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கான எல்லா வகையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆய்வில் இருக்கிறது. அனுமதிக்காக துறை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாலம் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் நிறைய பாலங்களைச் சொன்னார்கள். அண்மையில் 106 பாலங்கள், அரசு எடுத்துச் செய்வதிலே பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்திலே ஏறத்தாழ 12 பாலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திருவாரூர் மாவட்டத்திலே, நாகப்பட்டினம் மாவட்டத்திலே அதிக பாலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக இந்தப் பாலங்களை எல்லாம் திரும்பக் கட்டுவதற்காக அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்தப் பாலங்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. பி. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே மாண்புமிகு நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல ஒரே ஆற்றிலே இருக்கிற பாலங்கள் தொடர்ந்து பழுதடைந்துகொண்டே வருகிற காரணத்தால் போக்குவரத்து ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இருக்கிற வளப்பாறு பாலம் கட்டுவதற்கு இப்போது ஆரம்பித்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே அதிகமாகப் பாலங்கள் கட்டுவதை நன்றியோடு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருந்தாலும், தொடர்ந்து இந்தப் பாலங்களுடைய நிலைகளைக் கண்டறிவதற்கு அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பரிகாரத்தைத் தேடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது சொன்னேன் ஏறத்தாழ 4 ஆயிரம் பழைய பாலங்கள் உடனடியாகத் திரும்பக் கட்ட வேண்டிய



அவசியத்திலே இருக்கின்றன என்று. அவற்றையெல்லாம் இந்தத் துறை கண்டறிந்து வைத்திருக்கிறது. நிதியாதாரத்திற்குத் தக்கபடியும், நம்முடைய துறையினுடைய சக்திக்கு ஏற்ற வகையிலும் பாலங்கள் எடுத்துத் திரும்பக் கட்டப்படுகின்றன. எனவே, இந்த 208 பாலங்கள் மட்டுமல்லாமல் இன்னொரு 36 பாலங்கள் கட்டவேண்டும். இவற்றை எல்லாம் கட்டி முடித்தாலே ஒரு நிம்மதி ஏற்படும். ஆகையினால், எந்தெந்தப் பாலங்கள் பழுதடைந்திருக்கின்றன; திரும்பக் கட்டப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஆய்வு செய்து குறிப்பில் வைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் கடலோரப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலும், குறிப்பாக திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் கடலோரப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினாலும் வெள்ளம் வருகின்றபோதெல்லாம் சேதம் ஏற்படுகின்றது. அதையும் இந்த அரசு கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து,

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடுத்து என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். நிகழ்ச்சி நிரல் முடிந்த பிறகுதான் உங்களையெல்லாம் என்ன என்று கேட்க விடுவேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### *(அ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 1999.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் - (அறிமுகம் செய்தல்). 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [வேலையாட்களுக்கு நிலையான தகுதி (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு அவை முன்னவர்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்பு திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### (அ) திருத்துறைப்பூண்டியிலே மருத்துவர் படுகொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு நான் நேற்றே உங்களிடம் கேட்டேன். திருத்துறைப்பூண்டியிலே மருத்துவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். அதிலே பல பின்னணிகள் இருக்கின்றன. காவல் துறையில் எந்த நடவடிக்கையும் இல்லை. அதற்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு நேற்றே கொடுத்தேன். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அப்படிச் சொல்லவில்லையே, நான் அதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்றுதான் உங்களிடம் சொன்னேன். தனிப்பட்ட ஒரு டாக்டர், நர்ஸ் பிரச்சினையை எழுப்ப முடியாது.

**திரு. ஜி. பழனிசாமி:** இது தனிப்பட்டது அல்ல. இது தனிப்பட்டதேயல்ல. இதிலே ஒரு பின்னணி இருக்கிறது. நடவடிக்கை இல்லை. நடவடிக்கை முடக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை அனுமதித்தால்தான் முதலமைச்சர், அவர்களின் கவனத்திற்குப் போகும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, 5 பேர் சேர்ந்தாற்போல் எழுந்திருக்கின்றீர்கள். உட்காருங்கள், ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.

[1999 மே 4

**(ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத் துறை ஊழியர்களைப் பிடித்து வைத்துள்ளது**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதி வனத் துறை ஊழியர்களை வீரப்பன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த நீளமெல்லாம் வேண்டாம். உங்கள் பிரச்சினையை உடனே சொல்லுங்கள். வீரப்பன் பிரச்சினைக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். இரண்டு நாட்களிலே எடுக்கப்படும், உட்காருங்கள்

**திரு. சி. ஞானசேகரன்:** ரொம்ப நாள் ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான்தான் அனுமதி கொடுத்திருக்கின்றேன், எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றேன் அல்லவா, உட்காருங்கள்.

**(இ) உண்ணாவிரதம் மேற்கொண்ட வேலையில்லாப் பட்டதாரிகள் கைது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்று உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை இன்று காலையிலே காவல் துறையினர் கைது செய்தார்கள். ஆனால், காவல் துறையினர் பல வேலையில்லாப் பட்டதாரிகளைக் கடுமையாகத் தாக்கிக் கைது செய்திருக்கின்றார்கள். வேலையில்லாப் பட்டதாரிகளுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று.....

*** மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாப் பட்டதாரிகள் உண்ணா நோன்பு இருக்க நேரிட்டால் அல்லது உண்ணாவிரதம் இருந்தால் அது வேறு பிரச்சினை. காவல் துறையோடு மோதிக்கொண்டால் அது வேறு பிரச்சினை. ஒன்று, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை; இன்னொன்று, வேலையில்லாப் பிரச்சினை. இரண்டையும் இணைத்து—மாண்புமிகு உறுப்பினர் தலைமை வகித்த காரணத்தினாலே —அந்தப் பிரச்சினையை இங்கே கொண்டுவருவது முறையல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1999 மே 4] - [பேராசிரியர் க. அன்பழகன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை யாரையும் தாக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதிக்கப்படும், நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள்.

முற்பகல் 11-00

**(ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத் துறை ஊழியர்களைப் பிடித்து வைத்துள்ளது**-தொடர்ச்சி

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பிரச்சினை என்ன?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பொறுத்தவரை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் அனுமதி கொடுத்துவிட்டேன்; எடுத்துக்கொள்ளப் போகிறேன்; நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 8 நாட்கள் ஆகிவிட்டன.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8 நாட்கள் ஆனாலும் நான் சொல்கிற நேரத்தில்தான் எடுத்துக் கொள்ள முடியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை உரிமையை மீறக் கூடாது; உட்காருங்கள்.

**(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்**-தொடர்ச்சி

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கிடையாது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு அனுமதி கிடையாது. நீங்கள் எப்போது கேட்டாலும் அனுமதி கிடையாது. திரு. சுந்தரம், உட்காருங்கள். உங்களை இப்போது வெளியேற்றவா? (குறுக்கீடுகள்) நான் அவையில் பதில் சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.

[பேரவைத் தலைவர்] [1999 மே 4

1999- 2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.....

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம் உட்காரவில்லையென்றால், நான் அவையைவிட்டு வெளியேற்றுவேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய பேச்சு அவைக்குறிப்பில் ஏறாது.

## 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000

## விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்—அச்சுத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 46—செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**(இ) கோரிக்கை எண் 50—சுற்றுலா**

### (அ) கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43-எழுதுபொருள்-அச்சுத் துறை, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.54,87,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4681, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் ஓர் அச்சகத்தை அமைத்து முதியோரின் பென்ஷன் மனுக்களை அச்சடித்து ஏழை பொது மக்களுக்கு அரசு விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1999 மே 4] [திரு. சி. ஞானசேகரன்]

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2101, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அரசு கிளை அச்சகங்களை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4354, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000 -ல் ரூ. 100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3439, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மாவட்டந்தோறும் அரசிதழ்களை அச்சிட, கிளை அச்சகங்களை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/ -குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2404, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசு அச்சகங்கள் மூலம் அச்சிடப்படும், இரகசிய ஆவணங்கள், தேர்வு கேள்வித் தாள்கள் போன்றவை வெளியே வராமல்

கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4467, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் அச்சுத் துறையால் வெளியிடப்படும் அரசு வெளியீடுகளை ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடங்களிலும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4411, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2985, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதியில் அரசு அச்சகக் கிளை ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2215, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3901, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3730, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்—அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,87,91,000-ல் ரூ. 100/ - குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 46—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.17,17,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4675, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக திரையரங்குகளில் குறிப்பாக சென்னை, வேலூர் போன்ற ஊர்களிலுள்ள திரையரங்குகளில் நுழைவுக் கட்டணத்திற்கு அதிகமான கட்டணத்தையும் வாகனம் விடுவதற்கு கூடுதல் கட்டணமும் வசூல் செய்வதைத் தடுக்க தணிக்கைக் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2620, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் சாதி மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் திரைப்படங்களுக்கும் பட வெளியீட்டாளருக்கும் பரிசுகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000-ல் ரூ.100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4358, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்பிரமணிய சிவாவுக்கு ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3461, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சாதி, மத உணர்வுகளை எதிர்த்துப் போராடும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிற திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000–ல் ரூ.100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2411, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்தலைவர் காமராஜரின் வாழ்க்கை வரலாற்றை செய்தி திரைப்படமாகத் தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000 -ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3577, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், அறிஞர் அண்ணா, பெரியார் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாகத் தயாரித்து மாணவர்களுக்குக் காட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000- ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4409*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3042*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2217*, திரு. கே. சுப்பராயன்

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3903*, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3732*, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய மாநில அரசுகளின் செய்திப் படங்களை திரையரங்குகள் முறையாகத் திரையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4253*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய *46* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*17,17,38,000*-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1330*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்கி அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவருக்கு சென்னையில் ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2733, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி கடற்கரையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு மணிமண்டபம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2727, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தித் துறையின் மூலம் தேசபக்தி, தெய்வபக்தி, ஒழுக்கம் போன்றவற்றை மக்கள் மத்தியில் திரைப்படம், கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றின் மூலம் விளம்பரப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3951, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பும் வகையில் அரசின் சார்பில் திரைப்படங்கள் தயார் செய்து தமிழகம் முழுவதும் மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,17,38,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 50—சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50—சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,27,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4665, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதியில் வேலூர் நகரம், செங்காணத்தம், பாலமதி மலைக்கிராமங்கள் ஆகியவற்றை சுற்றுலா மையமாக அறிவித்து, வேலூரில் சுற்றுலா அலுவலகம் ஒன்றை அமைத்து, வேலூரில் இருந்து சுற்றுலா பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2145, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலுள்ள மக்கள், சுற்றுலா செல்வதற்கும் யாத்திரை செல்வதற்கும் குறைந்த கட்டணத்தில் அம்பாசிடர், மாருதி, மினி பஸ் போன்ற வாகனங்களை அரசு குறைந்த வாடகைக்குத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4368, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையை மையமாகக் கொண்டு சுற்றுலாத் துறையின் மூலமாக வழியோர உணவு விடுதி ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4641, திரு. ப. ரஙகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3500, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகாவதி அணையைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2433, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்தில் சுற்றுலாத் துறையின் மூலம் குழந்தைகள் விளையாட்டு பூங்கா, மற்றும் நீர் ஊற்று அமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3571, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை சதுப்பு நிலப் பகுதி காடுகளை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4405, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2897, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்ற தொகுதி, அருள்மிகு சுவாமிநாத சுவாமிமலை அறுபடை வீடுகளில் நான்காவதாக அமைந்து இருப்பதால் அதனை ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2245, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3907, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3741, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குற்றாலத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத் துறையின் மூலம் வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4237, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நவக்கிரக தலங்களையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2728, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களை கவரும் வண்ணம் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மூலம் இந்தியாவிலுள்ள அனைத்துத் திருத்தலங்களின் சிறப்பு பற்றி விளக்கும் ஒரு காட்சியகம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,27,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2531, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதுபொருள்—அச்சுத் துறை மற்றும் செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 165 முதல் 220 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

@@ 221 முதல் 243 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி-திரைப்படத் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது, அன்புத் தலைவர், மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் தோற்றுவித்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாகப் பேசுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன். பொதுவாகவே, செய்தித் துறையைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு ஒரு பெரிய புரட்சி நிகழ்ந்திருக்கிறது. பல்வேறு ஊடகங்கள் இன்றைக்கு நம்மை ஆக்கிரமித்திருக்கின்றன. இன்றைக்கு சமூகத்திற்கு செய்திகள் போய்ச் சேருவது என்பது, நொடிப் பொழுதிலே போய்ச் சேருகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு இந்தத் துறையில் சாதிக்க வேண்டியவை, செய்ய வேண்டியவை ஏராளம் என்பதை முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)**

விளம்பரத் துறையைப் பொறுத்தவரையிலே அரசு மக்களுக்குச் செய்கின்ற நன்மைகளை, அரசாங்கம் எடுக்கின்ற முடிவுகளை, திட்டங்களை அறிவிப்பதிலே மிகப் பெரிய கடமையை ஆற்றுகின்ற துறையாக இருக்கின்றது.

பெருமைக்குரிய கலைவாணர் அவர்கள் லேபில் இல்லாவிட்டால் காலணா, லேபில் போட்டால் நாலணா என்று சொல்வார்கள். விளம்பரம் எவ்வளவு முக்கியமானது என்பதை மிகச் சுருக்கமாக அவர் சொன்னதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசாங்கம் மக்களுக்குச் செய்கின்ற பல பணிகள் குறித்தும், சமூக விழிப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் செய்ய வேண்டிய பணிகள் இந்த விளம்பரத் துறையில் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக மிகைப்படாமல், எதார்த்தமாக செய்கின்ற



காரியங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். அப்படிச் சென்றடைந்தால்தான் அது நல்ல நிலைமையை உருவாக்க முடியும். பொதுவாக, தமிழக அரசு முன்பு திரைப்படத் துறையிலே செய்தி மலரை வெளியிட்டு வந்தது. இப்போது அந்த செய்தி மலர்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. என்னதான் கேபிள் டி.வி. போன்ற சாதனங்கள் வந்தாலும்கூட, திரைப்படங்களுக்கு உண்டான மதிப்பும், Value-வும் இன்றைக்கும் நிச்சயமாக இருக்கின்றன. ஆகவே, மீண்டும் செய்தி மலர்களைத் தயாரிக்க வேண்டும். அப்படித் தயாரிக்கின்றபோது, இந்தியா முழுவதும் இருக்கின்ற உடல் ஊனமுற்றல் தடுப்பு முகாமாக இருக்கின்ற Pulse Polio Campaign மற்றும் பல உன்னதமான திட்டங்கள் குறித்த படங்களை, உரிய முறையிலே விளம்பரங்களாக இந்தத் திரைப்படமானது தாங்கிச் செல்ல வேண்டும். அதைப்போல எயிட்ஸ் நோயைப் போன்ற.....

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி மலர்கள் வெளியிடுவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆண்டிற்கு *3* முறை செய்தி மலர்களையும், மாதாமாதம் அரசின் நலத் திட்டங்களையும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் படமெடுத்து, தனியார் மற்றும் அரசுத் தொலைக்காட்சிகளில் அவ்வப்போது காட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவாகவே திரைப்படத் துறையிலே, சினிமா அரங்குகளைப் பொறுத்தவரையிலே, செய்திப் படங்களைப் போட்டால்தான் உரிமமே தரப்படும் என்ற கட்டாயம், நெருக்கடி முன்பு இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படி இல்லை என்று நான் அறிகிறேன். பல திரையரங்குகளில் அத்தகைய படங்களைத் திரையிடுவதில்லை என்பதை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், சில அம்சங்களை நாம் திரைப்படத்தின் ஊடே காண்பிப்பது, திரைப்படம் பார்ப்பவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது மிக முக்கியமான ஒன்றாகும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, போலியோ தடுப்பு விழிப்புணர்ச்சி, எய்ட்ஸ் நோய் போன்ற நோய்கள் வராமல்

கடுப்பதற்கான விழிப்புணர்ச்சி, அதுபோன்று இரத்த தானம் பற்றிய விழிப்புணர்ச்சி போன்ற பல உன்னதமான காரியங்களுக்கு நிச்சயமாகத் திரைப்பட மலர்கள் பயன்படும் என்பதிலே ஐயமில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்குச் சினிமாவும், அரசியலும் பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கின்றன. பொதுவாகவே பல இயக்கங்கள் இன்றைக்கு வளர்ச்சியடைவதற்குக்கூட திரைப்படம் மிகப் பெரிய ஊடகமாக இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, அந்தத் திரைப்படத் துறைக்கு உண்டான அந்தஸ்தை, மதிப்பை நம்முடைய அரசும், மத்திய அரசும் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சாதாரணமாக ஒரு ஹோட்டலுக்குச் சென்றால்கூட, என்ன வேண்டுமென்று கேட்டால், 'காஞ்சிபுரம் இட்லி, சாம்பார்' என்று கேட்பார்கள். இன்றைக்கு 'குஷ்பு இட்லி' என்று சொல்லக்கூடிய அளவிற்குக்கூட மிகப் பெரிய தாக்கம், மக்களிடையே சினிமாவினுடைய தாக்கம் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தக்கூடிய திரைப்படத் தொழிலுக்கு அதற்குண்டான மதிப்பை அளித்து, அந்தத் தொழிலை அங்கீகரிப்பது நம்முடைய அரசின் கடமையும், மத்திய அரசின் கடமையும் ஆகும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

நீங்கள் அளித்திருக்கிற குறிப்பேட்டிலேகூட சினிமாத் தொழில் பிற தொழிலைப் போல நிலைத்த மூலதனத்தை உருவாக்காது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நிலைத்த மூலதனம் என்பது, எப்பொழுதுமே வருவாயை, அதாவது செல்வத்தை உண்டு பண்ணக்கூடிய வலு அல்லது capacity எதற்கு இருந்தாலும், அது நிலைத்த மூலதனம்தான். இன்றைக்குப் பல பழைய திரைப்படச் சுருள்கள், பல இலட்சக்கணக்கான விலை போகும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, மூலதனத்தை உருவாக்காது என்ற கருத்தை நான் இங்கே மறுக்க விரும்புகிறேன். மறைந்த முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நடித்த பல திரைப்படங்கள் இன்றைக்குக்கூட மிகப் பெரிய பொக்கிஷங்களாக வாழ்வளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, நிலைத்த மூலதனத்தை உருவாக்காது திரைப்படத் துறை என்பது சரியான கருத்து அல்ல. நிலைத்த மூலதனத்தை அளிக்கக்கூடிய வலு அதற்கு இருக்கிறது என்பதை



நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் நசிந்த தொழிலாக சினிமாத் தொழில் இருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். 1996 முதல் 1998 வரை திரைப்படங்களின் எண்ணிக்கை வெகு வேகமாகக் குறைந்து வருகிறது என்பதை நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே, அந்தத் தொழில் நசிந்து போகாமல் இருப்பதற்கு நாம் நிச்சயமாக உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வங்கிக் கடன், வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்பிலே உத்தரவாதம் ஆகியவற்றில் இருக்கின்ற நெருக்கடியில் அவர்களுக்கு உண்டான Insurance —காப்பீடு — கொடுத்துப் பல வகையிலே இந்தத் தொழிலை நாம் பாதுகாக்க வேண்டும். ஏனென்று சொன்னால், ஏழை எளிய மக்களுக்கு வெகு எளிதானப் பொழுதுபோக்கு அம்சமாக இருக்கக்கூடியது திரைப்படத் தொழில் என்பதை மிக அழுத்தமாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு நிறுவனங்களில் Mega Budget என்று சொல்வார்கள். மிகப் பெரிய அளவிலே செலவு செய்து தயார் செய்த படங்கள் போக, இப்பொழுது குறுகிய கால பட்ஜெட் என்று சொல்லி சில படங்கள் எடுக்கிறபோது, வேலைவாய்ப்பிலே உத்தரவாதம் அளிக்க வேண்டும். அங்கே பணிபுரிகின்ற திரைப்படத் தொழிலாளர்களுக்கு அது பயனளிக்கும் என்ற நோக்கத்தில்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல தொழிற்சாலைகள் மூடப்படும் போது, அதற்குரிய நஷ்டயீடு, காப்பீடு போன்ற பல்வேறு நன்மைகளை அரசாங்கம் செய்து கொடுப்பதைப் போல, இந்தத் திரைப்படத் துறையைப் பொறுத்தமட்டில், தொழிலாளர்களின் வாழ்வையும் நாம் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சினிமா என்பது வேறு மாதிரியாக 'சின்னத் திரை' என்ற வகையிலே இன்றைக்குப் பல மாற்றங்களில் வந்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால், குடிசைத் தொழிலாக இந்த வீடியோகிராபி, கேபிள் டிவி. அல்லது சேட்டிலைட் டிவி. என்று சொல்லப்படுகின்ற, விண்கோள் மூலமாக ஒளிபரப்பப்படுகின்ற தொலைக்காட்சிகளெல்லாம் வந்துவிட்ட நிலையிலே குடிசைத் தொழிலாக அது மாறிவிட்டது. படித்த பல்வேறு இளைஞர்கள் இந்தத் தொழிலை தங்களுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டு நடத்துகிறார்கள். பொதுவாக, கேபிள் டி.வி. போன்ற நிறுவனங்களை நடத்துகின்ற இளைஞர்கள் படித்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உரிய முறையில் நாம் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரைப் பொறுத்தவரை நான் இங்கே ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு அமெரிக்கா செல்கின்ற அத்தனை சுற்றுலாப் பயணிகளும் அங்கிருக்கிற Disney Land-ஐப் பார்க்காமல் வரமாட்டார்கள். அங்கிருக்கிற தொழில்நுட்பத்தைக் கண்டு களித்து வரக்கூடிய, மிகப் பெரிய, காண வேண்டிய ஓர் அங்கமாக அந்தச் சுற்றுலாத் திட்டத்தினுடைய, அந்த Disney Land ஒரு Visit ஆக அது அமைகிறது. எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலே அத்தகைய உத்திகளைக் கையாண்டு நிச்சயமாக நீங்கள் அபிவிருத்தி செய்யலாம் என்ற கருத்தை இங்கே கூற விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

திரைப்படக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை *171* என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கேபிள் டி.வி. நம்முடைய—சேட்டிலைட் டி.வி-யின்கோள் மூலமாக ஒளிபரப்பப்படுகின்ற தொலைக்காட்சிகள் எல்லாம் மிகுந்துவிட்ட நிலையிலே இங்கே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையையும் கணிசமாக நீங்கள் அதிகமாக்க வேண்டும். ஏனென்றால், D.F.T. படிப்பு படித்த மாணவர்களுக்கு ஒரு காலத்தில் மதிப்பு இல்லாமல் இருந்தது. இன்றைக்கு அத்தகைய படிப்பு படித்தவர்களுக்கு மிகப் பெரிய அந்தஸ்து கிடைக்கிறது. திரைப்படத் துறையிலும் சரி அல்லது வேறு வகைகளில், வேறு பல துறைகளிலும் மிகப் பெரிய வாய்ப்பைப் பெறுகின்றார்கள். இன்றைக்கு UNICEF போன்ற நிறுவனங்கள் UNESCO போன்ற நிறுவனங்கள் எல்லாம்கூட இத்தகைய படித்த இளைஞர்களைப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றன. ஆகவே, அங்கே இருக்கின்ற இருக்கைகள் *171*-ஐ அதிகமாக்கி, வாய்ப்புகளை அதிகமாக்கி நீங்கள் அதிக மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இரவு நேர சினிமா என்று வருகின்றபோது (மணியடிக்கப்பெற்றது) அதிலே ஒரு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் சுஸ்மா திருமதி சுவராஜ் அவர்கள் அமைச்சராக இருந்தபோது இதற்காகத் தனியாக ஒரு சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டுமென்று, அத்தகைய சட்டத்தைக்கூட அறிமுகம் செய்தார்கள் என்று அறிகிறேன். ஆனாலும்கூட, நம்முடைய அரசாங்கம் வலியுறுத்த வேண்டிய கருத்துகளை வலியுறுத்தி ஓர் ஒழுங்குமுறையை இரவு நேர, நள்ளிரவு நேர, காட்சிகளை தொலைக்காட்சியிலே ஒளிபரப்புவதற்கு ஒரு



கட்டுப்பாட்டை விதிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, வீடியோ திருட்டு பற்றி நான் இங்கே சொல்ல வேண்டும். எப்படி நல்ல நோட்டுக்குக் கள்ள நோட்டு சவாலாக இருக்கின்றதோ அதைப்போல பல ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான, தொழிலாளர்கள் பணிபுரியும் இடமான சினிமாத் தொழில் நசிந்து விடாமல் இருப்பதற்கு இந்த வீடியோத் திருட்டை நிச்சயமாக ஒழிக்க வேண்டும். அதற்குக் கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், ஓய்வூதியம் பெறுகின்ற பத்திரிகையாளர்கள் *64* பேர்கள்தான் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த எண்ணிக்கை நிச்சயமாக அதிகமாக இருக்கும் என்று நான் அறிகிறேன். ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகமாக்கி, அவர்களுக்கு மாதாமாதம் அளிக்கப்படுகின்ற *1,500* ரூபாயை *2,500* ரூபாயாக ஆக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் வேண்டுமென்று கேட்டு யார் யார் விண்ணப்பித்தார்களோ அத்தனை பேருக்கும் பரிசீலித்து, அவர்களுக்குத் தகுதியின் அடிப்படையிலே வழங்கப்பட்டிருக்கிறது. வந்த விண்ணப்பங்கள் அவ்வளவுதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அம்பேத்கர் பற்றிய அவரது வாழ்க்கை வரலாற்றினைத் திரைப்படமாக்கி அதைத் தமிழாக்கம் செய்வதற்காக தமிழக அரசு *10* இலட்ச ரூபாயை மானியமாக அளித்திருக்கிறது. அந்தத் திரைப்படத்தை வெகு விரைவாகத் திரையிட, அம்பேத்கர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் பாமர மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. வீ. தமிழ்மணி.

***திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்காக என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு அதிகமான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பெருமை படைத்த மாமல்லபுரம் நகரத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக இன்றைக்குத் தரம் உயர்த்தித் தந்தமைக்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் சுற்றுலாத் துறை குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்னையை அடுத்துள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம். அந்த காஞ்சிபுரம் மாவட்டத்திலே சுற்றுலா என்றாலே அனைவரையும் கவரக்கூடிய ஓர் இடம் மாமல்லபுரம். அந்த மாமல்லபுரத்திற்குப பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, அந்த மாமல்லபுரத்தைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்று நான் முதலிலே என்னுடைய கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாஸ்டர் பிளான், பெரிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை அவசியம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் மாமல்லபுரத்தை நீங்கள் தத்து எடுத்துக்கொண்டு, அதைச் சிறப்பான முறையிலே செய்வீர்களேயானால் அது உலக நாடுகளிலே இருக்கின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு வாய்ப்பாகும். வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளுக்கு அங்கே இட வசதிகளும், Hotel வசதிகளும், இன்றைக்குப் போதுமான அளவில் இல்லை. அவற்றைச் செம்மைப்படுத்தித் தர வேண்டுமென்று நான் முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சுற்றுலாத் துறையின் மூலமாக நடத்திக் கொண்டிருக்கிற Hotel-லில் எந்த நேரத்தில் போனாலும் கேட்கின்ற உணவு அங்கே கிடைப்பதில்லை. அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு



கேட்டுக்கொள்கிறேன். அந்த Hotel-ஐத் தரம் உயர்த்துவதற்கு இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் உண்மையிலேயே போதாது. அந்த Hotel–ஐத் தரம் உயர்த்துவதற்குக் கூடுதலான நிதியை ஒதுக்கி, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற விதத்திலே அந்த Hotel-லினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் அடிப்படைத் தேவையான கழிப்பிட வசதி, மாமல்லபுரத்தில் மிகவும் குறைவாகவே உள்ளது. அங்கே நவீன கழிப்பிட வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாமல்லபுரத்தைப் பொறுத்தவரையில் சாக்கடை நீர் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால், அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் கொசுத் தொல்லைக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. எனவே, சாக்கடை நீர் தேங்காத அளவிற்குச் சாக்கடை நீரை அப்புறப்படுத்துவதற்கு உரிய திட்டத்தை நீங்கள் செயல்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த மாமல்லபுரத்திற்கு இன்றுவரை ஒரு பேருந்து நிலையம்கூட இல்லாத நிலைமை இருக்கிறது. உடனடியாக சுற்றுலாத் துறையின் மூலமாகப் பேருந்து நிலையத்தை உள்ளடக்கிய அந்த மாஸ்டர் பிளான் திட்டத்தை நிறைவேற்றினால் அந்த மக்களுக்குப் பேருந்து நிலைய வசதி கிடைக்கும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் எளிதாக வந்து போவதற்கு அது உதவிகரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே மிகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டுப் பயணிகள் ஒரு சில நாட்கள் தங்கும் அளவிற்கு, அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்கின்ற அளவிற்குத் தரம் வாய்ந்த உணவகங்கள் அங்கே இல்லை. எனவே, Star Hotels மாமல்லபுரத்திலே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உள்நாட்டுப் பயணிகளை ஈர்க்கின்ற வகையிலேயும் அங்கே உணவகங்களை அமைத்துத் தர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முட்டுக்காட்டிலிருந்து பாண்டிச்சேரி வரையிலே இருக்கின்ற கடற்கரை ஓரம் தடை செய்யப்பட்ட இடமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடற்கரை ஓரம் தடை செய்யப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட்ட காரணத்தினால், அங்கே புதிய Hotels உருவாவதற்கும், மனிதர்கள் வாழ்வதற்குமே இடைஞ்சலாக இருக்கிறது. இப்படிப்பட்ட தடையை

நீங்கள் தகர்த்தெறிந்தால்தான் புதிய Hotels மற்றும் சுற்றுலாத் தலங்கள் அமைவதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகளைப் பொறுத்தவரையில், முட்டுக்காட்டிலிருந்து புதுச்சேரி வரையின்றி மத்திய அரசினுடைய Coastal Regulation Scheme என்று சொல்லக்கூடிய அந்த, விதிகளைத் தளர்த்தினால்தான் புதிய Hotels வரக்கூடிய ஒரு வாய்ப்பும், அதேபோன்று பல உணவகங்கள் வரக்கூடிய வாய்ப்பும் ஏற்பட முடியும் என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அதேபோன்று என்னுடைய துறையைச் சார்ந்த அதிகாரிகளும் மத்திய அரசை அணுகி அந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். விதிகள் தளர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தளர்த்தப்படுகின்றபோது, தனியார் மூலமாக சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தீட்டுவதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நன்றி. மாமல்லபுரத்தில் படகுப் போக்குவரத்து இல்லாத காரணத்தால், அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியவில்லை. எனவே, அங்கே இருக்கிற பக்கிங்ஹாம் கால்வாயில் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்குத் தாங்கள் அவசியம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாமல்லபுரத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குச் சுகாதார வசதிகள் மட்டுமல்லாமல், பூங்காக்கள் போன்ற வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு இந்த ஆண்டு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அது போதாது. ஏனென்றால், பூங்கா அமைப்பதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அதற்காக அதிக நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு, நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற, செங்கல்பட்டிலே இருக்கின்ற கொளவாய் ஏரியில் படகுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டம் இன்றுவரை செயல்படுததப்படவில்லை. அதற்கு 15 இலட்ச ரூபாய் நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி போதாது. அந்தக் கொளவாய் ஏரி மிகப் பரந்து விரிந்து கிடக்கின்றது. அது தேசிய நெடுஞ்சாலையை



ஒட்டியிருக்கின்ற காரணத்தால் அங்கே படகுப் போக்குவரத்தைச் சிறப்பான முறையிலே செயலாற்றினால் அந்தப் பகுதி மக்களுக்கு அது மிகப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அந்தப் படகுப் போக்குவரத்தை உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்வேறு கிராமங்களில் சிறப்புமிக்க பழைய காலத்துக் கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களை எல்லாம் வந்து பார்ப்பதற்கு விடுமுறைக் காலங்களில் சுற்றுலாத் துறையின் மூலம் பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல், சுற்றுலா மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த அரசு நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்றி அவர்களுடைய கருத்துக்களைத் தொடர்ந்து வருகிற தலைமுறைகளுக்கு எடுத்துக் கூறத்தக்க வகையில் நினைவகங்கள், அரங்கங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் ஆகியவைகளை அமைத்து அவர்களைப் போற்றி வருகிறது. இதுபோன்ற நினைவகங்கள், அரங்கங்கள், திருவுருவச் சிலைகள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்காக மட்டுமே செய்தி, தொழில்நுட்பவியல் மானியத்திலே பெருமளவிற்குத் தொகையும் செலவழிக்கப்படுகிறது. அதுபோல, திரைப்படத் துறைக்கும் மூன்றில் ஒரு பங்குக்கு மேலாகச் செலவழிக்கப்படுகிறது என்பதெல்லாம் மிகவும் வரவேற்கத்தக்க செய்தியாகும். சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தபோது மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தோடு சேர்த்து உடுமலை நாராயணகவி அவர்களுக்கும்

நினைவகம் அமைக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அதை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற ஒரு பெரியவர், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே நம்முடைய தமிழ்நாட்டிலே நாட்டுப் பற்றையும், தேசிய கிளர்ச்சியையும் தலைமை தாங்கி நடத்திய முப்பெரும் தலைவர்களில் ஒருவர் கப்பல் ஓட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளையோடு, மகாகவி பாரதியாரோடு சேர்ந்து, இணைந்து பணியாற்றியவர் சுப்பிரமணிய சிவா அவர்கள். திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டிலே பிறந்திருந்தாலும் அவர் வாழ்ந்த காலம் திண்டுக்கல்லுக்கு வெளியேதான் மிக மிக அதிகம். சிவம் பேசினால் சவம் எழும் என்பார்கள் அந்தக் காலத்தில். அந்த அளவிற்கு நாட்டுக்காகப் போராடிய அந்த மாபெரும் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் தன்னுடைய இறுதிக் காலத்திலே பாரத மாதாவிற்குக் கோவில் கட்ட வேண்டும் என்பதற்காக தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலே தங்கி அங்கேதான் அவருடைய இறுதிக் காலம் இருந்தது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பாரத மாதாவிற்குக் கோவில் கட்டுவதற்காகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு அவர் நிலத்தைக்கூட வாங்கி வைத்திருக்கிறார்கள். தேசத்திற்குத் தொண்டாற்றக்கூடிய இளைஞர்களை அணி திரட்டி அங்கே பாரத மாதாவிற்குக் கோவில் கட்டுவதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் அவருடைய காலம் நிறைவேறிவிட்டது. அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு நாட்டிற்கு உழைத்த தேசிய போராட்டக் கிளர்ச்சியை ஏற்படுத்திய, மக்களை அணி திரட்டிய அந்த மாபெரும் தலைவர் சுப்பிரமணிய சிவா அவர்களுக்குப் பாப்பாரப்பட்டியிலே நினைவகம் ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள்கூட இது தொடர்பாக சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலைக்குக்கூட சுப்பிரமணிய சிவா அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் அதிலேகூட இன்னொருவருடைய பெயரை எடுத்துவிட்டதாகவும் இங்கே தெரிவித்தார்கள். நான் அதை எல்லாம் மறுக்கவில்லை. ஆனால், சுப்பிரமணிய சிவா அவர்களுடைய உயர்ந்த நோக்கத்திற்கு, அங்கே ஆலயம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு இந்த அரசு உயிர் கொடுக்க வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன்.



அடுத்து மாநிலச் செய்தி நிலையத்தின் சார்பாக அரசுச் செய்தி ஒன்று வெளியிடப்படுகிறது. இது எல்லா அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பப்படுவதைப்போல, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அலுவலகங்களுக்கும், பதிவு செய்யப்பட்ட மத்தியத் தொழிற்சங்கங்களின் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமானால் இந்த அரசுச் செய்தி இன்னும் கொஞ்சம் அதிகமாக மக்களுக்குப் போய்ச் சேருவதிலே, உடனுக்குடன் போய்ச் சேருவதிலே உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, வருகிற காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள், பதிவு செய்யப்பட்ட மத்திய தொழிற்சங்கங்களின் அலுவலகங்களுக்கு இந்த அரசுச் செய்தியை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அடுத்து, அரசின் சார்பாக விளம்பரங்கள் தரப்படுகின்றன. எல்லாத் துறைகளினுடைய விளம்பரங்களையும் ஒருங்கிணைத்து விளம்பரங்கள் தரப்படுகின்றன. இதிலே, பெரிய பத்திரிகைகளுக்கு வாய்ப்பு வழங்குவதைப்போல, சிறிய பத்திரிகைகளுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே, அரசுச் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை நிர்ணயம் செய்த அளவுக்குத்தான் பத்திரிகைகளுக்கு விளம்பரக் கட்டணம் அளிக்கப்படுகிறது. இப்படி விளம்பரக் கட்டணம், பத்திரிகைகளுக்கு நிர்ணயம் செய்த அளவுக்குக் கொடுக்கப்படுவதைப்போல—இன்றைக்குத் தனியார் தொலைக்காட்சிகள்-பல தொலைக்காட்சிகள் வந்திருக்கின்றன— அந்தத் தொலைக்காட்சிகளுக்கும், அரசு சார்பிலே விளம்பரங்கள் தரப்படுகின்றன; அதற்கும் பத்திரிகைகளுக்கு வழங்கப்படுவதைப்போல, ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி ஒரு.....

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனியார் தொலைக்காட்சிகளுக்கெல்லாம் விளம்பரங்கள் தரப்படுகின்ற நேரத்தில், விளம்பர நேரத்திற்கு ஏற்றவாறு, அவர்களிடம் நேரடியாகப் பேசி, முடிந்தவரையில் தகுதி அடிப்படையில்தான் வழங்கப்படுகின்றன.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளுக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட அளவைப்போல,

தொலைக்காட்சிகளுக்கும் முறைப்படுத்துகிற ஒரு முயற்சி எடுக்கப்படுமானால், அரசுக்கு அதிலே நிதியாதாரம் மிச்சப்படும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து நிருபர்கள். விளம்பரம் என்ற அடிப்படையிலே ஒரு கருத்தை மக்களிடத்திலே தொடர்ந்து எடுத்துக் கூறுவதைப்போல, அரசின் செயல்பாட்டிற்கு இந்தச் செய்தி—தொடர்புத் துறையிலே மிகவும் முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள் நிருபர்கள். இந்த நிருபர்களுக்கென்று பல உதவிகளை, சலுகைகளை அரசு வழங்கியிருக்கிறது என்றாலும்கூட, அவர்களுடைய வளர்ச்சிக்குத் தக்கபடி, அரசினுடைய உதவிகள் அமையவில்லை என்று நான் கருதுகிறேன். உதவித் தொகைகள் இப்போது கொஞ்சம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக வீடுகள் வழங்கப்படுகின்றன. ஆனாலும்கூட, பத்திரிகைகளினுடைய வளர்ச்சிக்குத் தக்கபடி, நிருபர்களுடைய எண்ணிக்கைக்குத் தக்கபடி, அந்த ஒதுக்கீட்டு அளவு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டு, பத்திரிகையாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகிற ஒதுக்கீட்டினுடைய (மணியடிக்கப்பெற்றது) அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தற்போது வீட்டுவசதித் துறையின் மூலம் பத்திரிகையாளர்களுக்கு அதிக அளவு 15 சதவிகிதம் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிருபர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிற காரணத்தினால், மேலும் இதை உயர்த்துவதற்கான வாய்ப்பு உண்டா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அதேபோல், பத்திரிகையாளர்களிடம் வசூலிக்கப்படுகிற வாடகை அளவு, அரசு ஊழியர்களுக்கு இருப்பதைவிட அதிகமாக வசூலிக்கப்படுகிறது. பத்திரிகையாளர்களுக்கு வாடகை அளவு அதிகமாக இருக்கிறது; அரசு ஊழியர்களுக்குக் குறைவாக இருக்கிறது. எனவே, அரசு ஊழியர்களுக்கு எந்த சதவிகித அடிப்படையிலே வசூலிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு நிருபர்களுக்கும் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, குறும்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் குறும்படங்களில் பல்வேறு படங்களைப் பார்த்தீர்களேயானால், பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிற அளவுக்கு இருக்கின்றதே தவிர, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கிற அளவுக்கு இருப்பதில்லை. எனவே, பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கான தீர்வை முன்வைக்கிற குறும்படங்களை ஊக்குவிக்கிற அளவுக்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும். குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மதுவின் தீமைகள் இப்படிப்பட்ட கருத்துக்களை வலியுறுத்துகிற குறும்படங்களுக்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். சுற்றுலாத் துறையில் இரண்டு வகைகள் உண்டு. ஒருவகை, அன்றாடம் பார்த்துவிட்டுச் செல்வது. இன்னொரு வகை சில நாட்கள் தங்கிப் பார்ப்பது. இப்படிச் சில நாட்கள் தங்கிப் பார்க்கிற இடங்களிலே உள்ள சுற்றுலா மாளிகையில் சாதாரண, சாமானியப்பட்ட மக்கள் சென்று தங்க முடிவதில்லை. அங்கே சாதாரண, சாமானிய மக்கள் தங்கக்கூடிய அளவுக்கு, சுற்றுலா மாளிகையைத் தவிர, சாதாரணக் கட்டணத்தில் விடுதிகளைக் கட்டுவதற்கு சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்யவேண்டும். சுற்றுலாத் துறை இலாபகரமாக இயங்கி வருகிறது. அதனுடைய நிதியொதுக்கத்தில், பெருமளவு இதற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்க வேண்டுமென்ற கருத்து, சுற்றுலாத் துறை மூலமாகவே முன்வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கத்தக்க வகையிலே, சுற்றுலா ஸ்தலங்கள் இருக்க வேண்டும். அயல்நாட்டுப் பயணிகள் இந்தியாவிற்கு வருகிறபோது, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு வருகிறபோது—ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்—கைவினைப் பொருட்களை வாங்குகிறார்கள்; பெருமளவுக்கு வாங்குகிறார்கள். விலையைப் பார்த்தவுடன் அவர்கள் வாங்குகிற கைவினைப் பொருட்களை அப்படியே திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். ஏனென்றால், அந்தக் கைவினைப் பொருட்களுக்கு வரி விதித்திருப்பதுதான், அவர்கள் வாங்குவதைத் தடுக்கிற ஒரு காரியமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் அயல்நாட்டுப் பயணிகள் வந்து கைவினைப் பொருட்களை வாங்குவார்களேயானால், மற்ற மாநிலங்களான

இராஜஸ்தான், உத்திரப்பிரதேசத்தில் இருப்பதுபோல அவர்களுக்கு முழு அளவுக்கு வரிவிலக்கு அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எழுதுபொருள்-அச்சுத் துறை—ஒரே ஒரு கருத்து—அதிலே மிக மிக காலதாமதம் ஆகிறது. அரசிதழ்களிலே வெளியிட்டதற்குப் பிறகுதான் எதுவும் அமலுக்கு வருவதாகச் சொல்கிறார்கள். அந்தக் காலதாமதத்தினைக் குறைப்பதற்கு ஒரு கால நிர்ணயம் செய்து, அரசிதழ்கள், அரசு நடவடிக்கைகள், சட்டத் தொகுப்புகள் அனைத்திற்கும் ஒரு கால நிர்ணயம் செய்து வெளியிட வேண்டும். அதற்காகச் சில நல்ல நடவடிக்கைகள், அச்சுத் துறையை நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருந்தாலும், அதற்குக் கால நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டு, காலத்தின் அருமை கருதி, இத்தோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

*முற்பகல் 11-35*

## 7. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி ஏற்பாடு

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

***(அ)* கோரிக்கை எண் *43*—எழுதுபொருள்-அச்சுத் துறை—தொடர்ச்சி**

***(ஆ)* கோரிக்கை எண் *46*—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்—தொடர்ச்சி**

***(இ)* கோரிக்கை எண் *50*—சுற்றுலா—தொடர்ச்சி**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. கோ. சண்முகம் அவர்கள்.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு).



**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. பெரியசாமி அவர்கள் பேசும்போது, சுப்பிரமணிய சிவா பற்றிச் சொன்னார்கள். அவர்கள் என்னுடைய ஊரிலே வத்தலகுண்டிலே பிறந்து, அங்கே வளர்ந்து, பிறகு ஜெயிலிலே அடைக்கப்பட்டு, ஆங்கிலேய போலீசாரால், ஊசிமுனையில் மருந்து ஏற்றி தொழுநோயால் பாதிக்கப்பட்டு, பிறகு பாப்பாரப்பட்டி சென்று அங்கே உயிரை விட்டு இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து, பாப்பாரப்பட்டியிலும், வத்தலகுண்டிலும் அவர்கள் குடியிருந்த வீட்டினை எடுத்து அவற்றை நினைவுச் சின்னங்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று, இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. கோ. சண்முகம் அவர்கள்.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியத்திலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று திருப்பத்தூரிலும், வேலூர் மாவட்டத்திலும் திரையரங்குகளிலே டிக்கட்டுகளில் உள்ள கட்டணத்திற்கு மேல் அதிகமாக பணத்தை வசூல் செய்கிறார்கள் என்று பொது மக்கள் புகார் செய்து வருகிறார்கள். திரையரங்குகளிலே காற்று வசதி, லைட் வசதி மற்றும் சுகாதார வசதிகள் இல்லையென்றும் பொது மக்கள் முறையிடுகிறார்கள். இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, ஏலகிரி மலையிலே சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக விடுதிகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலைக்கு ஏழைகள் அதிகமாக வருகின்றார்கள். பெரும் பணக்காரர்கள் ரூ. 500, ரூ. 1000 என்ற அளவிற்குத் தந்து விடுதிகளில் தங்கிவிடுகிறார்கள். ஆனால், ஏழைகளுக்கு விடுதிகள் இல்லை. ஆனால் ஏழைகளின் ஊட்டி என்று அதற்கு பெயர். ஊட்டியை விட அது நல்லபடியாக இருக்கும். அங்கு வந்து பார்த்தால்தான் தெரியும்.

அதேமாதிரி ஜவ்வாது மலையைப் பொறுத்தவரையில், அங்கு ரோடுகள் சரியில்லை. மலைவாழ் மக்கள் வாழும் அந்தத் தொகுதியிலே ரோடு, கால்வாய் எதுவுமே சரியில்லை. அங்கு 32 கிராமங்கள்

இருக்கின்றன. ஏலகிரி மலை ஒரு பெரிய சிட்டி மாதிரி இருக்கும். ஆனால் ஜவ்வாது மலை அதுபோல இருக்காது. 32 கிராமங்கள் இருக்கின்றன. அங்கு எந்தவித அடிப்படை வசதியும் இல்லை. இதுகுறித்து தலைவர் அவர்களுக்கு நான் முன்கூட்டியே தெரியப்படுத்தியிருக்கின்றேன். மலையின் மேல் உள்ளவர்களுக்கு இப்போதுகூட சட்டை போடத் தெரியாது, பேண்ட் போடத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் எல்லாம் அங்கே வாழுகின்றார்கள். இந்த நிலையை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். அந்த மாதிரி மனிதர்களை தலைவர் அவர்கள் நேரடையாக வந்து பார்க்க வேண்டும். ஜவ்வாது மலையையும் ஏலகிரி மலையையும் தலைவர் அவர்கள் நேரடையாக வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஆண்டியப்பனூர் அணைத் திட்டத்தினைக் கொடுத்தார்கள். அதனால் 50 கிராமத்திற்கு வசதி கிடைக்கும். அது தலைவர் அவர்கள் செய்த சாதனையாகும். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் விவசாயிகள் மத்தியில் பெரும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு பற்றி விவசாயிகள் நன்றாகப் பேசுகின்றார்கள். இதனைக் கொடுத்ததற்காகத் தலைவர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி வளர்ச்சி நிதியாக 50 இலட்சம் ரூபாய் கொடுத்தது எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 இலட்சம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதில் 20 பள்ளிகளுக்கான வேலைகளுக்கு பணத்தைக் கொடுத்து விடுகிறோம். எனவே, என்ன செய்தார்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று கேட்பதற்கு வாய்ப்பில்லை. இதுவரை எந்த அரசும் இந்த மாதிரி 50 இலட்சம் ரூபாயை தொகுதி வளர்ச்சி நிதியாகக் கொடுத்தது இல்லை. இது எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன் என்றால், இதனால் எனக்குப் பெரிய பெருமை. இந்த 50 இலட்சம் ரூபாயிலிருந்து 20 பள்ளிகளுக்கான வேலைகளுக்கு கொடுத்தால் கல்லிலே பெயர் போடுகிறார்கள். அதைப் பார்த்தால் எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது. நாம் இறந்தாலும், இருந்தாலும் கல்லிலே பெயர் வருகிறது இல்லையா, அது இந்த அரசால்தான். வேறு எந்த அரசும் இப்படிச் செய்யவில்லை.



அதேமாதிரி இரண்டு ஏரிகளில் தூர் வாருவதற்காக 20 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்காகத்தான் இவையெல்லாம் தரப்படுகின்றன. மன்னர்கள் காலத்திலேகூட ஏரிகளில் தூர் வாரவில்லை. மாண்புமிகு கலைஞர் அவர்கள் காலத்திலேதான் ஏரிகள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. இப்போது எங்கே பார்த்தாலும் விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இலவச மின்சாரம் கொடுக்கின்றார்கள். நான்கூட 15 வருடமாக விவசாயம் செய்வதற்கு current இல்லாமல் இருக்கிறேன். இப்போது 10,000 ரூபாயை நானே கட்டினேன். நானும் விவசாயிதான். எனக்கும் இலவச current கொடுக்கலாம். நான் ஒன்றும் நேரடையாக வந்துவிடவில்லை. நானும் ஏர் ஓட்டி விவசாயம் செய்துதான் வந்திருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் 10,000 ரூபாய் கட்டுங்கள், அப்போதுதான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது அதற்காக நானும் பணம் கட்டியிருக்கிறேன். நானும் விவசாயி, என்னிடம் பணம் கேட்கக் கூடாது, பணத்தைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.... *(மணியடிக்கப்பெற்றது)* நானும் விவசாயி என்பதால் அந்தப் பணத்தைத் தள்ளுபடி செய்தால் நன்றாக இருக்கும்.

*முற்பகல் 11-40*

திருப்பத்தூரிலே அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு 40 இலட்சத்திலே கட்டப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது அருமையான திட்டம். பாய்ச்சல் கிராமம், திருப்பத்தூர் கிராமம், மாடப்பள்ளி கிராமம் ஆகிய 3 கிராமங்களுக்கும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுதுமே இதுமாதிரி கிடையாது. எனக்குப் பெருமையாக இருக்கிறது. இந்த எம்.எல்.ஏ., எங்களுக்கு என்ன செய்தார் என்று இப்பொழுது கேட்பதற்கில்லை. எம்.எல்.ஏ., 3 கிராமங்களுக்கும் மூன்று திட்டங்கள் மூலம் 3 கோடி ரூபாய் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஏரிகளுக்குத் தூர் வாருவதற்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்— ஒரு கண்ணுக்கு வெண்ணெய், ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு என்று வைக்கவில்லை. எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும் இந்த அரசு செய்திருக்கிறது என்று சொல்லி, வாய்ப்புக் கொடுத்த இந்த அரசுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி, சுற்றுலா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்தினை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும் ஒரு வேண்டுகோளை முதற்கண் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

பெருங்கவி கம்பதாசன் அவர்களுக்கு திண்டிவனத்திற்கு அருகே அவர் பிறந்த இடமான உலகாபுரத்திலே ஒரு மணி மண்டபத்தை எழுப்பிட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஏற்கெனவே முன்வைத்திருக்கிறேன். மிகச் சிறந்த கவிஞனாக இருந்த கம்பதாசனைப் பற்றி அறிஞர் வ.ரா. அவர்கள் காளிதாசன், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசனுக்கு இணையான ஒரு பெரிய முதல்தரக் கவிஞராக கம்பதாசன் திகழ்கிறார் எனப் பாராட்டியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு அறிஞர்களும், கவிஞர்களும் கம்பதாசனுடைய சிறப்பியல்புகளை எடுத்துச் சொல்கிறபோது, இரசிகமணி டி.கே.சி. அவர்கள் "இவர் கம்பதாசரல்ல, கம்பரே" என்று பாராட்டியிருக்கின்றார். அதேபோல் பெருங்கவி ச.து.சு. யோகியார் அவர்கள், "வறுமையூடும், செல்வத்தூடும், மனங்கலங்காது குலுங்காது அநாயசமாகப் பறந்து செல்லும் வான்பாடி" என்றெல்லாம் பாராட்டி இருக்கின்றார்.

அதேபோல் கவிஞர் நாமக்கல் தேசிக விநாயகம் பிள்ளை, மகாகவி இக்பால் போன்றவர்கள் எல்லாம் பாராட்டத்தக்க அளவிற்கு இருந்த ஒரு மாபெரும் கவிஞன் அவன். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்கூட அவர்களுடைய நூல்களுக்கு அணிந்துரை வழங்குகிறபொழுது கம்பதாசன் பாடல்களைத் தொகுத்தளித்து அவர் திரையுலகிற்கு எத்தனை ஆற்றல் காட்டினார் என்பதை நண்பர் சீலோன் விஜயேந்திரன் விளக்கி இருப்பது கம்பதாசன் மறையவில்லை என முழக்குவது போல் இருக்கிறது என்று சொல்லி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே அன்றைக்கு மிக மனந்திறந்து பாராட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட தலைசிறந்த கவிஞன் கம்பதாசன்



அவர்களுக்கு, அவர்களுடைய நூலை நாட்டுடைமையாக்க வேண்டும் என்றும், உலகாபுரத்திலே அவருக்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்பிட வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காம்பின்றி வானம் என்று சொல்லி கற்பனையிலே சிறகடித்துப் பறந்த கவிஞன் அவன். குழந்தையைப் பற்றிப் பாடுகிறபொழுது "துள்ளும் இரண்டலையின், சோதிச் சுருதியிலே வெள்ளி முளைப்பாக விளைந்த இளம்பொழுதே" என்றெல்லாம் மிகச் சிறப்பாகக் கவிதைகளைப் படைத்தவன். இயற்கையைப்பற்றிப் பாடுகின்ற மிக உயர்ந்த கற்பனையுடைய அவனுடைய பாடலுக்கு எடுத்துக்காட்டு "காக்கை சிறு குஞ்சொன்று வாய்பிளந்தாற்போல், கங்குலினைப் பின்வைத்து முன்னின்ற சொக்கர்" என்று பாடியிருக்கிறார். அதேபோல் மிகச் சிறந்த சோஷலிச கவிஞனாகத் திகழ்ந்த கம்பதாசன் அவர்கள் "சூரியனும் ஒரு தொழிலாளி தினம் சுற்றும் உலகும் தொழிலாளி" என்று தொழிலாளி வர்க்கத்தைப் பாடி இருக்கின்ற அத்தகைய கவிஞனுக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த மணி மண்டபத்தை எழுப்பித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பல்வேறு சமயத்தவர்களுடைய பூசல்களை இப்போது மாற்றியமைக்கின்ற வகையான் பல்வேறு ஆராய்ச்சிக்குரிய இந்த நூல்களை எல்லாம் எழுதியிருப்பவர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள். உலகத் தமிழ் மாநாடு, எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்தியபொழுதுகூட அவரை அந்த மாநாட்டிலே, இங்கே உள்ளூரிலே இருக்கிறவர்கள் புறக்கணித்தபோது, வெளிநாட்டிலே இருந்து வந்த தமிழ் அறிஞர்கள் எல்லாம் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுடைய சிறப்பியல்புகளை எடுத்துச் சொல்லி அவரைச் சந்திக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியபோது அதன் பிறகுதான் உலகத் தமிழ் மாநாட்டிற்கே மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அந்த அளவிற்கு உலகத் தமிழ் அறிஞர்கள் எல்லாம் பாராட்டத்தக்க அளவிற்கு இருக்கக்கூடிய மயிலை சீனி வேங்கடசாமி அவர்களுடைய நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சுதந்திரப் போராட்டக் காலத்திலே ஏராளமான கள் உண்ணாமை பாடல்கள், கதர் பாடல்கள் இயற்றிய சேலம் அர்த்தநாரீசுவர வர்மா இராஜாஜி அவர்களாலேயே மகரிஷி என்றும் ராஜரிஷி என்றும் அழைக்கப்பட்ட ஒரு சிறப்பிற்குரியவர்.

(முற்பகல் 11-45

அதுமட்டுமல்ல, மிகப் பிற்படுத்தப்பட்டிருக்கின்ற உழைக்கின்ற வன்னிய மக்களை குற்றப் பரம்பரையிலே ஆங்கிலேய அரசு போட்டபோது அதனை எதிர்த்து சேலத்திலேயிருந்து சென்னை வரையிலே வழிநடைப் பிரச்சாரம் செய்து அதை முறியடித்து அந்தப் பேராபத்திலேயிருந்து அந்த ஒடுக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றிய ஒரு மிகப்பெரிய அறிஞர் அவருக்கு அவர் மறைந்த இடமான திருவண்ணாமலையிலோ அல்லது அவர் பிறந்த இடமான சேலத்திலோ நினைவு மண்டபம் எழுப்பிடல் வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலவர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைபோல, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய திரைப்படம் தமிழாக்கம் செய்யப்படுவதை வரவேற்கின்ற அதேநேரத்திலே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் சாயிபு போன்றவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுப் படங்களையெல்லாம் தயாரித்து வழங்குவோமானால் அல்லது தயாரிக்க முன்வருகின்ற தயாரிப்பாளர்களுக்கு அரசு ஏதேனும் உதவிகள் செய்யுமேயானால் இத்தகைய மாபெரும் தலைவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் இந்த மக்களுக்கு ஒரு பாடமாக அமைந்து தங்களுடைய வாழ்க்கையிலே ஒற்றுமையாக வாழவதற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழும் என்ற காரணத்தினாலே அதையும் நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொணடுவர விரும்புகின்றேன்.

இப்போது இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகளுக்கு, 3 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் 1,500 ரூபாய் பென்ஷனும் வழங்கியிருக்கின்ற தமிழக அரசைப் பாராட்டுகிற அதே நேரத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் பல முறை ஒன்றைக் கொண்டு சென்றிருக்கிறேன்; மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தியாகிகளினுடைய குடும்பங்களிலே (மணியடிக்கப்பெற்றது) கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த புலவனூர் ஜெயவேல் பத்தர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், சித்தணி க.சேகர் அவர்களுடைய குடும்பங்களுக்கும் இந்த நிதியுதவி இன்னும் கிடைக்காமல் அவர்கள் மனு செய்து கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு இந்த நிவாரணத் தொகை,



3 இலட்சம் ரூபாய் நிதியுதவியும் 1,500 ரூபாய் பென்ஷனும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், மொழிப்போர்த் தியாகிகளுக்கும் வழங்கப்படுகிற அத்தனை சலுகைகளும் இட ஒதுக்கீட்டுப் போராட்டத் தியாகிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா மையங்களை மேம்படுத்துகின்றபொழுது, மைய மாநில அரசுகள் இணைந்து சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்கும் அங்கே பழமையான சின்னங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் (மணியடிக்கப்பெற்றது) அத்தகைய இடங்களுக்குப் புதுமையான முறையிலே பல்வேறு ஆய்வுகளை நடத்தி, அதாவது மக்களைக் கவருகின்ற வகையிலே பல்வேறு புதுமையான அறிவியல் சாதனங்களையெல்லாம் பயன்படுத்தி, பொழுதுபோக்கு அம்சங்களோடு சிலவற்றை வைத்தால் அந்தப் பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் என்ற காரணத்தினாலே இப்போது ஊட்டி, கன்னியாகுமரியிலேயெல்லாம் செய்வதைப்போல, சற்றுக் கூடுதலான நிதி ஒதுக்கி மனமகிழ் பொழுதுபோக்குச் சாதனங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சுற்றுலா மையங்களிலே தங்குவதற்குப் போதுமான இட வசதி இல்லாமல் இருக்கின்றது. அவற்றுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது சுற்றுலா மையப் பகுதிகளிலே அந்தந்த சுற்றுலா மையங்களைப் பற்றிய தொகுப்புகள் சரிவர பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. உதாரணத்திற்கு, ஒட்டப்பிடாரத்திற்கு அண்மையிலே சென்றிருந்தோம். அங்கே வ.உ.சி.யினுடைய பெயரிலே இருக்கக்கூடிய அவர்களுடைய நினைவு இல்லத்திலே, இன்னும்கூட அவர் மற்றவர்களுக்கு எழுதிய கடிதங்கள், அவருக்கு எழுதப்பட்ட கடிதங்கள், அவரைப்பற்றிய சிறப்பான வரலாறுகளெல்லாம் வைக்கப்படவில்லை. அவையெல்லாம் வைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கோடைக்காலம் என்பது பெரும்பாலும் சுற்றுலாக் காலமாக இருக்கின்ற காரணத்தினாலே, 11 நாட்கள், 12 நாட்கள் என்று வெளி மாநிலச் சுற்றுலா நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது இதை வரவேற்கிற அதே நேரத்திலே எல்லா மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும், அதேபோல சுற்றுலா மையங்களின் மூலமாகப்

புதிய திட்டங்களைத் தீட்டிச் (மணியடிக்கப்பெற்றது) செயல்படுவீர்களேயானால், அது அரசுக்கு வருவாயைப் பெருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, மாமல்லபுரத்திலே சித்திரைத் திருவிழாவை அரசே சிறப்பாக ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பத்திரிகையாளர்களைப் பொறுத்த அளவிலே இப்போது அரசானது 1,500 ரூபாய் ஓய்வூதியமும், பத்திரிகையாளர்கள் இறந்தால் அவருடைய குடும்பத்தாருக்கு 40,000 ரூபாய் நிதியுதவியும் வழங்குவதை வரவேற்கிற அதேநேரத்திலே இந்த உதவியானது வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை, இப்படி பல்வேறு பத்திரிகைகளிலே தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றுகிறவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 12-5-1997 அன்று அந்தப் பத்திரிகையாளர்கள் 100 பேர்கள் சென்று சந்தித்து இதைத் தெரிவித்த நேரத்திலே தமிழக முதல்வர் அவர்கள் அதற்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள். எனவே, அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் அந்தச் சலுகைகள் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறையிலே—ஒரேயொரு வேண்டுகோள்—சுமார் 4,000 தொழிலாளர்களுக்கு மேலே பணி செய்கிறார்கள். அவர்கள் வாரத்திலே 5 நாட்கள் வேலை கேட்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் அரை நிமிடத்தில் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** நேரம் முடிந்துவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். மஹாவீர் ஜெயந்தி விடுமுறை மற்றவர்களுக்கு வழங்கப்படுவது போல அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதேபோல 'நச்சுத் தன்மைப்படி' (Poison Allowance) என்று சொல்லப்படுகின்ற படியாக ரூபாய் 200 வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அதேபோன்று அச்சகத் தொழிலாளர்களில் சில பிரிவுத் தொழிலாளர்களுக்கு 5 சதவீதம் தனி ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது. அதுவும் வழங்கப்பட வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையையும் அரசினுடைய கவனத்திற்கு வைத்து, விடைபெறுகின்றேன், நன்றி.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** அடுத்து, திரு. இ. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த இரு மானியக் கோரிக்கைகளிலும் எனது கருத்தினை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பினை அளித்ததற்காக, உயிரோடும், உணர்வோடும், உதிரத்தோடும், ஊனோடும் கலந்துவிட்ட, திராவிட தத்துவத்தினுடைய பாதுகாவலர், அறிவுச் சித்தர் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க நான் விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

இந்தச் சுற்றுலாத் துறை என்பது வருவாயைப் பெருக்குவதற்கான வாய்ப்புள்ள துறை. சுற்றுலாத் துறையின் மூலமாக வருவாயைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், வெளிமாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வரக்கூடியவர்கள் தமிழர்களுடைய கலையை, நாகரீகத்தை, பண்பாட்டை, கலைப் பொக்கிஷத்தைக் கண்டு, பார்த்து, மகிழ்ந்து, பெருமைபட்டு நம்முடைய இனத்திற்கே ஒரு தனி மரியாதையை அளிக்கக்கூடிய வாய்ப்பினை வகுக்கக்கூடியது இந்தச் சுற்றுலாத் துறையாகும்.

ஒரு புதுமையான இடத்திற்குச் செல்கின்றபோது, சிறு வயதிலே ஓடி விளையாடுவதும், இள வயதிலே காதலித்து மகிழ்வதும், திருமணம் ஆனவுடன் தேனிலவுக்குச் செல்வதும், சற்று நடுத்தரக் குடும்பமாக ஆனதற்குப் பிறகு குடும்பத்தோடு சென்று குதூகலமடைவதும், வயது முதிர்ந்த நிலையிலே ஓய்விற்காகப் போவதும், இன்னும் இதற்கெல்லாம் விதிவிலக்காக முதிர்ந்த நிலையிலேயானாலும்கூட, ஓய்வறியாது உணர்வுகொண்டு உழைப்பையே சித்தமாகக் கொண்ட சிந்தனையாளர்கள், அறிஞர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் போன்றவர்கள் எந்த நேரத்திலும் நாட்டு நலப் பணியையே சிந்தித்து, எழுதுகின்ற இலக்கியங்களை, காப்பியங்களைப் படைக்கின்ற நிலைகளையெல்லாம், வகுப்பதையெல்லாம் அறிகின்றோம். ஆக, எல்லாத் துறை மக்களையும் கவரக்கூடியது இந்தச் சுற்றுலாத் துறையாகும். ஆக, சுற்றுலாத் துறை சிறப்படைய வேண்டும் என்பதற்காக அங்கே போகின்றவர்களுக்கு அங்கே தங்குகின்ற இடங்களிலே மற்ற இடங்களிலே இருக்கக்கூடிய வாய்ப்பு வசதிகள் அங்கே முக்கியமாகப்படுகின்றன. தனியார் இடங்களில் இருக்கக்கூடிய அந்த நிலைபாடுகளைப் போல அரசின் இடங்கள்

சிறப்பாக இருக்க வேண்டும் என்று மக்கள் எண்ணுகிறார்கள். தங்கும் இடம் என்று சொல்லுகின்றபோது ஒரே நாளில் 42 ஆயிரம் ரூபாயை வாடகையாகக் கொடுத்து தங்கும் இடம் பற்றி நான் குறிப்பிடவில்லை. 12 நாட்கள் தங்குவதற்கு 60 இலட்சம் ரூபாயைச் செலவு செய்து கும்மாளம் போடுகின்றவர்களைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. ஆனால், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த நடுத்தர மக்கள் செல்கின்றபோது, தங்குகின்ற வாய்ப்புகள் வசதிகள் என்று வருகின்றபோது கோடைக்காலத்திலே—இன்றைக்கு அக்னி ஆரம்பித்திருக்கிறது, ஆக, இந்தச் சூழலில் ஓர் ஏர்-கண்டிஷன் அறையிலே தொலைக்காட்சிப் பெட்டியோடு தங்குவதை சுற்றுலா செல்கின்ற நடுத்தரக் குடும்பங்கள் இப்போது பயன்படுத்துகின்ற வாய்ப்பு உண்டு. ஆகவே, தங்குகின்ற இடங்களிலே சிறப்புக்களை உருவாக்க வேண்டும், தங்குவதற்கான வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, எதையாவது நாம் செய்துவிட்டு வருவோமேயானால் அதையெல்லாம் செய்யக்கூடாது என்று ஒரு முடிவெடுத்து கடந்த ஆட்சி செய்துகொண்டு இருந்தது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே செய்திருக்கின்ற செயல்கள் நல்லவையாக இருந்தால் அதை யார் செய்திருந்தாலும் தொடர்ந்து செய்கின்ற நிலைப்பாட்டை வகுக்கக்கூடியவர்கள். 1990-லே அன்றைக்கு சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த மறைந்த மாண்புமிகு கே.பி.கே. அவர்கள், சென்னையிலே எப்படி கோல்டன் பீச் இருக்கிறதோ அதைப்போல கடலூரிலே இருக்கின்ற சில்வர் பீச்சை மாற்ற நடவடிக்கை எடுத்தார். சென்னையிலே தங்கக் கடற்கரை, கடலூரிலே வெள்ளிக் கடற்கரை. முதலாம் கர்நாடகப் போர் முடிந்ததற்குப் பிறகு சென்னையை ஃபிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியவுடன் கடலூர் மாநகரம்தான் இந்த மிகப்பெரிய நிலப்பரப்பிற்கு ஆறு ஆண்டுகள் தலைநகரமாக அறிவிக்கப்பட்ட நகரம். அந்தத் தலைநகரிலே இருக்கக்கூடிய— அன்றைய தலைநகரத்தில் இன்றைய மாவட்டத் தலைநகர் இருக்கிறது— வெள்ளிக் கடற்கரை என்பது நம்முடைய மெரினா கடற்கரையைப் போல நீண்ட நெடிய நிலப்பரப்பிற்குச் சொந்தமானது; அழகு குழுமியது. அங்கே வருடத்திற்கு மூன்று நாட்கள் கோடை விழா உண்டு. கோடை விழாக்களிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்கிற அந்த இடத்திலேதான் தலைவர் கலைஞர் அரசால் 1990-ல் சுமார் 45 இலட்சம் ரூபாய் செலவில் மிக அழகான தங்கும் விடுதியையும், உணவு விடுதியையும் கட்டுவதற்கு அடிக்கல் போடப்பட்டது. பிறகு வழக்கம்போல பதவிப்



பித்தர்களால் ஜனநாயகம் பதம்பார்க்கப்பட்டது. ஜனநாயகத்தின் குரல்வளை கடிக்கப்பட்டது. நாம் இறங்கினோம்; சிலர் ஏறினார்கள். ஏறியவர்களுக்கு எண்ணமில்லை. அதன் காரணமாக, போடப்பட்ட அடிக்கல் தூக்கிப் போடப்பட்டது. ஏற்கெனவே கடலூரிலே ஒரு அடிக்கல் தூக்கிப் போடப்பட்டது. சிங்காரத்தோப்புப்பாலம் அடிக்கல்; மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டி அங்கே பாலம் கட்டுகின்ற பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். அதைப்போலவே இந்த அடிக்கல்லையும் தூக்கி எறிந்தார்கள். ஆகவே, அங்கேயே மீண்டும் கட்டுகின்ற நிலைப்பாட்டை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்தப் புத்தகத்திலே நான் பார்த்தேன். முட்டுக்காட்டிலிருந்து மாமல்லபுரம் வரை, சிறப்புச் சலுகை விதிகள் என்று சுற்றுலாத் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிழக்குக் கடற்கரைப் பகுதியில் முட்டுக்காட்டிலிருந்து மாமல்லபுரம், மாமல்லபுரத்திலிருந்து புதுவை வரை விரிவாக்கம் செய்யப்பட்டு இருப்பதைப்போல புதுவைக்குப் பக்கத்திலே இருக்கின்ற கடலூர் வரை விரிவாக்கம் செய்யவேண்டும். புதுவையோடு சேர்ந்த அழகு நிறைந்த ஒரு பகுதிதான் கடலூர். ஆகவே, அந்த சிறப்புச் சலுகை விதிகளை முட்டுக்காட்டிலேயிருந்து கடலூர் வரை உருவாக்கித் தர வேண்டும் என்றும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

செய்தி, தகவல் துறை என்கின்றபொழுது நான் சிலவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும். நம்முடைய எம்.ஜி.ஆர். பெயரிலே இருக்கின்ற திரைப்பட நகரம், அதனுடைய இயக்குநராக விளங்குகின்ற எனது மரியாதைக்கும், வணக்கத்திற்குமுரிய இயக்குநர் அண்ணன் அமிர்தம் அவர்களுடைய செயல்பாட்டினால், நிர்வாகத் திறன் மிக்கதாக விளங்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் சிலபேர் வேடிக்கையாக அழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் கவனிக்காமல் விடுபட்டுப்போனது வள்ளுவர் கோட்டம்; நீங்கள் கவனிக்காமல் விடுபட்டுப்போனது பாஞ்சாலங்குறிச்சியிலே இருக்கின்ற கட்டபொம்மன் கோட்டை; நீங்கள் கவனிக்காமல் விடுபட்டு வேடிக்கை பார்த்து வீணடிக்க நினைத்தது பூம்புகார். ஆனால், இவற்றையெல்லாம் படைத்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் அவற்றைப் புதுப்பிக்கின்றார்கள்; மீண்டும் அவற்றைச் சிறப்படையச் செய்கின்றார்கள். அதைப்போல

எம்.ஜி.ஆர். நகர். எம்.ஜி.ஆர். பெயரையே வைக்க மாட்டேன், என்னுடைய பெயரை வைத்துக்கொள்வேன் என்று ஆட்டம் போட்ட அந்த ஆணவ நிலைகளுக்கு அடி கொடுக்கின்ற விதமாக மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். பெயரை வைத்து அதைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்ற நிலையை வகுத்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்.

மேலும் ஒன்று, கடலூர் மாவட்டம் பகுத்தறிவாளர்களின் வரிசையிலே பார்க்கக்கூடிய அளவிற்குச் சிறந்தவொரு சந்நியாசியாக புண்ணியவானாக விளங்கியவர் வாழ்ந்த மாவட்டம். நாம்கூட ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்குக் கருத்துகளைச் சொன்ன வடலூர் இராமலிங்க அடிகளார் அவர்கள் பிறந்த மருதூரிலே இருக்கின்ற அவருடைய இல்லத்தை இப்போது புதுப்பிப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இதற்கெல்லாம் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஒரு நிமிடம், நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அன்பிற்குரிய சகோதரர் தோழர் திரு. பெரியசாமி அவர்கள் இங்கே ஒரு கருத்தினைச் சொன்னார்கள். சுப்பிரமணிய சிவா அவர்களுடைய தியாகத்தைப் பற்றியோ, சுப்பிரமணிய சிவாவினுடைய செயல்பாட்டைப் பற்றியோ யாரும் குறை சொல்ல முடியாது. அவர் போற்றுதலுக்கு உரியவர்; இன்னும்கூட, வணங்குதலுக்கு உரியவர். அவருடைய இறுதிக் காலங்களிலே அவர் எடுத்துக்கொண்டிருந்த அந்த நிலைப்பாட்டைச் சொல்லுகின்றபொழுது, பாரதமாதா என்கின்ற அந்த நம்பிக்கையோடு செயல்பட்டவர் அவர் என்று சொன்னார். ஆக, என்னுடைய அருமை நண்பரும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களும் அந்த முறையிலேதான் சொன்னார்கள். எப்படி ஏற்கெனவே காந்தி அவர்களுக்கு வட மாநிலத்திலே ஓர் ஆஸ்ரமம் கட்டியிருந்தார்களோ அதைப்போல சுப்பிரமணிய சிவா அவர்கள் விரும்பியபடி பாரதமாதா ஆஸ்ரமம் என்று ஜாதி மதம் இவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு சூழ்நிலையை வகுக்க வேண்டுமென்பதுதான் அவருடைய கருத்தாக இருக்குமென்று கருதுகிறேன். பாரதமாதா பெயரில் கோயில் என்பதை நிச்சயமாக



என்னுடைய அருமைச் சகோதரர் சொல்லியிருக்க மாட்டார் என்பது என்னுடைய எண்ணமாகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** பேசியது போதும்; நேரம் ஆகிவிட்டது.

**திரு. இ. புகழேந்தி:** ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக விளம்பரங்கள் மிக அவசியமாக இருக்கிறது; விளம்பரங்கள் தேவையாக இருக்கிறது. விளம்பரங்கள் மூலமாகத்தான் ஒன்றை நிலைநிறுத்த முடியும். ஆக, அதிலே எது முக்கியம் என்று பார்த்தாக வேண்டும். இன்றைக்கு மத வெறியோ, ஜாதி வெறியோ அது மனக்கோளாறைப் பொறுத்தது. அவற்றைப் பிரச்சாரத்தின் மூலம் நீக்க வேண்டும். இது நூற்றாண்டுக் காலமாக நாம் செய்து கொண்டிருக்கின்ற வேலை; நம்முடைய இயக்கம் செய்கின்ற வேலை. ஆக, அந்தப் பிரச்சாரம் தொடர வேண்டும்.

ஆனால் எய்ட்ஸ் போன்ற ஓர் அறிகுறி தெரிகின்ற ஒரு நிலைப்பாடு வருமேயானால் உடனடியாக அதைத் தீர்த்து வைக்க வேண்டும். ஆக, மத வெறியையும், ஜாதி வெறியையும் பிரச்சாரத்தின் மூலம் நீக்குகின்ற பணியைத் தொடருவோம். இந்த எய்ட்ஸைப் போல இருக்கின்ற ஊழல் வெறிகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். அது திருத்தப்பட வேண்டும்; இது அகற்றப்பட வேண்டும். அகற்றப்படுகின்ற பணிகளிலே இப்போது இந்த நாட்டை அழைத்துச் செல்லுகின்ற நம்முடைய முத்தமிழறிஞர், நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய நிலைப்பாட்டை இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது; அந்த வழியிலே நாமும் செல்ல வேண்டும்; நாட்டு மக்களும் அதை விரும்புகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் ஜனநாயகம் காப்பாற்றப்படுகின்ற அந்தப் பெரும் பொறுப்பினை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அவருடைய ஆட்சியிலே இந்த இரண்டு துறைகளின் மூலம் வெளியிடப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை முழுமையாக வரவேற்று மகிழ்வோடு எனக்குக் கொடுத்த வாய்ப்புக்காக நன்றி கூறி, கலைஞர் வாழ்க, கழகம் வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. ஜி.கே. மணி.

*நண்பகல் 12-00*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான செய்தி, விளம்பரம் மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு அளித்தத் தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின சார்பிலே சில கருத்துக்களை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் விளம்பரம் இல்லாமல் எந்தச் செயலும் அமையாது, இயங்காது என்ற அளவுக்கு நாடு வேகமாக விளம்பரத் துறையிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது. அப்படி விளம்பரத் துறையிலே முன்னேறிக் கொண்டிருக்கிற காலகட்டத்திலே அரசு எச்சரிக்கையாக கவனம செலுத்த வேண்டுமென்று என்னுடைய அன்பான கோரிக்கையை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், விளம்பரம் வாயிலாக, குறிப்பாக சினிமாத் துறையிலும், தொலைக்காட்சித் துறையிலும் பல்வேறு காட்சிகள் எல்லாம் இப்போது விளம்பரம் செய்யப்படுகின்றன. சினிமாத் துறையினாலும் விளம்பரத்தினாலும் மாணவர்களுடைய மனம் சீரழிந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் நேரடியாகக் கண்டு வருகிறோம். ஆகவே இந்த நாட்டை உருவாக்கக்கூடியவர்கள் மாணவர்கள் என்ற காரணத்தினாலே, அதிலும் குறிப்பாக இளைஞர்கள் வீணாகிவிடக்கூடாது என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அரசு தணிக்கை செய்து நல்ல கருத்துக்களை மட்டும் விளம்பரம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவத் துறையிலே சாதாரண மருந்துகளை அல்லது தரமில்லாத மருந்துகளை விளம்பரத்தின் வாயிலாக விற்பனை செய்து பலபேர் கோடிக்கணக்கிலே சம்பாதிக்கக்கூடிய நிலை எல்லாம் இருக்கிறது. மக்கள் எல்லாம் ஏமாந்து அந்த விளம்பரத்தை நம்பி அங்கே சிகிச்சை பெற்று பலன் அளிக்காமல் மாய்ந்து கொண்டிருக்கிற நிலை எல்லாம் ஏற்படுகின்ற காரணத்தினாலே அரசு இந்த விளம்பரத் துறையிலே அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். விளம்பரத் துறையைப் பற்றி சொல்கிற அதேநேரத்தில், இந்தத் துறையின் அமைச்சராக இருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களை நான் பணிவோடும் அன்போடும் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் அவ்வை அதியமான் கோட்டம் ஆரம்பிப்பதாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல்





இருக்கக்கூடியதை அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள். அதேநேரத்தில் நடப்பு ஆண்டில் அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தற்போது அதியமான் கோட்டம் இருக்கக்கூடிய அந்த இடத்திலே அந்தப் பணியைத் தொடங்குவதுதான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தாலே தற்போது தேர்வு செய்யப்பட்ட இடத்தை மாற்றி, இருக்கக்கூடிய இடத்திலேயே கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் மீண்டும் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே நாங்கள் எல்லாம் வணங்கிப் போற்றக்கூடிய சுப்பிரமணிய சிவா அவர்களுடைய நினைவிடம் இருக்கிறது. இங்கே சுப்பிரமணிய சிவா அவர்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பெருமையாக எடுத்துச் சொன்னார்கள். ஆகவே அப்படி மிகுந்த பெருமைக்குச் சொந்தக்காரரான அவர், நாட்டுப்பற்றில் அதிக ஆர்வம் கொண்டவர். ஆகவே பாப்பாரப்பட்டியில் இருக்கக்கூடிய அவருடைய நினைவிடத்திலே அவருக்கு ஒரு நினைவு மண்டபம் நிச்சயமாக இந்த நடப்பு ஆண்டிலே உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையிலும் நாட்டுமக்கள் எல்லாம் பொழுதுபோக்குக்காக, அதிலும் குறிப்பாக ஓய்வு எடுப்பதற்காக இப்போது சுற்றுலாவாக, உல்லாசமாக, என்னுடைய தொகுதியான பெண்ணாகரம் தொகுதியில் ஒகேனக்கல் என்ற பிரசித்தி பெற்ற சுற்றுலா மையத்திற்கு வரக்கூடிய காலங்களில், அந்தச் சுற்றுலா மையத்தில் அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் இருந்துவருகிறது. நான் சட்டப்பேரவை உறுப்பினராக இருக்கின்ற இந்த மூன்றாண்டுகளாக அதுபற்றி இந்த மாமன்றத்தில் வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்கூட நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்கள். ஆனால் இதுவரையிலேயும் ஆக்கபூர்வமான பணிகள் எதுவும் அங்கே நடைபெறவில்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்றக் குழுக்கள் எல்லாம் அங்கே வந்து பார்வையிட்டும்கூட எத்தனையோ கோரிக்கைகளை வைத்தும்கூட இதுவரையில் அவை நிறைவேற்றப்படவில்லை உள்ளாட்சித் துறை மூலமும், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்தும் சில காரியங்கள்

தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே சிறப்பாக கவனம் செலுத்தி இன்னும் சுற்றுலாத் துறையின் மூலமாகவும், உள்ளாட்சித் துறையின் மூலமாகவும் அதிகமான நிதியைப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், கர்நாடகத்திலிருந்தும், ஆந்திராவிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வந்து அங்கே கூடக்கூடிய ஒரு வாய்ப்பாக அந்த இடம் இருக்கிற காரணத்தால் அதை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டில் ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல அருகிலே உள்ள மேட்டூர் அணை. மேட்டூர் அணையும் சுற்றுலா மையமாக இருக்கிறது. அந்த மேட்டூர் அணை பொதுப்பணித் துறையின் மூலமாக நிர்வகிக்கப்பட்டாலும்கூட, அங்கே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற காரணத்தாலே, சுற்றுலாத் துறையின் மூலமாக சில காரியங்களை அங்கே செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நமமுடைய மொழிப் போர் தியாகிகளுக்கு, மற்றவர்களுக்கெல்லாம் அரசாங்கம் பல்வேறு ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்து வருகிற அதே நேரத்தில், சமூக நீதிக்காக, இட ஒதுக்கீடு போராட்டத்தில் இறந்த பல்வேறு தியாகிகளுக்கு நினைவு செய்யக்கூடிய வகையிலே நம்முடைய அரசு சமூக நீதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சமூக நீதிப் போராட்டத் தியாகிகளுடைய நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டும். அதற்கு பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்தவரையில் என்றென்றும் நன்றி விசுவாசமாக இருக்கும். அதற்கான நினைவுச் சின்னத்தை நடப்பு நிதி ஆண்டில் உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே நான் முன்பே சொன்னமாதிரி மாணவர்களுடைய மனதை பக்குவப்படுத்தக்கூடிய வகையிலே அந்த விளம்பரங்களைச் சிறப்பாக அமைக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.



பிற்பகல் 12-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்):** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, பல்வேறு நாடுகளிலே சுற்றுலாத் துறை என்பது ஒரு சிறந்த, வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய நிறுவனமாகக் கருதப்படுகிறது. உலகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நாடுகளை நாம் பார்க்கின்றபோது, சுற்றுலாத் துறையை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய நாடுகள் பல இருக்கின்றன. நம் நாட்டைப் பொறுத்த அளவிலே பல்வேறு இலாகாக்கள் அதிக வருமானத்தைத் தேடித் தரக்கூடிய இலாகாக்களாக இருந்தாலும்கூட, சுற்றுலாத் துறையின் மூலமாக வரக்கூடிய வருமானம் என்பது இந்த நாட்டிற்கு மிகவும் குறைவு. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற மாலத் தீவு அல்லது அருகிலே இருக்கக்கூடிய ஹாங்காங், இன்னும் ஆப்பிரிக்கா நாட்டின் பக்கத்திலே இருக்கக்கூடிய seychelles போன்ற நாடுகளில் எல்லாம் கிட்டத்தட்ட 70 சதவீத வருமானம் அந்த நாடுகளுக்கு சுற்றுலாத் துறையின் மூலமாகக் கிடைக்கிறது.

நம் தமிழகத்தைப் பொறுத்த அளவில், கடற்கரை மிகுந்த பகுதிகளாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கோடைக் காலங்களிலே மக்கள் சென்று தங்குவதற்கு சிறப்பான இடமாக மூன்று மலைவாசஸ்தலங்கள் நம் தமிழகத்திலே இருக்கின்றன. அவை ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு. கடற்கரை என்று எடுத்துக்கொள்வோம் என்றால் மாமல்லபுரம், கன்னியாகுமரி, மதிப்பிற்குரிய புகழேந்தி அவர்கள் சொன்னதுபோல, கடலூர் போன்ற பல்வேறு பகுதிகள், மிகவும் அழகான கடற்கரையைக் கொண்டிருக்கக்கூடிய தமிழகமாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னால் குறிப்பிட்டதைப்போல இங்கே சிறப்பான 21 வனச் சரணாலயங்கள் இருக்கின்றன. 6 வன விலங்குகள் சரணாலயங்கள்; 12 பறவைகள் சரணாலயங்கள் இருக்கின்றன. இதைவிடச் சிறப்பு என்னவென்று சொன்னால், உலகத்திலே உள்ளவர்கள்

மிகவும் அருமையான இடம் என்று பாராட்டக்கூடிய ஓர் இடம் தமிழகத்திலே இருக்கிறது என்று சொன்னால் அது குற்றாலம். எந்தவொரு நாட்டிற்கும் கிடைக்காத ஒரு சிறந்த வரப்பிரசாதம் தமிழகத்திலே இருக்கிறது இரண்டு மாத காலம் அங்கே தங்கியிருந்து சாரலை அனுபவிக்கக்கூடிய, இயற்கையை அனுபவிக்கக்கூடிய, பல அருவிகளிலே சென்று குளிக்கக்கூடிய வாய்ப்பு உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் கிடையாது. தமிழகத்திற்கு உண்டு. அத்தனை பகுதிகளையும் நாம் வைத்துக்கொண்டு, நம் தமிழகத்திற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கையை நாம் பார்த்தோம் என்று சொன்னால், அது மிகவும் குறைவு என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய நாட்டிற்கு வரக்கூடிய கிட்டத்தட்ட 30 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளை எடுத்துக்கொண்டால், தமிழகத்திற்கு வரக்கூடிய வெளிநாட்டுப் பயணிகள், கொள்கை விளக்கக் குறிப்பின்படி பார்த்தால் 6 இலட்சம்தான். ஆறு இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளை மட்டுமே நம்மால் கவர முடிகிறது என்பதை நினைக்கின்றபோது மிகவும் வருத்தமாக இருக்கிறது. அந்தப் பயணிகள். தங்குவதற்குச் சிறந்த இடத்தையும், சிறந்த உணவு வகைகளையும், சென்று தங்குகின்ற இடங்களிலே அவர்கள பொழுதைப் போக்குவதற்குச் சிறந்த பொழுதுபோக்கு ஸ்தாபனங்களையும், ஏற்பாடுகளையும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின சார்பாக கிட்டத்தட்ட 40 இடங்களிலே T.T.D.C. Hotels இருக்கின்றன. ஆனாலும், அந்த ஓட்டல்களிலே தங்குகின்ற பயணிகளுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது மிகவும் குறைவு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 0.10 சதவீதம். அரை சதவீதத்திற்கும் குறைவாகத்தான் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய தங்கும் விடுதிகளில் மக்கள் சென்று தங்குகிறார்கள். அதைக்காட்டிலும் வேடிக்கை என்னவென்று சொன்னால் தமிழகத்திலேயிருந்து சுற்றுலாப் பயணிகளாகச் செல்லுகின்ற தமிழக மக்கள் கிட்டத்தட்ட 2 கோடி பேராக இருந்தாலும்கூட, அந்த இரண்டு கோடி பேர்களில், தமிழ்நாடு ஓட்டல்களிலே தங்குகின்றவர்களுடைய விகிதாச்சாரம் மிகவும் குறைவு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்குக் காரணம் என்னவென்பதை தமிழக அரசும், சுற்றுலாத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும் எண்ணிப்பார்த்து, அவற்றை சரி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட Auditor General Report-லே அருமையாக இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால், தூய்மை இல்லாமல் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நானே பல இடங்களுக்குச் செல்லுகின்றபோது T.T.D.C. ஓட்டல்களிலேதான் தங்குகின்றேன். அப்படித் தங்கிப் பார்க்கின்றபோது, Auditor General உடைய Report உண்மை என்றே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கே Service மிகவும் மோசமாக இருக்கிறது. அதைக்காட்டிலும் வேடிக்கை என்னவென்று சொன்னால், அங்கே பரிமாறப்படுகின்ற உணவுகளாக இருந்தாலும் சரி அல்லது . . .

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே சரியான முறையிலே service இல்லை என்று கூறுகிறார்கள். இதை உணர்ந்துதான் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக அங்கே பணியாற்றக்கூடிய பயிற்சியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய கட்டளையை ஏற்று 5 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. வருங்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் இல்லாத அளவுக்கு சுற்றுலாத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் 5 இலட்சம் ரூபாய் அல்ல, 5 கோடி ரூபாய் செலவு செய்து பயிற்சி அளித்தாலும்கூட, அதை அவர்கள் உணர்ந்து அந்தப் பயிற்சிக்கு ஏற்றவாறு, வரக்கூடிய பயணிகளை திருப்திப்படுத்தக்கூடிய அளவுக்கு அவர்கள் பணி செய்ய வேண்டும். அதுதான் முக்கியம்; பயிற்சி கொடுக்கலாம். எத்தனையோ பேர் பள்ளிக்கூடத்திலே படிக்கிறார்கள். எத்தனை பேர் Pass ஆகிறார்கள்? எத்தனை பேர் fail ஆகிறார்கள்? படித்து விட்டு எத்தனை பேர் பெரிய இன்ஜினியர்கள் ஆகிறார்கள்? டாக்டர்கள் ஆகிறார்கள்? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே சிறந்த பயிற்சிகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், அப்படிப்பட்ட இடங்களுக்கு மேலதிகாரிகளை அனுப்பி அவர்களுடைய service எப்படி இருக்கிறது? உணவு வகைகள் எப்படி இருக்கின்றன? உணவு வகைகளை பரிமாறுவதற்கான தட்டுகள், டேபிள்கள் எப்படி இருக்கின்றன? இடத்தை எப்படி

வைத்துக்கொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டைக்கு பலமுறை காரிலே போகும்போது அங்கே சாப்பிடப் போகிறோம். 15 வருடங்களுக்கு முன்பாக பார்த்தீர்கள் என்றால் அங்கே தங்கி கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுப் போகலாம் என்ற எண்ணமே இருந்தது. ஆனால் இப்போது பார்த்தீர்களென்றால், இங்கே சாப்பிட வேண்டுமா என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. ஆகவே, இதுபோன்று சுற்றுலா பயணிகள் செல்கின்ற பாதையிலே இருக்கக்கூடிய ஓட்டல்களை எல்லாம் சிறந்த முறையிலே பராமரிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, Hotel drinks அது வேறு சமாச்சாரம், அதை நான் பேச விரும்பவில்லை. தனியார்கள் நடத்துகின்ற ஓட்டல்களில் தங்குகின்ற பயணிகளைக் காட்டிலும் நம்முடைய தங்கும் விடுதியிலே தங்குகின்ற பயணிகளின் விகிதாச்சாரத்தைப் பார்க்கின்றபோது தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகின்ற ஓட்டல்களில் தங்குகின்ற பயணிகளின் விகிதாச்சாரம் மிகவும் குறைவு. முக்கியமான சுற்றுலாத் தலங்களை எடுத்துக்கொண்டால் தனியார் ஓட்டல்களில் தங்குகின்றவர்களுடைய விகிதாச்சாரம் கிட்டத்தட்ட 80 முதல் 85 சதவிகிதம் இருக்கிறது. ஆனால, தமிழ்நாடு அரசால் நடத்தப்படுகின்ற ஓட்டல்களிலே தங்குகின்றவர்களுடைய விகிதாச்சாரம் மிகவும் குறைவு, 50 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்கிறது. இது ஏன் என்பதை நீங்கள் ஆராய வேண்டும்.

கடந்த நிதியாண்டிலேகூட நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு மாவட்டந்தோறும் சுற்றுலாப் பயணிகளை ஏற்பாடு செய்வதற்கு மாவட்ட அளவிலே ஒரு குழுவும், மாநில அளவிலே ஒரு குழுவும் அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தீர்கள். ஆனால், இதுவரை அமைக்கப்பட்டதா என்ற தகவல் தெரியவில்லை. அவ்வாறு அமைக்காதிருப்பின் இந்த ஆண்டாவது மாவட்ட அளவிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கிருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரையும் மற்றவர்களையும் அழைத்து அதுபோன்ற ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் சுற்றுலாவிற்கு நிறைய செய்யலாம். சுற்றுலா என்பது ஓர் அருமையான Industry. இப்போது Training Centres என்று வைத்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இதற்காக தனியாக ஒரு syllabus போட்டு, Tourism Syllabus என்று போட்டு பாலிடெக்னிக்குகளிலேகூட அதனை அறிமுகம் செய்யலாம். குறிப்பாகச்



சொல்லவேண்டுமென்றால் பெண்களுக்கென்று தனியாக இருக்கக்கூடிய பாலிடெக்னிக்குகள் மற்றும் கல்லூரிகளிலேகூட நீங்கள் இதனை அறிமுகம் செய்து, அதன்வாயிலாக வரக்கூடிய, அந்த training எடுத்தவர்களை, டிப்ளமோ படித்தவர்களை, பல்வேறு இடங்களிலே சுற்றுலாத் துறையில் நியமிக்கலாம். ஏனென்றால் பல்வேறு இடங்களிலே போகும்போது Tourist Guide என்று வருகிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம் ஒரு கணக்குத்தான் பல திருத்தலங்களுக்குச் செல்வோம் என்றால் அவர்கள் சொல்வது எல்லாம் ஒரு கணக்குத்தான். 'இந்தக் கோபுரம் எப்போது கட்டினார்கள் என்றால், ஏதோ சொல்கிறார்கள்', அதேபோல் கடற்கரைச் சாலைக்குப் போனால், வேறு எங்காவது Tourist Centre-களுக்குப் போனால், மாமல்லபுரத்திற்குப் போனால், அங்கிருக்கிற கைடுகள் என்ன சொல்கிறார்களோ அதை கேட்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த கைடுகளுக்கு குறிப்பிட்ட தொகை என்று ஏதுமில்லை. வெளிநாட்டவர்களைப் பார்த்தால் அதிகமான rate கேட்கிறார்கள். கொஞ்சம் வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டுப் போனால் அதிகமான rate கேட்கிறார்கள். ஆகவே இதுபோன்று இருக்கக்கூடிய குறைகளை நீங்கள் அகற்றியாக வேண்டும். சுற்றுலாப் பயணிகளை அதிகமாக நாம் கவராமல் போவதற்கு இதுவும் ஒரு காரணம்.

அதோடு மட்டுமல்லாமல், Tourism Centre- களில் இருக்கக்கூடிய பிச்சைக்காரர்களுடைய தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது; அசிங்கமாக இருக்கிறது. 'போங்கள்' என்று சொன்னால், அவர்கள் போவது இல்லை. அங்கே இருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகளிடம் அவர்கள் சென்று, தொந்தரவு செய்வதைப் பார்க்கிறபோது, அதெல்லாம் இந்திய நாட்டினுடைய வறுமை நிலையை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறதே தவிர, இந்திய நாட்டினுடைய சுற்றுலாத் தலங்களைப் போற்றுகின்ற அளவிலே இல்லை என்பதைத் தெரிவித்து அங்கிருக்கக்கூடிய பிச்சைக்காரர்களை அகற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். நல்ல approved guide-களை நியமனம் செய்து அவர்களுக்கு நல்ல முறையிலே பயிற்சியளிக்க இந்த அரசு முயற்சி செய்யவேண்டும்.

உதாரணமாக, World Tourist Organisation என்ற ஒன்று ஸ்பெயினில் இருக்கிறது. ஸ்பெயின் நாட்டில் இருக்கக்கூடிய உலகச் சுற்றுலா வளர்ச்சி மையத்தோடு தாங்கள் தொடர்பு கொண்டு தமிழ்நாட்டிலே

இருக்கக்கூடிய மிகுந்த சுற்றுலாத் தலங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வெளிநாட்டுப் பயணிகளை அதிக அளவில் கவரக்கூடிய அளவுக்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

செங்கல்பட்டிலே அருமையான குளம் இருக்கிறது. செங்கல்பட்டு போன்று பல இடங்களில் இருக்கக்கூடிய நல்ல இடங்களைத் தேர்வு செய்து— வேறு பல மாநிலங்களில் பள்ளி மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்களுக்கு கோடைக் காலங்களில் பயிற்சி கொடுப்பதுபோன்று— சிறந்த பயிற்சிகளை அளிக்கலாம். உதாரணமாக, செங்கல்பட்டு ஏரியை எடுத்துக்கொண்டால் அங்கே Surf-riding சொல்லிக் கொடுக்கலாம், நீச்சல் சொல்லிக் கொடுக்கலாம் Boating சொல்லிக் கொடுக்கலாம். River crossing சொல்லிக் கொடுக்கலாம். இதுபோன்று பல பயிற்சிகளை அவர்களுக்கு அளிப்பதன் காரணமாக அவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெறுவதோடு கோடைக்காலங்களில், இருக்கின்ற விடுமுறையை நல்ல முறையில் கழிப்பதற்கு வசதியாக இருக்கும்.

அதுபோல காஷ்மீரை எடுத்துக்கொண்டால் Nehru Institute of Mountaineering–ல் இரண்டு வருடம் மிலிடெரியிலிருந்து பயிற்சி கொடுக்கிறார்கள். அதுபோல நம் பகுதியை எடுத்துக்கொண்டு Police Training எடுத்துக்கொள்பவர்களுக்கு Trekking கொடுக்கலாம், Mountaineering கொடுக்கலாம், Rock climbing பயிற்சியைக் கொடுக்கலாம், இப்படிப் பல பயிற்சிகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளை இந்தச் சுற்றுலா வாரியம் உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சென்னையிலே நிரந்தரமாக சுற்றுலா மையத்தை ஏற்படுத்துவதற்கு 15 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரைக்கும் அந்த 15 ஏக்கர் நிலத்தில் எந்தவிதமான முயற்சியும் இந்தச் சுற்றுலாத் துறை எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துகொள்கிறேன். ஆகவே, இதற்கு நிதி ஆதாரங்களை ஏற்பாடு செய்து அரசு கொடுத்திருக்ககூடிய இந்த 15 ஏக்கர் நிலத்திலே சிறந்த சுற்றுலா தலம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஆம் ஆண்டு இரயில்வே இலாகாவோடு தொடர்பு கொண்டு சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரை போகும் அளவுக்கு ஒரு கோச் ஏற்பாடு செய்து, சிறந்த இடங்களைப் பார்க்க வசதி செய்வதற்காக கிட்டத்தட்ட 45 இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தத்



திட்டம் பல காரணங்களால் செயல்படுத்தபடமுடியவில்லை. ஆனால், அந்த இலாகாவிடமிருந்து வர வேண்டிய பணமும் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. தகுந்த முன் அறிவிப்பு இன்றி, திட்டங்கள் போடாமல், செலவு செய்யப்பட்டதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருஞானசம்பந்தம் அவர்கள் பேராவூரணி தொகுதியில் உள்ள சுற்றுலாச் தலத்திற்கு வருகைத் தரும் பயணிகள், தங்கிச் செல்வதற்கு வசதியாக ஒரு விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள், அதையும் நான் தெரிவித்துக்கொண்டு இன்னும் பல நல்ல வசதிகளை சுற்றுலாத் துறை ஆலோசகர்களை வைத்துக்கொண்டு நீங்கள் செய்ய வேண்டும். இந்தச் சுற்றுலாத் துறை வளர்வதன் காரணமாக தமிழ்நாட்டினுடைய வருமானம் பெருகும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சுற்றுலாத் துறை என்பது வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு துறை மட்டுமல்ல, மக்களின் அறிவை கலாச்சாரத்தை, பண்பாட்டை, ஒற்றுமையை வளர்க்கக்கூடிய ஒரு துறை. அதோடு இந்தச் சுற்றுலாத் துறையின்மூலம் பல்வேறு வகைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும். பொருளாதாரப் புழக்கத்தை ஏற்படுத்த முடியும். அந்த வகையிலே நம் நாட்டில் பல்வேறு வளங்கள் இருக்கின்றன. சுற்றுலா வளங்கள் இருக்கின்றன. சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. இதைத்தான் திரு. அழகராஜா அவர்கள் அழகாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் எல்லாம் நாம் போதிய வசதிகளை ஏற்படுத்தவில்லை என்று சொன்னார்கள். நாம் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊரில் கழிப்பறை வசதி இல்லாத ஒரு அசுத்தத்தைக் காண்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்பு மகாபலிபுரம் சென்றிருந்தபோது அந்தக் கடற்கரை வெறும் குப்பையாக, அசிங்கமாக இருப்பதைக் கண்டோம். இப்படி ஒரு அசிங்கமான நிலையில் சுற்றுலா தலத்தை வைத்திருந்தால் நாம் சுற்றுலாப் பயணிகளைக் கவர முடியாது.

இரண்டாவது, இந்தியாவிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குப் போதிய வசதிகள் இல்லாத நிலை இருப்பது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். அங்கு வருபவர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மகாபலிபுரமாக இருந்தாலும், நாகூராக இருந்தாலும், வேளாங்கண்ணியாக இருந்தாலும், ஒகனேக்கல்லாக இருந்தாலும் இவை சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய இடங்களாக இருப்பதால், அங்கெல்லாம் போதிய வசதிகளை நாம் செய்து தர வேண்டும். இப்போது நாகூர், வேளாங்கண்ணி ஆகிய இடங்களுக்கு வருபவர்களுக்கு அந்தப் பகுதியில் நின்று பஸ் ஏறுவதற்கு முடியாமல், பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கிற நிலை இருக்கிறது. இதையெல்லாம் இந்த அரசு கவனத்தில் கொண்டு இந்தப் பகுதியில் மட்டுமல்லாமல் மக்கள் எங்கெங்கெல்லாம் அதிகமாகச் செல்கிறார்களோ அந்த இடங்களுக்கெல்லாம் போதிய வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகூர் மற்றும் வேளாங்கண்ணி பகுதிகளுக்கு கழிப்பறை கட்டுவதற்கு 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவிலே செயல்படுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

நாகூரும், வேளாங்கண்ணியும், இந்தியாவிலிருந்து மட்டுமல்ல உலகெங்கிலிருந்தும் யாத்திரிகர்கள் வரும் தலங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நாகூரையும் வேளாங்கண்ணியையும் தேசிய புனித தலங்களாக மத்திய அரசு அறிவிப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வருடா வருடம் பல இலட்சக்கணக்கான மக்கள் அந்தப் பகுதிக்கு வந்து செல்கின்றார்கள். ஆகவே, இன்று உலக அளவிலிருந்து யாத்திரிகர்கள் வந்து சென்று கொண்டிருக்கின்ற நாகூருக்கும், வேளாங்கண்ணிக்கும் போதுமான வசதிகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கு வசதியாக தமிழக அரசு சுற்றுலாத் துறை மூலமாக பேருந்து வசதிகளையும், சுற்றுலாத் திட்டங்களையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்பாக பஹ்ரெயின் நாட்டிலே ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. அந்தக் கண்காட்சியிலே நம்முடைய தமிழர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு "Tamil Nadu Pavilion" அதாவது "தமிழ்நாடு அரங்கை" ஏற்படுத்தினார்கள். அதற்குத் தேவையான வால்போஸ்டர்கள், சுவரொட்டிகள் எல்லாம் மாண்புமிகு செய்தி



மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் தந்து உதவினார்கள். அந்த வகையிலே எல்லாவற்றையும் கேட்கும்போது இங்கே இருக்கக்கூடிய திருத்தலங்களுடைய போட்டோக்களையும் கேட்டிருந்தார்கள். அதிலே நாகூர் போட்டோ இல்லை. வேளாங்கண்ணி போட்டோ இல்லை. இப்படி நிறைய போட்டோக்கள் இல்லை. மதுரையிலே போதுமான அளவுக்கு போட்டோ இல்லை. இந்தமாதிரி நிலையிலே அவர்கள் எல்லாம் என்ன இவ்வளவு பிரசித்தி பெற்ற நாகூர் போன்ற தலங்களினுடைய போட்டோக்களை எல்லாம் அரசு மூலமாகத் தர முடியவில்லையே என்று மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டார்கள். ஆகவே, இதுபோன்ற போட்டோக்களையெல்லாம் print அடித்து விநியோகம் செய்து மக்களைக் கவருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, முத்துப்பேட்டை லகூன் பகுதியை முன்னேற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு அதிகமாக tourist செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான தீவுகள் சின்ன சின்னதாக அழகாக அமைந்திருக்கக்கூடிய இடம் அது. அதைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து முன்னேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே நாகூர், வேளாங்கண்ணி, சிக்கல் என்று மூன்று தலங்கள் சுற்றுலாத் தலங்களாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்த இடங்களுக்கு பல இலட்சக்கணக்கான மக்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மூன்று பகுதிகளையும் இணைத்து ஒரு சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நாகூரில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு ஓட்டல் மிகவும் நஷ்டத்திலே இயங்குகிறது. அதற்குக் காரணம் கடந்த அரசு அவர்கள் விருப்பத்திற்கு தேவையான இடத்தை ஓர் ஒதுக்குப்புறமான இடத்தை வாங்கி அந்த இடத்தில் ஓட்டலைக் கட்டிவிட்டார்கள். அந்த ஓட்டல் தொடர்ந்து நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. யாரும் சென்று தங்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதை நஷ்டத்தில் இயங்காதவாறு மாற்று இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைத் தனியாருக்கு விற்று சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி அது சிறப்பாக இயங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1999 மே 4

அதுபோல, பிச்சாவரம் வனப்பகுதி அனைத்து மக்களாலும் கவரப்பட்டு மக்கள் அதிகமாக வந்து செல்லக்கூடிய பகுதியாக இருக்கிறது, அந்தப் பகுதியிலே High tide, Low tide காரணமாக சமயங்களில் தண்ணீர் குறைந்துவிடுவதால் மக்கள் எல்லாம் விருப்பமாக அங்கே செல்கின்ற நேரத்திலே படகு சவாரி செய்ய முடியாமல் ஏமாற்றத்தோடு திரும்பக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்தக் குறையைப் போக்குவதற்கு Bed அமைத்தால் வடிகின்ற நேரத்திலே கீழே இறங்காமல் இருக்கும். ஏறுகின்ற நேரத்திலே தண்ணீர் ஏறி அது இறங்காமல் இருக்கும். நானே ஆசையாக போனேன், அங்கே படகில் போக முடியவில்லை. காரணம் என்னவென்றால் தண்ணீர் குறைந்துவிட்டது. படகில் செல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இதுபோன்ற நிலைகள் எல்லாம் இல்லாதவாறு குறைந்த செலவில் அந்த bed-ஐ கட்டிவிடலாம். ஆகவே, தண்ணீர் ஏறி இறங்குகிற இடத்திலே river bed கட்டி அந்தத் தண்ணீர் இறங்காத அளவிற்கு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் நமது அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்ற பெரும்பாலான தட்டச்சு இயந்திரங்களில் என்ன அடித்து கொடுக்கிறார்கள் என்று புரியாத நிலை இருக்கிறது. அதிகாரிகள் சொல்வதை வைத்துக் கொண்டுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இரகசியமாகப் பார்த்தால் தெரியும், 'ஐ' மேலே இருக்கும் 'க' கீழே இருக்கும். ஒன்றின் மேல் ஒன்று ஜம்பாகி, ஜம்பாகி, அரசியல் கட்சிகள் மாறுவதுபோல, மாறுகின்ற நிலையிலே அந்த எழுத்துக்கள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அவற்றை கவனத்தில்கொண்டு புதிய தட்டச்சு இயந்திரங்களை, நவீன தட்டச்சு இயந்திரங்களை இந்த அரசு, துறைகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அரசு அச்சகங்களை modernisation செய்து கொடுக்க வேண்டும், நவீனமுறைக்கு ஏற்றவாறு அந்த அச்சகங்கள் இருக்க வேண்டும். அரசுத் துறைகளாலும் பல அரசு இயக்கங்களாலும் வெளியிடப்படும் ஆண்டு அறிக்கைகளை அதன்மூலமாக அச்சிட்டு வெளியிடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள P.R.O.-க்கள் மக்களிடம் சென்று அரசின் திட்டங்களைத் தெளிவாக எடுத்துவைக்க வேண்டும். எங்கே கலெக்டர் சென்றாலும் அவர் பின்னாலே சென்றுகொண்டிருக்கின்ற நிலையிலே P.R.O.-க்கள் இருந்து



1999 மே 4] [திரு. ஜி. நிஜாமுதீன்]

கொண்டிருக்கிறார்கள் மற்ற நிகழ்ச்சிகளைக் கண்டுகொள்வதே கிடையாது. ஆகவே, அரசினுடைய திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக— கலெக்டருக்கு எடுத்துச் சொல்வதற்காக அல்ல— இருக்க வேண்டும். இந்தவகையிலே அவர்கள் மக்களுடன் தொடர்புள்ளவர்களாகவும், மக்களிடையே முகாம்களை நடத்தி அரசுத் திட்டங்களை மக்களிடையே எடுத்துச் சொல்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

அரசு வெளியிடும் அனைத்து இதழ்களையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் விலைக்கு விற்பதற்கு மாவட்ட அலுவலகங்களின் வாசல்களில் ஒரு stall ஏற்படுத்த வேண்டும். அது மக்கள் சாசனமாக இருந்தாலும் சரி, சட்ட வெளியீடாக இருந்தாலும் சரி. அந்தந்த மாவட்ட அலுவலகங்களின் வாசல்களிலே ஒரு கடை இருந்தால் காசு கொடுத்து, குறைந்த விலைக்கோ அல்லது முழுமையான விலைக்கோ அதைச் சுலபமாக மக்கள் பெறுவதன் மூலம் transparency வெளிப்படையாக இருப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, செய்தி, திரைப்படத் துறையிலே முக்கியமான ஒரு பிரச்சினை. இன்று சினிமாத் துறை வளர்ந்து வருகின்ற நேரத்திலே இந்திய அளவில் சினிமா ஒரு major industry என்ற பெயரை சென்னை வாங்கிக்கொண்டிருக்கிறது. இதற்கான வசதியான கட்டமைப்பை இந்த அரசு செய்து கொடுத்துக்கொண்டிருந்தாலும், நாம் தேவையில்லாத கட்டுப்பாடுகளை விதித்து அந்தத் தொழிலைத் தடை செய்கின்ற வாய்ப்பை அமைத்துக்கொண்டிருக்கின்றோம்.

*பிற்பகல் 12-25*

குறிப்பாக இந்த விலையில்தான் டிக்கெட்டுகளை விற்க வேண்டுமென்று கூறுகிறோம். சாதாரணமாக ஐந்து கோடி ரூபாய்க்கு செலவு செய்து எடுக்கின்ற படத்திற்கும் 10 ரூபாய்தான் டிக்கெட விற்கவேண்டும். 20 கோடி, 30 கோடி என்று பெரிய தொகையைப் போட்டு எடுக்கக்கூடிய படத்திற்கும் 10 ரூபாய்தான் டிக்கெட் விற்கவேண்டுமென்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்? 5 ஸ்டார் ஓட்டல்களில் இருப்பவர்கள் 2500 ரூபாய்க்கு பில் போடுகிறார்கள், சாதாரண ஓட்டல்காரர்கள் 500 ரூபாய்க்கும் 300 ரூபாய்க்கும் பில் போடுகிறார்கள். அதுபோலத்தான் அவர்களின் நிலைமைக்குத் தக்கவாறு அவர்களே டிக்கெட் விலையை நியமித்துக்கொள்ள வேண்டும். நல்ல படங்கள் என்று வந்தால் அந்தப் படங்களின் டிக்கெட்டுகள் பிளாக்கில்

விற்கப்படுகின்றன. அந்தப் பணம் தயாரிப்பவர்களுக்கும் செல்லாமல், சினிமாக்காரர்களுக்கும் செல்லாமல் யாரோ இடையில் உள்ள தரகர்கள் அல்லது ரோட்டில் இருக்கிறவர்கள் பிளாக்கில் விற்று அந்தப் பணத்தை எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கே அந்த டிக்கெட்டின் விலையை நிர்ணயித்துக்கொள்ளக்கூடிய அந்த உரிமையை வழங்கினால் அதன் மூலம் அரசுக்கு வரக்கூடிய வரியும், வருவாயும் கூடும். இந்த நிலையில் தேவையில்லாத கட்டணங்களை நாம் வைப்பதால்தான் பல சிக்கல்களுக்கு ஆளாக வேண்டிய நிலை இருக்கிறது.

பாலுக்கான விலையை இறக்கவும் முடியாமல், ஏற்றவும் முடியாமல் இருக்கின்ற நிலைமையைப் போன்று உள்ளது. ஆகவே, கட்டுப்பாடாக வைக்கவேண்டிய உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. சரவணபவனில் 18, 20 ரூபாய்க்கு விற்கின்ற தயிர் சாதம் மற்ற ஓட்டல்களில் 3 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆகவே தேவையில்லாத Control-களை விடுத்து, வியாபாரிகளும், தொழில்களும் முன்னேறுவதற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும்.

'டைட்டானிக்' என்ற படம் வந்தது. 10 ரூபாய் டிக்கெட்டை 300 ரூபாய்க்கு விற்றார்கள். 290 ரூபாய் அந்தத் தயாரிப்பாளருக்கும் வரவில்லை, அந்தத் தியேட்டர்காரர்களுக்கும் செல்லவில்லை, அரசுக்கும் வரவில்லை. இதுபோன்ற Control எல்லாம் ஏன்? நாம் தொழில்களை வளர்ப்பதற்குண்டான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அதிகமான தொகையைப் போட்டு படம் எடுக்கும்போது நம் மாநிலத்தில் இருப்பவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, பெரிய பெரிய படங்களை எடுப்பதற்கு ஊக்குவிக்கவேண்டும். அந்தத் தொழில் வளர்வதற்கும், அந்தத் துறையில் உள்ளவர்கள் வளர்வதற்கும், தேவையில்லாமல் மூன்றாம் நபர் வளர்வதைத் தடுப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: துணைத் தலைவர் அவர்களே, பெரிய படங்களுக்கு, அதிகச் செலவு செய்து எடுக்கப்பட்ட படங்களுக்கு ஒரு கட்டணம், குறைந்த செலவு செய்து எடுக்கப்பட்ட படங்களுக்கு ஒரு கட்டணம் என்று விதிப்பதுதான் கட்டுப்பாடு. அந்தக் கட்டுப்பாடு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அவர்கள் தயாரிக்கின்ற படங்களுக்கு அவர்களே விலையை நிர்ணயித்துக்கொள்ளக்கூடிய அந்த உரிமையை அவர்களுக்குத்



தரவேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். நாம் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. நாம் ஓர் ஓட்டலைக் கட்டுகிறோம் என்றால் 2000 ரூபாய்க்கு வாடகைக்கு விடுகிறோம். அவர் ஒரு சிறிய ஓட்டலைக் கட்டுகிறார் என்றால், அவர் 50 ரூபாய்க்கு வாடகைக்கு விடுகிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது மக்கள் தருகின்ற கட்டணம் எவ்வளவாக இருக்க வேண்டும்? அதை யார் நிர்ணயிப்பது? டிக்கெட் வாங்குகிறார்களே, படம் பார்க்க டிக்கெட் வாங்குகிறார்களே, அவர்களுக்கு விதிக்கப்படுகின்ற டிக்கெட் கட்டணத்தை யார் விதிப்பது என்று கேட்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நாம் ஒரு பொருளைத் தயார் செய்து விற்கிறோம் என்றால், உதாரணத்திற்கு நாற்காலி செய்து விற்கிறோம் என்றால், இவ்வளவு விலைக்கு அதாவது உதாரணமாக 50 ரூபாய்க்கு விற்கவேண்டுமென்று மார்கெட் சந்தையில் நிறுத்துகிறோம். அவர்கள் 50 ரூபாய்க்கு பிடித்தால் 50 ரூபாய்க்கு வாங்குவார்கள், 20 ரூபாய்க்கு பிடித்தால் 20 ரூபாய்க்கு வாங்குவார்கள். அது அவர்களைப் பொறுத்தது. அந்தப் படத்திற்குள்ள தரத்திற்குத் தக்கவாறு அவரவர்களே விலையை நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய உரிமையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கவேண்டுமென்றுதான் நான் கோருகின்றேன். உங்களுடைய துறை இது. நீங்கள் வளர்த்த துறை இது. ஆகவே அந்தத் துறை வளரவேண்டுமென்று சொன்னால், —சரவண பவனில் ஏன் 18 ரூபாய்க்கு தயிர்சாதம் விற்கிறது என்று யாரும் கேட்கமுடியாது. அதிலே போதுமான அளவுக்கு முறையான பொருட்களை அவர்கள் இடுகின்றார்கள். (குறுக்கீடு)

**டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்திலே திரையரங்கு உரிமையாளர்களே எந்த அளவுக்கு வேண்டுமானாலும் ஒரு சீலிங் இல்லாமல் கட்டணம் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதற்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அதற்கு ஓர் உச்சவரம்பு, அதாவது ஒரு குறிப்பிட்ட கால அளவிலே 75 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதம் நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று இந்த அரசு வரையறுத்தது. அப்படிப்பட்ட வரையறைதான் மக்களை பல செலவினங்களிலிருந்து காப்பாற்றக்கூடியது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்புகிறாரா என்பதுதான் முதலமைச்சர் அவர்களுடைய கேள்வி. ஆகவே இந்த மாநில அரசு செய்திருக்கின்ற சீர்திருத்தத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** உணவுப் பொருட்களில் கடைபிடிக்க முடியாத Control-ஐ, கல்வியிலே கடைபிடிக்க முடியாத Control-ஐ entertainment-லே கடைபிடிக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அடிப்படை வாழ்வுக்கு தேவையானது மருத்துவம். அதிலேயே Control இல்லை.

இந்த Clinic லே இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற நிலை இல்லை. அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். கல்வியிலே B.E.-க்கு 25 ஆயிரம், 50 ஆயிரம் என்று College-க்கு தக்கவாறு அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அடிப்படை வசதியான, கல்வியிலே, சாப்பாட்டிலே Control இல்லாதபோது, entertainment என்பது பொழுதுபோக்கு, அவனுக்கு பணம் இருந்தால் போகிறான், இல்லையென்றால் போகாமல் இருக்கப்போகிறான். ஏன் அதில் போய் Control செய்யவேண்டும்? entertainment-ஐ வளர்த்தால்தான் ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் வளரும். என் பாக்கெட்டில் உள்ள காசு, வெளியே அடுத்தவனிடம் போய்ச் சேரும். இதைப் போய் இறுக்கி இறுக்கி பிடித்து வைத்திருந்தால் பொருளாதாரத்தில் கணக்கம்தான் ஏற்படும். ஆகவே மக்களை தாராளமாகச் செலவு செய்ய அனுமதிக்க வேண்டும். அப்படித்தான் பல மேல்நாட்டுப் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது என்பதை இந்த அரசு புரிந்து செயல்பட வேண்டும். பழைய புராணங்களையே புரட்டி, புரட்டி, இப்படித்தான் இருக்கவேண்டும், கட்டுப்பாடாக இருக்க வேண்டும், சிக்கனமாக இருக்கவேண்டும் என்றால் நாடு வீணாகப் போய்விடும். ஆகவே, இதை தாராளமாக ஆக்குவதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நிறைய பேருக்கு, பெரிய பெரிய தலைவர்களுக்கு எல்லாம் மணிமண்டபம் கட்டப்படும் என்று list -ல் இருப்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிற நேரத்திலே, இந்தப் பட்டியலில் காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் வேண்டுமென்ற ஆதங்கம் இருக்கிறது. அதை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும். அதை விரைவிலே செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-30*

அதேபோன்று நாகையிலே ஒரு பொருட்காட்சியை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திப்புசுல்தான் 200- வது ஆண்டு விழா கர்நாடகாவிலே நடத்தப்பட இருக்கிறது. அந்த விழாவிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைக்கப்படுவார்கள். அதிலே கலந்து கொள்வார்கள் என்ற பத்திரிகைச் செய்தியை நான் பார்த்தேன். திப்புசுல்தான் தமிழகத்தில் பல்வேறு கோயில்களுக்கும், பல்வேறு நிறுவனங்களுக்கும் மானியங்களை வழங்கிச் சென்றிருக்கிறார். ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு மத நல்லிணக்க ஆண்டாகக் கொண்டாடப் படுகின்ற இந்த ஆண்டிலே திப்புசுல்தான் 200-வது ஆண்டு விழாவை தமிழக அரசும் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அது மிகவும் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. எனவே, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் குடும்பநல உதவித் தொகையை 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்த வேண்டும். இப்போது 40 ஆயிரம் ரூபாய் என்பது இடைப்பட்டதாக இருக்கிறது. எனவே, குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைவாணர் அரங்கிலே 3 நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோது அங்கே சாப்பிடுவதற்கு Dining Hall இல்லை. ஆகவே, சாப்பிடுவதற்கான Dining Hall கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, எழுதுபொருள் அச்சுத் துறையிலே தட்டச்சு கம்மியர் பதவியில் மொத்தம் 10 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட நாட்களாக பதவி உயர்வே இல்லை. சம்பள உயர்வும் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும். அவர்கள் ஒவ்வோர் அலுவலகத்திற்கும் machine-களைப் பழுதுபார்க்கச் செல்லும்போது அவர்களுக்கு 25 ரூபாய் பயணப்படி வழங்கப்படுகிறது. அது போதாது ஆகவே, அவர்களுக்கு இலவச பஸ் பாஸோ அல்லது பயணப்படியை உயர்த்தியோ வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

[1999 மே 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

***திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தித் துறையின் மூலமாக மதுவிலக்குப் பிரச்சாரம் குறித்த திரைப்படங்களை, அதேபோல குடும்பக் கட்டுப்பாடு மற்றும் சாதி சமய வேறுபாடுகளைப் போக்குகின்ற வகையிலே திரைப்படங்களை எடுத்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தரங்கம்பாடியில் இருந்த சீடன்பால் என்பவர்தான் அச்சுத் துறைக்குப் புத்துயிர் தந்தார். எனவே, அவருக்கு மணிமண்டபம் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோள் வைக்கிறேன்.

அடுத்து, நம்முடைய பூம்புகாரில் சுற்றுலாத் துறையின் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் பல்வேறு சபைகளைக் கட்டித் தந்திருக்கிறார்கள். 30 இலட்சம் ரூபாய் செலவில் பேருந்து நிலையமும், 8 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பறை வசதியும், 5 இலட்சம் ரூபாய் செலவில் சிறுவர் பூங்கா, சுற்றுச் சுவர் அமைப்பதற்கும் ஆவன செய்திருக்கிறார்கள். மேலும் இந்த ஆண்டு சுற்றுச் சுவர் அமைப்பதற்காக 5 இலட்ச ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். தரங்கம்பாடியிலே வரவேற்பு மையம் அமைப்பதற்காக 29 இலட்ச ரூபாயில் 4 அறைகள் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்காக ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தில்லையாடி வள்ளியம்மை பெயரிலே உருவாக்கப்பட்ட நினைவு மண்டபம் அன்றைக்கு மாண்புமிகு கலைஞர் அவர்களால்தான் உருவாக்கப்பட்டது. அவர்கள்தான் அங்கே நாகப்பன் நாராயணச்சந்திரன் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தந்தார்கள். அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1999 மே 4] [திரு. கோ. மோகனதாசன்]

அடுத்து என்னுடைய தொகுதியில், என்னுடைய பகுதியில் இருக்கின்ற பிரச்சினையைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் இதைத் தெரிவிக்கின்றேன். எங்கள் பகுதியில் இருக்கின்ற வைதீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆத்தாள்புரம் ஆகிய 3 ஊர்களில் துணை மின் நிலையங்களை 110 கிலோ வோல்ட் கொண்டதாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை அமைத்துத் தந்தால் தரங்கம்பாடி, சீர்காழி ஆகிய பகுதிகளிலே மின் அழுத்தக் குறைவு இல்லாமல் சிறப்பாக இயங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற 5 காவல் நிலையங்களில் 4 காவல் நிலையங்களுக்குக் கட்டடங்களை முழுமையாகக் கட்டிக் கொடுத்துவிட்டார்கள். திருவெண்காட்டிலே உள்ள காவல் நிலையத்திற்கு இடவசதி எல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிலே காவல் நிலையத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடியில் சுற்றுலாத் துறையின் மூலமாக சரணாலயம் அனுமதிக்கப்பட்டிருப்பதால் அங்கே கடலோரமாக இருக்கின்ற டேனிஷ் கோட்டையைப் பாதுகாக்கின்ற வகையில் தடுப்புச் சுவர் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே 56 இலட்சம் ரூபாய் செலவில் கருங்கல் போட்டு தடுப்புச் சுவர் அமைக்கப்படுகிறது. அதனால் இன்னும் பக்கத்திலே, வடக்குப் பக்கத்திலே 200 மீட்டரும், தெற்குப் பக்கத்திலே 100 மீட்டரும் தடுப்புச் சுவர் போடப்படுமானால், ஏராளவிற்கு அந்தப் பகுதியைக் காப்பாற்ற முடியும். எனவே, அதை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

சீர்காழி தாலூகாவையும், தரங்கம்பாடி தாலுகாவையும் இணைக்கின்ற வகையில், என்னுடைய தொகுதியில் இராசாங்குளத்தையும், மேலையூரையும் இணைக்கின்ற இடத்திலே- காவிரி ஆற்றிலே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நன்னிலம் தொகுதியையும், பூம்புகார் தொகுதியையும் இணைக்கின்ற விளாகம் படுகை என்ற இடத்திலே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியிலே

இருக்கின்ற, பூம்புகார் தொகுதியிலே இருக்கின்ற சாலைகளெல்லாம் மிகவும் மோசமாக இருக்கின்றன. கல்லணையிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் செல்கின்ற சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதை நபார்டு திட்டத்தின் மூலமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால், அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வடகரை என்ற ஊரிலே செல்கின்ற சாலையும் மிகவும் மோசமாக இருக்கிறது. அதையும் சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு தந்த வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேரகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சினிமாப் படங்களைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த சில வருடங்களாகவே ஆபாச சினிமா போஸ்டர்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய பல சுவர்களிலே பளிச்சென்று மின்னிக்கொண்டிருப்பது, நம்முடைய நெஞ்சை நெருடக்கூடிய காட்சியாக இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆபாச சினிமாக்கள், போஸ்டர்கள் போன்றவையெல்லாம் இப்போதும் இருக்கின்றன. ஆனால் நம்முடைய காவல் துறையின் கண்கள் கட்டப்பட்டிருக்கின்றனவோ என்ற அச்சம்கூட எனக்கு இருக்கிறது. ஏனென்று சொன்னால், அப்படி போஸ்டர்கள் ஒட்டுகிறவர்களின் மீது, உடனடியாக தகுந்த சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குகளைப் பதிவு செய்து, அதைத் நடைமுறை செய்திருப்பார்களேயானால், இதுபோன்ற ஆபாச போஸ்டர்கள் ஆங்காங்கே சுவர்களிலே மிளிரக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். ஆனால், காவல் துறை அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், முன்பெல்லாம் பிட் ரோல் என்று மற்ற படங்களினூடே இதுபோன்ற ப்ளூஃபிலிம்களையும் இணைத்து ஓட்டிக்கொண்டிருந்த காலமெல்லாம் போய், இப்போது ப்ளூஃபிலிம்களைத் தைரியமாகச் சில தியேட்டர்களிலே ஓட்டக்கூடிய ஒரு நிலைமை வந்திருக்கிறது. அது, புறநகர்ப் பகுதிகளிலேதான் முன்பு இருந்தது என்று சொன்னால், இப்போது நகரத்திலே இருக்கக்கூடிய,



மாநகராட்சியிலே இருக்கக்கூடிய சில தியேட்டர்களிலேகூட அதுபோன்ற சினிமாக்கள் ஓட்டப்படுவது, நமக்கெல்லாம் உண்மையிலேயே மிகமிக வருத்தத்தைத் தரத் தக்கதொரு செய்தியாகும். ஆகவே, இந்த அரசு இதுபோன்ற ஆபாச சினிமாக் காட்சிகளைக் காட்டக்கூடிய திரையரங்குகளுக்கு உடனடியாக சீல் வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, வன்முறைக் காட்சிகளும்...

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அரசைப் பொறுத்தவரையில் என்றைக்கும் காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டதில்லை; சுதந்திரமாகச் செயல்படுகின்ற ஒன்று. ஆபாசத் திரைப்படங்களாக இருந்தாலும், அளவுக்கு மீறிய கட்டணம் வசூலிப்பதாக இருந்தாலூம், அதேபோல, திருட்டு வீ.சி.டி. ஓட்டுவதாக இருந்தாலும், அத்தனை பேர்மீதும் காவல் துறையினர் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக, சென்னை மாநகர் காவல் துறையைப் பொறுத்தவரையில், 13 காம்பேக்ட் டிஸ்க்குகளும், 3 வீடியோ கேசட்டுகளும், அதேபோல மூன்று நீலப் படங்களும் கடந்த மாதம் பிடிக்கப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 13 வழக்குகள் இப்போது வழக்குமன்றத்திலே இருக்கின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13 வழக்குகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. ஆனால், அன்றாடம், 13 அல்ல, 100 வழக்குகளைப் போடலாம். அந்த அளவுக்கு ஆங்காங்கே நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக சில தியேட்டர்களின் பெயரைச் சொல்லச் சொன்னால்கூட, நான் இங்கே சொல்லத் தயாராக இருக்கிறேன். இங்கே கணபதிராம் என்கின்ற ஒரு தியேட்டர், கெயிட்டி, அதேபோல ஜோதி, மோட்சம் போன்ற தியேட்டர்களில் அன்றாடம் இதுபோன்ற காட்சிகளைக் காட்டிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே நிலைமைகள் மோசமாக இருந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காட்சிகளைக் காட்டிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டீர்களா? கண்டீர்களா?

பிற்பகல் 12-40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம் நான் காட்சிகளைக் காணவில்லை, கேள்விதான் பட்டிருக்கிறேன். கேள்விப்பட்டே நான் இந்த அளவுக்கு வேதனைப்படுகின்றேன். சில பேர் அந்தக் காட்சிகளைக் காணுகின்றவர்கள் வேண்டுமானால் இன்பமடையலாம். ஆனால் இளைய சமுதாயம், பெண்டிர் மாணவர்கள் எல்லாம் கெட்டுப் போகக்கூடிய நிலைமைகள் இருக்கிற காரணத்தினாலே கடுமையான நடவடிக்கைகளை இதுபோன்ற தியேட்டர்களின்மீது எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, ஆபாசக் காட்சிகளையும், வன்முறைக் காட்சிகளையும் சினிமாவில் காட்டாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் எடுத்தால்தான் எதிர்கால சமுதாயத்தை ஓர் அமைதியான சமுதாயமாக நம்மால் உருவாக்க முடியும். எங்களுடைய மாவட்டத்திலேகூட ஆக்ஸீலியம் கல்லூரி என்று ஒரு கிறித்துவ ஸ்தாபனம் நடத்தக்கூடிய ஒரு கல்லூரி இருக்கிறது. அந்த இடத்திலே அவர்கள் ஓர் அருமையான அமைப்பை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆபாச சினிமா, வன்முறைக் காட்சிகள் இவற்றையெல்லாம் எதிர்ப்பதற்காக அவர்கள் மனித மாண்பு மேம்பாட்டு இயக்கம் என்ற ஒன்றை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அதுபோன்ற மனித மாண்பு மேம்பாடடு இயக்கத்தினுடைய பிரிவுகளை எல்லாக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தொடங்கி நல்ல கருத்துகளை இளைஞர் சமுதாயத்தினிடையே உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றுலாவைப் பொறுத்த அளவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். Tourism Development Corporation— மூலம் நடத்தப் படுகின்ற ஓட்டல்கள் மிக மோசமான நிலையில் பராமரிக்கப்படுகின்ற காரணத்தால் மிகக் குறைந்த சதவீதத்தினர்தான் உள்ளே வந்து தங்குகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் வெளி ஓட்டல்களுக்குச் சென்றுவிடுகிறார்கள் என்ற ஒரு நிலையை அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். C. & A.G. Report-ல்கூட அதனுடைய நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துச்



சொல்லியிருக்கிறார்கள். அதிலே Man-Power Cost-ஐ எடுத்துக் கொண்டாலும்கூட 28% to 32% Man-Power Cost இருக்கிறது. 10% தான் இருக்க வேண்டும். ஆனால் Man-Power Cost நம்முடைய Tourism Development Corporation-ல் 28% முதல் 32% வரை இருந்தாலும்கூட அதனுடைய தரம் சரியானதாக இல்லை. Service சரியானதாக இல்லை. உணவுப் பொருட்கள் வழங்குவதைப் பார்த்தால் நாம் அந்த இடத்திலேபோய் சாப்பிடக்கூடிய எண்ணமே வராது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்து கொண்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்து தரமுள்ள ஒரு சுற்றுலா மையமாக, மற்ற இடங்களில் இருப்பதைப்போல இந்த மோட்டல்களையும் நீங்கள் மாற்றவேண்டும். இந்த 'மோட்டல்கள்' ஊட்டி, கொடைக்கானல், கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலேயும், இராணிப்பேட்டையிலே மரகதம் என்ற பெயரிலும் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் தரமுள்ளவையாக இல்லை. மற்ற பகுதிகளிலே இப்போது Star Hotel எல்லாம் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு இணையான அளவுக்கு இதனுடைய தரத்தை உயர்த்தினால்தான் இங்கே மக்கள் வந்து தங்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதை உங்களுக்குப் பணிவன்போடு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றுலாத் துறை என்று வருகிறபோது மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் பல இடங்களுக்குச் சென்று தொழில் முனைவர்களைச் சந்தித்து தங்களுடைய மாநிலத்திற்கு வாருங்கள் நாங்கள் உங்களுக்கு மின்சாரத்திலே சலுகை தருகிறோம், வரியிலே சலுகை தருகிறோம் என்றெல்லாம் அழைப்பை விடுத்து அவர்கள் அந்த சுற்றுலா மையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரும் மற்ற மாநிலங்களுக்கோ, வெளிநாடுகளுக்கோ சென்று N.R.I. போன்றவர்களை எல்லாம் சந்தித்துப் பேசி, தமிழகத்திலே சுற்றுலா மையங்களை எப்படி எல்லாம் விரிவாக்கம் செய்யமுடியும், எப்படியெல்லாம் தரமுயர்த்தமுடியும் என்பதைப்பற்றி எல்லாம் நீங்கள் ஓர் ஆய்வு செய்ய வேண்டும். முடிந்தால் சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட கொஞ்சம் பேரை உங்களோடு குழுவாக அழைத்துச் சென்று ஆலோசனைகளைப் பெற்று வந்தாலும்கூட தமிழகத்திற்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்கிற கருத்தையும் நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக நம்முடைய திரு. அழகராஜா அவர்கள்கூட இதுபற்றிக் கூறியிருப்பார் என்று கருதுகிறேன். மகாராஷ்டிரத்திலே அவர்கள் ஒரு மாவட்டததையே

சுற்றுலா மாவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் அதுபோன்று நம்முடைய நீலகிரி மாவட்டத்தைச் சுற்றுலா மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியிலே ஒருசில பகுதிகளை மட்டும்தான் நாம் வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் சென்றிருக்கிறோம். அதிலே பல பகுதிகள் இன்னும் மக்கள் செல்லமுடியாத் அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அதையும் நீங்கள் வளர்ச்சிப் பாதையிலே அழைத்துச் செல்லக்கூடிய அளவுக்கு நீலகிரியை சுற்றுலா மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே பல முயற்சிகளைச் செய்து அதை தரமுள்ள சுற்றுலாமையமாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதுகூட ஊட்டியில் Flower Show வருகிற 22, 23 ஆம் தேதிகளில் நடக்கவிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்தெல்லாம்கூட மலர்கள் நிறைய அங்கே வரப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த Sims Park என்பது நம்முடைய அருமை நண்பர் கொறடா ஊருக்குப் பக்கத்திலே இருக்கக்கூடியது. அதில் முன்பிருந்த ஒரு பொலிவு இப்போது இல்லை. அதிலே நீங்கள் கொஞ்சம் அதிகமாக ரோஸ் செடிகளை எல்லாம் வைக்க கொஞ்சம் அதிகமான பணத்தை முதலீடு செய்து வனப்புமிக்க ஒரு Garden ஆக Sims Park-ஐ நீங்கள் மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் வேலூர் மாவட்டம். கொஞ்சம் வறண்ட மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. எங்களுக்கு பொழுதுபோக்கு எதுவுமே இல்லாத ஓர் இடமாக அது இருக்கிறது. அங்கே கோட்டை இருக்கிறது. (குறுக்கீடு) ஜவ்வாது மலை இருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு ஞாபகப்படுத்துகிறார்கள். ஜவ்வாது மலை அதுபோல ஏலகிரி மலை, அமிர்தி என்கிற காடு இருக்கிறது. எங்களுடைய வேலூரை ஒட்டியிருக்கக் கூடிய பாலமதி, செங்கானத்தம் என்ற மலைகளை நீங்கள் சுற்றுலாமையமாக மாற்றி அந்த இடத்தை, வளமுள்ள மாவட்டமாக மாற்ற வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசியாவிலேயே மிகப்பெரிய டெலஸ்கோப் காவலூரிலே இருக்கிறது. ஆலங்காயம் பக்கத்தில் இருக்கக்கூடிய காவலூரில் இருக்கிறது. அதை நீங்கள் சுற்றுலா மையமாக அறிவித்து அங்கே சில ஏற்பாடுகளைச் செய்வீர்கள் என்று சொன்னால் ஆசியாவின் பல பகுதிகளிலிருந்து அந்த டெலஸ்கோப்பைப் பார்ப்பதற்கு நிறையபேர் வருவார்கள்.



இப்போதுகூட நீங்கள் சரணாலயத்திற்குப் 'போனால்கூட, யானைகளை அங்கே பார்க்க முடியாது. ஆனால், அங்கே காவலூரை ஒட்டியிருக்கக் கூடிய மந்தாரக்குட்டை, மலைரெட்டியூர் போன்ற பகுதிகளிலே 12 யானைகள் இன்னும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள், அவை ஆந்திராவிற்குப் போய்விட்டன என்று சொன்னாலும்கூட இன்னும் அவை ஏனோ ஆந்திராவிற்குப் போகாமல் அந்தப் பகுதியிலேயே சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, சரணாலயத்திற்குப் போகாமலேயே அங்கே யானைகளைப் பார்க்கக்கூடிய அளவுக்கு மிக அதிகமாக வனப்பு இருக்கிற காரணத்தினால், ஜவ்வாது மலைப் பகுதியை, பொதுவாக காவலூர் பகுதியை நீங்கள் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஏலகிரி மலையைச் சுற்றுலா மையமாக அறிவித்து இருந்தாலும்கூட, அதற்கான அடிப்படை வசதிகளை இன்னும் நாம் செய்யாமல் இருக்கின்றோம். அங்கே Boating Club என்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். நேற்றுகூட அந்த Boating Club-க்கு வந்தவர்கள் சுமார் 50 பேரை அங்கே இருக்கக்கூடியவர்கள் அரசு அந்த Boat club-ஐ நடத்தவில்லை; அங்கே படகு விடக்கூடிய நிகழ்ச்சியைத் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிற காரணத்தினால், அந்தக் குத்தகைதாரர்கள், எல்லாம் சுற்றுலாவுக்குப் போனவர்கள் 50 பேரை—அடித்து, சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் 4 பேரும், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் 10 பேரும் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மிகவும் சீரியஸாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். சுற்றுலா மையத்திற்குப் போகக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். அப்படி அடிபட்டவர்கள் பெங்களூரைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்கிறார்கள். இப்படி மற்ற மாநிலங்களிலிருந்து ஏதாவது நிகழ்ச்சிகளுக்கு வரக்கூடியவர்கள், அடிபட்டுப் போவார்கள் என்று சொன்னால், பிறகு அந்த ஏலகிரி மலைக்கே போகக்கூடாது; அது அடிபடக்கூடிய ஒரு இடம் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை வந்துவிடும். ஆகவே, அதுபோன்ற சுற்றுலா மையங்களிலே பாதுகாப்பையும் உருவாக்கித் தரவேண்டும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தப் படகு விடக்கூடிய நிகழ்ச்சியை தனியாருக்குக் கொடுப்பதை ஒதுக்கி வைத்துவிட்டு, சுற்றுலாத் துறையே அதை நடத்தலாம். அதேபோல், அங்கே இரண்டே இரண்டு Cottages மட்டும் இருக்கின்றன. அதை ஏலகிரி மலையில் விரிவுபடுத்தினால் நலமாக இருக்குமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வேலூரைக்கூட, ஒரு மையமாக அறிவித்து, அங்கே ஓர் அலுவலகம் வைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கூட முன்பே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். ஏனென்றால், மகாபலிபுரத்திலிருந்துதான் சுற்றுலாத் துறை அலுவலரே வரவேண்டும்; ஆனால், அந்த அலுவலர் (குறுக்கீடு) மன்னிக்கவும், மாமல்லபுரம்; தமிழிலே முறைப்படி சொல்ல வேண்டுமானால், மாமல்லபுரத்திலிருந்து வரக்கூடிய அந்த அலுவலர் வருடத்திற்கு ஒருமுறைகூட வருவதில்லை. ஆகவே, எதையெதை சுற்றுலா மையமாக மாற்றலாம் என்றுகூட அவராலே கருத்துக் கணிப்பு செய்யமுடியாது. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தின் தலைநகரில், மாமல்லபுரத்தில் இருக்கக்கூடிய அலுவலரையோ அல்லது வேறு அலுவலரையோ நிரந்தரமாக அந்த இடத்திலே போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜலகண்டேஸ்வரர் ஆலயம், பக்கத்திலே இருக்கக்கூடிய திருப்பதி, திருத்தணி, திருவண்ணாமலை போன்ற இடங்களிலே பல ஆலயங்கள் சூழ்ந்து இருக்கக்கூடிய ஒரு மாவட்டமாக எங்களுடைய மாவட்டம் இருக்கிற காரணத்தினால், சுற்றுலாத் துறையின் மூலமாக 5 அல்லது 10 பேருந்துகள் அந்த இடத்திலே இருந்து தினந்தோறும் நீங்கள் Operate செய்யலாம். தினந்தோறும் பேருந்துகளை ஓட்டக்கூடிய அளவுக்குச் செய்யலாம். பல மாநிலங்களிலிருந்து C.M.C.-க்கு வரக்கூடிய வெளி மாநிலத்துக்காரர்கள் எல்லாம் அடிக்கடி அந்த இடத்திலிருந்து சென்று கொண்டிருக்கிறார்கள். புண்ணியஸ்தலங்களுக்கு அவர்கள் போக வேண்டுமென்றால், டாக்ஸிகாரர்களிடம் மாட்டிக் கொண்டு படாத அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக நீங்கள் பேருந்துகளை சுற்றுலாத் துறை மூலமாக இயக்குவீர்கள் என்று சொன்னால், அந்த இடத்திலே நல்ல வரவேற்பு இருக்கும். ஆகவே, எங்கள் மாவட்டத்தில் ஒரு சுற்றுலா அலுவலகத்தைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலூர் கோட்டையிலே படகு விடக்கூடிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல், ஓட்டேரி என்கிற நிரந்தரமாக எப்போதும் தண்ணீர் இருக்கக்கூடிய ஏரி எங்களுடைய பகுதியிலே இருக்கிறது; அந்த ஓட்டேரியிலும் நீங்கள் படகு விட்டு, அந்த இடத்திலே இதுபோன்ற ஒரு மகிழ்ச்சியடையக்கூடிய அளவில் பல திட்டங்களை இந்த அரசு சுற்றுலாத் துறையின் மூலம் கொண்டுவந்தால், எங்களுடைய மாவட்டத்து மக்கள் மட்டும் அல்ல, மற்ற மாநிலங்களிலிருப்பவர்களையும் இந்த இடத்திற்கு ஈர்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல், அச்சுத் துறையை எடுத்துக்கொள்வோம் என்று சான்னால், நம்முடைய Government Press-இல் (மணியடிக்கப்பெற்றது) ணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் சில கோரிக்கைகளை வத்திருக்கிறார்கள். மற்ற அலுவலகங்களில் 7 நாட்கள் என்றால், 5 ாட்கள் பணியாற்றினால் போதும்; இரண்டு நாட்கள் விடுமுறை. ஆனால், அச்சுத் துறையிலே இருக்கிறவர்களுக்கு அதுபோன்ற விடுமுறை இல்லாமல், அவர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். ஒருநாள் ான் விடுமுறை என்று இருக்கிறது. அவர்களும் வாரம் 5 நாட்கள் ணியாற்றினால் போதும்; 2 நாட்கள் விடுமுறை விட வேண்டுமென்று ான் கேட்டுக்கொள்கிறேன். மஹாவீர் ஜெயந்தி நாளை விடுமுறை ாளாக அறிவிக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். தனி ஊதியம் 5 சதவிகிதம் ஒரு சிலருக்கு மட்டுமே கொடுப்பதாகவும், மற்றவர்களுக்கு கொடுக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த Government Press இல் இருக்கிறவர்களுக்கு தனி ஊதியத்தை, எல்லோருக்கும் சரிசமமாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் வேலூர் தலைநகரத்தில் இருக்கக்கூடிய அண்ணா கலையரங்கத்தில் இருக்கக்கூடிய chair-களிலே பல chair-களுக்கு கால்களே இல்லை. உடைந்துபோய் இருக்கின்றன. அதைப் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த அண்ணா கலையரங்கத்தை இடித்துவிட்டுக்கூட, அங்கே பல அடுக்கு மாடிக் கட்டடமாகக் கட்டி, வாடகைக்கு விட்டால், அதிலே நிறைய வருவாய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள், 2, 3 கோடி ரூபாயை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பெற்று, ஒரு பெரிய பல்லடுக்கு மாடியை அந்த இடத்திலே கட்டி, அண்ணா கலையரங்கத்தைக் கீழே அமைத்துத் தந்தால், எங்களுக்கு நலமாக இருக்கும்.

அதேபோல், சங்கீத சபா. ஏனென்றால், எங்களுக்கு வேலூரிலே, இசையை வளர்ப்பதற்கோ அல்லது நாடகங்களை வளர்ப்பதற்கோ ஒரு புது அரங்கம் கிடையாது. சங்கீத சபா என்ற ஒன்று இருக்கிறது. அந்த சங்கீத சபாவை சில பேர் முறைகேடான வகையில் பராமரித்த காரணத்தால், பிறகு அது சாராயக் கிடங்காக மாறி, இப்போது மூடப்பட்ட நிலையிலே அது இருந்து கொண்டிருக்கிறது. அந்தச் சங்கீத

சபாவை எங்களுடைய வேலூரிலே—அரசாங்கம் ஒதுக்கித் தந்த இடம்; அதற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்தான் Ex-officio Chairman; இருந்தாலும்கூட, அது நடைபெறாமல் இருந்து கொண்டு இருப்பதை இந்த அரசுக்குத் தெரிவித்து, சங்கீத சபாவை உடனடியாக நீங்கள் எங்களுடைய வேலூரிலே—அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

அதேபோல, சுற்றுலாத் துறையில் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை முறை மணியடிப்பது?

**திரு. சி. ஞானசேகரன்:** மணியடித்துவிட்ட காரணத்தால் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான்காவது முறையாக மானியக் கோரிக்கைகளுக்குப் பதில் கூற வாய்ப்பு வழங்கிய, இந்திய அரசியல் வானில் தங்கள் வீரத்தையும், கழகத்தின் தீரத்தையும் எடுத்துக்காட்டிய எங்கள் அரசியல் ஞானி தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி எனது உரையை இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே சுற்றுலாத் துறையின் சார்பாக அரிய பெரும் கருத்துகளையும் அதை எப்படி, எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதுபோன்று வெட்டுத் தீர்மானங்களையும் தந்து இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற இந்தத் துறை கடமைப்பட்டிருந்தாலும்கூட, பல பணிகளை நிதி ஆதாரத்தைப் பொறுத்து நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கிறது. வருடந்தோறும் சுற்றுலா இடங்களை மேன்மைப்படுத்தக்கூடிய அளவிற்கு, சுற்றுலாத் துறை அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய அளவிற்கு மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இயங்கிக்கொண்டிருப்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் பேசுகின்றபோது இங்கு பொழுதுபோக்கை உருவாக்குகின்ற அளவிற்கு ஒரு Disney Land உருவாக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இன்றைக்கு டாக்டர் கலைஞர் அரசைப் பொறுத்தமட்டில் தனியார்கள் யாராக இருந்தாலும் அதற்கு முன்வருவதாக இருந்தால், அனைத்து உதவிகளையும், மானியங்களையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, தனியார்களை ஊக்குவிக்கக்கூடிய விதத்திலே சுற்றுலாத் துறை விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு தமிழ்மணி அவர்கள் மாமல்லபுரத்தின் சிறப்புகளை விளக்கக்கூடிய விதத்திலே, மாமல்லபுரத்தினுடைய கடற்கரை ஓரங்களில் 500 மீட்டருக்கு எந்தத் திட்டங்களையும் நிறைவேற்றக்கூடாது என்று மத்திய அரசு போட்டுள்ள விதியைத் தளர்த்த வேண்டும் என்று எடுத்துக்கூறியிருந்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறையின் சார்பாக மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி, அந்த விதிவிலக்கினை மத்திய அரசு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிச் செய்யப்படும்போது, தனியார் துறை மூலமாக சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல பேருந்து நிலையம் வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள் நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படக்கூடிய விதத்திலே வருங்காலத்தில் இந்தத் துறை செயல்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல செங்கற்பட்டு கொளவாய் ஏரியில் படகுப் போக்குவரத்து கடந்த ஆண்டே விடப்படும் என்று நீங்கள் அறிவித்தீர்கள், ஏன் விடவில்லை என்று எடுத்துக்கூறியிருக்கிறார்கள். கொளவாய் ஏரியைப் பொறுத்தமட்டில் அது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரியாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய அனுமதியைப் பெற்று படகு விடவேண்டிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த அனுமதியைப் பெற்று இன்னும் ஒரு சில மாதங்களில் அந்தப் பணி நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சுற்றுலா மாளிகைகளைக் குறைந்த வாடகைக்கு விட வேண்டுமென்றும் அதன் மூலமாக சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவருவதற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கிட முடியும் என்றும் எடுத்துக்கூறினார்கள். சுற்றுலாத் துறையின் சார்பாக தமிழகத்தில் 8 இடங்களில் குறைந்த வாடகைக்கு இளைஞர் விடுதிகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஒரு நபர் தங்குவதற்கு 50 ரூபாய் வாடகை என்ற விதத்தில் இப்போது தமிழகத்தில் 8 இடங்களில் அது இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்கள் மக்களைக் கவரக்கூடிய விதத்திலே பொழுதுபோக்கு அம்சங்களை மாவட்டந்தோறும் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதுபோல, மாவட்டந்தோறும் சுற்றுலா இடங்களைப் பார்வையிடுவதற்காக, போக்குவரத்து வசதிகளையும் உருவாக்க வேண்டுமென்றும் எடுத்து கூறியிருக்கின்றார்கள். சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிடுவதற்கு சென்னையிலிருந்து 26 வகை சுற்றுலாப் பயணங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த 26 பயணங்கள் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து சுற்றுலா இடங்களையும் கண்டுகளிக்கக்கூடிய வகையில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, மாவட்டந்தோறும் அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால், கடந்த காலத்தில் மாவட்டந்தோறும் அதை நடைமுறைப்படுத்தியபோது, அது அந்த அளவிற்கு வெற்றி வாய்ப்பைப் பெறாத காரணத்தால், மாநிலத்தின் தலைநகரமாகிய சென்னையிலே இன்றைக்கு இயக்கப்படுகிறது.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் பேசும்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களால் 1990-ஆம் ஆண்டு விடுதி கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்றும் அதை மீண்டும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதை மாற்று அரசு வந்த போது புறக்கணித்தது என்றும் எடுத்துக்கூறியிருந்தார்கள். இப்போது அந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் கடலோரப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், மத்திய அரசு விதித்த தடையின் காரணமாக 500 மீட்டர் வரை எந்தத் திட்டமும் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இப்போது இருக்கிற காரணத்தினால் அந்த விதியைத் தளர்த்துவதற்காக மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த விதி தளர்த்தப்பட்டவுடன் நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகளை



நிறைவேற்றுகிற விதத்தில் இந்தத் துறை செயல்படும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் ஒகனேக்கல்லை அழகுபடுத்த வேண்டும், அங்கே அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒகனேக்கல்லைப் பொறுத்தமட்டில் பல இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு, சுற்றுலாத் துறையின் சார்பாக அதிகமான பயணிகள் வரக்கூடிய அளவிற்கு, மக்களை ஈர்க்கக்கூடிய அளவிற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் அங்கே பேருந்து நிலையம், இன்றைக்கு முழுமைப் பெற்று திறக்கக் கூடிய தருவாயில் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகள் எல்லாம் நிறைவேற்றக்கூடிய அளவிற்கு, ஒகனேக்கல்லை அழகுபடுத்தக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறையின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா அவர்கள் கூறுகின்ற போது, தமிழகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய வருகை விகிதத்தை எடுத்துக்கொண்டால் குறைவாக இருக்கிறது என்றும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய அளவிற்கு நீங்கள் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும் என்றும் எடுத்துக்கூறினார்கள். அதோடு மட்டுமின்றி, சுற்றுலாத் துறை சார்பாக நடத்தப்படுகின்ற விடுதிகளில் அதிகமான மக்கள் தங்குவது கிடையாது என்றும் தனியார் விடுதிகளிலேதான் நூற்றுக்கு நூறு சதவிகிதம் தங்குகிறார்கள் என்றும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். எங்களுடைய Report-ன்படி சுமார் 60-லிருந்து 70 சதவிகிதம் பேர் தமிழக சுற்றுலாத் துறையின் சார்பாக நடத்தப்படுகின்ற அந்த விடுதிகளில்தான் தங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும். நம்முடைய முதல்வர் அவர்கள், சுற்றுலாத் துறையின் சார்பாக நடைபெறுகின்ற அனைத்து விடுதிகளையும் மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு கடந்த ஆண்டு 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். அதற்கான ஒப்பந்தங்கள் இன்றைக்குக் கோரப்படக்கூடிய.........

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருக்குக் கிடைத்திருக்கக்கூடிய

கணக்குப்படி பார்த்தால் இந்த Tourism Development Corporation Hotel-லே நிறையப்பேர் வந்து தங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். C. & A.G. Report-லேகூட The percentage of foreign and domestic tourists who stayed in the Company's hotels declined respectively from 3.2 and 1.9 in 1993 to 1.6 and 1.3 in 1997 என்றுதான் இருக்கிறது. C. & A.G. Report பிரகாரம் பார்த்தாலேகூட ஆண்டுக்காண்டு நம்முடைய Tourism Development Corporation Hotel-லே தங்கக் கூடியவர்களுடைய கணக்கு என்பது மிகவும் குறைந்து கொண்டேயிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1996-97-க்கான report-டைத்தானே படிக்கிறீர்கள்? எந்த வருட report அது?

**திரு. சி. ஞானசேகரன்:** 1998-க்கான Report இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், அது 1997-க்குத்தான் கொடுத்திருப்பார்கள். 1998-ன் figures இருக்கிறதா என்று கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தலைவர் அவர்கள், வருடா வருடம் 1996, 1997 என்று எடுத்துப் பார்த்தால்கூட படிப்படியாக இது குறைந்து கொண்டேதான் இருக்கிறது, இது ஏறவில்லை.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் குறையை நிவர்த்தி செய்யக்கூடிய எண்ணத்தோடுதான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாய் நிதியைத் தனியார் Hotel-களினுடைய தரத்தோடு ஒப்பிடுகின்ற அளவிற்கு சுற்றுலாத் துறையின் Hotel-களின் நிலையை மேம்படுத்த வேண்டுமென்று ஒதுக்கீடு செய்து, தந்திருக்கிறார்கள். ஒப்பந்தங்கள் கோரக்கூடிய தருவாயில் வந்திருக்கின்றன. இருந்தாலும்கூட, கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதிகமான அளவிற்கு தங்கக்கூடிய ஒரு வாய்ப்பைத்தான் இப்போது உருவாக்கிக் கொண்டு இருக்கின்றோம். அதேபோன்று அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆணையின்படி, அறிவுரையின்படி பயிற்சி வழங்கப்பட்டு இப்போது அவர்கள் எல்லோரும் பாராட்டப்படக்கூடிய அளவிற்கு திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் தமிழகம் எங்கும் உள்ள சுற்றுலாத் துறையின் அனைத்து சமையலர்களையும் அழைத்து ஒரு மாதம் அல்லது 15 நாட்கள் என்ற அளவிலே இந்த வருடம் முதல் அத்தனை சமையலர்களுக்கும் பயிற்சி



கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தச் சுற்றுலாத் துறை வல்லுநர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

அதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா அவர்கள் தமிழகத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருந்து கொண்டிருக்கிறது என்று எடுத்துக்கூறி இருக்கிறார்கள் மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்திற்கு வருகின்ற உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில்— 1992 ஆம் ஆண்டு 1 கோடியே 72 இலட்சத்து 14 ஆயிரத்து 953 பேர் என்று இருந்தது— இப்போது 1998-வது ஆண்டைப் பொறுத்தமட்டில் 2 கோடியே 4 இலட்சத்து 14 ஆயிரத்து 193 பேர் என்று அதிகமாக வருகை தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தற்போது அதிகமான அளவுக்கு வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அயல்நாட்டைச் சார்ந்தவர்கள் வருகை தருவதை கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 1997 ஆம் ஆண்டு 6,36,642 பேர் வருகை தந்திருக்கிறார்கள்; 1998 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் 6,36,400 பேர் அயல் நாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கே தமிழகத்திற்கு வருகை தந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரைச் சிங்காரச் சென்னையாக மாற்றுகின்ற முயற்சிகளில் நம்முடைய மாநகராட்சியினுடைய தந்தை அவர்கள் அந்தப் பணிகளை வேகமாக ஆற்றிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இன்னும் அதிகமான அளவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய ஒரு மாநிலமாக தமிழகம் விளங்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் நாகூர், வேளாங்கண்ணி ஆகிய இடங்களை தேசிய புனிதத் தலங்களாக அறிவிக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாகூர், வேளாங்கண்ணியைப் பொறுத்தமட்டில் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், அதேபோல பிற மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் தெரிந்துகொள்ளக்கூடிய விதத்திலே இன்றைக்கு போஸ்டர்கள் எல்லாம் புதிதாக வெளியிடப்பட்டும், அதேபோன்று அங்கேயுள்ள வரலாறுகளைக் கையேடுகளாக வெளியிட்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும், அதுபோன்று பிற மாநிலங்களிலும் விநியோகிக்கக்கூடிய அளவிற்கு இப்போது சுற்றுலாத் துறை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

அதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டுகளில் கர்நாடகத்திலும், பக்கத்து மாநிலமான ஆந்திராவிலும், இன்னொரு பக்கத்து மாநிலமான கேரளாவிலும் சுற்றுலாத் தகவல் மையங்களை நிறுவுவதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, உடனடியாக அது நிறுவப்பட்டு, இருக்கிறது. இப்போது பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தினுடைய சுற்றுலாத் தலங்களினுடைய தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கும், இங்கே வருகை தந்து, எந்தெந்தப் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிந்துகொள்ளக்கூடிய விதத்திலும், பக்கத்து மாநிலங்களான மூன்று மாநிலங்களிலும் தகவல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவை நல்ல முறையில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் வேலூர் கோட்டையையும், அந்தப் பகுதியிலேயுள்ள ஏலகிரி மலையையும் மிகச் சிறப்பாக சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்திலே உரிய வசதிகள் செய்ய வேண்டும் என்றும், அதே நேரத்தில் அங்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பை உருவாக்கித் தரவேண்டுமென்றும் எடுத்துக் கூறினார்கள். வேலூர் கோட்டையைப் பொறுத்தமட்டில், மைய அரசும், மாநில அரசுமாக சுமார் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி, 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள தொகையில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இப்போது பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலாத் துறை பெரும் பங்கு வகிக்கிறது. குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய ஒரு துறையாக சுற்றுலாத் துறை திகழ்ந்து கொண்டிருக்கிறது. பல்வேறு இன மக்கள், பல்வேறு மொழி பேசும் மக்கள் நம் நாட்டில் வாழ்ந்து வந்தபோதிலும், வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் நோக்கத்தோடு, எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையோடு, சுற்றுலாத் துறை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. நம் நாட்டில், தமிழர்களுடைய இதயத்திலே நீங்காது நிறைந்துள்ள மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசிலே, சுற்றுலாத் துறை வளம் பெற்று வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நிச்சயமாக அந்த அளவிற்கு சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்த ஒரு துறையாக மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது.



இந்தியாவிலே, குறிப்பாகத் தொன்மை மிக்க, சிறப்பு மிக்க தமிழகத்திற்கு வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகள், மீண்டும் எப்போது வருவோமோ என்ற ஏக்கத்தோடு செல்கின்ற நிலையைப் பார்க்கக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்த துறையாக மாற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அரசினுடைய சுற்றுலாக் கொள்கையினுடைய அடிப்படையில் நமது அரசின் சுற்றுலாக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. அதை இந்த அவைக்குத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

சுற்றுலாத் தலங்களில் நிலப் பயன்பாடு உள்ளிட்ட ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகளை உருவாக்குதல், உள்ளூர்த் திட்ட நடவடிக்கைகளில் சுற்றுலாவை ஒருங்கிணைத்தல், சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் முனைப்புடன் வசதிகளை ஏற்படுத்துதல், தனியார் துறை பங்கெடுப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து, திட்டங்கள் நிறைவேறத் தேவையான உதவி செய்தல், தனியார் துறையினருக்குத் தேவையான வரிச் சலுகைகள், வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல், முதலீட்டில் சலுகைகள், ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் திட்டத்திற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த உதவி செய்தல், நமது நாகரிகம், பண்பாடு குன்றாத வகையிலும், சுற்றுச்சூழல் பாதிக்காத வகையிலும் சுற்றுலா வளர்ச்சியை உருவாக்குதல், சுற்றுலாத் தலங்களில் உள்ள பொதுமக்களை சுற்றுலா வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்கான ஆர்வத்தை ஊட்டுதல், சுற்றுலா வளர்ச்சியில் பங்கேற்கும் அனைத்துத் துறைகளிலுமுள்ள மனித வளத்தை அகில உலகத் தரத்திற்கு இணையாக மேம்படுத்துதல், சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படையை ஆய்வு செய்து, அனைத்துப் புள்ளி விவரங்களையும் சேகரித்தல், வெளிநாட்டுச் சந்தைகளில் சுற்றுலாவின் சிறப்புகளை விளக்கும் வகையில் விளம்பரம் செய்தல் மற்றும் வெளிநாட்டு விளம்பரங்களில் தனியாருடனும், பிற மாநிலங்களுடனும் கூட்டு முயற்சியில் ஈடுபடுதல், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், மைய அரசின் நிதி உதவி பெறத் தேவையான திட்டங்களை முன்னுரிமைப்படுத்துதல் ஆகியவை ஆகும்.

உலக நாடுகளில் இருந்தெல்லாம் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தத் துறையானது பல்வேறு வசதிகளையும், சேவைகளையும் செம்மையுறச் செய்து வருகிறது.

தங்கும் விடுதிகளைக் கட்டுவது என்பதோடு நின்றுவிடாமல், பூம்புகார் கண்ட புதுமைச் சிற்பியாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தன்னிகரற்ற தலைவர் கலைஞர் அவர்களின் அரிய பல அறிவுரைகளின்படி இந்த மூன்றாண்டு காலத்திலே நிறைவேற்றப்பட்டுள்ள முத்தான வேறு பல சுற்றுலாத் திட்டங்களையும் இங்கே தெரிவிப்பது பொருத்தமாக இருக்குமெனக் கருதுகின்றேன்.

*பிற்பகல் 1-05*

*1996-97* ஆம் ஆண்டில் ரூபாய் *10* இலட்சம் செலவில் இயற்கை எழில் மிக்க முக்கொம்பு, மேலும் எழில் மிக்க தோற்றத்தோடு அமைக்கப்பட்டிருக்கின்றது. குற்றாலத்தில் படகு வசதிகளை மேலும் வசதியுள்ளதாக ஆக்குவதற்காக ரூபாய் *10* இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பூம்புகார் சுற்றுலா வளாகம் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்திலே 62 இலட்சம் ரூபாய் செலவில் இன்னும் அழகுபடுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு, சுற்றுலா வளர்ச்சித் துறையின் இணையற்ற தொண்டுக்கு மகுடம் சூட்டுவதுபோல, கன்னியாகுமரியும், இராமேசுவரமும் தேசிய சுற்றுலாத் தலமாகவும், தேசிய புண்ணியத் தலமாகவும் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மையங்களை இன்னும் ஏற்றமுறச் செய்ய, ரூபாய் *108* இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அந்தப் பகுதிகளில் உரிய வசதிகளோடு, சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அளவிற்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

அதேபோல, *1997--98* ஆம் ஆண்டில், தமிழக அரசின் சார்பில் பக்கத்து மாநிலங்களாகிய ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலே சுற்றுலாத் தகவல் மையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

அதேபோல, சுற்றுலாத் துறையின் வளர்ச்சிகளை அயல்நாட்டினருக்குத் தெரியப்படுத்தக்கூடிய விதத்திலே கணிப்பொறியை ஏற்படுத்தி, அதன் மூலமாக 'ஈ-மெயில்' உருவாக்கப்பட்டு, இன்றைக்கு வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் சுமார் 3 ஆயிரம் பேர் தொடர்பு கொண்டு, தமிழகத்தில் எந்தெந்த இடங்களைப் பார்க்க வேண்டும்,



எப்படித் தங்களுடைய பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிந்துகொண்டு, அவர்கள் எல்லாம் இங்கே வருகை தரவிருக்கிறார்கள் என்பதை இங்கே பெருமையோடு தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*1998--99* ஆம் ஆண்டில் *50* இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்கு நம் வளர்ச்சிகளைத் தெரியப்படுத்தக்கூடிய 'விதத்தில் விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. *10* இலட்சம் ரூபாய் செலவில், பல்லவர் ஆட்சி காலப் பெருமை பெற்ற மாமல்லபுரத்தில், எங்கள் கலைஞர் ஆட்சியில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு, அங்கு வருகின்ற பயணிகளுக்குப் பாதுகாப்பைக் கொடுக்கக்கூடிய விதத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்துறையின் வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையான, தங்கும் விடுதிகளுக்கும் சுற்றுலாத் துறையால் மானியம் வழங்கப்படுகிறது தனியார்களை ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலே சுற்றுலாத் துறையின் சார்பாக, மானியமாக, கடந்த ஆண்டு *87.96* இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*1999-2000* ஆம் ஆண்டிற்கு சுற்றுலாத் துறையில் பல்வேறு வகைகளில் ஏற்றத்தைக் கருதி, தேவையான திட்டப் பணிகளை நிறைவேற்றிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிதியொதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரிய ஆலோசனையின்படி நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களைப் பற்றி இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் உள்ள சுற்றுச் சுவரை விரிவுபடுத்திக் கட்டுவதற்காக ரூபாய் *5* இலட்சமும், பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் கழிப்பறை கட்டுவதற்காக *8* இலட்சம் ரூபாயும், திருவான்மியூர்--மாமல்லபுரம் தேசிய நெடுஞ்சாலையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்க *10* இலட்சம் ரூபாயும், கொடைக்கானலைத் தூய்மைப் பகுதியாக ஏற்படுத்த விழிப்புணர்வு முகாம் நடத்திட *1* இலட்சம் ரூபாயும், புளியஞ்சோலை, பாபநாசம், வாணியார் டேம் ஆகிய மூன்று சுற்றுலாத் தலங்களில் கழிப்பறை, விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக *15* இலட்சம் ரூபாயும், மதுரை மாநகரில் உள்ள திருமலை மன்னர் அரண்மனையில் *100* கிலோ வோல்ட் மின்

உற்பத்தித் திறனுள்ள மின்னாக்கி இயந்திரம் வாங்குவதற்காகவும், அதற்கு அறை கட்டுவதற்காகவும், 5.50 இலட்சம் ரூபாயும், பல்லவர் கால நினைவுச் சின்னமாம் மாமல்லபுரம் சிற்பச் சிறப்புகளை விளக்கிட ஒலி நாடாக்களைத் தயாரிப்பதற்காக 1 இலட்சம் ரூபாயும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, திருவண்ணாமலையில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, நவீன வசதிகளுடன் கழிப்பறை அமைப்பதற்காக 8 இலட்சம் ரூபாயும், பயணிகளிடம் பக்குவமாக நடந்துகொள்வதற்கும், வரலாறுகளை விளக்கவும், வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளித்திட 3 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, நமமுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. முபாரக் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூபாய் 80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற தமிழக அரசின் கொள்கையின்படி சுற்றுலா சார்ந்த தொழில்களான ஓட்டல்கள், பொழுதுபோக்குப் பூங்கா, கோல்ஃப் விளையாட்டு மைதானம் போன்றவற்றில் தனியார் துறைகளை ஊக்கப்படுத்தக்கூடிய விதத்திலே, அவர்களுக்கு அறிவுரை கூறக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்திலேயுள்ள கடற்கரையைச் சார்ந்த இடங்களில் உள்ள சுற்றுலா வளத்தை அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசிடம், கடல் வரன்முறைக்குட்பட்ட பகுதிகளின் வரைபடங்களை மாற்றியமைத்து, பல பகுதிகளில் சுற்றுலாவைச் சார்ந்த தொழில்களை அமைத்து, அந்தப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை அதிகரித்து, நம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி சிறப்படையக் கோரியுள்ளார்கள்.

*பிற்பகல் 1-10*

முட்டுக்காடு முதல் கடலூர் வரை உள்ள கிழக்குக் கடற்கரையை சிறப்பு சுற்றுலாப் பகுதியாக அறிவித்ததோடு மட்டுமன்றி, இது குறித்து அவ்வப்போது மத்திய அரசுடன் விவாதித்து, அதற்கான அனுமதியை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம் சுற்றுலாத் துறைக்கு இந்த அனுமதி கிடைத்தால், ஏறத்தாழ ஆயிரம் கோடிக்கான தனியார்



முதலீட்டில் இந்தத் துறையைச் சார்ந்த தொழில்கள் விரைவில் ஏற்படக் கூடிய ஒரு வாய்ப்பை அது உருவாக்கும்.

மத்திய அரசின் சுற்றுலாத் துறையானது, இந்த ஆண்டை 'Explore India in the Millennium Year' என்று, அதாவது, 'இந்தியாவைக் காண வாருங்கள்' என்று இன்முகத்தோடு எல்லா நாட்டினரையும் வரவேற்கும் ஆண்டாக அறிவித்திருக்கிறது.

இதனை முன்னிட்டு தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக Internet மூலம் Website உருவாக்கப்பட்டு, பல சுற்றுலாத் தகவல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தங்கள் அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகவும், சம்பந்தப்பட்ட பிற துறைகளின் மூலமாகவும் இணைந்து நிதி ஆதாரங்களைப் பெற்று நிறைவேற்ற, விரைவான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, வருகிற நிதி ஆண்டில் மேற்கொள்ளக்கூடிய பணிகளை மீண்டும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய விதத்தில் மேற்கொள்ளவேண்டுமென்ற மாண்புமிகு முதல்வரவர்களுடைய அறிவுரையோடு, அனுமதியோடு சில திட்டங்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இயற்கை வளமுள்ள கடற்கரையையும், தொன்மை வாய்ந்த புராதனச் சின்னங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள மாமல்லபுரத்தை உலக அளவிலுள்ள பண்பாட்டு மையங்களில் ஒன்றாக, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், கலைப் பண்பாட்டு நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. உலக அளவில் சுற்றுலாப் பயணிகள் இங்கு ஏராளமானோர் வருகின்றனர். சுற்றுச்சூழலுக்குப் பங்கம் வராமல் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகைகளில் மாமல்லபுரத்தில் புகழ் பெற்ற கடற்கரைக் கோயில் மற்றும் ஐந்து ரதம் பகுதிகளின் சுற்றுச் சூழலை மேலும் அழகுபடுத்த, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கவின்மிகு காட்சிப் பெட்டகமாக, காண்பதற்கினிய இயற்கை வளங்கள் பல்கிக் கிடக்கின்ற தமிழகத்தைக் கண்டுகளிக்க உலக அளவில் உள்ள மக்களிடமும், சுற்றுலாப் பயணிகளிடமும் தகுந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், கவின்மிகு சூழல் குன்றா வண்ணம், பூங்கா ஒன்றினை மலைகளின் அரசியாம் உதகமண்டலத்தில் ஏற்படுத்திட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்னகத்தின் ஆபரணமாகக், கருதப்படுகின்ற ஏற்காட்டில் உள்ள ஏரிகளைச் சுற்றுச் சூழலுக்குப் பங்கம் வராமல் வசதி மிக்கதாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மற்றொரு உலகப் பண்பாட்டு மையமாகிய பெரிய கோயிலால் பெருமை பெற்ற தஞ்சாவூருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, அம்மண்ணின் மணம் விளங்கும் கிராமியக் கலைகளும், பரத நாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் தென் மண்டலப் பண்பாட்டு மையம் மூலமாக அதிக அளவு நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து இந்திய வம்சாவழியினர்கள் எண்ணற்றோர் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த வண்ணம் இருக்கின்றனர். அவர்களும், நம் மாநில மக்களும் பெரும்பாலும் பிள்ளையார்பட்டிக்கு வருகை தருகின்றனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அங்கே அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இத்துறை பணிகளை மேற்கொள்ள இருக்கிறது.

அதேபோன்று, கரிகால் சோழன் புகழ்பாடும், அந்தக் காலத் தொழில் நுட்பத்தின் எடுத்துக்காட்டாக கல்லணைப் பகுதிகளை நவீனப்படுத்தும் அம்சத்தோடு, அங்கே பொழுதுபோக்குப் பூங்காவை, தனியார் ஒத்துழைப்புடன், அழகுறச் செய்வதற்கான பணிகளும், நம் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரவர்களுடைய வேண்டுகோளை ஏற்று நடைபெறவிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நம் பண்பாட்டினை, கலை, கலாச்சாரத்தைக் காண, மிகுந்த எதிர்பார்ப்போடு வருகின்றனர். அவர்கள் மனநிறைவு அடையும் வகையில், மாமல்லபுரம் நாட்டிய விழாவும், சிதம்பரத்தில்



நாட்டியாஞ்சலியும் இன்னும் சிறப்பு வாய்ந்த முறையில் இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கணினித் திரையைத் தொட்டவுடன் சுற்றுலாத் தகவல்கள் கிடைக்க வழி செய்ய—Touch screen for information—நவீன தொழில் நுட்பம் நிறைந்த கணினி, சென்னை விமான நிலையத்தில், இந்தியாவின் டெட்ராய்ட் ஆகத் தமிழகத்தை மாற்றி வரும் முயற்சியில் முனைந்து நிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆசியால் விரைவில் நிறுவப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆறு சேருகின்ற இடத்தில் உள்ள திருப்புடைமருதூர் புராதனக் கோவில் சரித்திரப் புகழ் பெற்றதாகும். இங்குள்ள ஓவியங்களைப் பற்றி 'Naval Heritage of India' என்ற அந்தப் புத்தகத்தில்கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக்கூடிய விதத்திலே திருப்புடைமருதூர் கோவிலில் அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, சங்கரன்கோவிலில், நகர் மன்றத் தலைவர் தங்கவேலு அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அந்தப் பகுதியிலும் அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக, சுற்றுலாத் துறை மூலமாகப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ்குமார் மன்றாடியார் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, காங்கேயம் அருகிலுள்ள ஊதியர் மலைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான சுற்றுலா வசதிகளைச் செய்து கொடுக்க, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சுமார் 300 ஆண்டுகளாக உள்ள பழமை வாய்ந்த, பெருமை சேர்க்கக்கூடிய சங்கமேஸ்வரர் கோவிலையும் எடுத்து, இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் சார்பாக அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்யக்கூடிய அளவிற்குப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1-15

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும், விளக்க உரைகளின் மூலமாகவும் எடுத்துக் கூறிய

கருத்துகளை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டு இருக்கின்றோம். எனவே, நான் அளித்த விளக்க உரை உங்களுக்கு நிச்சயமாக மனநிறைவை ஏற்படுத்தியிருக்கும் என்று கருதுகிறேன். இங்கே நான் சில கருத்துகளைக் கூறாமல் இருந்தாலும்கூட, நிச்சயமாக உங்களுடைய கருத்துகளெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, வருங்காலத்தில் நிதிநிலையைப் பொறுத்து, உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் மூத்த பத்திரிகையாளராகவும், 1941 ஆம் ஆண்டிலேயே பத்திரிகைத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில், செய்தித் துறையின் சார்பாக நடைபெறுகின்ற இந்த மானியத்தில், தொடர்ந்து நான்காவது முறையாகப் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய முத்தமிழறிஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

செய்தித் துறை என்பது, வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதையும், அரசின் நலத் திட்டங்களையும், அன்றாட நாட்டு நடப்புகளையும் நாட்டு மக்களுக்குத் தெளிவுபட எடுத்துச் சொல்வதையும் தலையாய குறிக்கோளாகக் கொண்டிருக்கிற ஒரு துறையாகும். திரைப்படத் துறை, செய்தி மலர்களை வெளியிடுகின்ற நிலை, அதுபோல திரைப்பட நகர், விளம்பரங்களைச் செய்கின்ற நிலை என்று இப்படிப் பல்வேறு தலைப்புகளின்கீழ் இந்தத் துறை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக, பத்திரிகை தர்மத்தை நிலைநாட்டுவதில் இந்த அரசுக்கு இணை இந்த அரசுதான் என்கிற அளவுக்கு இப்போது நடைமுறையில் இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, பத்திரிகைத் துறையைப பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தங்களை முழுமையாக அந்தத் துறையிலே ஈடுபடுத்திக்கொண்டு, அதன் மூலமாக நாட்டு மக்களை விழிப்புறச்



செய்தவர்கள். அதைப்போல நம்முடைய கலைஞர் அவர்கள் 'இன்றைய செய்தி—நாளைய வரலாறு' என்று தலைப்பிட்டு நடத்துகிற 'முரசொலி' இதழ், காலங்காலமாக வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிற ஒரு காலப்பெட்டகமாக இருக்கிறது என்பதையும் நாம் மிக நன்றாக அறிவோம். கடந்த கால ஆட்சியில் பத்திரிகையாளர்கள் எந்த அளவுக்கு பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். அரசினுடைய திட்டங்களை அல்லது செயல்பாடுகளை விமர்சனம் செய்தால், அவர்கள் எல்லாம் எமலோகத்திற்கு அனுப்பப்பட்ட வரலாறுகளும் கடந்த காலத்தில் நடைபெற்றன. ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், பத்திரிகையாளர்களைத் தன்னுடைய நண்பர்களாக, கண்ணின் கண்மணிகளாக நடத்துவதை இப்போது எல்லாத் தரப்பைச் சேர்ந்தவர்களும் பார்த்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

விளம்பரங்களைப் பொறுத்தவரையில், விருப்பு—வெறுப்பு இல்லாமல், அரசை விமர்சிக்கறவர்களாக இருந்தாலும், பாராட்டுகிறவர்களாக இருந்தாலும், எல்லோரும் சமம் என்கிற நிலையில் அவர்களுக்கு விளம்பரங்கள் பாகுபாடு இல்லாத வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில், விளம்பரங்கள் அளிக்கப்படும்போது, பத்திரிகைகளின் தன்மை, செய்திகளை வெளியிடும் தன்மை, மக்களுடைய எண்ணங்களைப் பொறுத்து, அதனுடைய தராதரத்திற்கு ஏற்ற நிலையில்தான் இப்போது விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதில் யாருக்கும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தவரையில், வேறுபாடு வைப்பதில்லை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவூட்ட விரும்புகின்றேன். பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களில், இதே மாமன்றத்தில் 'முரசொலி செல்வம்' போன்றவர்கள் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்ட காலம் எல்லாம் உண்டு. ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், எள் முனை அளவும் பழி வாங்குகிற இடர்ப்பாடான எண்ணங்களுக்கு எல்லாம் இடமளித்துவிடாமல் செயல்படுவதை மிக நன்றாக அறிவீர்கள்.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை நலத் திட்டங்களாக உருவாக்கி வருவதைப் போல, பத்திரிகையாளர் இறந்தால் அவருடைய குடும்பத்திற்கு, இந்தியாவிலேயே முதன்முதலாக, ரூபாய் 25,000 நிதி உதவி என்று கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அதையும் தாண்டி, இந்த ஆண்டு

யாரும் கேட்காத நிலையிலேயே, எந்த உறுப்பினரும் கேட்காத நிலையிலேயே, நிதிநிலை அறிக்கையிலே ரூ.40,000 ஆக உயர்த்தி அது வழங்கப்படும் என்ற ஒரு அற்புதமான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில், பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் ரூ.500 என்று இருந்ததை, நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அடுத்த ஆண்டு 1000 ரூபாயாக ஆக்கி, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 1500 ரூபாயாக அதை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போல, பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுகிறவர்கள் இறந்தால், அவருடைய மனைவிக்கு 500 ரூபாய் வழங்கப்படும் என்ற திட்டத்தைக் கலைஞர் அவர்கள்தான் அறிவித்திருக்கிறார்கள். இது, இந்தியாவில், தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதே நேரத்தில், பத்திரிகையாளர் நண்பர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம், நம்முடைய கலைஞர் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்களே, மதக் கலவரங்கள், ஜாதிச் சண்டைகள், அரசியல் மோதல்கள் எல்லாம் ஏற்படுகின்றபோது, எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றாமல், மனித நேயத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்குகின்ற வகையில் செய்திகளை வெளியிடவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் கூறியதை ஒரு முறை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை ஏற்று, பத்திரிகை நண்பர்கள் தங்களுடைய கடமையைச் செய்யவேண்டுமென்று மீண்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இந்த அரசைப் பொறுத்தவரையில், விளம்பரங்கள் என்று வருகிற நேரத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் கோருவது ஒளிவு மறைவு இல்லாமல் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த அரசினுடைய திட்டங்கள் எதுவாக இருந்தாலும், சாதாரண குக்கிராமத்தில் இருக்கிற ஏழை எளியவர்கள்கூடத் தெரிந்துகொள்கிற ஒரு நிலையை இப்போது உருவாக்கியிருக்கின்றார்கள். ஒப்பந்தப் புள்ளியை வெளியிடுகின்ற நேரத்தில், கடந்த காலங்களில், விளம்பரமாகாத அல்லது விற்பனைக்கே போகாத பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு, ஒப்பந்தங்கள் எல்லாம் நடைபெற்ற காலம் உண்டு. ஆனால், இப்போது அந்த நிலையை மாற்றி, தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம், 1998—ல் உருவாக்கப்பட்டு. இந்தச் சட்டத்தின்கீழ், 10 இலட்சத்திற்கும்



மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தொடர்பான விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்படுவதுடன், மாநில ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்புகளிலும், மாவட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்புகளிலும் வெளியிடப்பட்டு, இப்போது ஒப்பந்தங்கள் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 1-20

அதே நேரத்தில், பத்திரிகைகளை நடத்துகின்ற நேரத்தில், பத்திரிகை நண்பர்களுக்கு, செய்திகளைச் சேகரிப்பதற்காக அங்கீகார அட்டைகளை, அதேபோன்று, பருவ இதழ்கள், நாளிதழ்களாக இருந்தால், அவர்களுக்கும் அங்கீகார அட்டைகளை, அடையாள அட்டைகளை இப்போது வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதேபோல, தனியார் தொலைக்காட்சிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அப்படிப்பட்ட அட்டைகளை வழங்குகின்றோம். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், இது எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். பத்திரிகை நிறுவனத்திற்குரியவர்கள், யாரைத் தங்களுடைய பத்திரிகையினுடைய ஆசிரியர் அல்லது நிருபர் என்று சொல்லிக் குறிப்பிட்டு அரசுக்குக் கடிதம் தருகிறார்களோ, அவர்களுக்கு மாத்திரம்தான் இப்படிப்பட்ட அட்டைகள் வழங்கப்பட முடியும். எனவே, பத்திரிகை உரிமையாளர்களிடத்திலிருந்து வருகின்ற கடிதங்கள் எதுவும் புறக்கணிக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்தத் துறையின் மூலமாக, பொருட்காட்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, cut out கலாச்சாரம் இல்லாமல், ஆடம்பரங்கள் இல்லாமல், ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல், பொருட்காட்சிகள் எல்லாம் பொருள் உள்ள வகையில், நாட்டு மக்களுக்கு நல்ல திட்டங்களை எடுத்துச் சொல்கின்ற ஓர் அமைப்பாக நடத்தப்பட வேண்டும் என்ற அறிவுரையை வழங்கி, அந்த அடிப்படையிலேதான் இப்போது மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சேலம், மதுரை, கோவை போன்ற மூன்று மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுதோறும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அதேபோன்று, வேலூர், திருநெல்வேலியில் இரண்டு ஆண்டிற்கொரு முறை பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த

ஆண்டு, நாளை, திருச்சியிலே, 100 ஆவது பொருட்காட்சி நடைபெற இருக்கிறது. இதுவரையில் இந்தத் துறை 1978-ல் அமைந்ததற்குப் பிறகு, நாளை நடைபெறுவதோடு 100-ஆவது பொருட்காட்சி என்கிற ஒரு பெருமையை இந்தத் துறை பெற்றிருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இதுவரையில் நடந்து முடிந்த 98 பொருட்காட்சிகளில் 718 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் இலாபமாக ஈட்டியிருக்கிறார்கள். ஆனால், அதிலே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால், 1991 முதல் 1996 வரை அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, 9 பொருட்காட்சிகளில் 51 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் இழப்புக் கணக்கைத்தான் காட்டியிருக்கிறார்கள். ஆனால், கலைஞருடைய தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இப்போதும் சரி-அல்லது அப்போதும் சரி, இலாபம் தான் வந்திருக்கிறது. 1989-91-ல் 9 பொருட்காட்சிகள் நடைபெற்றன. அதிலே 80 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாயை இலாபமாகப் பெற்றிருக்கிறோம். மீண்டும் இந்த ஆட்சி 1996—இல் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையிலே 11 பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த 11 பொருட்காட்சிகளிலும் 189 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் இலாபமாகப் பெற்றிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், பொருட்காட்சிகளைப் பொறுத்தவரையில், வருகின்ற இலாபத்தில் அந்தந்த மாநகராட்சிகளுக்கு அல்லது நகராட்சிகளுக்குப் பங்குத் தொகை தரப்பட வேண்டுமென்பது விதிமுறையாக இருந்தும், கடந்த கால ஆட்சியில் அப்படிப்பட்ட பங்குத் தொகைகள் மதுரை, சேலம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்கு வழங்கப்படவேயில்லை. அதையும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், சில இடங்களில் வழங்கியிருக்கிறோம். சில இடங்களில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்த அரசின் சார்பாக, 'தமிழரசு' இதழ்—ஒரு காலகட்டத்தில், 1970 ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் பல பத்திரிகைகளாக இருந்தவற்றை ஒன்று திரட்டி 'தமிழரசு' என்ற பெயரில்—திங்களுக்கு இருமுறை வரும் வெளியீடாக நடத்தப்பட்டு வந்தது. இப்போது 33 ஆயிரம் பிரதிகளோடு நடைபெற்றாலும், அவற்றை



நான்கு வண்ணங்களில் அச்சிடுவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு 37 இலட்சம் ரூபாயில் அதற்கான web offset இயந்திரம் வாங்கிப் பொருத்தப்பட்டு, அது ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது. இனி வருகின்ற 'தமிழரசு' இதழ்கள் நான்கு வண்ணங்களில் மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தமிழரசு அச்சகத்திலிருந்து, அரசுச் செய்தி, ஒவ்வொரு வாரமும் 20 ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு, ஆங்காங்கே மாவட்டத் தலைநகரங்கள், ஊராட்சி அமைப்புகள், அரசு அலுவலகங்களில் ஒட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் பேசுகின்றபோது, இது தொழிற்சங்க அலுவலகங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தொழிற்சங்க அமைப்புகளுக்கு, நிச்சயமாக, வருகின்ற வாரத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும். அதேபோல், அரசியல் கட்சி அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். அங்கீகரிக்கப்பட்ட எல்லா அரசியல் கட்சி அலுவலகங்களுக்கும் அனுப்புகிறோம். ஆனால், அனுப்புகின்ற அந்தச் செய்திகளை மறைக்காமல், எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பரந்த மனப்பான்மையோடு ஒட்டி, பொதுமக்களுக்குச் செய்தி தருகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'தமிழரசு' பத்திரிகையைப் பொறுத்தவரையில், இந்த மூன்று ஆண்டு காலத்தில் 21 சிறப்பு வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறோம். மதிப்பீடு என்கிற அடிப்படையில் இதுவரையிலே 14 வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறோம் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

நினைவிடங்களைப் பொறுத்தவரையில், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள், அண்ணன் மணி அவர்கள், அதேபோன்று பேராசிரியர் தீரன் அவர்கள், திரு. நிஜாமுதீன் அவர்கள், அதேபோல மரியாதைக்குரிய திருமதி பொன்னம்மாள் அவர்களெல்லாம், ஒவ்வொருவரும் பேசுகின்றபோது, ஒவ்வொரு நினைவு மண்டபத்தை

அல்லது நினைவுச் சின்னங்களை உருவாக்க வேண்டுமென்று வேண்டுகொள் விடுத்தார்கள். கலைஞருடைய அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்றைக்கெல்லாம் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அப்போது மாத்திரம்தான் வரலாற்றுச் சிறப்புக்குரிய தலைவர்களுக்கு வரலாறு படைத்து, வரலாற்றில் நிலையான இடத்தை. இந்த வரலாற்றுச் சிறப்புக்குரிய தலைவர் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். பல காலகட்டங்களில், நாட்டிற்காக, மொழிக்காக, இனத்திற்காக, சமுதாய மேம்பாட்டிற்காக உழைத்த தலைவர்கள் அத்துணைபேரும் மறைக்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற காலக்கட்டங்களில் உருவாக்கப்பட்ட சிறப்புமிக்க வள்ளுவர் கோட்டம், பேரறிஞர் அண்ணா நினைவிடம் போன்றவை, கடந்த கால ஆட்சியில பராமரிப்பு இல்லாமல், மிக மிக மோசமான நிலைக்கு சமூக விரோதச் செயல்கள் நடக்கின்ற இடங்களாக மாற்றப்பட்டன. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அவையெல்லாம் புதுப்பொலிவோடு விளங்குகிற அளவுக்கு செம்மைப்படுத்தப்பட்டு, பொதுமக்கள் அத்தனை பேரும் வந்து பார்க்கிற ஒரு பெரிய வாய்ப்பினை, கலைஞர் அவர்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லாத் தரப்பைச் சார்ந்த சமுதாயத் தலைவர்களுக்கும், அதே நேரத்தில், கவிஞர்கள், உலகப் புகழ் பெற்ற அளவுக்கு வாழ்ந்த உத்தமர் காந்தியடிகளுடைய தியாகத்திற்குத் துணையாக இருந்த தில்லையாடி வள்ளியம்மை போன்றவர்களுக்கு எல்லாம்கூட கலைஞர் அவர்கள்தான் நினைவுச் சின்னங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கலைஞருடைய கனவாக என்றைக்கும் இருப்பது, இப்போதும் இருப்பது 24 மணி நேரமும் அவருடைய சிந்தையில், அணுவில், சிந்தனையில் இருந்து கொண்டிருக்கிற ஒன்று, கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில், திருவள்ளுவர் சிலையை அமைக்கின்ற பணியாகும். கடந்த காலத்திலே தொடங்கப்பட்டு, கடந்த ஆட்சியிலே அது நிறுத்தப்பட்டாலும், மீண்டும் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அந்தப் பணியைத் தொடங்குவதற்கு எங்களுடைய துறையை முடுக்கிவிட்டதன் அடிப்படையில், இப்போது இந்தச் சிலை அமைக்கிற பணி என்பது அடித்தளம் பீடமாக 38 அடிகள் முடிவுற்று, அதற்கு மேலே சிலை அமைக்கிற பணி 45 ஆவது அடி உயரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி திட்டமிட்டபடி ஆகஸ்டு மாதம் முடிவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் துறை மேற்கொண்டிருக்கிறது



என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, வரலாற்றில், நான் முன்பே நினைவுபடுத்தியதைப்போல, நினைவகங்களை எத்தனையோ பேருக்கு உருவாக்கினாலும்கூட— சிப்பாய்க் கலகத்திற்குக்கூட, இந்திய வரலாற்றில் வல்லுநர்கள் எல்லாம் 1856-ஐத் தான் குறிப்பிடுகிறார்கள். ஆனால் 1806 ஆம் ஆண்டிலேயே சிப்பாய்க் கலகத்திலே ஈடுபட்ட இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள், வெள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்டார்களே, அவர்களை நினைத்துப் பார்க்கிற எண்ணம் இதுவரையில் இந்திய நாட்டில் யாருக்கும் இல்லாமல் இருந்தது. அப்படிப்பட்ட எண்ணத்தை, கலைஞர் அவர்கள் உள்ளத்திலே கொண்டு, 1806-இலேதான் முதன்முதலாக சிப்பாய்க் கலகத்திற்கு வித்திட்டவர்கள் இந்தத் தமிழ் மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் என்பதை நினைவுபடுத்துகிற வகையில், வேலூரில் சிப்பாய்க் கலகத்தில் உயிர்நீத்த இந்திய வீரர்களுக்காக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்படுகிற சுதந்திரப் போரில் ஈடுபட்ட அந்தத் தியாகிகளுக்குக் கலைஞர் அவர்கள்தான் நினைவுச் சின்னத்தை உருவாக்கி, பெருமை சேர்த்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதைப்போல, சுதந்திரப் பொன்விழா ஆண்டு, நாடு பூராவும் கொண்டாடப்பட்டாலும் தமிழகத்திலேதான் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று இந்திய நாட்டில் இருக்கிற எல்லோரும் பாராட்டுகிற ஒரு வாய்ப்பை நாம் பெற்றோம். கலைஞர் அவர்களே, 54 தியாகிகளை இராஜாஜி மண்டபத்தில் வரவேற்று, அவர்களுக்கு பொற்கிழிகளை வழங்கி, தேநீர் வழங்கி, அவர்களை நேரடியாக இரயில் நிலையம் வரையில் கூட்டிச் செல்ல, நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்களையும், தமிழ்க்குடிமகனார் அவர்களையும், என்னையும் அனுப்பி வைத்து, அவர்களை இரயில் ஏற்றி டெல்லிக்கு அனுப்புவது, திரும்பி வரவேற்பது என்ற அந்த அளவுக்கு ஒரு சிறப்பைச் செய்தவர் கலைஞர் அவர்கள்தான் என்பதைச் சொல்லி, இப்போதும் பொன்விழாக் கொண்டாடிய காலத்தில், இந்திய நாட்டில் இருக்கிற எல்லாத் தியாகிகளும் பாராட்டி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தியாகிகளுடைய மேம்பாட்டிற்காக அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதாக இருந்தாலும், பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்குவதாக இருந்தாலும், கலைஞர் அவர்கள்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோல, சமத்துவபுரம். தீண்டாமையை ஒழிப்பதற்காக, பொன்விழா ஆண்டையொட்டி கலைஞர் அவர்கள்தான், இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை உருவாக்கி, பொன்விழா ஆண்டுக்கே ஒரு பெருமையைச் சேர்த்திருக்கிறார்கள் என்பதையும், அதே நேரத்தில், பொன்விழா ஆண்டையொட்டிப் பல நிகழ்ச்சிகளை, இந்திய நாட்டிற்கு வழிகாட்டுகின்ற அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் நடத்தினார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, மாநிலத்தில் சிறந்த தலைவர்களுக்கு, மாவட்ட அளவில், மாநில அளவில் ஆங்காங்கு பிறந்த நாள் விழாக்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. அதைத் தொடர்ந்து, திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், பல்வேறு சலுகைகளைக் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா வருகையால், கலைஞருடைய வருகையால், கவியரசு கண்ணதாசன், பட்டுக்கோட்டை. கல்யாண சுந்தரம், உடுமலை நாராயண கவி போன்றவர்களுடைய நுழைவின் தாக்கத்தின் காரணமாகத்தான், தமிழ்நாட்டில், திரைப்படத் துறையில் ஒரு புரட்சி ஏற்பட்டு அதன்மூலம் மக்கள் விழிப்புணர்ச்சி அடைகிற ஒரு நிலை உருவானது. எனவே, அந்தத் துறையின் மூலம் இந்தத், தமிழகத்து மக்களை உயர்த்துவதற்கு அரும்பாடுபட்ட கலைஞர். அவர்கள், இந்தத் துறையையும் தன்னுடைய ஒரு கண்ணாகக் கருதி, இந்தத் துறையைச் சார்ந்த தொழிலாளர்கள், இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், அத்துணைபேருக்கும், ஆண்டாண்டுதோறும் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, பரிசுகளை வழங்குவதையும், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதையும், சண்டைக் காட்சிகளில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு நிதி உதவி போன்ற வசதிகளையெல்லாம் தந்துதவுவதையும் இப்போது சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தொழில் நலிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் கேளிக்கை வரி விலக்கு போன்ற வசதி வாய்ப்புகளை எல்லாம் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதனால் இந்த அரசுக்கு ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பட்டாலும் கவலையில்லை



என்று சொல்லி, அந்தத் துறையைக் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1--30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** அதுபோல, திரைப்படப் பிரிவைப் பொறுத்தவரையில், கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலகட்டத்திலே இருந்து பல்வேறு திரைப்படப் பிரிவுகளுக்கான நிகழ்ச்சிகளை, அரசினுடைய செய்திகளை, செயல்பாடுகளை, பல்வேறு துறைகளுடைய- குடும்ப நலம், காட்டு வளம், சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பல்வேறு துறைகளுடைய கருத்துரைகளைப் பெற்று, அதற்கான படங்களை எல்லாம் தயாரிக்கிற பெரும் பணிகளை அது மேற்கொண்டிருக்கிறது. 'பேரறிஞர் அண்ணா வாழ்கின்றார்' என்ற அவருடைய வரலாற்றுக் காவியங்களைப் படமாக்கி வெளியிட்டிருக்கிறோம். ஏனைய பெருந்தலைவர்கள் பலருடைய படங்களை எதிர்காலத்தில் படமாக்கி வெளிவருவதற்கான நடவடிக்கையையும் இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதையும், 'தமிழகத்தில் தொழில் வளர்ச்சி', 'கலைஞர் கண்ட காவேரி' 'தமிழக முதல்வர் கலைஞர் கண்ட சமத்துவபுரம்' என்ற தலைப்புகளில் 35 எம்.எம். படச் சுருள் விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டு இப்போது தமிழ்நாடு முழுவதும் திரையரங்குகளில், தொலைக்காட்சிகளில் காட்டப்படுகின்றன என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, திரைப்படத் துறையைப் பொறுத்தவரையில், கட்டணங்களை நிர்ணயிக்கின்ற உரிமையை உரியவர்களுக்கே தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் எந்த பதிலையும் சொல்லவில்லை. அந்த உரிமை வழங்கப்படுவதால் ஆபத்து இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால்தான், கடந்த கால ஆட்சியில் பெட்டிகள் கைமாறிய காரணத்தால்தான் சட்டங்கள் வந்தன, அந்த நிலை இருக்கக்கூடாது என்று சொல்லி, புதிதாக அந்த உரிமையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே இந்த அரசு வழங்கி இருக்கிறது என்பதை நினைவுபடுத்துவதோடு, இப்போது திரைப்பட உரிமையாளருக்குத் தரவேண்டுமென்று கேட்கின்ற நண்பர், நாளைக்குப் பேருந்து உரிமையாளர்களே கட்டணங்களை நிர்ணயிக்கலாம் என்று கேட்கிற நிலை வந்தாலும் வரும். எனவே, அதற்கு வழிகாட்டியாக இந்த அரசு

[திரு. வ. முல்லைவேந்தன்] [1999 மே 4

அமையாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது, திரைப்படங்களில் இடம்பெறுகிற முறைகேடுகளைப் பற்றி சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவற்றைப் பொறுத்தவரையில், இந்த அரசு பாரபட்சம் இல்லாமல் காவல் துறை அதிகாரிகள் மூலமாக, வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, திடீரென்று சோதனை செய்து, பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறது. அதனால் நூற்றுக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். திரையரங்குகளுடைய உரிமங்கள் அவ்வப்போது இடைக்கால நீக்கம் செய்யப்பட்டு, திரையரங்குகள் இயங்காத நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அங்கே படிக்கின்ற மாணவர்கள் *1200* பேர் இதுவரையில் பயன்பெற்று இருக்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், கடந்த 5 ஆண்டும், இந்த ஆண்டும் ஏராளமான முன்னேற்றப் பணிகளை அந்தக் கல்லூரியிலே உருவாக்கித் தந்தார்கள்.

*1997-98*-இல் *11* இலட்சம் ரூபாய்க்கும், இந்த ஆண்டு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு *95* இலட்சம் ரூபாய்க்கும், தேவையான அனைத்து நவீன கருவிகளையும வாங்கிக் கொடுத்து, இந்தியாவிலேயே பூனாவிற்கு அடுத்தபடியாக நடைபெறுகிற இந்தக் கல்லூரிதான் மிகச் சிறப்பாக இருக்கிறது என்ற பெருமையையும் நாம் இப்போது பெற்று இருக்கிறோம். ரூபாய் *1* கோடி மதிப்புள்ள இயந்திரத்தை, திரைப்படக் கல்லூரிக்கு, துறையினுடைய இயக்குநர் அவர்கள் மாணவர்களுடைய நலன் கருதி, மாற்றி வழங்கி, அதை இப்போது மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதிலே படிக்கிற மாணவர்கள் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புப் பெறுகிற வாய்ப்பைப் பெற்று சிறந்த நிலையில் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் கேட்பாரற்றுக் கிடந்தது. அதை மேலும் செம்மைபெறுகிற அளவுக்கு மாற்றியமைத்து இருக்கிறோம்



1999 மே 4] [திரு. வ. முல்லைவேந்தன்]

என்பதைச் சொல்வதோடு, தீண்டாமை ஒழிப்புக்காக, மத நல்லிணக்கத்திற்காக, சமூக ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக, *1* கோடி ரூபாயை கலைஞர் அவர்களுடைய அரசு ஒதுக்கியிருக்கிறது. ஒரு காலகட்டத்தில் உத்தமர் காந்தியடிகள் அரிஜன சேவா சங்கத்தை உருவாக்கிக் கொண்டு, தீண்டாமையை ஒழிப்பதற்காகத் தமிழ்நாட்டுக்கு *1* கோடி ரூபாய் நிதி சேர்ப்பதற்கு வந்தார் என்பது வரலாறு. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார். அவருடைய ஆட்சியிலேதான் தீண்டாமையை ஒழிப்பதற்கு *1* கோடி ரூபாய் ஒதுக்கி, அந்தப் பணத்தின் மூலம் பல்வேறு பணிகளை இப்போது இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, திரைப்படங்களை எடுத்து, அல்லது வீடியோ மலர்கள் அல்லது தொலைக்காட்சிகள் மூலமாக ஒளிநாடாக்களை எடுத்து, இப்போது அந்தப் படங்களை எல்லாம் வெளியிட்டு, தீண்டாமையினுடைய கொடுமையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதோடு, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கலை நிகழ்ச்சி நடத்தி, தீண்டாமையை ஒழிப்பதற்கான பிரச்சாரங்களைச் செய்வாம். அதுபோல கல்வித் துறையின் மூலமாக, இளைஞர்கள் முகாம் நடத்தி அதன்மூலம் தீண்டாமையை ஒழிப்பதற்கான பிரச்சாரங்களைச் செய்வதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது என்பதையும், இதற்கு இதுவரையில் *66* இலட்சத்து *13,000* ரூபாய் செலவாகியிருக்கிறது என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைத் தொடர்ந்து, அச்சகத்தைப் பொறுத்தவரையில், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பதிவேடுகளை அச்சிட்டுத் தருவது, தேவையான எழுதுபொருட்கள் வழங்குவது போன்றவை தலையாய பணியாக இருந்து கொண்டிருக்கின்றன. *3,581* பணியாளர்கள் பணியாற்றுகிற அந்த அச்சகத் துறை, மாவட்டங்களில் *7* இடங்களில் இருந்தாலும், பழைய காலத்திலிருந்த இயந்திரங்கள் எல்லாம் மாற்றப்பட்டு, இப்போதுதான் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 1-35*

குறிப்பாக, நீதிமன்ற வளாகத்தில் *1* கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டடத்தையும் *50* இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நவீன இயந்திரங்களையும், சுப்ரீம் கோர்ட் நீதிபதி அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த மாதத் தொடக்கத்திலே தொடங்கி வைத்திருக்கிறார்கள். எனவே, நீதிமன்ற வளாகத்தில் இருக்கிற

[திரு. வ. முல்லைவேந்தன்] 

பணிகள் இனிமேல் குறிப்பிட்ட காலங்களில் நடக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்களும் நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை வைத்திருந்தாலும்கூட, இது நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, பல்வேறு websetter இயந்திரங்கள், அதேபோல வண்ண அச்சகத்திலே வண்ணப் பணிகளை மேற்கொள்வதற்கான நவீன இயந்திரங்கள் எல்லாம் வாங்கப்படுகின்றன. இதனால் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு நிச்சயமாக பாதிக்கப்படாது. மொத்தத்தில் இந்த ஆண்டு 44.95 இலட்சம் ரூபாய்க்கு நவீன இயந்திரங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 37 இலட்சம் ரூபாயிலே, சேலத்திலே ஓர் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அந்தத் தொழிலாளர்களுடைய நீண்ட நெடுநாளைய கோரிக்கை, ஒரு நாட்காட்டி வழங்கப்பட வேண்டும் என்பது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசு அலுவலகங்களுக்கெல்லாம் அச்சிட்டு தருகின்ற தொழிலாளர்கள் அவர்கள்தான். எனவே, தங்களுக்கு ஒரு நாட்காட்டி தேவை என்று அவர்கள் கேட்டதை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு ஏற்றுக்கொண்டு, ஒரு நாட்காட்டி, அதேபோல, ஒரு டைரி வழங்கலாம் என்பதற்கான அனுமதியை வழங்கி இருக்கின்றார்கள். அதனால் 4003 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்பதை அந்தத் தொழிலாளர் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, பெண் தொழிலாளர்களுக்கு தையல் கூலியாக மூன்று செட் துணி தைப்பதற்கு 225 ரூபாய் வீதம் 503 தொழிலாளர்களுக்கு இனிமேல் அரசே வழங்கும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எழுதுபொருள் கிடங்கில் பணிபுரியும் தட்டச்சுக் கம்மியர் போன்ற பணியாளர்களுக்கு பணி மற்றும் தேநீர்ப் படியாக, பிரதி மாதம் ரூ. 30 வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் 40 ரூபாயாக அது உயர்த்தி வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செய்தி, மக்கள் தொடர்புத் துறைக்கு இந்த 1999-2000ஆம் ஆண்டில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 39 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயை பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக வழங்கியிருக்கிறார்கள்.



 [திரு. வ. முல்லைவேந்தன்]

இதல்லாமல் தொடர்ந்து நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமைக்குரிய தலைவர்களையெல்லாம் பெருமைப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு வீரம் விளைந்த இந்த மண்ணில், வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கில் இட்ட 200-வது ஆண்டை நினைவுகூர்ந்திடும் வகையில், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள், தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் அரசின் சார்பில் புகழாஞ்சலி நடத்தப்படும் என்று பெருமையோடு அறிவித்திருக்கின்றார்கள்.

அதேபோல, மானம் காத்த சீமையில் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200-வது ஆண்டின் நினைவுநாள் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படும் என்ற அறிவிப்பையும் தந்திருக்கிறார்கள்.

அதேபோல, வரலாற்றில் யார், யாருடைய பெயரையோ பலபேர் இப்போது மறந்திருந்தாலும், தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதற்காக உண்ணா நோன்பு இருந்து, உயர்நீத்த விடுதலை வீரர் உத்தமத் தியாகி சங்கரலிங்கனார் சிலையும், (மேசையைத் தட்டும் ஒலி) பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக, உயிரைப் பொருட்படுத்தாமல் கொடிக் கம்பத்தின் உச்சியில் ஏறி கொடி ஏற்றியவரும், நாட்டு விடுதலைக்காக பலமுறை சிறை சென்றவருமான ஆரியா என்ற பாஷியம் அவர்கள் சிலையும் சென்னையிலுள்ள தியாகிகள் மணி மண்டபத்தில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளாகத்தில் மன்னர் ராஜகோபால தொண்டமான் திருவுருவச் சிலை அமைப்பதற்கான அறிவிப்பை கலைஞர் அவர்கள் ஏற்கெனவே செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இனமானம் போற்றிய தமிழ்க் கலை குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்களின் நினைவாக, குன்றக்குடியில் நினைவு மண்டபம் அமைப்பதற்கான அறிவிப்பையும் கலைஞர் அவர்கள் அறிவித்து, அதிலே ஓர் அழகிய நூலகம் உருவாக்க வேண்டுமென்றும் ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, வாஜ்பாய் அரசு இப்போது நடைபெறுகிற நேரத்திலும், பிரதமர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்து, நம்முடைய

முதலமைச்சர் அவர்கள், ஏப்ரல் 1 ஆம் தேதி கடிதம் எழுதினார்கள். கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் மணி மண்டபம் கட்டக்கூடாது என்று தடையாணை இருந்தது. தடையாணை இருந்த காரணத்தால், கட்டுவதற்கான வகையில் நடவடிக்கையை இந்த அரசு வேகமாக எடுத்து பல்வேறு நினைவூட்டுக் கடிதங்கள் எல்லாம் எழுதி, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களே பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, பிரதமரும் அதற்கான அனுமதியை வழங்கினார்கள். வழங்கியதைத் தொடர்ந்து இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், கன்னியாகுமரி கடற்கரையில் காந்தி மண்டபத்திற்கு அருகில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில், காந்தி காமராஜர் மணி மண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பினைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அஃதேபோல, சென்னையிலுள்ள கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் மகளிர் கல்லூரியை ஒட்டியுள்ள அரசுக்குச் சொந்தமான 10 கிரவுண்ட் நிலத்தில் இவ்வாண்டு கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுடைய மணி மண்டபம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

செய்தி-மக்கள் தொடர்புத் துறை மூலம் சிறப்பாகப் பணிகளை நிறைவேற்றுவதற்காக மாநிலத்தில் 5 மண்டலங்களைப் புதியதாக உருவாக்கி, துறை அதிகாரிகளைக்கொண்டு அவை சிறப்பாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரோடும் சிறப்போடும் செயலாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசை, எப்படியாவது சிதைத்துச் சீரழித்துவிடலாம் என்று சிலர் தீட்டிய திட்டம் தவிடுபொடியாயிற்று. சதி வலைகளில் அதைப் பின்னியவர்களே விழுந்தார்கள். இருப்பதை விட்டுவிட்டுப் பறப்பதைப் பிடிக்க இன்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

பழி உணர்ச்சி மட்டுமே வாழ்க்கை எனக் கொண்டவர்கள் பகைவர் முயற்சி இல்லாமல் தமக்குத் தாமே குழி வெட்டிக்கொள்வார்கள் என்று எப்போதோ எழுதிய முதல்வர் கலைஞர் அவர்களின் உரையைக் கேட்டு இருக்கிறேன். அது இப்போது தமிழ்நாட்டு அரசியலில் அரங்கேறி இருக்கிறது. 1965 ஆம் ஆண்டில் விடுதலை இதழில், கருத்து மாறுபடுவது இயற்கை, கொள்கையிலும் நடைமுறையிலும் ஏற்றம் ஏற்படுவது மனித இயல்பு, ஆனால், என்ன கருத்து வேறுபாடு இருந்தாலும் அதை மறந்து



மனிதத் தன்மையோடு நடப்பதே முக்கியம், நாட்டின் பொது நலமே கவனிக்கப்பட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

பிற்பகல் 1-40

அதற்கேற்ப கருத்து வேறுபாடு இருந்தாலும், கொள்கை மாறுபாடு இருந்தாலும், நாட்டு நலனையே முக்கியமாகக் கருதும் கலைஞர் அவர்கள், மிகச் சிறந்த ராஜ தந்திரியாக (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்திய நாட்டில் திகழ்கிறார் என்பதனை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யவும் பல சட்டங்களையும் திட்டங்களையும் ஆர்வமுடன் கலைஞர் அரசு செய்து வருகிறது. இடர் பல கடந்து, புயலிடையே அகல் விளக்கினை அணையாது காப்பதுபோல், இந்த ஆட்சியின் மாட்சியைக் காப்பதில் கண்ணுங் கருத்துமாய்க் கடைமையாற்றுகிறார் கலைஞர் அவர்கள். தமிழகத்தில் உள்ள அகல் விளக்கு மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திற்கே வெளிச்சம் தந்து கொண்டிருக்கிற அகல் விளக்கையே பாதுகாக்கும் கடமையை டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்றுள்ளார்கள். அந்தக் கடமையை அவர்கள் விரைவாக நிறைவேற்ற நாடும் ஏடும் துணை நின்றிட வேண்டுமெனக் கேட்டு, இந்த அரிய வாய்ப்பை வழங்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய யோசனைகளையெல்லாம் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துவோம் என்பதையும் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்து, வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்று, அரசு கேட்ட தொகையை வழங்க வேண்டுமாய்க் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 50—சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50—சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர் இருக்கையில் இல்லை, திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன் இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,27,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**கோரிக்கை எண் 43—எழுதுபொருள்-அச்சுத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43-எழுது பொருள்-அச்சுத்துறை வெட்டுத்தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எழுதுபொருள்-அச்சுத்துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.54,87,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

[1999 மே 4

**கோரிக்கை எண் 46 - செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கை எண் 46 செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.



1999 மே 4]

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல்நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு .எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.17,17,38,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-1999) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

182. சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். 1999 (தமிழ், ஆங்கிலம்)

183. மானியக் கோரிக்கை எண் 43 எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

184. மானியக் கோரிக்கை எண்.46 - செய்தி - திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1999—2000 (தமிழ், ஆங்கிலம்)

185. மானியக் கோரிக்கை எண் 50 - சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999--2000. (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு-I

(71-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 43

## எழுதுபொருள்-அச்சுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசுத் துறைகளின் அச்சுப் பணிகள் மற்றும் எழுதுபொருட்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

இத்துறையின் இயக்குநர் அலுவலகம், 816, அண்ணாசாலை, சென்னை-2-ல் அமைந்துள்ளது. இயக்குநரகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் இடங்களில் ஏழு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. அரசு மைய அச்சகம், சென்னை-79.
2. அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104.
3. அரசுக் கிளை அச்சகம், மதுரை.
4. அரசுக் கிளை அச்சகம், சேலம்.
5. அரசுக் கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
6. அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை.
7. அரசுக் கிளை அச்சகம், விருத்தாச்சலம்.

அரசு எழுதுபொருள் கிடங்கு, இராஜாஜி சாலை, சென்னை--1-லும், அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், 817, அண்ணாசாலை, சென்னை-2-லும் மற்றும் துணை விற்பனை நிலையம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104-லும் செயல்படுகின்றன.

[1999 மே 4

2. பணியாளர் நிர்வாகம், தொழிற்கூட உறவுகள், பொது நிர்வாகம், பொருட்கள் மைய நிர்வாக அமைப்பு, அச்சகங்களுக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், பொருட்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பெரும்பாலான செயல்பாடுகள் அனைத்தும் இயக்ககத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.


அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள் மற்றும் கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தல் போன்ற பணிகள் எழுதுபொருள் கிடங்கு மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவர், வரவு-செலவு ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், கமுக்கத்தன்மை வாய்ந்த சிறப்பு அறிவிக்கைகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச் சீட்டுகள், அதிஇரகசிய வகையான அரசுத் தேர்வுகளின் வினாத்தாட்கள், பரிசுச் சீட்டுகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஆகிய அச்சிடும் பணிகள் இத் துறையின் கீழ் இயங்கும் அரசு அச்சகங்களில் செயலாக்கப்படுகின்றன.



1999 மே 4]

## நிர்வாக அமைப்பு



**பணியாளர் விவரம்**
(28-02-1999)—ல் உள்ளபடி)

| வ.எண் | அலகு | அலுவலர்கள் (அ) தொகுதி | அலுவலர்கள் (ஆ) தொகுதி | அமைச்சுப் பணியாளர்கள் | மேற்பார்வைப் பணியாளர்கள் | தொழில்நுட்பப் பணியாளர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இயக்ககம், சென்னை-2. | 5 | 5 | 122 | 6 | 35 | 173 |
| 2. | அரசு விற்பனை நிலையம் | — | 1 | 26 | — | 12 | 39 |
| 3. | அரசு எழுதுபொருள் கிடங்கு | 1 | 1 | 66 | — | 147 | 215 |
| 4. | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 5 | 20 | 187 | 153 | 1,777 | 2,142 |
| 5. | அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104. | 1 | 2 | 13 | 10 | 218 | 244 |
| 6. | அரசுக் கிளை அச்சகம், மதுரை. | 1 | — | 14 | 8 | 178 | 201 |
| 7. | அரசுக் கிளை அச்சகம், சேலம். | — | 1 | 14 | 8 | 113 | 136 |
| 8. | அரசுக் கிளை அச்சகம், திருச்சி. | — | 1 | 11 | 8 | 116 | 136 |
| 9. | அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை. | — | 1 | 15 | 10 | 145 | 171 |
| 10. | அரசுக் கிளை அச்சகம், விருத்தாச்சலம். | 1 | — | 7 | 7 | 109 | 124 |
| | மொத்தம் .. | 14 | 32 | 475 | 210 | 2,850 | 3,581 |



**அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் விவரம்**
அச்சுப் பிரிவு

| வ.எண் | அச்சகத்தின் பெயர் | வெப் ஆப்செட் இயந்திரம் ஐந்து யூனிட் | வெப் ஆப்செட் இயந்திரம் நான்கு யூனிட் | வெப் ஆப்செட் இயந்திரம் இரண்டு யூனிட் | ஷீட் பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் ஆர்.ஏ.1 அளவில் | ஷீட் பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் ஆர்.ஏ.2 அளவில் | சிறிய ஆப்செட் அச்சு இயந்திரம் | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் ஆர்.ஏ.1 அளவில் | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் ஆர்.ஏ.2 அளவில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 2 | — | 2 | 4 | 7 | 1 | 5 | 10 |
| 2 | அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104. | — | 1* | — | — | — | 6 | — | 4 |
| 3 | அரசுக் கிளை அச்சகம், மதுரை. | — | — | — | 5 | — | — | — | 1 |
| 4 | அரசுக் கிளை அச்சகம், சேலம். | — | — | 1 | — | — | — | — | 7 |
| 5 | அரசுக் கிளை அச்சகம், திருச்சி. | — | — | — | — | — | 1 | — | 4 |
| 6 | அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை. | — | — | — | — | — | 1 | 1 | 5 |
| 7 | அரசுக் கிளை அச்சகம், விருத்தாச்சலம். | — | — | — | — | — | 1 | — | 5 |

*2 யூனிட் கொண்ட ஓர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

## புத்தகக் கட்டுமானப் பிரிவு

| வ. எண் | அச்சகத்தின் பெயர் | வெட்டு இயந்திரம் | புத்தகம் தைக்கும் இயந்திரம் | கம்பி அடிக்கும் இயந்திரம் | கோடிடும் இயந்திரம் | சுழல் எண்ணிடும் இயந்திரம் | தாள் மடிக்கும் இயந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79. | 21 | 3 | 35 | 4 | 6 | 5 |
| 2. | அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104. | 2 | — | 1 | — | — | — |
| 3. | அரசுக் கிளை அச்சகம், மதுரை. | 4 | — | 3 | — | 3 | 1 |
| 4. | அரசுக் கிளை அச்சகம், சேலம். | 2 | — | 2 | 1 | 2 | — |
| 5. | அரசுக் கிளை அச்சகம், திருச்சி. | 3 | — | — | 2 | 2 | — |
| 6. | அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 3 | — | 2 | 1 | 2 | 1 |
| 7. | அரசுக் கிளை அச்சகம், விருத்தாச்சலம். | 2 | — | 4 | 1 | 1 | — |



### அரசு மைய அச்சகம், சென்னை-79:

தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக பத்து பணியாளர்களைக் கொண்டு இவ்வச்சகம் 1831-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. சட்டப்பேரவை குறித்த அவசரப் பணிகள், மாநில வரவு--செலவு, தமிழ்நாடு தேர்வாணைய வெளியீடுகள் ஆகிய அதி இரகசியப் பணிகள் இவ்வச்சகத்தில் செயலாக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிதழ் ஒவ்வொரு புதன்கிழமையும் வெளியிடப்படுகிறது. தவிரவும், அரசு நாட்குறிப்பேடுகள் மற்றும் நாட்காட்டிகளும் அச்சிடப்படுகின்றன. சென்ற ஆண்டு இரண்டு கோடி எண்ணிக்கைக்கு மேல் தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் ஒவ்வொரு மாதமும் அச்சிடப்பட்டுள்ளன.

1998-99-ஆம் ஆண்டில் இரண்டு எண்ணிக்கை மடிப்பு இயந்திரங்களும், (மூன்று மடிப்பு) இரண்டு எண்ணிக்கை புத்தகம் தைக்கும் இயந்திரங்களும், மூன்று எண்ணிக்கை ஹைட்ராலிக் தள்ளுவண்டிகளும், ஒரு நிழற்பட இயந்திரமும், ஒரு அதிவேக டிஜிட்டல் அச்சிடும் கருவியும் இவ்வச்சகத்தில் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளன.

### அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104:

உயர் நீதிமன்றத்திற்குரிய அன்றாட வழக்குப் பட்டியல்களை அச்சிடுவது இவ்வச்சகத்தின் முக்கியப் பணியாகும். இப் பணி, ஒவ்வொரு மாலையும், வழக்குப்பட்டியல் எந்த நீதிஅரசர் மற்றும் நீதிமன்றங்களில் அவை விசாரிக்கப்படும் என்ற விவரங்கள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் பெறப்பட்ட பின்னர், வழக்குப் பட்டியலாக அச்சிட்டு மறுநாள் காலையில் குறித்த நேரத்தில் விநியோகிக்கும் பொருட்டு, முடிக்கப்பட வேண்டிய பணியாகும். இப் பணியினை, மேலும் விரைவுபடுத்த இவ்வச்சகம் நவீனமயமாக்கப்பட உள்ளது.

இவ்வச்சகத்திற்கான புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 24-4-1999 அன்று திறக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற கோடைகால விடுமுறைக்குப் பின், இக் கிளை அச்சகம் லெட்டர் பிரஸ் முறையில் இருந்து முற்றிலும் மாற்றம் பெற்று ஆப்செட் முறையில் நவீனமயமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை நிறைவேற்றும் வகையில், 4 யூனிட் வெப் ஆப்செட் அச்சு இயந்திரம் வாங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, அவற்றில் இரண்டு யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம் ஒன்று பெறப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இது தவிர, மேலும் இரண்டு யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம், ஒரு ஷீட் பெட் ஆப்செட் இயந்திரம்

[1999 மே 4

மற்றும் சில அச்சியல் கணிப்பொறிகள் சேர்க்கப்பட்டு நிறுவப்படவுள்ளன. இவ்வச்சகத்தில் 1998-99-ல் ஒரு நிழற்பட இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் இங்கு, வழக்குரைஞர், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கட்குப் பயன்படும் வகையில் அரசு வெளியீடுகள் விற்பனைத் துணை நிலையம் இயங்கி வருகிறது.

**அரசுக் கிளை அச்சகம், சேலம்:**

இக்கிளை அச்சகத்தில் சமீபத்தில், இரண்டு யூனிட் வெப் ஆப்செட் இயந்திரமும், பிளேட் பிராஸசர், ரீ-டச்சிங் டேபிள் மற்றும் ஒரு டேம்பனர் ரோலர் சுத்திகரிக்கும் இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஆப்செட் முறை முதன்முதலில் இவ்வச்சகத்தில் புகுத்தப்பட்டுள்ளது. நிலைப்படுத்தப்பட்ட பல2லடிவங்கள், மாவட்ட அரசிதழ்கள் அச்சடிக்கும் பணிகளுடன் கணிப்பொறிகள் மூலம் புதிய அச்சுக்கோர்ப்புப் பணிகளும் திறம்படச் செயலாக்கப்படவுள்ளன. மேலும், எழுதுபொருட்களை விநியோகம் செய்யும் பொருட்டு இக்கிளை அச்சகத்தை ஒரு துணை எழுதுபொருள் கிடங்காகவும் மேம்பாடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**அரசுக் கிளை அச்சகம், மதுரை:**

தற்போது வருவாய்த் துறை, காவல் துறை மற்றும் பிற துறைகளின் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. இவ்வச்சகத்தில், ஆப்செட் இயந்திரங்களை ஒருமுகப்படுத்தத் தேவையான இடவசதியும் மனித ஆற்றலும் உள்ளன. இவ்வச்சகத்தினையும் ஒரு கிளை எழுதுபொருள் கிடங்காக மேம்பாடு செய்யவும், முற்றிலும் ஆப்செட் அச்சகமாக விரைவில் மாற்றவும், அங்குள்ள சில லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களை முற்றிலுமாக நீக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இதர அரசுக் கிளை அச்சகங்கள்:**

அடிப்படையில் லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களைக் கொண்ட கிளை அச்சகங்களாக இருந்த விருத்தாச்சலம், திருச்சிராப்பள்ளி மற்றும்



1999 மே 4]

புதுக்கோட்டை அச்சகங்கள் ஒவ்வொன்றுக்கும் 1998-99-ல் ஒரு சிறிய ஆப்செட் இயந்திரமும், ஒரு நிழற்பட இயந்திரமும் வழங்கி நிறுவப்பட்டு ஆப்செட் முறை முதன்முதலில் இவ்வச்சகங்களில் புகுத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் மாவட்ட அரசிதழ்களும், மற்ற இரு கிளை அச்சகங்களில் நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் அச்சிடப்படுகின்றன. 1998-99-ஆம் ஆண்டு திருச்சி கிளை அச்சகத்தைச் சுற்றிலும் ஒருபுறம் சுற்றுச் சுவரும், மற்றுமுள்ள மூன்று புறங்களில் முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை கிளை அச்சகத்தில் குளிர் குடிநீர் சாதனம் நிறுவப்பட்டுள்ளது. விருத்தாச்சலத்தில் துணை எழுதுபொருள் கிடங்கு நிறுவவும் மற்றும் இம்மூன்று அச்சகங்களிலும் படிப்படியாக ஆப்செட் முறையைத் தீவிரப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**1998-ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரங்கள்**

| வ.எண் | அச்சகத்தின் பெயர் | அச்சு அழுத்தங்கள் ஆர்.ஏ.2 (இலட்சத்தில்) இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 2521.9 | 2481.3 |
| 2. | அரசுக் கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104 | 240.6 | 243.8 |
| 3. | அரசுக் கிளை அச்சகம், மதுரை | 457.5 | 429.7 |
| 4. | அரசுக் கிளை அச்சகம், சேலம் | 334.1 | 317.5 |
| 5. | அரசுக் கிளை அச்சகம், திருச்சி | 232.7 | 181.7 |
| 6. | அரசுக் கிளை அச்சகம், புதுக்கோட்டை | 215.6 | 236.4 |
| 7. | அரசுக் கிளை அச்சகம், விருத்தாச்சலம் | 165.1 | 145.2 |
| | மொத்தம் - | 4167.5 | 4035.6 |

அரசு நிர்ணயித்துள்ள மொத்த இலக்கில் சராசரியாக 97 விழுக்காடு செயல்திறன் பெறப்பட்டுள்ளது.

## அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2:

தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய அரசின் வெளியீடுகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கென அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், அண்ணாசாலை, சென்னை-2 மற்றும் துணை விற்பனை நிலையம் உயர் நீதிமன்ற வளாகம், சென்னை-104-ல் செயல்பட்டு வருகின்றன.

2. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை-2 மற்றும் உயர் நீதிமன்ற வளாக துணை விற்பனை நிலையம், சென்னை-104-ல் அனைத்து வகையான முக்கிய அரசு வெளியீடுகளான சட்டங்கள், விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், மாவட்ட அரசிதழ்கள், மாவட்ட மக்கள் தொகை கணக்கு கையேடுகள் மற்றும் வெளியீடுகள், துறைத் தேர்வுகளுக்கான வெளியீடுகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள், இந்திய சட்ட அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், சிறப்பு அரசிதழ்கள் மற்றும் தமிழ்நாடு தேர்வாணைய வெளியீடுகள் ஆகியவை பொதுமக்களுக்கு இவ்விரு அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

3. அரசு வெளியீடுகள், வெளியூர் மற்றும் புற நகரங்களில் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. தவிரவும், அரசு வெளியீடுகள் மற்றும் அரசு ஊழியர்களுக்குத் தேவையான பணிப் பதிவேடுகள் இவ்வெளியீடு நிலையங்களிலும் மற்றும் மாவட்ட கருவூலங்கள் மூலமும் விற்கப்படுகின்றன.

4. தனி நபரின் பெயர்/மதமாற்றம் குறித்த அறிவிக்கையைத் தமிழ்நாடு அரசிதழ் பாகம் VI-பகுதி 4-ல் வெளியிட வேண்டிய மனுக்கள் இங்கு பெறப்படுகின்றன. அதற்குரிய கட்டணம் ரூ.160/- ஆகும். அரசிதழ்களின் பிரதிகள், நேரடியாகவும் அஞ்சல் மூலமாகவும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## அரசு எழுதுபொருள் கிடங்கு:

எழுது பொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் காகிதங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து மாநிலம் முழுவதிலுமுள்ள அரசு அலுவலகங்களுக்கு வழங்கும் மைய முகவர் அமைப்பாக இது இயங்குகிறது. அனைத்து மாநில அரசு



அலுவலகங்களுக்கும் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் பிற பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. எனினும் மத்திய அரசு நிதி உதவி பெறும் அரசு நிறுவனங்களுக்கும், நிதி உதவி பெற்று அதன் தொடர்பான திட்டங்களை அமலாக்கம் செய்யும் அரசு நிறுவனங்களுக்கும் முன்கூட்டியே உரிய தொகையினைப் பெற்று எழுது பொருட்கள் மற்றும் காகிதங்கள் வழங்கப்படுகின்றன. இந்த அலுவலகம் ஒரு துணை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட 215 பணியாளர்களைக் கொண்டு ஒரு உதவி இயக்குநர் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

2. காகிதம் மற்றும் அட்டைகள் போன்ற எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும், தட்டச்சுப் பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவைகள் தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு (D.G.S.&D.) மூலம் நிர்ணயிக்கப்பட்ட விலைப்புள்ளிகள் மூலமும் கொள்முதல் செய்யப்படுகின்றன.

3. ***1998-99***-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி இடைத் தேர்தலுக்கான எழுதுபொருள் தேவைகள், இக்கிடங்கின் கையிருப்பில் இருந்தவற்றில் இருந்து வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ***1999***-ஆம் ஆண்டு பிப்ரவரி ***28ம்*** தேதி வரை கொள்முதல் செய்யப்பட்ட எழுது பொருட்களின் மதிப்பு ***ரூ.12,26,08,577*** ஆகும். மேலும் ***ரூ.11.25*** கோடிக்கான எழுது பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. ***1999-2000***-க்கான எழுதுபொருள் கொள்முதல் மதிப்பு ***ரூ.16.5*** கோடியாக இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

4. தொழிலாளர்களின் நலன் கருதி அனைத்து தொழிலாளர்களுக்கும் முதலுதவி வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் சிற்றுண்டி கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

5. ஒரு பளுதூக்கும் இயந்திரமும், ஒரு ஹைட்ராலிக் தள்ளூர்தியும் 1998-99-ல் பெறப்பட்டுள்ளன. மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் தேவையான எழுதுபொருட்கள், இக்கிடங்கில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றன. இக்கிடங்குடன் எதிர்காலத்தில் விருத்தாச்சலம், சேலம் மற்றும் மதுரை ஆகிய கிளை அச்சகங்களிலிருந்து எழுதுபொருட்களை விநியோகம் செய்யும்பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதிக அளவு மற்றும் விலை உயர்ந்த காகிதங்கள் வாங்க வேண்டியுள்ளதாலும்,

தேவைக்கு அதிகமான மூலதனத்தை முடக்காமல் இருக்கும் பொருட்டும் எழுதுபொருட்களை நன்முறையில் பயன்படுத்தும் பொருட்டும் அரசு எழுதுபொருள் கிடங்கின் பொருள் மேலாண்மையை (Inventory Management) இவ்வாண்டு முதல் கணிப்பொறிமயமாக்கிக் கண்காணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நலம்:

தொழிலாளர்களுக்காக, தண்டையார்பேட்டையில் 300 குடியிருப்புகள் உள்ளன. அங்குள்ள 'சி' வகை குடியிருப்புகளைச் சுற்றி வெளியார் ஆக்கிரமிப்புகளை தடுக்க சுற்றுச் சுவர் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குடியிருப்பு மற்றும் அலகுகளில் துப்புரவுப் பணிகள் ஒரு சுகாதார மேற்பார்வையாளரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அரசு மைய அச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர், அரசு கிளை அச்சகம் உயர் நீதிமன்ற வளாகம், எழுதுபொருள் கிடங்கு, அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் இயக்ககத்தில் உள்ள பணியாளர்களின் நலனைக் கவனிக்கிறார். தொழிலாளர்களுக்கு ரொட்டி மற்றும் தேநீர் படி மாதம் ஒன்றுக்கு ரூ.50/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சிற்றுண்டிச் சாலைகள், அரசு மைய அச்சகம், சென்னை மற்றும் மதுரை கிளை அச்சகத்தில் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. அரசு மைய அச்சகத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் குழந்தைகளைக் கவனிக்கும் பொருட்டு குழந்தைகள் காப்பகம் ஒன்றும் சென்னை மைய அச்சகத்தில் இயங்கி வருகின்றது. அக்குழந்தைகளுக்குப் பால் மற்றும் பிஸ்கட்டுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளைப் பாதுகாக்க ஒரு பணிப்பெண் நியமிக்கப்பட்டு, குழந்தைகளின் நலன் நல்லமுறையில் கவனிக்கப்பட்டு வருகின்றது.

அரசு மைய அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலர் கவனித்து வருகிறார்.

அனைத்து தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், இரண்டாண்டிற்கு ஒரு முறை, மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு, அதற்கான தையற்கூலி ஒரு ஜோடிக்கு ரூ.100/- வீதம் ரூ.300/-- வழங்கப்படுகின்றது.

மேலும், ஈய கொதிகலன் உள்ள தனியச்சு மற்றும் வரியச்சு வார்ப்பு பிரிவுகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு முகக் கவசம் வழங்கப்படுகின்றது. அத்துடன், அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.2/-வீதம்





பால் படி வழங்கப்படுகின்றது. இரவு நேரப்பணி புரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.7/-வீதம் இரவு நேரப்படி அளிக்கப்படுகின்றது.

### நல நிதி:

தொழிலாளர், பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால், உடனடியாக ரூ.100/-நல நிதியாக அவரது இறுதி சடங்கிற்கு வழங்கப்படுகின்றது. மேலும் அன்னாரின் வாரிசுதாரருக்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ.200/- வழங்கப்படுகின்றது.

### தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சகத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணய சங்கம்

இக்கூட்டுறவு சங்கம் 5-5-1923 முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் ரூ.50,000/- கடன் வழங்கப்படுகின்றது.

தொழிலாளர் நலனைக் கருதி தொழிலாளர் கூட்டுறவு பண்டக சாலை, அரசு மைய அச்சக வளாகத்தில் செயல்பட்டு அதில் உறுப்பினராக உள்ளவர்களுக்குக் கடன் வசதியில் பொருட்களை வழங்கி வருகின்றது.

**1999-2000-ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்ட விவரங்கள்**

| வரிசை எண் | இயந்திரத்தின் விவரம் மற்றும் இடம். | | விலை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அரசு மைய அச்சகத்திற்கு சீட்ஃபெட் ஆப்செட் (Sheet fed Off set) அச்சுப் பொறி வாங்குதல் | .. | 30.00 |
| 2. | சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்திற்கு 'லாமினேட்டிங்' இயந்திரம் வழங்குதல் | .. | 1.50 |
| 3. | சேலம் அரசுக் கிளை அச்சகத்தில் கணினி அச்சு முனையம் ஏற்படுத்துதல் | .. | 2.15 |
| 4. | சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்திற்கு கணினி அச்சு முனையம் ஏற்படுத்துதல் | .. | 3.35 |
| 5. | சென்னையிலுள்ள அரசு மைய அச்சகம், சேலத்திலுள்ள அரசுக் கிளை அச்சகம் ஆகியவற்றிற்கு லேசர் அச்சுப் பொறி வழங்குதல் | .. | 2.00 |

[1999 மே 4

| வரிசை எண். | இயந்திரத்தின் விவரம் மற்றும் இடம். | | விலை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 6. | சேலத்திலுள்ள அரசுக் கிளை அச்சகத்திற்கு 'டாட்மேட்ரிக்ஸ்' அச்சுப் பொறிகள் வழங்குதல் | .. | 0.15 |
| 7. | சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்திலும், சேலம் அரசுக் கிளை அச்சகத்திலும் 2 கி.வோ.ஆ. மற்றும் 1 கி.வோ.ஆ. திறன் கொண்ட தடங்கலில்லா மின் வழங்கு அமைப்பு ஏற்படுத்துதல் | .. | 2.40 |
| 8. | சேலத்திலுள்ள அரசுக் கிளை அச்சகத்திலும், சென்னையிலுள்ள அரசு மைய அச்சகத்திலும் ஜன்னல்வகை சீர்வளிச்சாதனம் பொருத்துதல் | .. | 3.40 |
| | மொத்தம் | .. | 44.95 |

## தொலைநோக்கு கண்ணோட்டம்:

அரசு அச்சகங்களில் தற்பொழுது வழக்கத்திலுள்ள லெட்டர் பிரஸ் அச்சுப்பணி பழைய முறையாகிவிட்டது. தனியார் அச்சகங்களில் தரமான அச்சுப்பணி குறைந்த செலவிலேயே கிடைக்கின்றது. எனவே அரசு அச்சகங்களிலும் காலத்திற்கேற்றாற்போல் புதிய மாற்றத்தினை கொண்டு வரவேண்டியுள்ளது. முதற்கட்டமாக, உயர் நீதிமன்றக் கிளை அச்சகம் மற்றும் மதுரை கிளை அச்சகம் இவ்வாண்டு நவீனமயமாக்கப்படவுள்ளன. மேலும், மற்ற அச்சகங்களும் படிப்படியாக நவீனமயமாக்கப்பட உள்ளன. இப்பழையமுறை அச்சுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், அரசின் முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டு, அவ்வப்போது பணிகளை பிற அச்சகங்கள் மூலம் அச்சிட்டுக் கொள்ள 'தடையின்மைச் சான்றிதழ்' (NOC) அளிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர்க்க, அரசு அச்சகங்களை நவீனமயமாக்குதல் மூலம், அரசின் அனைத்து அச்சுப் பணிகளும், இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படும்.

அரசுத் துறைகள் கணிப்பொறிமயமாக்கப்படுவதனால், அதற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் கணிப்பொறி எழுதுப் பொருட்கள் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1999 மே 4]

இத்துறை, அச்சிடும் பணியில் ஈடுபடுவதால் அனைத்துத் துறைகளைப் பற்றிய தகவல்களைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் மக்கள் சாசனங்களை (Citizen's Charter) அச்சிட்டு வழங்குகின்றது. அவைகளை, நூலகங்கள் மூலம் வினியோகிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி 1999-ஆம் ஆண்டு முதல் செயலாக்கப்பட உள்ளது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் அதிகப்படியான மனித ஆற்றல் உள்ளது. லெட்டர் பிரஸ் முறை நீக்கப்படுவதனால் ஏற்படும் உபரி மனித ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்தி, அச்சிடும் பணியின் தரத்தை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் கூடுதல் பணிகளையும், தனியார் அச்சுப் பணிகளையும் வர்த்தக ரீதியாகப் பெற்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இத்துறையின் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு-II

*(71-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 46

# செய்தி—திரைப்படத் தொழில்நுட்பவியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

### முன்னுரை

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் வியத்தகு சாதனைகளும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன. இதனால் மக்கள் தொடர்பு, தகவல் பரப்புமுறை ஒரு மகத்தான புரட்சியைக் கண்டுள்ளது. விண்வெளியில் தகவல் நெடுஞ்சாலைகளும், இணையங்களும் உருவாகியுள்ளன. தகவல் தொடர்பு நுட்பத்தில் விஞ்ஞான இயல் ஏற்படுத்திய மகத்தான சாதனைகளால் பன்னாட்டு மக்கள் உறவும், நட்பும், கூட்டுறவும் மிக எளிதாகக் கிடைக்கின்ற முறையில், உலகமே ஓர் ஊர் என்று காணக்கிடைக்கும் அளவிற்குச் சுருங்கியும், நெருங்கியுமுள்ள காலம் இது.

மனித அறிவும், ஆற்றலும் பல்வகையில் பன்மடங்கு உலகளவில் பெருகியுள்ளது. மனித ஆற்றலையும், தகவல் நுட்பம் கண்டுள்ள உயர்நிலை அறிவையும் பயன்படுத்தி, வளரும் சமுதாயம், தன்னை வளப்படுத்தி, வலுவாக்கிக் கொள்வது மிக இன்றியமையாதது. இப் பணி தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமுடையது மட்டுமின்றி, அவசர அவசியத் தேவையுமாகும். ஏனெனில் வாக்களித்த மக்களுக்கு, அந்த மக்களால் உருவாக்கப்பட்ட 'மக்கள் அரசு' என்ன செய்து வருகிறது என்று வகைப்படுத்தி, மக்களுக்குச் சொல்வதும், மக்களின் பிரதிபலிப்பை, எண்ணங்களை அரசுக்குக் கொண்டு சேர்ப்பதும் தலையாய பணியாகும்.

செய்தியும், தகவல் நுட்பமும் மனித உள்ளத்தை உரமிட்டு வளர்க்கும் உயிர்ச்சத்து. இத்தகைய சூழலில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மக்கள் தொடர்புக்கு முன்னுரிமையும், முதலிடமும் அளிக்க வேண்டியுள்ளது. மக்கள் தொடர்பு-தகவல் நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி, மக்களாட்சி ஆற்றும் பல்வகைப் பணிகளை முறையாக, மக்களிடம் விளக்கி விளம்பரப்படுத்தி,

[1999 மே 4

தகவல் அளித்து, சமூகவியல், பொருளியல் துறைகளில் துரிதமாக அரசின் இலக்குகளையும், இலட்சியங்களையும் எய்திட, செய்தி-மக்கள் தொடர்புத் துறை பல்வகை ஆக்கப்பணிகளைப் பொறுப்புடனும் சிறப்புடனும் ஆற்றிவருகிறது.

நித்தம் வளரும் புத்தம் புதுக் கலையாகிய செய்தி-மக்கள் தொடர்புக்கலைக்கு அறிவியல் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன் நிற்கிறது

தகவல் களஞ்சியமாகத் தமிழரசு; தமிழக அரசின் சாதனைகளை, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வாரந்தோறும் வண்ணமுறத் தரும் 'அரசு செய்தி'; சிந்தையில் ஓவியமாகப் பதியும் செய்தி மலர்கள்; கண் வழி புகுந்து கருத்தில் பதியும் பொருட்காட்சி அரங்குகள் மற்றும் வீடியோ செய்தி மலர்கள். நாட்டோர் புரிந்து கொள்ளத்தக்க நாளிதழ் விளம்பரங்கள் - எனப் பலவழிகளில் மக்கள் பணியில், அரசின் தூதுவனாகச் செயல்படுகிறது செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

## அத்தியாயம்-1

## பொருட்காட்சி

அரசின் கொள்கைகளையும் நலத் திட்டங்களையும் சாதனைகளையும் விளக்கும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் பொருட்காட்சிகள் மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன. அரசுத் துறைகளும், அரசுச் சார்பு நிறுவனங்களும் அரங்கங்களை அமைக்கும் இந்தப் பொருட்காட்சிகள் மக்களுக்கு மகிழவூட்டுவது மட்டுமல்லாமல், அரசுத் திட்டங்களையும் ஆக்கப் பணிகளையும் அறியச் செய்யவும் பயன்படுகின்றன.

தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்கள் சிலவற்றில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1978-ஆம் ஆண்டு முதல் 1999-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய இத்துறையால் 98 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, நிகர இலாபமாக ரூ. 717.46 இலட்சம் அரசுக்கு கிடைத்துள்ளது.

1999-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ஆம் நாள் அரசின் 99-ஆவது பொருட்காட்சி மதுரையில் தொடங்கப்பட்டு சிறப்புடன் நடந்து வருகின்றது.



1999 மே 4]

100-ஆவது அரசுப் பொருட்காட்சி திருச்சி மாநகரில் தற்போது சிறப்புடன் நடைபெற உள்ளது.

இந்த இரண்டு பொருட்காட்சிகளின் மூலம் ரூ. 33 இலட்சம் அரசுக்கு இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக அரசின் 100 பொருட்காட்சிகளின் மூலம் ரூ. 750 இலட்சம் அரசுக்கு வருவாய் கிடைக்கும்.

மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பெருநகரங்களில் ஒவ்வோராண்டும் நடத்தப்படும் இத்தகைய பொருட்காட்சிகள் வேலூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலே இரண்டாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

'வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றிப் பொருட்காட்சிகள் தகவல் களஞ்சியம் போல் திகழவேண்டும்' என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி இப்போது அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன; அரசுத் துறைகளின் சாதனைகள் இந்தப் பொருட்காட்சிகளின் மூலம் மக்களைச் சென்றடைகின்றன.

சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் இத்துறை எழிலுறப் பங்கேற்கிறது. ஆண்டுதோறும் புதுடெல்லியில் நடத்தப்படும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும் தமிழ்நாடு அரசு அரங்கம் அமைக்கின்றது. தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் மதநல்லிணக்கத்தில் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் 'மலர்ப் பேரணி' விழாவிலும் இத்துறை பங்கேற்கிறது. மதநல்லிணக்கத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் இந்த மலர்ப் பேரணியில் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து முதற் பரிசினை நமது தமிழ்நாடு அரசு பெற்று வருவது பெருமைக்குரியதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு தொடர்பான முக்கியப் பணிகளுடன் ஒருங்கிணைப்புப் பணிகளையும் பொருட்காட்சிப் பிரிவு செவ்வனே செய்து வருகின்றது.

[1999 மே 4

## அத்தியாயம்-2

## நினைவகங்கள், அரங்கங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள்.

நாட்டு விடுதலைக்காக, சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் நினைவாக தமிழகத்தில், சென்னை மற்றும் பல்வேறு மாவட்டங்களில் கீழ்க்கண்ட நினைவகங்கள், அரங்குகள், நினைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. செய்தி-மக்கள் தொடர்புத் துறையினரால் அவை அழகுறப் பாராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. வள்ளுவர் கோட்டம், சென்னை.
2. பேரறிஞர் அண்ணா நினைவிடம், பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், சென்னை.
3. இராஜாஜி மண்டபம், சென்னை.
4. இராஜாஜி நினைவாலயம், சென்னை.
5. காமராஜர் நினைவு இல்லம், சென்னை.
6. காமராஜர் நினைவகம், சென்னை.
7. காந்தி மண்டபம், சென்னை.
8. 'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம், சென்னை.
9. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை.
10. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சென்னை.
11. தியாகிகள் மணிமண்டபம், சென்னை.
12. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்.
13. முத்துமண்டப - இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வேலூர்.
14. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்.
15. பெரியார் - அண்ணா நினைவகம், ஈரோடு.
16. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.
17. வ. வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சி.
18. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.



1999 மே 4]

19. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி.
20. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.
21. காமராஜர் இல்லம், விருதுநகர்.
22. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்.
23. பாரதி இல்லம், எட்டயபுரம்.
24. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்.
25. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில்.
26. பொதுவுடைமை வீரர் ப ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில்.
27. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி.
28. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
29. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெல்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம்.
30. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்.
31. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்.

சென்னையில் உள்ள கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காமராஜர் நினைவகம், இராஜாஜி நினைவாலயம், பக்தவத்சலம் நினைவிடம் மற்றும் காந்தி மண்டபம் ஆகியவற்றில் நுழைவு வளைவுகள், பூங்காக்கள், மின்விளக்குகள், புல்வெளி அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 50 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, அண்ணா சதுக்கத்தில் பேரறிஞர் அண்ணா நினைவிடத்திலுள்ள அருங்காட்சியகத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் புகைப்படங்கள், நூல்கள், அவர் பயனபடுத்திய பொருட்கள் வைப்பதற்கு ரூ. 1.99 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புகைப்படங்கள் தயார் செய்து, லேமினேசன் செய்யப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகியவற்றினைத் தனியார் பாதுகாப்பு அமைப்புகள் மூலம் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டிட ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது தனியார் பாதுகாவலர்கள் மூலம் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் ரூ. 21.12 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வ.வே.சுப்பிரமணியம் அவர்களின் நினைவு இல்லத்தைச் செம்மைப்படுத்தி புகைப்படங்கள், நூலகம் அமைத்திட ரூ. 1.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. புகைப்படங்கள், நூல்கள் வாங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வ.வே. சுப்பிரமணியம் இல்லம் விரைவிலேயே திறந்து வைக்கப்பட உள்ளது.

கடலூர் மாவட்டம், மருதூர் கிராமத்திலுள்ள வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் இல்லத்தினைப் புதுப்பொலிவுடன் மாற்றிட ரூ. 2 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இராஜாஜி நினைவாலயத்தில், பழுதடைந்துள்ள ஓவியங்களைப் புதுப்பொலிவு பெறச் செய்ய ரூ. 2.67 இலட்சம் செலவில் ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் சுற்றுச்சுவருக்கு மேல் இரும்புவேலி அமைக்கின்ற பணிகள் ரூ. 6.60 இலட்சம் செலவில் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்திலுள்ள மகாகவி பாரதியார் மணிமண்டபத்தில் பாரதியார் தொடர்பான புகைப்படங்கள், நூல்கள், முக்கியச் செய்தி நறுக்குகள் வைத்து முழுமை பெறச்செய்திட ரூ. 97,490 செலவில், மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படங்கள் தயார் செய்து, லேமினேசன் செய்து வைக்கப்பட்டுள்ளன. பாரதியாரைப் பற்றிய நூல்கள் வாங்கப்பட்டுள்ளன; அவருடைய கையெழுத்துப் பிரதிகள் "லேமினேசன்" செய்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள காந்தி அருங்காட்சியகத்தில் ரூ. 3,75,300 செலவில் அண்ணல் காந்தியடிகளின்





புகைப்படங்கள் புதியதாகத் தயார் செய்து "லேமினேசன்" செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அதற்கான மேஜை, நாற்காலிகள், அலமாரிகள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. ஓவியப்படங்கள் சரிசெய்திடும் பணி நடைபெற்று வருகிறது.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரிலுள்ள கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லம் மற்றும் காலியிடம் ரூ. 9.58 இலட்சத்திற்கு அரசால் வாங்கப்பட்டு அவ்வில்லத்தில் ரூ. 1.55 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை, கிண்டியில் காந்தி மண்டப வளாகத்தில் முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவாக ரூ. 25.00 இலட்சம் செலவில், அன்னாரின் நினைவிடம் அமைக்கப்பட்டு, 13-3-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் ரூ. 15.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 19-4-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சிலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-6-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் இந்திய விடுதலைப் போர்த் தியாகிகள் நினைவாக "தியாகிகள் மணிமண்டபம்" ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 2-10-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அம்மண்டபத்தில் ரூ. 7.60 இலட்சம் செலவில் தமிழ்நாட்டிலுள்ள மறைந்த தியாகிகளின் புகைப்படங்கள், மாவட்டம் வாரியாகக் காட்சிப் பலகையில் வரிசையாக அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. தியாகிகள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சென்னை, கிண்டியில் தீரன் சின்னமலை திருவுருவச்சிலை 4-10-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

[1999 மே 4

மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாததாஸ் வாழ்ந்த இல்லம் ரூ.11,82,500 செலவில் அரசால் வாங்கப்பட்டு, ரூ. 50.00 இலட்சம் செலவில் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம், நூலகம் மற்றும் திருமண மண்டபம் அமைக்கப்பட்டது. 27-12-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவ்வில்லம் திறந்து வைக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெல்கட்டும்செவலில் ரூ.50 இலட்சம் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் நினைவு மாளிகை, கணகாட்சிக்கூடம் மற்றும் திருமண மண்டபம் அமைக்கப்பட்டு, வீரன் பூலித்தேவன் திருவுருவச் சிலை வைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28-12-1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பூலித்தேவன் வாழ்ந்த அரண்மனையின் நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை அவாது வாரிசுதாரர்களுக்கு ரூ.3,04,000 வழங்கிட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பூலித்தேவன் வாழ்ந்த அரண்மனையின் பழைய கட்டிடத்திற்கான இழப்பீட்டுத் தொகை வாரிசுதாரர்களுக்கு வழங்க ரூ.3,76,500 மதிப்பீடு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலூரில், முதல் சுதந்திரப் போர் எனப்படும் 1806-ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தின்போது உயிர்நீத்த, இந்திய வீரர்களின் நினைவாக, வேலூர் நகரில் ரூ.3 இலட்சம் செலவில் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டு, 20-12-1998 அனறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## புதிய நினைவகங்கள்

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக மணிமண்டபம் அமைத்திட ரூ.20.50 இலட்சம் பொதுப்பணித் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

2. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை நகரில், உடுமலை நாராயண கவி நினைவாக மணிமண்டபம் அமைத்திட, ரூ.20.50 இலட்சம் பொதுப்பணித் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்கான பணிகளும் செம்மையுற நடைபெற்று வருகின்றன.



1999 மே 4]

## திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி:

கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து 366 மீட்டர் தொலைவில் கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவப்பட்டுள்ள பெரிய பாறையின் அருகிலுள்ள சிறிய பாறையில், 133 அடி உயரத்தில் (பீடம் 38 அடி, சிலை 95 அடி) உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவர் சிலையை வடித்து நிறுவ 1975-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு முடிவு செய்தது. திருவள்ளுவர் சிலை செய்கின்ற பெரும் பொறுப்பு திரு. கணபதி ஸ்தபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை செய்வதற்கு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் அரசு ஆணை (நிலை) எண் 341, நாள்: 24-7-90 மூலம் செலவின மதிப்பீடு ரூ.360.15 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை நிறுவப்பட உள்ள பாறையினைச் சமன் செய்யவும், சிலை நிறுவும பணிக்குத் தேவையான பொருட்களைச் சிலை அமைக்கும் இடத்திற்குக் கடற்கரையிலிருந்து எடுத்துச் செல்கின்ற பணியினை மேற்கொள்ளவும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கு 8-2-94 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 27, செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் மூலம் செலவின மதிப்பீடு ரூ.137.50 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 6-9-1990 அன்று தமிழ்மறை தந்த திருவள்ளுவர் திருவுருவச்சிலை அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. முதல் கட்டப்பணி திரு. கணபதி ஸ்தபதி அவர்களால் 27-1-1991 அன்று தொடங்கப்பட்டது.

## திருவள்ளுவர் சிலை பற்றிய விவரம்:

| | |
|---|---|
| பீடத்திலிருந்து சிலையின் மொத்த உயரம் | 133 அடி |
| சிலையின் உயரம் | 95 அடி |
| ஆதாரபீடத்தின் உயரம் | 38 அடி |
| சிலை-ஆதாரபீடம்-சுற்றுச் சுவர் | முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டு வருகிறது. |

| | |
|---|---|
| சிலை மற்றும் ஆதாரபீடத்திற்குத் தேவைப்படும் கற்களின் எண்ணிக்கை | 3,681 கற்கள் |
| கற்களின் மொத்த கன அளவு | 83,640 கன அடி |
| சிலை மற்றும் ஆதாரபீடத்தின் எடை | 7,000 டன் |
| ஒரு கல்லின் சராசரி எடை | 3 டன் முதல் 8 டன் வரை |

திருவள்ளுவர் சிலைக்குத் தேவையான கற்கள் செதுக்குகின்ற பணிகள் தமிழ்நாட்டில், சென்னை சோழிங்கநல்லூர், திருநெல்வேலி மாவட்டத்தில், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்று வருகின்றன. 1990-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இப் பணிகள் 1991-ஆம் ஆண்டு முதல் 1996-ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் மிகவும் தொய்வடைந்த நிலையில் பணிகள் நடைபெற்றுப் பின்னர் நிறுத்தப்பட்டன.

25-6-1997 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 1999-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட முடிவு செய்யப்பட்டு, திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் மேற்கொண்டு வருகிற சிலையமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடு ரூ.614 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடு ரூ.172 இலட்சமும் வழங்க 30-7-1997 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டது.

மேலும், திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பாறையில் கப்பலோடை மற்றும் சிறுசிறு வெடிப்புகளைச் சரி செய்கின்ற பணிகள் ரூ.93 இலட்சம் செலவில் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி கடலில் உள்ள பாறையில் அமைக்கப்பட்டு வரும் திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பணிகள் 1999-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நிறைவுபெறும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



# அத்தியாயம்-3

## அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும், விழிப்புணர்வுக்கும் அருந் தொண்டாற்றிய பெருந்தலைவர்கள் பலராவர். அவர்களில் தமிழ் மண்ணில் பிறந்த பெருமைக்குரியவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் நாட்டுப் பற்றையும், சமுதாய உணர்வையும், அருந் தொண்டினையும், நாட்டு மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையிலும், அவர்களுடைய பிறந்தநாள் போன்ற நிகழ்ச்சிகள், அரசு விழாக்களாக, மாநில அளவிலான விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

1998-99-ஆம் ஆண்டில் மாவட்டங்களில் அரசுச் சார்பில் மாநில அளவிலான விழாக்கள் கீழ்க்கண்டவாறு கொண்டாடப்பட்டன.

1. வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா - தூத்துக்குடி மாவட்டம்.
2. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, அவரது சமாதியில் மலர் வளையம் வைத்த நிகழ்ச்சி - இராமநாதபுரம் மாவட்டம்.
3. தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் நிகழ்ச்சி-திருவள்ளூர் மாவட்டம்.
4. மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா-தூத்துக்குடி மாவட்டம்.
5. வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாள் விழா-தூத்துக்குடி மாவட்டம்.
6. வல்வில் ஓரி விழா-நாமக்கல் மாவட்டம்.
7. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா-தருமபுரி மாவட்டம்.

முன்னாள் முதலமைச்சர்கள் பி.எஸ். குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா ராஜபாளையத்திலும், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் நூற்றாண்டு விழா சென்னையிலும் நடத்தப்பட்டன.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவு பெறுவதனையொட்டி, கயத்தாறில் அரசுச் சார்பில் இந்த ஆண்டு விழா சிறப்பாக எடுக்கப்படவுள்ளது.

மானங்காத்த சீமையின் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200-ஆம் ஆண்டினை நிறைவுகொள்ளும் வகையில், 2001-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசுச் சார்பில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

[1999 மே 4

தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசுச் சார்பில் அவர்களது பிறந்த நாளன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

## அத்தியாயம்-4

## சுதந்திரத் திருநாள் பொன்விழா

சுதந்திரத் திருநாள் பொன்விழாவினை முன்னிட்டு 1997-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1998-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் வரை பலவகைச் சிறப்பு நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பல்வேறு கட்சித் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள் அடங்கிய மாநில அளவிலான குழுவும், துறைச் செயலாளர்கள் தலைமையில் துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டன. குழுவின் ஆலோசனைகளை-மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான உயர்நிலைக் குழு பரிசீலனை செய்த பின்னர் பல்வேறு நிகழ்ச்சிகள் ஓர் ஆண்டுக் காலம் சிறப்பாக நடத்தப்பட்டன.

"வெள்ளையனே வெளியேறு" நிகழ்ச்சியை நினைவுகூரும் பேரணி, புதுடெல்லியில் நடைபெற்ற பேரணியில் தமிழ்நாடு சார்பில் 54 தியாகிகள் பங்கேற்பு, சுதந்திரத் திருநாள் பொன்விழா மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் 15-8-1997-லிருந்து 31-8-1997 வரை 15 நாட்களுக்குத் தீண்டாமை ஒழிப்பு நாட்கள் அனுசரிப்பு, சமபந்தி விருந்து, தீண்டாமை ஒழிப்பு மாநாடு, துப்புரவு இயக்கம், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கவியரங்கங்கள், கருத்தரங்குகள், புகைப்படக் காட்சிகள், மாணவ—மாணவியரிடையே கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகள் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

சிறைக் கைதிகள் 3300 பேருக்குத் தண்டனை குறைப்பு வழங்கப்பட்டது; 554 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்குவது, சமூக ஒற்றுமை, மத நல்லிணக்கம் ஆகியவற்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு அனைத்துச் சமூகத்தினரும் ஒரே இடத்தில் ஒற்றுமையாக வாழ வழிவகை செய்யும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனைகளின் அடிப்படையில் "சமத்துவபுரம்" என்று அழைக்கப்பட்டு-தற்போது "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்று பெயரிடப்பட்டுள்ள குடியிருப்புகள் தமிழ்நாட்டில் 100 இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது.



1999 மே 4]

மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உள்ளடக்கியது இக் குடியிருப்புகள். ஒவ்வொரு குடியிருப்பிலும் 40 விழுக்காடு தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், 25 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், 25 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், 10 விழுக்காடு பிற வகுப்புகளைச் சார்ந்த மக்களுக்கும் வீடுகள் இக் குடியிருப்பில் ஒதுக்கப்படுகின்றன. இதுவரை 19 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" குடியிருப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தியாகிகள் சிறப்பிக்கப்பட்டது மட்டுமல்ல, அவர்களுக்கான உதவித் தொகையும் மத்திய அரசு உயர்த்தியதற்கு இணையாக உயர்த்தப்பட்டது. தியாகிகள் மணிமண்டபம், சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம் ஆகியவை அமைக்கப்பட்டதுடன் தியாகிகள் பலரை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் பெரும்பங்கு வகித்த சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் நினைவாகத் தமிழ்நாடு அரசின் வேண்டுகோளினை ஏற்று மத்திய அரசு சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டது.

சுதந்திரத் திருநாள் பொன்விழா நிறைவு விழா நிகழ்ச்சிகள் தென்மண்டலப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து 11-8-1998-ஆம் நாளிலிருந்து 13-8-1998-ஆம் நாள் வரையில் நடத்தப்பட்டன. 11-8-1998-ஆம் நாளன்று நடைபெற்ற நிறைவு விழாவில் மேதகு தமிழக மற்றும் கர்நாடக மாநில ஆளுநர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மேதகு புதுவை மாநிலத் துணைநிலை ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி, கோயம்புத்தூர், வேதாரண்யம் ஆகிய இடங்களிலிருந்து சுதந்திரச் சுடர் தொடரோட்டம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் தொடங்கப்பட்டு, 10-8-1998 அன்று சுடர்கள் சென்னை வந்தடைந்தன. இச் சுடர்களுடன் ஆந்திரம், கேரளம், கர்நாடகம், புதுவை, அந்தமான், லட்சத்தீவு ஆகிய இடங்களிலிருந்து எடுத்துவரப்பட்ட சுதந்திரச் சுடர்களும் 11-8-1998 அன்று 5000 பள்ளி மாணவ, மாணவியர், விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்ட பேரணியில், போர் நினைவுச் சின்னத்திலிருந்து கடற்கரையிலுள்ள காந்தியடிகள் சிலை வரை எடுத்து வரப்பட்டு, அங்கு

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் சுதந்திரச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. இப்பேரணியை வணக்கத்திற்குரிய சென்னை நகர மேயர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

மேலும், துப்புரவு இயக்கங்களும், கலை நிகழ்ச்சிகளும், பள்ளிகளில் அறிவியல் கண்காட்சிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளிடையே கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி, மற்றும் கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பு சிறப்பு முகாம்களும், நிறைவு விழா நிகழ்ச்சிகளாக நடத்தப்பட்டன. பள்ளிகளில் நாட்டு ஒற்றுமையை வலியுறுத்தும் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## அத்தியாயம்-5

## தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தி தீவிரப் பிரச்சாரம் மற்றும் விளம்பரம் செய்தல்

தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில், சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தி, செய்தி மக்கள் தொடர்புத் துறை வாயிலாகத் தீவிரப் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1999-ஆம் ஆண்டினை, தீண்டாமை ஒழிப்பு-மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டாக அறிவித்துள்ளார்கள்.

இந்த ஆண்டில் இந்நோக்கத்தினை வலியுறுத்தி பிரச்சாரங்கள், விளம்பரங்கள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:



1. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 10 நிமிட திரைப்படம், ஒரு நிமிடத் திரைப்படம், 20 நிமிட வீடியோ படம், ஒரு நிமிட வீடியோ படம் ஆகியவற்றைத் தயாரித்துள்ளது. இதற்காகத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ரூ.20.91 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவை திரையரங்கங்கள், தொலைக்காட்சிகள், வீடியோ வேன்கள், கேபிள் டி.வி. மூலமாகத் தமிழ்நாடெங்கும் ஏப்ரல் திங்களிலிருந்து ஒளிபரப்பப்பட்டு, திரையிடப் பட்டு வருகின்றன.

2. இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில், தீண்டாமை ஒழிப்பினை வலியுறுத்தி 15 நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களிலும் நாடகங்கள் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மூலம் இக்கருத்துக்களை விளக்க இயல், இசை, நாடக மன்றத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. மாவட்டங்களில் உள்ளூர் கலைஞர்களைப் பயன்படுத்தி கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திடவும், பிற நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களுக்குத் தலா ரூ.40,000-மும், பிற மாவட்டங்களுக்குத் தலா ரூ.25,000-மும், ஆக மொத்தம் ரூ.8.20 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

4. தற்பொழுது, தமிழ்நாடெங்கும் பள்ளிகளில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாணவர்களால் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்படுகிறது. மாவட்டங்களில் அரசு நிகழ்ச்சிகள், கூட்டங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புக் கூட்டங்கள் ஆகியவை தொடங்கும்பொழுதும், இந்த உறுதிமொழி எடுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

5. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் வாசகங்கள் தமிழரசு, அரசுச் செய்தி, அரசு அழைப்பிதழ்கள், அரசு விளம்பரங்கள் ஆகியவற்றில் அச்சிடப்படுகின்றன.

6. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தும் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவற்றினைக் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகளிடையே நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. திரைப்பட ஸ்லைடுகள், சுவரொட்டிகள், மூலமாகப் பிரச்சாரம்

[1999 மே 4

செய்யவும், வானொலி விளம்பரங்கள் மூலமாகப் பிரச்சாரம் செய்யவும், பால் பைகள், கூட்டுறவு வங்கிக் கணக்குப் புத்தகங்கள், விவசாய இடுபொருட்கள் வாங்கும் பைகள், நியாயவிலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்கள் வழங்கும் பைகள் ஆகியவற்றில் தக்க வாசகங்கள் பொறிக்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அஞ்சலக உள்நாட்டுக் கடிதம் மற்றும் அஞ்சலக சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றிலும் தக்க வாசகங்கள் அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

8. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை விளக்கும் சிறந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் வானொலி, ஒளிபரப்புகின்ற தொலைக்காட்சிகள் மற்றும் இக்கருத்துக்களை வலியுறுத்தி கதை, கட்டுரைகள் வெளியிடும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியவற்றுக்குப் பரிசுகள் அளிப்பதுடன், இதனை வலியுறுத்திச் செயல்படும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9. பல்முனை விளக்க முகாம்கள், தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளன. மாநிலம் முழுவதும் இளைஞர்கள் முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இவ்விளம்பரப் பணிகளில் மக்கள் நலப் பணியாளர்கள், அறிவொளி இயக்கத்தைச் சார்ந்தவர்கள், கிராம அமைதிக் குழுக்களைச் சார்ந்தவர்களும் பங்கு கொண்டு வருகின்றனர்.

## அத்தியாயம் - 6

## தமிழரசு- தமிழரசு அச்சகம் மற்றும் அரசுச் செய்தி

### 'தமிழரசு' இதழ்:

வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்பு றத்தே
ஆனநற் கொள்கை, அன்பில்
அற்புதம், இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம்!

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் கூற்றுக்கிணங்க, நாட்டு மக்கள் நலம் கருதி அரசு தீட்டுகின்ற நலத் திட்ட உதவிகள் குறித்தும்,



1999 மே 4]

தகுதியானவர்கள் அவைகளைப் பெற்றுப் பயனடைந்திடும் வகையிலும், தமிழகத்தை வளங்கொழிக்கும் மாநிலமாக ஆக்கிட அரசு அயராது ஆற்றிவரும் பல்துறைச் செயலாக்கங்களையும், உண்மைச் செய்திகளையும் உள்ளடக்கி வெளியிடப்படுவதுதான் 'தமிழரசு' ஏடு. அரசு சார்புச் செய்திகளை வெளியிடுவதோடு , பொதுமக்களின் குறை தீர்க்கும் வகையில் 'எங்கள் ஊர்ப் பிரச்சினை' என்ற பகுதியையும் உள்ளடக்கி 'தமிழரசு' மாதந்தோறும் இருமுறை எழிலுற வெளியிடப்படுகிறது.

1970-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த ஏடு, வெள்ளிவிழா ஆண்டைக் கடந்து வெற்றி நடைபோட்டு வரும் பெருமைக்குரியது ஆகும். அரசு விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்புகளையும், அங்கு மேடையில் வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக மிதந்து வரும் மேன்மக்களின் உரைகளையும் தாங்கி வருவது 'தமிழரசு'. வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி, சமூக நலம், உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய கட்டுரைகளோடு அரிய பல கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வாழ்க்கைப் பாதை காட்டும் வனப்போடு வெளிவருகிறது "தமிழரசு". அவ்வப்போது இலவச இணைப்புகளும் வெளியிடப்படுகின்றன.

தமிழில் திங்கள் இருமுறை இதழாகவும், ஆங்கிலத்தில் மாத இதழாகவும் 'தமிழரசு' வெளிவந்துகொண்டிருக்கிறது. தற்போது தமிழில் 33,000 பிரதிகள் அச்சிடப்பட்டுத் தமிழகமெங்கும் தமிழ்மணம் கமழ, விநியோகம் செய்யப்படுகின்றன. ஆங்கிலத்தில், 3,000 பிரதிகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழரசு அச்சகத்தில் ரூ.36,84,702 என்ற மதிப்பீட்டில் 'வெப்-ஆப்செட்' என்ற நவீன இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இந்த நவீன இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதால், இனிவரும் தமிழரசு இதழ்கள் புதுப்பொலிவுடன் அச்சிடப்பட்டு வெளிவரும்.

### 'அரசுச் செய்தி'

'அரசுச் செய்தி' என்னும் வண்ணச் சுவரொட்டி இதழ், தமிழக முதல்வர் அவர்களால் 14-4-1997-ல் தொடங்கப்பட்டது. இந்த இதழ் வாரந்தோறும் 20,000 பிரதிகள் 'தமிழரசு' அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வருகின்றன.

'அரசுச் செய்தி' இதழில் அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், புதிய திட்டங்கள், அத்திட்டங்கள் மூலம் பயன்பெற யாரை அணுக வேண்டும்

என்ற செய்திகள் மற்றும் அரசுத் திட்டங்கள் பற்றிய முக்கியச் செய்திகள் படங்களோடு வெளியிடப்படுகின்றன. வாரந்தோறும் வெளியிடப்படும் இந்த வண்ணச் சுவரொட்டிகள், அரசு அலுவலகங்களிலும், பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களிலும், தொலைதூரக் கிராமங்களிலும், சுவர்களிலும், தட்டிகளிலும், தனி அறிவிப்புப் பலகைகளிலும் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் அனைவரும் அரசின் திட்டங்களையும், நலத் திட்டங்களையும் உடனுக்குடன் அறிந்துகொள்ள ஏதுவாகிறது.

**மேம்பாட்டுப் பணிகள்:**

அரசினர் தோட்டத்திலுள்ள 'தமிழரசு' அலுவலகக் கட்டடத்தின் மேம்பாட்டுப் பணிகள் ரூ.5 இலட்சம் செலவில் 1998-99 பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தற்போது தமிழரசு அலுவலகக் கட்டடத்தில், ரூ.3 இலட்சம் செலவில் இரண்டாம் தளம் கட்டி, அங்கு தமிழரசு அச்சக அலுவலகத்தை மாற்றியமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் - 7

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பத்தினையும், தொலைக்காட்சி நுட்பத்தினையும் கற்றுத் தருவதற்கென்றே அரசால் நடத்தப்படும் முழுமையான திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனங்கள் மூன்றில் இக்கல்வி நிறுவனமும் ஒன்றாகும். இரண்டு கல்வி நிறுவனங்கள் மத்திய அரசாங்கத்தால் புனா மற்றும் கல்கத்தாவில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தில், திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் படச்சுருள் பதனிடுதல் ஆகிய மூன்றாண்டு பட்டயப் படிப்பும், திரைப்பட நடிப்பில் ஓராண்டுச் சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மூன்றாண்டு பட்டயப் பயிற்சி ஒவ்வொன்றிலும் 12 மாணவர்களும், திரைப்பட நடிப்புப் பயிற்சியில் 21 மாணவர்களும் சேர்க்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகிறது. 1998-99 கல்வியாண்டில் 171 மாணவ, மாணவிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.





திரைப்படச்சுருள் பதனிடுதல் குறித்து தொழில்நுட்பங்களைக் கற்றுத்தருவதும் மற்றும் நடிப்புப் பயிற்சி தருவதும் நமது நாட்டில் இந்நிறுவனம் ஒன்று மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயின்று, பட்டயம் பெற்ற மாணவர்கள் இந்தியாவில் பல்வேறு நிறுவனங்களிலும், தொலைக்காட்சி தொழில்நுட்ப வல்லுநர்களாகப் புகழுடன் திகழ்கின்றார்கள். தென்னிந்தியத் திரைப்பட உலகில் நடிகர்களாகவும், தொழில்நுட்பக் கலைஞர்களாகவும் புகழ்பெற்று வருகின்றார்கள்.

இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்றுவரும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் அகில இந்திய தொழில்நுட்ப (A.I.C.T.E) புதுடில்லி, மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 40 ஆண்டுகளுக்குப் பிறகு பெருமுயற்சி எடுத்து இந்த அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த அங்கீகாரத்தினைப் பெற்றதன் மூலம் கல்லூரியின் மேம்பாட்டிற்கு உலக வங்கி மற்றும் வெளிநாட்டு நிதியுதவி கிடைக்கும். இக்கல்லூரி மாணவர்களுக்கு மத்திய அரசுத் துறையிலும் வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் பட்டயப் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவுக்காக 1996-97 வரை ரூ.10 இலட்சம் தரப்பட்டு வந்தது. கச்சா பிலிம் விலை உயர்வின் காரணமாக பின்பு, 1997-98-ல் ரூ. 15 இலட்சமாக உயர்த்தி, 1998-99 கல்வியாண்டிலிருந்து கூடுதலாக ரூ.2 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரைப்படக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, கருவிகள் வாங்கும்பொருட்டு இதுவரையில் ரூ.15 இலட்சம்தான் அதிகபட்சமாக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. 1998-99-ஆம் ஆண்டு ரூ.95 இலட்சம் இக்கல்லூரிக்கு நவீன கருவிகள் வாங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், ஒரு இயக்குநரும், ஒளிப்பதிவாளரும் இணைந்து ஒரு திரைப்படத்தை உருவாக்கக்கூடிய அளவுக்குப் பலவகை நவீன கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

1998-99-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.95.00 இலட்சம் இந்நிறுவனத்திற்காக இயந்திரங்கள், கருவிகள் மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு பேருந்து வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, கீழ்க்கண்ட செலவினம் மேற்கொள்ளப்பட்டு இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன:

[1999 மே 4

| | | | |
|---|---|---|---|
| 1. டிஜிட்டல் ஆடியோ வொர்க் ஸ்டேஷன் | .. | ரூ. | 29,90,000 |
| 2. 35 எம்.எம்.பிலிம் எடிட்டிங் இயந்திரம் மற்றும் உபகருவிகள் | .. | ரூ. | 29,55,829 |
| 3. வீடியோ ப்ரொஜக்டர் மற்றும் உபகருவிகள் | .. | ரூ. | 73,740 |
| 4. வண்ணப்புகைப்படப் பெருக்கி, பிரதி எடுக்கும் கருவி மற்றும் உபகருவிகள் | .. | ரூ. | 4,84,490 |
| 5. வெளிப்புறப் படப்பிடிப்பு பேருந்து, மின்னாக்கி | .. | ரூ. | 13,81,295 |
| 6. விளக்குகள் மற்றும் உபகருவிகள் | .. | ரூ. | 11,99,836 |
| 7. குளிர்சாதனக் கருவிகள் | .. | ரூ. | 88,692 |

1996-ஆம் ஆண்டு தேசியத் திரைப்பட விழாவில் சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதை இக்கல்லூரி மாணவர் பெற்ற பிறகு, மற்ற சர்வதேசத் திரைப்பட விழாக்களுக்கும் மாணவர்களின் குறும்படங்கள் அனுப்பப்பட்டு, அமெரிக்காவில் சிறந்த குறும்படத்திற்கான விருதினை இரண்டு முறை பெற்றுள்ளனர். தமிழக அரசு வர்த்தக ரீதியான முழுநீளச் சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு மட்டுமே மாநில அரசின் விருதினை வழங்கிவந்தது. இந்த ஆண்டு முதல் இந்நிறுவனத்தில் மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும்படங்களுக்குத் தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட விருதுகள் வழங்குவதாக ஆணையிட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. சிறந்த இயக்குநர் | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |
| 2. சிறந்த ஒலிப்பதிவாளர் | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |
| 3. சிறந்த ஒளிப்பதிவாளர் | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |
| 4. சிறந்த படத்தொகுப்பாளர் | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |
| 5. சிறந்த படம் பதனிடுபவர் | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |
| 6. சிறந்த நடிகர்/நடிகை | .. | ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ. 5,000 ரொக்கம். |



1999 மே 4]

திரைப்படக் கல்லூரிக்குப் பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வல்லுநர்களும், கச்சா பிலிம் தயாரிப்பு நிறுவனங்களிலிருந்தும் அடிக்கடி வருகை தருவதால் ரூ. 15 இலட்சம் செலவில் கல்லூரியின் கட்டடம் புதுப்பொலிவோடு மாற்றப்பட்டுள்ளது.

1997-98-ஆம் ஆண்டு வரை படப்பிடிப்புத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலியாக ரூ. 19 மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அவர்களின் நிலையினை உணர்ந்து 1998-99-ஆம் ஆண்டு முதல் அத்தொகை ரூ. 122 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.22,000 ஆக இருந்த நிதி ஒதுக்கீடு ரூ.53,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் பல கோடி மதிப்புள்ள கருவிகளைப் பராமரிப்பதற்கு ஆண்டுக்கு ரூ.7,000 மட்டுமே ஒதுக்கப்பட்டு வந்ததை மாற்றி, 1998-99 முதல் பராமரிப்புச் செலவாக ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி ஆணை பெறப்பட்டுள்ளது.

திரைப்படப்பிரிவில் தற்போது செய்தி விளக்கப்படங்கள் வீடியோவில் அதிகமாகவும், பிலிமில் குறைவாகவும் தயாரிக்கப்படுவதால் அங்கு கூடுதலாக இருந்த ரூபாய் ஒரு கோடி மதிப்புள்ள புதிய ஆரி-3 (Arri-3) கேமரா ஒன்று, பழைய கேமராவிலேயே படப்பிடிப்பு நடத்தி வந்த திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்காகப் பெறப்பட்டு, உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள அறிவியல் நகரத்துடன் திரைப்படக் கல்லூரியும் இணையத்தின் மூலம் இணைக்கப்படவுள்ளது. இதன் மூலம் சர்வதேச அளவில் திரைப்படம், தொலைக்காட்சி தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களை மாணவர்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ள எளிதாக அமையும்.

மாணவர்களின் இறுதியாண்டு பட்டயத் தேர்வுகள் 1996-ஆம் ஆண்டு வரை ஆகஸ்ட் அல்லது செப்டம்பரில்தான் நடத்தப்பட்டு வந்தது. 1997-98-ஆம் ஆண்டு முதல் மற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் நடத்தப்படுவது போல் ஏப்ரல் மாதத்திலேயே அனைத்துத் தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மூடப்பட்டிருந்த கல்லூரி மாணவர் விடுதி ரூ.6.30 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் மாணவர்கள் தங்கிப் படிக்க வசதி செய்யப்பட்டு, தற்சமயம் 50 மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர்.

[1999 மே 4

## அத்தியாயம் - 8

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதிலும் நடைபெறும் தமிழக அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து செய்திப் படம் தயாரித்து வெளியிடும் சீரிய பணியில் ஈடுபட்டு வருகிறது.

**செய்தி மலர் தயாரிப்பு:**

*1968*ஆம் ஆண்டு முதல், கருப்பு-வெள்ளையில், செய்தி மலரைத் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. *1986*ஆம் ஆண்டு முதல், செய்தி மலர்கள் வண்ணத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் பற்றி எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து *10* நிமிடம் அளவில் ஓடக்கூடிய செய்தி மலராகத் தயார் செய்து வெளியிடப்பட்டு வருகிறது. இதுவரை *415* செய்தி மலர்களை இப்பிரிவு தயாரித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் ஒரு செய்தி மலர் படச்சுருள் தயார் செய்து *147* பிரதிகள் எடுத்து, தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில் இதற்கு முன் திரையிடப்பட்டு வந்தது. இவ்வாறு எல்லாத் திரையரங்குகளிலும் திரையிடச் செய்ய, சுமார் *6* மாத காலம் ஆகிறது. இதனால் உடனடிப் பயன் கிடைக்கப் பெறாதது மட்டுமல்ல, அதிகச் செலவும் ஆகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, செய்தி மலர்களை வீடியோவில் படமாக்கி, சென்னைத் தொலைக்காட்சியிலும் பிற தனியார் செயற்கைக்கோள் ஒளிபரப்பு நிறுவனங்கள் மூலமும் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போய் உடனடியாகச் சேருவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. *1998-99*ஆம் ஆண்டுக்கு *12* வீடியோ செய்தி மலர்கள் தயாரித்து தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்ய ரூ. *28* இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செய்தி மலர்களுக்குப் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு காணப்படுகிறது.

**விளக்கப் படங்கள் தயாரிப்பு:**

மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்ப நலம், சமூகக் காடுகள், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு, வனப் பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் இதர துறைகள் குறித்து, பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் விளக்கப் படங்கள் தயாரித்து வருகிறது. இதுவரை *131* படங்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன.



1999 மே 4]

*1998-99*ஆம் நிதி ஆண்டில் *35* எம்.எம். படச்சுருளில் கீழ்க்காணும் மூன்று விளக்கப் படங்கள் தயார் செய்யப்பட்டு தமிழகத்தின் அனைத்துத் திரையரங்குகளிலும் வெளியிடப்பட்டன. இதற்காக ரூ. *8.95* இலட்சம் செலவு செய்யப்பட்டது.

1. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி
2. கலைஞர் கண்ட காவேரி
3. கலைஞர் கண்ட சமத்துவபுரம்

கடந்த *1998-99*ஆம் ஆண்டில் 'அண்ணா வாழ்கின்றார்' என்ற விளக்கப்படம் ரூ. *20.58* இலட்சம் செலவில் வண்ணப் படச்சுருளில் தயாரித்து *200* பிரதிகள் எடுத்து, மைய அரசுத் திரைப்படப் பிரிவு மூலமாகத் தமிழகத்தின் அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. இவ்விளக்கப் படத்தை வீடியோவிற்கு மாற்றம் செய்து, சென்னைத் தொலைக்காட்சி, தனியார் ஒளிபரப்பு நிறுவனங்களான சன், ராஜ் மற்றும் விஜய் ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டது. இதன் வீடியோ பிரதிகள் மாவட்டச் செய்தி, மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ ஊர்திகள் மூலம் தமிழகமெங்கும் திரையிடப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு விளக்கப் படங்கள் தயாரிப்பதுடன் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும் பயன்படுத்துகிறது.

**ஒளிநாடா (வீடியோ) செய்தி மலர்கள்:**

*1988*ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு திரைப்படப் பிரிவில் ஒளிநாடா பிரிவு செயல்பட ஆரம்பித்து, ஒளிநாடா (வீடியோ) செய்தி மலர்களை *1989*ஆம் ஆண்டு முதல் தயாரிக்கத் தொடங்கியது. *60* முதல் *90* நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த மலர்களில் அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை அனைத்துத் தரப்பினரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சிறுகதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் மூலமாகத் தயாரித்து வழங்கப்படுகிறது. இந்த வீடியோ செய்தி மலர்கள், மாவட்டங்களில் கள விளம்பரப் பணிக்காக உள்ள ஒளிநாடா (வீடியோ) ஊர்திகள் மூலமாகவும் திரையிடப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை *13* வீடியோ மலர்களைத் தயாரித்துள்ளது.

[1999 மே 4

**ஒளிநாடா விளக்கப் படங்கள்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, குடும்ப நலம், காடு வளர்ப்பு, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, சாலை விபத்து போன்ற பொருள்களிலும், ஒளிநாடா விளக்கப் படங்களைத் தயாரித்துள்ளது. இவ்வாண்டில் 49 ஒளிநாடா விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதுவரை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 295 ஒளிநாடா விளக்கப் படங்களைத் தயாரித்துள்ளது.

அரசின் சில துறைகளின் தேவைக்கேற்ப அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 30 நிமிடம் வரை ஓடக்கூடிய வீடியோ படங்களைத் தயாரித்து வழங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு, குழந்தை நலம், கல்வி, வேளாண்மை, குடிநீர், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, மரங்கள் வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல், வன விலங்குகள் சரணாலயம், பெண்கள் முன்னேற்றம், போதைப் பொருட்களால் தீமை போன்ற பல்வேறு கருத்துக்களைக் கொண்டு இப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இப்படங்களை அந்தத் துறைகள் ஒளிபரப்புவதோடு, வீடியோ பிரதிகள் எடுத்து மாவட்டங்களிலுள்ள ஒளிநாடா ஊர்திகள் மூலமாகத் தமிழகம் முழுவதும் கள விளம்பரம் செய்யவும் பயன்படுகிறது.

**நவீன கருவிகள்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவை நவீனப்படுத்தும் வகையில் 1998-99ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின்கீழ் “பி.டி. 4 டாட் டிஜிடல் போர்ட்டபிள் ஆடியோ” ஒலிப்பதிவுக் கருவி ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-9

## சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம்

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், திரைக் கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென,



1999 மே 4]

ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

**சிறந்த தமிழ்த் திரைப்படம்**

1. முதல் பரிசு .. ரூ. 1,25,000 மற்றும் நினைவுப் பரிசு
2. இரண்டாம் பரிசு .. ரூ . 75,000 மற்றும் நினைவுப் பரிசு
3. மூன்றாம் பரிசு .. ரூ. 50,000 மற்றும் நினைவுப் பரிசு
4. சிறப்புப் பரிசு .. ரூ. 50,000 மற்றும் நினைவுப் பரிசு

திரைப்படங்களில், பெண்களை இழிவுபடுத்துவதைத் தவிர்க்கவும் பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டவும் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு ரூ. 1.25 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1997ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 8-12-1998 அன்று நடைபெற்றது. மேதகு ஆளுநர் தலைமையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன. 1998ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

**கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள்**

திரையுலக வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கவிஞர் கண்ணதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர். ஆகியோர் பெயரால் கலைத் துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசினால் இவ்வித்தகர் விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

**தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் (Subsidy) வழங்கும் திட்டம்**

சமுதாய நோக்குடன் கூடிய, தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசால்

அமைக்கப்படும் தேர்வுக் குழு, தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்து மானியம் வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் எடுக்கப்படும் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படம் ஒன்றுக்கு, 17-7-1996 முதல் மானியத் தொகையை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது.

1997ஆம் ஆண்டிற்கான மானியம் பெறுவதற்குத் தகுதிபெறும், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய, ஒரு தேர்வுக் குழு அமைக்கப்பட்டது. மானியம் வழங்குவதற்குரிய விதிமுறைகளுக்கு உட்படாத படங்கள் என்று தேர்வுக் குழுவினால் குறிப்பிடப்பட்ட படங்களைத் தவிர்த்து, மானியம் பெறத்தக்க 11 திரைப்படங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், படத்திற்கு ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் அரசு மானியமாக 29-3-1999 அன்று வழங்கப்பட்டது.

## 'அண்ணல் அம்பேத்கர்' திரைப்படம் - தமிழாக்கம் செய்தல்

அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை, ஆங்கில மொழியில் திரைப்படமாகத் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் எடுத்து வருகிறது. அந்தப் படம் தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், தமிழக அரசின் உதவித் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அதன்படி அண்ணல் அம்பேத்கர் திரைப்படம் ஆங்கிலத்தில் தயாரிப்புப் பணி முடிந்து, தற்போது தமிழாக்கம் (டப்பிங்) செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## திரைப்படத் துறையினருக்கான சலுகைகள்

(1) மானியத் திட்டத்தின்கீழ் சலுகை பெறும் திரைப்படங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 50-லிருந்து 75-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(2) ரூ.3 இலட்சமாக இருந்த மானியத் தொகை 17-7-1996 முதல் ரூ.5 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

(3) தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான இடங்கள் மற்றும் கட்டடங்களில் படத் தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பு நடத்த, முன்பு கட்டணம் ஒரு நாளுக்கு ஒரு இடத்திற்கு ரூ.5,000 ஆகவும், ஏனைய இடங்களுக்கு ரூ.2,500 ஆகவும் இருந்ததை முறையே ரூ.1,000 ஆகவும், ரூ.500





எனவும் குறைத்து 26-7-1996-ல் இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

(4) 8 பிரதிகளுக்குக் குறையாமலும், 25 பிரதிகளுக்கு மிகாமலும் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் திரைப்படங்கள் வெளியிடப்பட்ட முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டத்தை 12-12-1996 முதல் செயல்படுத்தியுள்ளது. இதுவரை 7 படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(5) துறைதோறும் வழங்கப்பெறும் 'தடையில்லாச் சான்றிதழ்' இன்றி, அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த தற்போது ஒரே இடத்தில் அனுமதி வழங்க ஏதுவாகும் 'ஒற்றைச் சாளர முறை' நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## கேளிக்கை வரிச் சலுகை

திரைப்படத் துறையினரின் கோரிக்கைகளை ஏற்று கேளிக்கை வரி 40 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. 10 ஆண்டுக்கு முந்தைய பழைய படங்களுக்குக் கேளிக்கை வரி 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. இதே போன்று, மொழி மாற்றம் (Dubbing) செய்யப்பட்ட படங்களுக்கும், தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டது போல், கேளிக்கை வரி 1-8-1998 முதல் குறைக்கப்பட்டது. இணக்க வரி முறையும் (Compounding Tax) அதற்கு ஏற்றாற்போல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம்

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு தொழிலாளரும் ரூ.50,000-க்கு காப்புறுதி செய்யப்படுவர். விபத்தில் இறந்தால் இந்தத் தொகை அவரது வாரிசுக்கு வழங்கப்படும். விபத்தில் உடல் ஊனமுற்றால் அதற்குத் தகுந்தாற்போல் தொகை வழங்கப்படும். சண்டைக் காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூ. 1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

திரைப்படத் தொழிலாளர்கள் விபத்துக் காப்புறுதித் திட்டம் மற்றும் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு திரைப்படத் தொழிலாளரும் மாதம் ரூ.25 அல்லது ஆண்டிற்கு ரூ.300 சந்தாவாகச் செலுத்த வேண்டும். நிலுவை இல்லாமல் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள், ஓய்வூதியத் திட்டத்திலும், விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க்கப்படுவர்.

### மாநில மேல்முறையீட்டு உயர்நிலைக் குழு (State Appellate Committee)

திரைப்படத் தொழில் தொடர்பான தகராறுகளை அவ்வப்போது தீர்த்து வைக்க, மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டக் குழுக்களால் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு, செய்தி-சுற்றுலாத் துறையின் செயலாளர் தலைமையில், படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்கு உரிமையாளர்கள் பிரதிநிதிகள் அடங்கிய மாநில அளவிலான மேல்முறையீட்டு உயர்நிலைக் குழுவிடம் மேல்முறையீடு செய்யும்போது, அக்குழு பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்.

தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 13-3-1998 அன்று நடந்த பேச்சுவார்த்தையின்போது திரைப்படத் துறையினரின் கோரிக்கைகள் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு, புதுப் படங்கள் 'காம்பேக்ட் டிஸ்க்' மூலம் திருட்டுத்தனமாக ஒளிபரப்புவதைத் தடுப்பதற்குத் திடீர் சோதனைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தீவிர நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

### சினிமாவைத் தொழிலாக அங்கீகாரம் செய்தல்

சினிமாத் தொழில் பிற தொழில்கள் போல் நிலைத்த மூலதனத்தை உருவாக்காது என்றாலும், மனித ஆற்றலையும், புதுமையையும் உருவாக்குவதுடன் அல்லாமல் பெரும் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தும். இத்தொழிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்குப் பெரும் மூலதனம் தேவைப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் திரைப்படங்கள் தயாரிப்பதில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. 1996-ல் 79 படங்கள்



வெளியாகின. 1997-ல் அது 76 படங்களாகக் குறைந்து, 1998ஆம் ஆண்டு 70 படங்களே வெளியாகியுள்ளன. சினிமாவைத் தொழிலாக அறிவிப்பது குறித்து, திரைப்படத் துறையினர் மற்றும் உயர் அலுவலர்களுடன் 26-11-1998 அன்று மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் திரைப்படத் துறையினர் எதிர்பார்க்கும் சலுகைகள், திரைப்படத் துறையினருக்குத் தரப்பட வேண்டிய மூலதன ஆதாரங்கள், மூலதன மானியம், கடன் வழங்கும் முறைகளும் ஆராயப்பட்டன. இது குறித்து அரசு விரைவில் ஒரு நெறிமுறையினை வகுத்து வெளியிடும்.

## அத்தியாயம்-10

## எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்', சென்னை, தரமணியில் 76 ஏக்கர் நிலத்தில் ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இத் திரைப்பட நகரில் ஒரே குடைக்குக்கீழே என்ற வகையில் வெளிப்புற, உட்புற படப்பிடிப்பிற்கான அனைத்து வசதிகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

உலகளாவிய அளவில் சிறந்த ஒலிப்பதிவுத் திரையரங்கம், வீடியோ படப்பிடிப்பு நிலையம், அனைத்துத் தொழில்நுட்பக் கருவிகளோடு கூடிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன. திரைப்படம் மற்றும் வீடியோத் தயாரிப்பாளர்கள், திரைப்படத் தயாரிப்பு மையங்களைவிடக் குறைந்த அளவு கட்டணத்திலேயே இவற்றைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இத்திரைப்பட நகரில் மொகலாயர் தோட்டம், இத்தாலியர் தோட்டம், ஜப்பானியர் தோட்டம் ஆகிய படப்படிப்பு இடங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இத்திரைப்பட நகரில் இடம் பெற்றுள்ள வண்ணமிகு தோட்டங்கள், குளிர்வசதியுள்ள படப்படிப்பு நிலையங்கள் ஆகியன, வரவேற்பு நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் கூட்டங்களுக்கு உரிய கட்டணத்துடன் பயன்படுத்திக் கொள்ளவும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் திரைப்பட வரலாற்றை எடுத்துக் கூறுகின்ற வகையில் நிரந்தரக் கண்காட்சி ஒன்று திரைப்பட நகரில் ரூ.7.50 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது. இக்கண்காட்சியில் இடம் பெறுகின்ற வகையில் பல

அரிய காட்சிப் பொருட்கள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திரைப்பட நகருக்கு வருகை தருவோரைக் கவருகின்ற வகையில் மீன்காட்சியகம், ஐந்து பறவைகள் இல்லங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குதிரைபூட்டிய சாரட் வண்டி மூலம் பயணத்திற்கு வசதி செய்யப் பட்டுள்ளது.

இத்திரைப்பட நகரைக் காண வருபவர்களில், பெரியவர்களுக்கு ரூ.15-ம், சிறியவர்களுக்கு ரூ.8-ம் நுழைவுக் கட்டணமாகப் பெறப்படுகிறது. ஒட்டுமொத்தமாக வருகின்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. திங்கள் தோறும் சராசரியாக ரூ.15 இலட்சம் வருவாய் இத்திரைப்பட நகர் ஈட்டி வருகிறது.

## அத்தியாயம்-11

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தித் துறையின் முக்கியப் பிரிவுகளில் செய்தி வெளியீட்டுப் பிரிவும் ஒன்றாகும். மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் அலுவலகத்திலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் நலத் திட்டங்கள். ஆக்கப்பணிகள், அரசின் சாதனைகள் அனைத்தையும் அனைத்து நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளின் வாயிலாக மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கும் பணியினைச் செய்தி வெளியீட்டுப் பிரிவு 24 மணி நேரமும், விடுமுறை நாட்கள் உட்பட, அனைத்து நாட்களிலும் செய்து வருகிறது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் தனியார் தொலைக்காட்சி ஆகிய 75-க்கும் மேற்பட்ட தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு, அரசின் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள் மற்றும் செய்திக் குறிப்புகள் அவ்வப்போது செய்தியாளர்களுக்கு நேரிலும், ஃபேக்ஸ் மூலமும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு அரசின் முக்கியமான அறிவிப்புகளையும், செய்தி வெளியீடுகளையும் தெரிவிக்கும் வகையில், மாவட்டங்களில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு முக்கியச் செய்திகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இது தவிர அனைத்து அமைச்சர்பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் விழாக்களில், பத்திரிகை





யாளர்கள், தொலைக்காட்சி போன்ற நிறுவனங்கள் சென்று செய்தி சேகரிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர்பெருமக்களால் நடத்தப்பெறும் செய்தியாளர் கூட்டம் ஆகியவற்றிற்கு உரிய ஏற்பாடுகளையும் அவ்வப்போது இப்பிரிவே செய்து வருகிறது.

### நவீன வசதிகள்

முக்கியப் பிரமுகர்கள் வருகை மற்றும் முக்கிய அரசு விழாக்களுக்குச் சென்று படமெடுக்க வசதியாக ஓர் ஊர்தியையும், புகைப்பட வெளியீடுகள் மற்றும் செய்தி வெளியீடுகளை உடனுக்குடன் பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்ப கணினி மற்றும் தொடர்புடைய சாதனங்களும் (கம்ப்யூட்டர், மோடம், ஸ்கேனர், பிரிண்டர்) ஒரு புதிய ஜெராக்ஸ் இயந்திரமும் செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கென நடப்பு ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன.

### புகைப்படப் பிரிவு

அரசின் திட்டப் பணிகள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்பெருமக்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து, உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. இதுநாள் வரை புகைப்படப் பிரிவில் கருப்பு-வெள்ளைப் படங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது வண்ணப் புகைப்படங்களைத் தயாரித்து பத்திரிகைகளுக்கு வழங்கவும், கண்காட்சி, பேனல் போர்டுகள், தமிழரசு இதழ் ஆகியவற்றிற்காக வழங்க, புகைப்படப் பிரிவில் வண்ணப் புகைப்படக்கூடம் (கலர் லேப்) அமைக்கப்பட்டுள்ளது.

தலைமையகத்திலுள்ள புகைப்படக்காரர்கள் மற்றும் மாவட்டங் களிலுள்ள புகைப்படக்காரர்கள் ஆகியோருக்காக 10 புதிய கேமராக்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 1999-2000ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் மேலும் 7 புதிய கேமராக்கள் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள புகைப்படக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

1998-1999ஆம் ஆண்டில் முதற்கட்டமாக, புகைப்பட இருட்டறை வசதி இல்லாத தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் புகைப்பட இருட்டறை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1999-2000ஆம் ஆண்டில் மேலும் 5 மாவட்டங்களில்

புகைப்பட இருட்டறைகள் அமைக்கப்படவுள்ளன.

## நாளிதழ்களின் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்

சென்னையிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் சென்னைச் செய்தியாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, புகைப்படப் பிரிவு, திரைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒலிப்பதிவாளர்கள். ஒளிப் பதிவாளர்கள் ஆகியோருக்கு அரசால் அமைக்கப்பட்ட 'செய்தியாளர் அங்கீகாரக் குழு' வின் பரிந்துரையின்படி ஆண்டுதோறும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 75-க்கும் மேற்பட்ட நிறுவனங்களைச் சார்ந்த 406 பேர்களுக்குச் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு அங்கீகார அட்டைகள் பெற்றுள்ளவர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்ய இலவசப் பேருந்து அட்டை, இரயில் பயணத்தில் 50% கட்டணச் சலுகை, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை போன்ற சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அட்டை

அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று, செய்திகள் சேகரிப்பதற்கு ஏதுவாகப் பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் செய்தியாளர்களுக்கு 1997ஆம் ஆண்டு முதல் "செய்தியாளர் அட்டை" வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் 127 பேர்களுக்குச் செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்

ஓய்வுபெற்ற நலிந்த நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் 1986ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 64 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.1,000 மாத ஓய்வூதியமாகத் தற்பொழுது வழங்கப்படுகிறது. நடப்பு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்தொகையை ரூ.1500 ஆக உயர்த்தி அறிவித்துள்ளார்கள்.



## பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்

'பத்திரிகையாளர் ஓய்வூதியம்' பெறும் பத்திரிகையாளர் இறந்துவிட்டால் அவரது துணைவியாருக்கு அவரது கணவர் வாங்கி வந்த ஓய்வூதியத் தொகை ரூ.1,000-ல் 50 விழுக்காடு, ரூ.500 மாதந்தோறும் குடும்ப ஓய்வூதியமாக அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

பத்திரிகைத் துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களின் குடும்பத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதி உதவி வழங்கும் 'பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்' 20-3-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 8 பத்திரிகையாளர் குடும்பங்களுக்குத் தலா ரூ. 25,000 வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்தொகையை ரூ.40,000 ஆக உயர்த்தி அறிவித்துள்ளார்கள்.

# அத்தியாயம்-12

# விளம்பரம்

விளம்பரங்களை ஒருமுகப்படுத்தி வெளியிட வேண்டுமென்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் மாநில அரசின் அனைத்துத் துறைகள் அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வழியாக நாளிதழ்கள், பருவ இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு ஒருமுகப்படுத்துவதால் மாநிலத்தின் விளம்பரச் செலவினங்கள் அனைத்தும் திறமையாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. விளம்பரத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அவ் விளம்பரம் போய்ச் சேர வேண்டிய பகுதிக்கேற்ற அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக ஒப்பந்தப்புள்ளி போன்ற விளம்பரங்கள், பெருமளவில் விற்பனையாகும் நாளிதழ்களுக்கு வழங்கப்படுகின்றன.

விளம்பரச் செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் வகையிலும், அதேசமயம் அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களை வெளியிடுவதில் அனைத்துத் துறைகளும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் அரசு ஆணை நிலை எண் 290, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரம்)த் துறை, நாள்: 1-9-1997 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 490, நிதித் துறை, நாள்: 11-9-1998-ல் வெளியிடப்பட்டுள்ளன.

அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் மற்றும் அவற்றை முடிவு செய்தல் ஆகிய பணிகளை வெளிப்படையாகவும், நியாயமாகவும் செய்ய வேண்டுமென்ற நோக்கில் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம், 1998 (Tamil Nadu Transparency in Tender Act, 1998) என்ற சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியாவதுடன், மாநில ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளிலும் (State Tender Bulletins) மாவட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளிலும் (District Tender Bulletins) வெளியிடப்பட வேண்டும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி அறிவிப்பு அலுவலராகச் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் (செய்தி) பணியிடம் ஒன்று இணை இயக்குநர் பணியிடமாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி அறிவிப்பு அலுவலர்களாக, அந்தந்த மாவட்டத்திலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் செயல்படுவார்கள்.

## அத்தியாயம்-13

### மாநிலச் செய்தி நிலையம்

மாநிலச் செய்தி நிலையம், அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்த தகவல்களை சென்னைத் தலைநகர மக்களுக்கு மட்டுமில்லாது, பலதரப்பட்ட பிரிவினருக்கும் செய்திகள் கூறும் ஒரு முக்கியத் தகவல் மையமாகச் செயல்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோருக்கும் உரிய விவரங்களைத் தந்து உதவுகிறது.



சென்னை அரசினர் தோட்டத்தில் இயங்கி வந்த 'மாநிலச் செய்தி நிலையம்' தற்போது மகாகவி பாரதியார் நினைவு இல்லத்திற்கு, மாற்றப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

செய்தி நிலையத்தில் உள்ள நூலகத்தில் 12,500-க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் தொடர்பான நூல்களும் இதில் அடங்கும். பொதுமக்கள் அன்றாடம் படித்துப் பயன்பெறும் வகையில், பல்வேறு பருவ இதழ்களும், நாளிதழ்களும் வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மாநிலச் செய்தி நிலையத்தில், படச்சுருள் நூலகமும் உள்ளது. இங்கு வங்கி மற்றும் தகவல் தொடர்பான 300-க்கும் மேற்பட்ட 16 மி.மீ. படச்சுருள்கள் உள்ளன. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் கோரும்போது, இச்செய்தி நிலையத்தின்மூலம் படக்காட்சி நடத்தப்படுகிறது.

மாநிலச் செய்தி நிலையப் பணியாளர்கள் மற்றும் மகாகவி பாரதியார் இல்லப் பணியாளர்களால், "அரசு செய்தி" வாரந்தோறும் சென்னையிலுள்ள அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

## அத்தியாயம்-14

### பகுதி—2 திட்டங்கள்

*செய்தி-மக்கள் தொடர்புத் துறைக்கு **1998-1999**ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதி - 2 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன:*

1. செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கென நிருபர்களை அழைத்துச் செல்ல ஒரு ஜீப் வாகனம் ரூ. 3.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டது.
2. புகைப்படப் பிரிவிற்கென கையால் இயக்கக்கூடிய வண்ணப் புகைப்படக் கூடம் துணைக் கருவிகளுடன் ரூ.3 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.
3. தமிழ்நாடு திரைப்பட நிறுவனத்திற்கென டிஜிட்டல் ஆடியோ பணி நிலையம் ரூ.30.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.
4. வீடியோ வசதிகளுடன் 35 எம்.எம். ஸ்டீம்பெக் படத் தொகுப்புச் சாதனங்கள் மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக ஜெனரேட்டருடன்கூடிய பேருந்து ஒன்று 65.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது.

5. பி.டி. 4 கையடக்க டாட் டிஜிட்டல் ஆடியோ ரிக்கார்டர் ரூ. 5.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டது.

6. துணைப் பாகங்கள் வசதியுடன் ஸ்கேனர் கணினி மோடம் ரூ.3.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டது.

7. புகைப்படப் பிரிவிற்கென மூன்று நிக்கான் புகைப்படக் கருவிகள் ரூ.1.95 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன.

8. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் உபயோகத்திற்கென ஏழு பென்டெக்ஸ் புகைப்படக் கருவிகள் ரூ. 2.10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன.

9. செய்தி வெளியீட்டுப் பிரிவின் உபயோகத்திற்கென ஒரு புகைப்பட நகல் எடுக்கும் சாதனம் ரூ. 2.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டது.

10. தமிழரசு அலுவலகத்தில் செயற்கைக் கூரை, பளிங்கு ஓடு ஆகிய வசதிகளுடன் D.T.P. அறையை மேம்படுத்தி நிர்வாகப் பிரிவு/ ஆசிரியர் குழுப் பிரிவு என தனித்தனி அறை ரூ. 5.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது.

*பகுதி-2* திட்டத்தின்கீழ், செய்தி-மக்கள் தொடர்புத் துறைக்கு ***1999-2000*ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:**

1. தமிழரசு பத்திரிகை அலுவலகத்தில் கூடுதல் தளம் ஒன்றை ரூ. 3 இலட்சம் செலவில் கட்டுதல்.

2. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு கையடக்க "டாட்" பதிவுக் கருவியை ரூ.5 இலட்சம் செலவில் வாங்குதல்.

3. ஏழு மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு, ஏழு புகைப்படக் கருவிகள் ரூ. 2.10 இலட்சம் செலவில் வாங்குதல்.

4. மூன்று மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மூன்று ஒளிநாடா பதிவுச் சாதனத்துடன் வீடியோ படம் காட்டும் சாதனங்கள் (Video Projectors) மூன்று ரூ.12 இலட்சம் செலவில் வாங்குதல்.



5. ஐந்து மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நிழற்பட இருட்டறை வசதி (Dark Room) ரூ.5 இலட்சம் செலவில் செய்து கொடுத்தல்.

6. எட்டு மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ஒளிநாடாப் பதிவுச் சாதனங்கள் ரூ. 1 இலட்சம் செலவில் வாங்குதல்.

7. மக்கள் தொடர்புப் பிரிவில் பயனற்றதென கழிக்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாவுக்குப் பதிலாக, புதிய ஆட்டோ ரிக்ஷா ஒன்றை ரூ. 0.75 இலட்சம் செலவில் வாங்குதல்.

8. பத்திரிகைச் செய்தி வெளியீடு, விளம்பரப் பிரிவு மற்றும் தமிழரசு அலுவலகத்திற்கு 3 நிகரிகள் (Fax Machine) ரூ.1 இலட்சம் செலவில் வாங்குதல்.

9. பத்து மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நகலாக்க இயந்திரங்கள் (Xerox Machine) ரூ.10 இலட்சம் செலவில் வாங்குதல்.

## அத்தியாயம்-15

## சினிமா, வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்புக் கூட்டமைப்புகள்

திரைப்படத் தொழில், தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கும் மற்றும் நடுத்தர மக்களுக்கும் சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் ஊராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும், அரசுக்கும் வருவாய் அளிக்கும் நிதி ஆதாரமாகவும் விளங்குகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,409 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவைகளாவன:—

| | | சாதாரண திரையரங்கு களின் எண்ணிக்கை | குளிரூட்டப்பட்ட திரையரங்கு களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1,389 | 96 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 253 | .. |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 655 | .. |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 14 | .. |
| 5. | வீடியோ திரையரங்குகள் | 2 | .. |
| | மொத்தம் .. | **2,313** | **96** |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டடத்தின் தன்மை, முறையான பராமரிப்பு இவைகளைத் தருகின்ற வகையில் 1955ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

பல திரையரங்குகள் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட நுழைவுக் கட்டணத்தைவிட பல மடங்கு அதிகமாகப் பொதுமக்களிடம் வசூல் செய்கின்றனர் என்று அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன. இத்தகைய முறைகேடுகள் திரைப்படம் காணவரும் பொதுமக்களின் நலனைப் பெருமளவில் பாதிப்பதால், இப்புகார்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், திரையரங்குகளைத் தாங்களே திடீர் சோதனை மேற்கொண்டு தவறு செய்யும் திரையரங்க உரிமையாளர்களின் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாநிலத்திலுள்ள திரையரங்குகளில், இதுவரை 1,219 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டன. இவைகளில், 565 திரையரங்குகளில் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டு 517 திரையரங்குகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**வீடியோ**

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காகவும், இதற்கு இடைநிகழ்வாகவும், தொடர்புடையதாகவும் உள்ள பொருட்கள் தொடர்பாகத் தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது.

மாவட்ட அளவில் அந்தந்த மாவட்டாட்சித் தலைவர்களும் சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர்.

வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில் உரிமம் பெற்ற 727 வீடியோ நூலகங்களும், 2 வீடியோ திரையரங்குகளும் உள்ளன.

**வீடியோ திருட்டுத் தடுப்பு**

திருட்டு வீடியோக்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில காவல் துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின்கீழ் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் அரசு தனிப் பிரிவு ஒன்றினை 1995ஆம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு, வீடியோ கேசட்டுகள் மூலமாகத் திரைப்படப் பதிவு உரிமைகளை மீறுதல், ஏனைய பதிப்பு உரிமை மீறுதல் தொடர்பான புகார்களைப் புலனாய்வு செய்து வருகிறது.

பதிப்புரிமைச் சட்டம் 1957 பிரிவு 63 மற்றும் 63-ஏ-ல் (Copy Right Act) சட்ட விரோதமான பதிப்பு/ பதிப்புரிமைக்குத் தண்டனை அளிப்பதற்கும், மேற்படி சட்டப்பிரிவு 64-ல் சட்டவிரோதமான பதிப்புரிமையில் நகல்களைப் பறிமுதல் செய்வதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமைச் சட்டத்திலுள்ள வழிவகைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கு காவல்

துறைத் தலைவர் (பொருளாதாரக் குற்றப் பிரிவு) சென்னை, மாநில அளவில் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பதிப்புரிமைச் சட்டத்திலுள்ள வழிவகைகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட சட்டங்களை மாநிலத்திலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் செயலாக்கப் படுத்துவதற்குக் காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அனுமதி பெறாத வீடியோ கேசட் மற்றும் காம்பாக்ட் வீடியோ டிஸ்க் ஆகியவற்றை விற்பனை செய்பவர்கள் மீதும் மற்றும் உரிமம் பெறாத திரைப்படங்களைத் திரையிடும் கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

1998-99ஆம் ஆண்டுகளில் 72 வீடியோ திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவைகளில் 6 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளன. 50 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. 16 வழக்குகள் விசாரணையில் உள்ளன. இவ்வழக்குகளில் 683 வீடியோ காம்பாக்ட் டிஸ்க்குகள் மற்றும் 465 வீடியோ கேசட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இவைகள் தவிர, வி.சி.ஆர்., வி.சி.பி., புரொஜக்டர், காமிராக்கள், கம்ப்யூட்டர் முதலான சில கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. 1998 மற்றும் 1999 (28-2-1999 வரையில்) ஆம் ஆண்டுகளில் வீடியோ திருட்டு வழக்குகள் தொடர்பாக 97 பேர் கைது செய்யப்பட்டு, பல்வேறு நீதிமன்றங்களில் காவலில் வைக்க அனுப்பப்பட்டனர்.

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை

கேபிள் தொலைக்காட்சி மூலமாக, திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1991ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது.

கேபிள் டி.வி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டி.வி. அமைப்பு ஒழுங்குபடுத்துதல் சட்டம் மற்றும் விதிகள் 1995-ஐ இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இச்சட்டத்தில் 18 மற்றும் 19ஆம் பிரிவுகளின்கீழ் மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை நகரில் காவல் துறை ஆணையரும் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளாக மாநில அரசு நியமித்துள்ளது.



## இணைப்பு III

*(71ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 50

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

நம் நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. நாட்டிற்கு அத்தியாவசியத் தேவையான அந்நியச் செலாவணியை பெருமளவில் ஈட்டித் தரும் தொழில்களில் சுற்றுலாவும் ஒன்றாகும். எனவே, சுற்றுலா மேம்பாடடைய முக்கிய சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது இன்றியமையாததாகிறது. இதன்மூலம் உள்ளூர் மக்களும் பயன் அடைவர். சுற்றுலா மேம்பாட்டினால் ஊரகப் பகுதியில் அதிகளவில் வேலைவாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாடு எல்லா சுற்றுலாச் சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டு எத்திசையும் புகழ் பரப்பும் மாநிலமாக விளங்குகிறது. இங்குள்ள கவின்மிகு காட்சிகளையும் சுற்றுலாத் தலங்களின் தொன்மை மிகு பாரம்பரியச் சிறப்பினையும் கண்டுகளிக்க வெளிநாட்டிலிருந்தும் பிற மாநிலங்களில் இருந்தும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

### இந்தியாவில் சுற்றுலா

இந்திய அரசின் சுற்றுலாத் துறை 1999-2000ஆம் ஆண்டை இந்தியாவைக் காண வருகைபுரியுமாறு அழைக்கும் ஆண்டாக (Explore India in the Millennium Year) அனுசரிக்க முடிவெடுத்துள்ளது.

1996 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 22,87,860 ஆக இருந்தது. 1997-ல் 23,74,094 ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 3.8 சதவீதம் கூடுதலாகும். 1997-ல் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15.62 கோடியாகும்.

[1999 மே 4

இந்தியாவில் அந்நியச் செலாவணி ஈட்டும் தொழில்களில் மொத்த வருவாய் ஈட்டுவதில் மூன்றாவது இடத்திலும், நிகர அந்நியச் செலாவணி வருவாயில் இரண்டாவது இடத்திலும் சுற்றுலாத் தொழில் உள்ளது. எடுத்துக்காட்டாக 1990-91-ல் ரூ.2612.5 கோடியாக இருந்த அந்நியச் செலாவணி, வருவாயில் 1996-97-ல் ரூ.10417.6 கோடியாக உயர்ந்துள்ளது. இது ஏறத்தாழ நான்கு மடங்கு உயர்வாகும்.

1998-ல் இந்திய உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இந்தியப் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்கு 5.6 சதவீதமாகவும் வேலைவாய்ப்பில் 5.8 சதவீதமாகவும் இருக்கிறது. இந்திய மொத்த ஏற்றுமதி வருவாயில் இந்தியப் பயணம் மற்றும் சுற்றுலாவின் பங்கு ரூ.230 கோடியாகும்.

## தமிழ்நாட்டில் சுற்றுலா

| சுற்றுலாப் பயணிகளின் வருகை | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 |
| உள்நாட்டினர் | 1,82,07,666 | 1,89,28,100 | 2,04,13,193 |
| வெளிநாட்டினர் | 6,13,982 | 6,36,642 | 6,36,400 |
| பயணிகள் வருகை மொத்தம் | 1,88,21,648 | 1,95,64,742 | 2,10,49,593 |

1997-ல் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 195.65 இலட்சமாக இருந்தது. 1998-ல் இது 210.50 இலட்சமாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 7.6 சதவீதம் உயர்வாகும்.

## தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை

மாநில அரசு, சுற்றுலாக் கொள்கையை வகுத்தபோது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு கடைபிடித்தச் சுற்றுலாக் கருத்து மற்றும் வழிகாட்டிக் குறிப்புகள் கருத்தில் கொள்ளப்பட்டன.

1. ஒவ்வொரு சுற்றுலா மையத்திற்கும் குறிப்பாகத் தேவைப்படக் கூடிய வசதிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காகச் செய்து தரப்படும்.



1999 மே 4]

2. குறிப்பிட்ட சுற்றுலாப் பகுதிகளில் உள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை இருப்பதைக் கண்டறிந்து ஒருங்கிணைந்த தீவிர மேம்பாட்டு நடவடிக்கைகளை கருத்தறிவிக்க பெருந்திட்டம் ஒன்றைத் தீட்டுதல்.
3. சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீட்டை ஊக்குவித்து, பல்வேறு அனுமதிகளை ஒரு குடையின்கீழ் வழங்க ஏற்பாடு செய்தல்.
4. தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புகளைப் பற்றி வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் தீவிர விளம்பரம் செய்தல்.
5. மாநில தலைமையிடத்திலும், மாவட்டங்கள் அனைத்திலும் சுற்றுலா வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்துதல்.
6. பல்வேறு விழாக்கள் நடத்துவதன்மூலம் பண்பாட்டுச் சுற்றுலாவைத் தீவிரமாகப் பரப்புதல்.

உள்நாட்டுச் சுற்றுலாவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் நமது மாநிலத்திலுள்ள முக்கிய சுற்றுலா மையங்கள் குறித்த தகவல்களைப் பரவச் செய்வதன் மூலம் பொது மக்களிடையே சுற்றுலா விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். எனவே, 1997-98 ஆம் ஆண்டில் ஐதராபாத், பெங்களூர் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களில் புதிய சுற்றுலாத் தகவல் மையங்கள் கடந்த நிதியாண்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 14 முக்கிய சுற்றுலா மையங்களில் சுற்றுலா அலுவலகங்கள் ஏற்கெனவே உள்ளன. இத்துடன், புதுடில்லி, கல்கத்தா, மும்பை மற்றும் கோவா மாநிலத்திலுள்ள பனாஜி ஆகிய இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் ஏற்கெனவே சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இவை சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் சுற்றுலாத் தகவல்கள் அளிக்கின்றன.

[1999 மே 4

## சுற்றுலா ஒரு தொழில்

சுற்றுலாவை ஒரு தொழிலாக அரசு அறிவித்து, பின்வரும் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்குச் சலுகைகள் மற்றும் மானியங்களை வழங்க ஆணை பிறப்பித்துள்ளது:—

1. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி நீங்கலாக ஏனைய இடங்களில் 20-1-1992 ஆம் தேதிக்குப் பின்னர் ரூ. 1.00 கோடிக்கு மிகாமல் முதலீட்டில் முடிக்கப்பட்ட ஒன்று முதல் மூன்று நட்சத்திர தங்கும் விடுதிகளுக்கு மானியம் வழங்குதல்.
2. பொழுதுபோக்குப் பூங்காக்கள் ஏற்பளிக்கப்பட்ட சுற்றுலா நடத்துநர்கள் இயக்கும் சிர்வளிப் பேருந்துகள்.
3. கோல்ஃப் விளையாட்டிடங்கள்.
4. அரசு ஒப்புதல் அளித்த சிற்றுண்டிச் சாலைகள்.

### கடன்கள்

அவ்வப்போது அரசு/இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கும் வட்டி வீதங்களில் சுற்றுலாத் திட்டங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும்.

### மூலதன உதவித் தொகை

நிலத்தின் விலை நீங்கலாக, மொத்த முதலீட்டில் 10% புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மூலதன உதவித் தொகை அளிக்கப்படுகிறது. திட்டம் ஒன்றுக்கு உயரளவுத் தொகையான ரூ. 10.00 இலட்சம் அளிக்கப்படுகிறது.

### மின்னாக்கி இயந்திர உதவித் தொகை

தகுதியுடைய புதிய சுற்றுலாத் திட்டத்திற்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்க 15% உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இச்சலுகையின் கீழ் வழங்கப்படும் அதிகபட்சத் தொகை ரூ. 5.00 இலட்சமாகும்.



1999 மே 4]

## மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டங்கள்

மத்திய சுற்றுலாத் துறையின் நிதியுதவிக்கான வழிமுறைகளின்படி மாநில அரசு பரிந்துரைக்கும் திட்டங்களை மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் முன்னுரிமைப்படுத்தி நிதியுதவிக்கு அனுமதி அளிக்கிறது. மத்திய அரசின் நிதியுதவி கிடைத்தவுடன் மாநில அரசின் பங்கிற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

### நடந்தேறிவரும் மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1. சுற்றுலா விடுதி, நாமக்கல் (16 அறைகள் மற்றும் உணவகம்) | 23.25 |
| 2. 'யாத்ரிநிவாஸ்' இராமேஸ்வரம் (15 அறைகள்) | 44.78 |
| 3. கொடைக்கானலில் சுற்றுலாக் குடில்கள் | 30.40 |
| 4. சுற்றுலா வரவேற்பு மையம், தஞ்சாவூர் (5 அறைகள்-சுற்றுலா அலுவலகம்) | 26.30 |
| 5. அறு சுற்றுலாக் குடில்கள், ஏற்காடு | 26.28 |
| 6. வேலூர் கோட்டையில் சுற்றுலா வசதிகள் | 26.60 |
| 7. கணிப்பொறி மூலம் சுற்றுலாத் தகவல் வசதி | 15.00 |
| 8. கடற்கரைக் குடில்கள், திருச்செந்தூர் (8 அறைகள்) | 26.28 |
| 9. சுற்றுலா வளாகம், ஓசூர் (6 அறைகள்) | 26.73 |
| 10. பொதுக் கழிப்பிடங்கள் வசதி, மேல்மருவத்தூர் | 12.75 |
| 11. கன்னியாகுமரியில் விவேகானந்தா நினைவு மண்டபத்திற்கு ஒளி வெள்ளமூட்டிட கடலுக்கடியில் கேபிள் ஒயர் அமைக்கும் பணி | 11.19 |
| 12. 'யாத்ரிநிவாஸ்' திருவண்ணாமலை (18 அறைகள் மற்றும் உணவகம்) | 39.10 |
| 13. சுற்றுலா விடுதி, மேல்மருவத்தூர் (8 அறைகள்) | 18.70 |

[1999 மே 4

## 1999-2000 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ள திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | 'யாத்ரிநிவாஸ்' ஸ்ரீரங்கம் (12 அறைகள் மற்றும் உணவகம்) | 39.82 |
| 2. | சுற்றுலா வரவேற்பு மையம், தரங்கம்பாடி (4 அறைகள்) | 29.49 |
| 3. | சாலையோர விடுதி வசதிகள், வட்டக்கோட்டை, கன்னியாகுமரி | 20.00 |
| 4. | சாலையோர விடுதி வசதிகள், திருத்தணி | 20.00 |
| 5. | காட்சிக் கோபுரம், கன்னியாகுமரி | 30.00 |
| 6. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா வசதிகள், பேருந்து நிலையம், சிலம்பு வடிவ பயணிகள் காத்திருக்கும் கூடம் மற்றும் உணவகம் கட்டுதல். | 30.00 |
| 7. | புனித ஜார்ஜ் கோட்டையில் ஒளிவெள்ள விளக்குகள் அமைத்தல் | 5.74 |
| 8. | சென்னை சட்டக் கல்லூரி பழைய விடுதி வளாகத்தில் சுற்றுலா வசதிகள் ஏற்படுத்துதல். | 45.00 |

## 1998-99 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள்

1. சாலையோர விடுதி வசதிகள், ஸ்ரீபெரும்புதூர்.
2. சுற்றுலா விடுதி, புதுக்கோட்டை.

## 1998-99 ஆம் ஆண்டு முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

ரூ. 580 இலட்சம் செலவில், கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள எட்டு திட்டங்களையும், இரண்டு சிறப்புத் திட்டங்களையும் தமிழ்நாட்டில் செயல்படுத்திட மைய அரசு ரூ.332.50 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்களுக்கு மாநில அரசு ரூ.250 இலட்சம் வழங்கும். மைய அரசு முதல் தவணையாக ரூ. 120.25 இலட்சம் வழங்கியுள்ளது.



1999 மே 4]

| வ.எண் | திட்டங்களின் பெயர் | மத்திய அரசின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளில் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தல்— | |
| | அ. உதகமண்டலம் (ஊட்டி) | 20.00 |
| | ஆ. கன்னியாகுமரி | 20.00 |
| | இ. மதுரை-1 | 20.00 |
| 2. | குற்றாலத்தில் இயற்கை நல மையம் அமைத்தல் | 10.00 |
| 3. | சம பங்கீடு திட்டத்தின்கீழ் சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா வரவேற்பு மையம் அமைத்தல் (பாரத்பர்யதன் பவனைப் போல) | 56.00 |
| 4. | செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் சாகச நீர் விளையாட்டு மையம் அமைத்தல் | 15.00 |
| 5. | முக்கிய சுற்றுலா மையங்களில் பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல்— | |
| | அ. கன்னியாகுமரி | 12.00 |
| | ஆ. ஒகேனக்கல் | 12.00 |
| | இ. நாகூர் | 12.00 |
| | ஈ. வேளாங்கண்ணி | 12.00 |

[1999 மே 4

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 6. | புராதனக் கட்டடங்களின் சீர் அமைப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழல் முன்னேற்றத்திற்கான திட்டங்கள்:— | |
| | அ. மதுரை: | |
| | 1. இராணி மங்கம்மாள் சத்திரம் | 10.00 |
| | 2. மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | 15.00 |
| | ஆ. காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலைச் சுற்றி சுற்றுப்புற மேம்பாட்டிற்கான திட்டம் | 15.00 |
| | இ. திருச்சிராப்பள்ளி புராதனக் கோயில்களின் சுற்றுப்புற மேம்பாட்டிற்கான திட்டங்கள் (திருவரங்கம் மற்றும் திருவானைக்காவல்) | 15.00 |
| 7. | கலாச்சார சுற்றுலா-தமிழகத்தில் முக்கிய சுற்றுலா மையங்களில் பண்டிகை மற்றும் திருவிழாக்கள் நடத்துதல் | 15.00 |
| 8. | மண்டபத்திற்கு அருகிலுள்ள குருசடைத் தீவில் சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாடு | 20.00 |
| | சிறப்புத் திட்டங்கள் : | |
| | அ. இராமேசுவரத்தில் | 28.50 |
| | ஆ. கன்னியாகுமரியில் | 25.00 |
| | மொத்தம் | 332.50 |



1999 மே 4]

இவை தவிர ரூ. 287 இலட்சம் செலவில் பின்வரும் திட்டங்கள் மைய அரசு நிதியுதவியுடன் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்:

1. சுற்றுலாவிற்கான பெருந்திட்டம் தயாரித்தல்.
2. ஒலி-ஒளிக்காட்சி பிரகதீசுவரர் கோவில், தஞ்சாவூர்.
3. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் அமைந்துள்ள ஒலி-ஒளிக்காட்சிக் கருவிகளை நவீனப்படுத்துதல்.
4. கொடைக்கானல் உயர் கம்ப விளக்குகள் அமைத்தல்.

## இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல் மற்றும் அழகுபடுத்துதல்

### இராமேசுவரம்

மைய அரசு இராமேசுவரத்தைத் தேசிய புண்ணியத் தலமாக (National Pilgrim Centre) அறிவித்துள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கும் இப்பகுதியை அழகுபடுத்துவதற்கும் ரூ.57.00 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மைய அரசு ரூ.28.50 இலட்சம் அனுமதித்து அதில் ரூ.8.55 இலட்சம் முதல் தவணையை வழங்கியுள்ளது.

### கன்னியாகுமரி

மைய அரசு கன்னியாகுமரியைத் தேசிய சுற்றுலாத் தலமாக (National Tourist Centre) அறிவித்துள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் இப்பகுதியை அழகுபடுத்துவதற்கும் ரூ.50.00 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மைய அரசு ரூ.25.00 இலட்சம் அனுமதித்து அதில் ரூ.7.50 இலட்சம் முதல் தவணையை வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளாகம்

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஒரு குடையின்கீழ் அனைத்து சுற்றுலாத் தகவல்களையும் பெறுவதற்கு "தமிழ்நாடு சுற்றுலா வளாகம்" ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

இப்பணிக்கான கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30-12-1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

[1999 மே 4

சென்னையிலுள்ள பிற மாநில சுற்றுலாத் தகவல் அலுவலகங்களும் இந்திய அரசு சுற்றுலா அலுவலகமும், தமிழ்நாடு அரசு சுற்றுலா இயக்குநர் அலுவலகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இக்கட்டடத்தில் இயங்கும்.

மேலும், வரவேற்பு மையம், ஓய்வு அறை, சுற்றுலாத் தகவல் மையம் பலபயன்கூடம்-கண்காட்சிக் கூடம், சமையலறை, பண்டக சாலையுடன் உணவு விடுதி, எஸ்.டி.டி மற்றும் ஐ.எஸ்.டி. வசதியுடன் தொலைபேசிக் கூண்டு, அஞ்சலகம், வங்கிப் பணி, கைவினை பொருட்கள், பட்டு விற்பனை மையம், மருத்துவ வசதிகள், அந்நிய செலாவணி மாற்றும் வசதி ஆகியவை செய்து கொடுக்கப்படும்.

சுற்றுலாத் தொழிலில் பங்கு வகிக்கும் முக்கிய நிறுவனங்கள் அனைத்தின் அலுவலகங்கள் இவ்வளாகத்தில் இயங்கும்.

மொத்த மதிப்பீட்டுச் செலவான ரூ. 200 இலட்சத்தில் மாநில அரசு ரூ. 24 இலட்சத்தை ஏற்கும். மத்திய அரசின் நிதியுதவி ரூ. 56.00 இலட்சமாக இருக்கும். ரூ. 90 இலட்சம், நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெறப்படும். எஞ்சிய ரூ. 30 இலட்சம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஏற்கப்படும்.

### மாநில அரசுத் திட்டங்கள்

மாநில அரசு கீழ்க்கண்ட திட்டங்களை 1998-99ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்திட அனுமதி அளித்துள்ளது :—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | பூம்புகார் சுற்றுலா வளாகச் சுற்றுச் சுவர் கட்டுதல் | 5.00 |
| 2. | பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டைக்கு 2 கே. வி. மின் ஆக்கி வாங்குதல் | 1.50 |
| 3. | சிறப்பு நிலைக் கழிப்பறைகள் கட்டுதல் | 6.00 |
| 4. | மாமல்லபுரத்தில் "பாரம்பரியப் பூங்கா" (திறந்தவெளி அருங்காட்சியகம்) அமைத்தல் | 15.00 |



1999 மே 4]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 5. | மாமல்லபுரம் மற்றும் இராமேசுவரத்தில் சுற்றுலா மையத்தை தூய்மைப் பகுதியாக்குதல். | 2.00 |
| 6. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், மதுரை, இராமேசுவரம், கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு ஓட்டலின் தரத்தை மேம்படுத்துதல். | 100.00 |
| 7. | வளரும் சுற்றுலாத் தலங்களான சுருளி அருவி, திருமூர்த்தி மலை, மனோரா, திற்பரப்பு அருவி மற்றும் தாடகை நாச்சியார் அருவிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல். | 20.00 |
| 8. | அதிக அளவில் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திடவும் விளம்பர மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்திடவும். | 50.00 |
| 9. | சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காகத் தரமான வண்ண வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல். (சென்னை விமான நிலையத்திலிருந்து மாமல்லபுரம் வரை) | 6.00 |
| 10. | மாமல்லபுரத்தில் சோடியம் ஆவி விளக்குகளையும் கன்னியாகுமரியில் உயர் கம்பவிளக்குகளையும் பொருத்துதல். | 20.00 |

**இவ்வாண்டு (1999-2000) பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள திட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:**

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | பூம்புகார் சுற்றுலா வளாகச் சுற்றுச் சுவரை விரிவுபடுத்திக் கட்டுதல். | 5.00 |
| 2. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் கழிவறைகள் கட்டுதல். | 8.00 |
| 3. | திருவான்மியூருக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே கிழக்குக் கடற்கரைச் சாலையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல். | 10.00 |

[1999 மே 4

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 4. | மாமல்லபுரம் சுற்றுலா மையத்தில் பிச்சைக் காரர்களின் தொல்லையை ஒழித்தல். | 1.00 |
| 5. | கொடைக்கானலில் தூய்மைப்பகுதி பற்றி விழிப்புணர்வு முகாம் நடத்துதல். | 1.00 |
| 6. | அதிகமாக பிரபலமடையாத மூன்று சுற்றுலாத் தலங்களில் (புளியஞ்சோலை, பாபநாசம், வாணியார்) கழிவறைகள், விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல். | 15.00 |
| 7. | மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் 100 கி.வோ. மின் உற்பத்தித்திறனுள்ள மின்னாக்கி இயந்திரம் வாங்குதல், மின்னாக்கி இயந்திர அறையைக் கட்டுதல். | 5.50 |
| 8. | மாமல்லபுரம் நினைவுச் சின்னங்களின் சிறப்பை விளக்குகின்ற ஒலிநாடாக்களைத் தயாரித்தல். | 1.00 |
| 9. | திருவண்ணாமலையில் கழிப்பறை கட்டுதல். | 8.00 |
| 10. | சுற்றுலாத் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல். | 3.00 |
| | மொத்தம் .. | 57.50 |

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்திற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திற்கு நிதி வழங்கப்படுகிறது. அதில், சுற்றுலா வளர்ச்சிக்காக 1999-2000-ம் ஆண்டுக்கு ரூ.80.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சுற்றுலா தொடர்பான திட்டம், மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும்.



1999 மே 4]

## சுற்றுலா விளம்பரம்

சென்ற நிதி ஆண்டில் (1997-98) சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரப் பணிக்காக ரூ.74.75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவற்றில், தமிழக கிராமியக் கலைகள், வீர விளையாட்டுகள், சாகசச் சுற்றுலா, வன விலங்குகள் மற்றும் கடற்கரைச் சுற்றுலாத் தலங்கள் குறித்த குறிப்பேடுகள், சென்னை நகர வரைபடம் மற்றும் தமிழ்நாடு பற்றிய தொகுப்புக் கையேடுகள் ஆகியவை வெளியிடப்பட்டன. இவை தவிர சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வைத்து மிகப் பெரிய அளவில் "2005 ஆம் ஆண்டில் தென்னிந்திய சுற்றுலா ஒரு முன்னோட்டம்" எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கம் இரண்டு நாட்கள் சென்னையில் நடத்தப்பட்டது.

(1998-99) ஆம் ஆண்டில் ஒதுக்கிய ரூ.50.00 இலட்சம் நிதியைக் கொண்டு கீழ்க்காணும் வண்ணச் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன:—

(அ) வள்ளுவர் கோட்டத்தில் உள்ள தேர்.

(ஆ) விவேகானந்தர் உருவப்படத்துடன் நினைவுச் சின்னம்.

(இ) குருசடைத்தீவுப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுற்றுச் சூழல் பாதுகாத்தல்.

(ஈ) சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி திருக்கோவிலில் உள்ள மிகப்பெரிய ஆஞ்சநேயரின் சிலை.

(உ) கோயிலின் முகப்புடன் இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோவிலில் உள்ள இக்கண்டத்தின் மிக நீண்ட சுற்றுப் பிரகாரம்.

(ஊ) நீலகிரி எழில்மிகு சுற்றுப்புற சூழலையும், வனவிலங்குகளையும் விவரிக்கும் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் வண்ணச் சுவரொட்டி.

இவற்றில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வண்ணச் சுவரொட்டிகள் புதுதில்லியில் நடைபெற்ற இந்திய சர்வதேசக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டு, பலரின் வரவேற்பைப் பெற்றது. தவிர, முக்கிய சுற்றுலாத் தலங்களைக் குறித்து 19 வகையான கண்கவரும் வண்ண அஞ்சல் அட்டைகளும் இவ்வாண்டு வெளியிடப்பட்டன.

இவற்றோடு, சுற்றுலாச் சிறப்புகள் குறித்த வண்ண விளம்பரங்கள், தொலைக்காட்சி மற்றும் செயற்கைக்கோள் மூலமும், வெளிநாடு மற்றும் இந்தியாவின் புகழ் பெற்ற ஆங்கில மற்றும் பிற மொழிகளில் வரும் நாளேடு, மாத ஏடுகளிலும் வெளியிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மேலும் கீழ்வரும் வெளியீடுகளும் அச்சிடப்பட உள்ளன:—**

1. கால்ப் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் பற்றிய கையேடு.

2. தமிழக பழமை வாய்ந்த, தொன்மையான சிற்பங்களைப் பற்றியும் புராதனச் சின்னங்கள் பற்றியும் தொகுப்புக் கையேடு.

இவை தவிர, ஏற்கெனவே வெளியிடப்பட்ட தமிழ்நாட்டின் சுற்றுலா வழிகாட்டி வரைபடம் நல்ல வரவேற்பைப் பெற்று அனைத்துப் பிரதிகளும் விற்பனையாகிவிட்டபடியால், அனைத்துப் புள்ளிவிபரங்களும் மேம்படுத்தப்பட்டு மீண்டும் அச்சிடப்படும். இதுபோல், திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமேசுவரம், கொடைக்கானல், உதகமண்டலம், கோயம்புத்தூர், ஏற்காடு, ஒகனேக்கல் பற்றிய வண்ணத் தகவல் கையேடுகள் வெளியிடப்படும்.

**விடியோ படம்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் பின்வரும் விடியோப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன:-

(i) தமிழ்நாடு கிராமிய நடனங்கள்.

(ii) தமிழ்நாட்டின் வீரப்புனல் விளையாட்டுப் போட்டிகள்.

(iii) கிராமியக் கலைகளும் கைத்திறன் தொழில்களும்.

**பொருட்காட்சியும் விழாக்களும்:**

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயண முகவர்கள், முன்னதாகவே சுற்றுலா பயணத் திட்டங்களை வகுத்துக்கொள்ள இயலும் வகையில் தமிழ்நாட்டில் நடத்தும் சுற்றுலாப் பயணங்களை சிறந்த முறையில் திட்டமிட்டு



மேம்படுத்துவதற்காக, பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும் விழாக்களாக அறிவிக்கப்பட்டுள்ளன:

1. தேயிலை மற்றும் சுற்றுலா விழா, குன்னூர்.
2. நாட்டிய விழா, மாமல்லபுரம்.
3. நாட்டியாஞ்சலி விழா, சிதம்பரம்.
4. சித்திரைத் திருவிழா, மதுரை.
5. கோடைவிழா, ஊட்டி.
6. பொங்கல் விழா (முக்கியமான சுற்றுலா மையங்களில்).
7. சாரல் திருவிழா, குற்றாலம்.
8. குமரி விழா, கன்னியாகுமரி.
9. மாங்கனி விழா, கிருஷ்ணகிரி.

தமிழகத்தின் சுற்றுலா மற்றும் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் சென்னையில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியினை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. பிற மாநிலங்களும், மத்திய அரசுத் துறைகளும், நிறுவனங்களும் இப்பொருட்காட்சியில் அரங்குகள் அமைக்கின்றன. இவை தவிர எல்லா மாவட்டங்களிலும் செய்தித் துறை நடத்தும் பொருட்காட்சிகளிலும் இத்துறை பங்கேற்கிறது.

**சுற்றுச்சூழல் போற்றும் சுற்றுலா**

காண்பதற்கினிய இயற்கை வளத்தையும், சுற்றுச்சூழலையும் கண்டு களித்திட உலகளவில் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் விரும்புகின்றனர். தங்களது பயணத் திட்டத்தில் கவின்மிகு சூழல் குன்றாத இடங்களைக் காண்பதை பெரிதும் விரும்புவர். தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் ஏறத்தாழ 25.4% இயற்கைச் சூழலைக் காண 1997 ஆம் ஆண்டில் வருகை தந்துள்ளனர். இந்தியாவிலுள்ள ஒன்பது பாதுகாக்கப்பட்ட இயற்கை வளமிக்க பகுதிகளில் (Biosphere Reserves) இரண்டு தமிழ்நாட்டில் (நீலகிரியில் ஒன்றும், மன்னார் வளைகுடாப் பகுதியில் ஒன்றும்) உள்ளன.

முட்டுக்காட்டிற்கும் பாண்டிச்சேரிக்குமிடைப்பட்ட கடற்கரைப் பகுதியை சிறப்பு சுற்றுலாப் பகுதியாக மாநில அரசு அறிவித்துள்ளது. இப்பகுதியில் சுற்றுச்சூழலைப் போற்றும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களைத் தனியார் முதலீட்டில் ஆரம்பித்திட சிலர் முன்வந்துள்ளனர்.

[1999 மே 4

சில தனியார் நிறுவனங்கள் மூலம் பெரும் முதலீட்டில் சுற்றுலா சார்ந்த திட்டங்கள், கடற்கரை விடுதிகள், கால்ப் விளையாட்டிடங்கள், சாகச விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வளாகங்கள் போன்ற வசதிகள் வரவுள்ளன. சுற்றுலாத் திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசின் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுடன் சுற்றுலாத் துறை கலந்து பேசி, தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மேலும், இராமேசுவரம் குருசடைத் தீவுகளின் இயற்கை வளத்தையும், கடல்வாழ் உயிரினங்களையும் சுற்றுச்சூழலுக்குப் பங்கம் விளைவிக்காமல் கண்டு களித்திட தற்போதுள்ள அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செங்கல்பட்டு நகருக்கு அருகேயுள்ள கொளவாய், சென்னைக்கு அருகிலுள்ள பழவேற்காடு, சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பிச்சாவரம் பகுதிகளில் புனல் விளையாட்டுடன் கூடிய சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு அடைய உரிய நடவடிக்கைகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

## கடற்கரை வரன்முறைக்குட்பட்ட பகுதி

இந்தியாவிலுள்ள கடற்கரைப் பகுதியினை, மத்திய அரசு நான்கு மண்டலங்களாகப் பகுத்துள்ளது (CRZ I, CRZ II, CRZ III, CRZ IV).

தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைப் பகுதி முதல் மூன்று மண்டலங்களில் அடங்கும்.

சுமார் 1,000 கி.மீ. நீளமுள்ள வளம் கொழிக்கும் சுற்றுலாச் சார்ந்த தொழில்கள் நடத்த ஏற்ற கடற்கரைப் பகுதியினைத் தன்னகத்தே கொண்ட தமிழ்நாடு பொருளாதார முன்னேற்றத்தில் முன்னிலையில் நிற்க வாய்ப்புள்ளது.

கிழக்கு கடற்கரைச் சாலையிலிருந்து கடல்நோக்கியுள்ள பகுதியில் சுற்றுலா சார்ந்த இன்னபிற கட்டுமானப் பணிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா சார்ந்த திட்டங்கள் நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. மாநில அரசு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிடம் இத்தடையை நீக்க வலியுறுத்தி சுற்றுலா சார்ந்த திட்டங்கள் சுற்றுச் சூழலுக்கு பங்கம் விளைவிக்காமல் ஏற்படுத்திட அனுமதி கோரியுள்ளது.



1999 மே 4]

புதிய கடல் வரன்முறைக்குட்பட்ட பகுதியில் புதிய சுற்றுலா சார்ந்த திட்டங்கள் அனுமதிக்கப்படுமானால் தமிழ்நாட்டில் சமூகப்பொருளாதார மேம்பாடும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் பெருகும்.

## மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம்

### துவாக்குடி, திருச்சிராப்பள்ளி.

திருச்சிராப்பள்ளியிலுள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம் சுற்றுலாத் துறையின்கீழ் செயல்பட்டுவருகிறது. இப்பயிலகம் 1994-95 ஆம் ஆண்டிலிருந்து உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பத்தில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பை நடத்திவருகிறது. இது, தற்போது நிலையுயர்த்தப்பட்டு, 1998-லிருந்து செயல்பட்டு வருகிறது. இவை தவிர, பின்வரும் பாடத் திட்டங்களில் ஓராண்டு முழுநேரச் சான்றிதழ் வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

(1) ஓட்டல் வரவேற்பு, வணிகக் கணக்கு முறை

(2) உணவு மற்றும் பானங்கள்

(3) ரொட்டி மற்றும் கேக் தயாரித்தல்

(4) உணவு தயாரித்தல்

(5) இல்லப் பராமரிப்பு

இந்நிறுவனம் ஆண்டுதோறும் மாநில அரசிடமிருந்து ரூ.11.00 இலட்சம் மானியம் பெறுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் இப்பயிலகத்தில் மாணவர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமாக அனுமதிக்கப்படுகிறார்கள். இதில் தற்போது 384 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பயிலகத்தில் பயின்று, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு, "வளாக நேர்காணல் மூலமாக" கிடைக்கிறது. கிராமங்களில் இருந்து அதிகளவில் இங்கு பயின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

[1999 மே 4

## இந்தியாவைக் காண வருகை புரியுமாறு அழைக்கும் ஆண்டு 1999-2000

### (Explore India in the Millennium Year)

இந்திய சுற்றுலாத் துறை 1999-2000ஆம் நிதி ஆண்டை இந்தியாவைக் காண வருகை புரியுமாறு அழைக்கும் ஆண்டாக அறிவித்துள்ளது. பல்வேறு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும், வெளிமாநில சுற்றுலாப் பயணிகளையும் தமிழகத்திற்கு ஈர்க்கும் அளவிற்கு பல புதிய விழாக்களை அறிமுகப்படுத்தியும் ஏற்கெனவே நடத்தப்படும் விழாக்களைச் சீரும், சிறப்புடனும் நடத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரில் ஒலி-ஒளிக் காட்சி அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. சுற்றுலா மையங்கள் அனைத்திலும் சுற்றுலாவை நோக்கமாகக் கொண்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்படும். தவிர புதிய விளம்பர உத்திகள் மேற்கொள்ளப்பட்டு, இவ்வாண்டில புதிய வெளியீடுகள் கொண்டு வரப்படும். புதுமையான விளம்பரங்கள் பிரபலமான பல்வேறு நாள் மற்றும் மாத இதழ்களில் வெளியிடவும் தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாத் தகவல்கள் மற்றும் முன்பதிவு வசதி கணினி மூலமாகச் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் சுற்றுலா இயக்ககம் மற்றும் மாவட்டங்களிலுள்ள அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படும்.

சென்னை விமான நிலையத்தில் சுற்றுலா வாய்ப்பு மற்றும் பணிகள் குறித்து வெளிப்படுத்த "டியூரோட்ரான் டிரான்ஸ்லைட்" விளம்பரங்கள் செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கொண்டாட்டத்தின்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காகப் பல புதிய சுற்றுலாத் திட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளது. மேலும் ஓட்டல் தமிழ்நாடு தரமுயர்த்தப்பட்டு பல வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசியுடன் தொடங்கப்பட்டது. மிகவும் சாதாரண முறையில் 5 தங்கும் விடுதிகள் மற்றும் 2 சொகுசுப்



1999 மே 4]

பேருந்துகளுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பரிணாம வளர்ச்சியடைந்து இக்கழகம் இன்று மாநிலம் முழுவதும் சங்கிலித் தொடர் போல 36 தங்கும் விடுதிகளைக் கொண்டுள்ளது என்பது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். இக்கழகத்தின் விடுதிகளில் முதலில் 253 படுக்கை வசதிகள் இருந்தன. 1999இல் 2,400 படுக்கை வசதிகள் உள்ளன. இதே போல் சொகுசுப் பேருந்துகளும் பன்மடங்கு பெருகி, தற்போது 26 பேருந்துகள் மற்றும் சீருந்துகள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்காக வழங்கி வருகிறது:—

| | | |
|---|---|---|
| ஓட்டல்கள் | .. | 36 |
| இளைஞர் விடுதிகள் | .. | 8 |
| படகுக் குழாம் | .. | 10 |
| உணவு விடுதிகள் | .. | 3 |
| சிற்றுண்டி விடுதிகள் | .. | 2 |
| தொலைநோக்கிக் கோபுரம் | .. | 4 |
| நடமாடும் உணவு விடுதி | .. | 2 |
| தோட்டங்கள் | .. | 3 |
| சுற்றுலா சேவை மையம் (பெட்ரோல் பங்க்) | .. | 1 |

குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் பலர் தங்கும் பெரிய அறைகள் உள்ளன. தங்குவதற்கான விடுதிக் கட்டணம் நபருக்கு நாளொன்றுக்கு ரூ.50 மட்டுமே.

### 1998-99இல் ஆரம்பிக்கப்பட்ட புதிய தங்கும் வசதிகள்

கீழே கண்டுள்ள தங்கும் விடுதிகள் இவ்வாண்டு திறக்கப்பட்டுள்ளன:-

(1) 16 அறைகள் கொண்ட ஒரு தொகுப்பு கிருஷ்ணகிரியில் திறக்கப்பட்டுள்ளது.

(2) இருவர் தங்கும் வசதியுடன்கூடிய 12 அறைகள் கொண்ட ஓட்டல், குற்றாலத்தில் திறக்கப்பட்டுள்ளது.

(3) பழனியில் இரண்டு கூடுதல் குடில்கள் திறக்கப்பட்டுள்ளன.

(4) காஞ்சிபுரத்தில் பொன்னேரிக் கரையில் படகுக் குழாம் திறக்கப்பட்டது.

[1999 மே 4

(5) ஒகேனக்கலில் தொங்கு பாலம் அமைக்கப்பட்டது.

(6) கும்பகோணத்தில் படகுக் குழாம்.

## 1998-99 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்

(1) பழைய சொகுசுப் பேருந்துகளுக்குப் பதிலாக தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவனத்திடம் இருந்து கடன் பெற்று புதிய சொகுசுப் பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

(2) கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையில் உதகமண்டலத்தில் "கேபிள் கார்" திட்டத்திற்காக திறந்த ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள், ஆலோசகர்களின் உதவியுடன் முடிக்கப்பட்டு, விரைவில் பணி ஒப்படைக்கப்படும்.

(3) தமிழக அரசு மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, இராமேசுவரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரிய ஓட்டல்களை நிலை உயர்த்துவதற்காக ரூ.1.00 கோடி அனுமதித்துள்ளது. விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

(4) மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் கணிப்பொறிகள் வாங்கப்பட்டு, பெரிய ஓட்டல்களில் நிறுவப்பட்டுள்ளன.

(5) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்த வருடம் கீழ்க்கண்ட முகவரியில் இன்டர்நெட் வசதி ஏற்படுத்தி ``வெப் சைட்" (Web Site) http:/www.tamil nadu tourism.com மூலம் அனைத்து சுற்றுலாத் தகவல்களை அறிய வகை செய்யப்பட்டது. சுற்றுலாப் பயணங்கள் இருக்கை வசதிகள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு சுற்றுலா இடங்கள் ஆகியன குறித்து முழுத் தகவல்கள் இந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்த வசதியைப் பயன்படுத்தி ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற அயல்நாடுகளில் உள்ள சுற்றுலாப் பயணிகள் அங்கிருந்தபடியே சிரமமின்றி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் அறை முன்பதிவு செய்யவும் சுற்றுலாப் பயணங்களைத் திட்டமிட வசதியாக உள்ளது.



1999 மே 4]

(6) அரசு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 15 தங்கும் விடுதிகளைத் தனியாருக்கு தனியுரிமை [Franchise] முறையில் குத்தகைக்கு விட அரசு அனுமதித்துள்ளது. அரசு ஆணையின் அடிப்படையில் 15 ஓட்டல்களைத் தனியுரிமை [Franchise] முறையில் குத்தகைக்கு விட திறந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டன.

(7) ஓட்டல்களைக் குத்தகைக்கு விட ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது ஆதாயம் ஈட்டும் ஓட்டல்களில் வசதிகள் மற்றும் பணிகளை மேம்படுத்துவதன் மூலம் வருவாய் ஈட்டுவதில் தற்போது கவனம் செலுத்தக் கருதப்பட்டுள்ளது. எனவே, இனி முடிக்கப்படவிருக்கும் புதிய ஓட்டல்கள் அனைத்தும் தனியுரிமை அடிப்படையில் குத்தகைக்கு விடப்படும். அப்போதுதான் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆதாரத்தை தற்போதுள்ள ஓட்டல்களை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்த இயலும்.

## 1999-2000 நிதியாண்டில் எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள்

1. ரூ.25.00 இலட்சத்தில் கன்னியாகுமரி மற்றும் உதகமண்டலத்தில் மனமகிழ் பொழுதுபோக்குச் சாதனங்கள் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

2. செங்கல்பட்டிலுள்ள கொளவாய் ஏரியில் சாகசப் புனல் விளையாட்டு வளாகம் அமைக்கப்பட உள்ளது.

3. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் உதவியுடன், முட்டுக்காட்டிலுள்ள 39 ஏக்கர் நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த இடத்தில் வேலி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இயற்கை நலப் பூங்கா அமைக்க தனியார் தொழில்முனைவோர்களை அழைக்கக் கருதப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப் பிரிவு:

தென்னிந்தியாவில் உள்ள ஆந்திரா, கர்நாடகா, கோவா, பாண்டிச்சேரி மற்றும் கேரளா போன்ற அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கிய சுற்றுலாவைத் திறம்பட நடத்துவதில் இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெருமை கொள்கிறது.

[1999 மே 4

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளின் அன்றாடத் தேவையினை அறிந்து, பின்வரும் புதிய சுற்றுலாப் பயணங்களை அறிமுகப்படுத்தியுள்ளது:-

(1) 14 நாட்கள் பூரி-கயா-காசி, அலகாபாத் சுற்றுலா,

(உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், ஒரிசா, மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கிய சுற்றுலா)

(2) 12 நாட்கள் மும்பை, அஜந்தா, எல்லோரா சுற்றுலா.

(3) 5 நாட்கள் வைணவத் திருத்தலச் சுற்றுலா.

(மொத்தமுள்ள 108 வைணவப் புண்ணியத் தலங்களில், 18 புண்ணியத் தலங்களைக் காணும் சுற்றுலா).

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் காலமான 1998 டிசம்பர் திங்கள், மலேசிய சுற்றுலாப் பயணிகளின் வருகை திடீரெனக் குறைந்த காரணத்தினால் போக்குவரத்துப் பிரிவில் சிறிது பின்னடைவு ஏற்பட்டது. இருப்பினும் விடுப்புப் பயணச் சலுகை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும்பொருட்டு இக்காலக் கட்டங்களில் தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய சுற்றுலாவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிக அதிக அளவில் இயக்கியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை எண்ணை சுத்திகரிப்பு நிறுவனத்தாரின் 1,500 பணியாளர்கள் பயன்பெறும் வகையில் தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களைக் காண்பதற்கு ஏற்ற வகையில் சிறப்பு சுற்றுலாவைத் திறம்பட இயக்கியுள்ளது. இதுபோல, மேலும் பல முன்னணி பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்காகவும் இத்தகைய சிறப்புச் சுற்றுலாக்களை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விற்பனைப் பெருக்கம் மற்றும் விற்பனை:**

(1) குற்றாலத்தில் உள்ள தங்கும் விடுதியில் பாரத மிகுமின் நிறுவனத்தினர் 200 நாட்கள் தங்குவதற்கு கூட்டு முயற்சி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.



1999 மே 4]

(2) இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் இதுவரை அவர்களின் முன்பதிவு முறையில் இக்கழகத்தின் சுற்றுலாப் பயணங்களை மட்டும் பயன்படுத்தி வந்தனர். இனி இக்கழகத்தின் தங்கும் விடுதிகளிலுள்ள அறைகளுக்கும் அவர்கள் முன்பதிவு செய்யும் வகையில் கூட்டு முயற்சி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

(3) பாரத ரிசர்வ் வங்கிப் பயிற்சியாளர்கள் நமது சுற்றுலாப் பயணங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கூட்டு முயற்சி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

(4) கோவை, மதுரை மற்றும் உதகமண்டலத்தில் இந்திய எண்ணெய்க் கழகத்தின் ஊழியர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளைப் பயன்படுத்தும் கூட்டு முயற்சி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

(5) விடுமுறைக் காலங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகளில் இந்தியன் வங்கி ஊழியர்கள் தங்கும் வகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**நிதிநிலை:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1997-98ஆம் நிதியாண்டில் ரூ.2,466 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. இழப்பில் செயல்படும் ஓட்டல்களை தனியுரிமை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதுடன் 1998-99ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ.2,750 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1998-99-ல் வளர்ச்சி விகிதம் 12% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பெருமளவிலான நிதிப் பொறுப்புகள் இருந்தபோதிலும்கூட 1999-2000ஆம் ஆண்டில் இலாபத்தை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

221808

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.